உ

சிவமயம்

திருவருள்

சிவன் பாடல்கள்



பாவாக்கம்

முனைவர் ச.சுடர்க்கொடி

காரைக்குடி

74
2-6
KOVLOOR ANDAVAR LIBRARY, KOVLOOR
A. No. 11938

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 11938.
2-6

உ

சிவமயம்

ஓம் நமச்சிவாய

பாவாக்கம் : முனைவர் : ச.சுடர்க்கொடி

பிள்ளையார் காப்பு

தாயாகி நின்று கனிந்துருகி காப்பவனே
காயாகி நின்று கனியாக்கும் மூலவனே
சேயாகி நின்று கசிந்துருகும் அடியவர்க்கு ஐங்கரனே
நேயமுடன் காத்தருள, பாசமுடன் வந்தருள்க.

நூல்

1. நின்னருளால் உன்னடியை தொழுகின்றேன் மறவாது
என் நாவில் உன்நாமம் ஒலிக்க வேண்டும் எந்நாளும்
நின்னடியை வணங்கி தொழ வேண்டும் எக்கணமும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

2. தவித்து நிற்கும் உள்ளங்களை தழைத்தோங்க செய்பவனே
கோவிலில் உறைந்து நிற்கும் எனதன்பே ஆண்டவனே
செவிமருத்து கேட்டு, குறை தன்மை தீர்ப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

3. மாணிக்க வாசகனே மாமலரால் தொழுகின்றேன்
அணிகலனாய் விடமதனை கழுத்தினில் ஏற்றவனே
பணிவுடன் வேண்டுகின்றேன், பற்றவேண்டும் உன்னடியை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

4. அம்மா என்றழைக்கும் போது அருகினிலே வருபவனே
ஓம் என்றழைக்கும் போது நாதமாய் ஒலிப்பவனே
இம்மையிலே என்தனக்கு அன்பு செய்யும் ஆருயிரே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே

5. உயிராக இருப்பவனே, உயிர்தன்னை கொடுப்பவனே
ஞாயிராய் ஒளிப்பவனே, திங்களாய் வருபவனே
கோயிலில் உறைபவனே அருளாட்சி செய்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

6. மண்ணில் மானுடல்கள் மனம் குளிரச் செய்பவனே
கண்ணின் மணியே, மாணிக்க மரகதமே
விண்ணின் ஒளி நீயே, மண்ணின் வழி நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

7. கொன்றை வார் கடையணிந்து பித்தனாய் அலைபவனே
தென்றலென வந்து நீயும், குளிர்காற்றை தருபவனே
அன்னையென உன்கருணை, உலகமெல்லாம் கொடுப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

8. மாதவி வனத்தினிலே, வாடாமலராய் உறைபவனே
உதவி கேட்டு வருவோர்க்கு மனம் இறங்கி தருபவனே
ஆதரவு காட்டி மனமுருகி கொடுப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

9. பாலாகி தேனாகி உணர்வாகி இருப்பவனே
உலாகி வரும் அருட்கடலாய் நாளும் ஒலிப்பவனே
இலாதோர்க்கு, மனமகிழ்ந்து உன் உதவி ஈபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

10. ஓம் என்னும் சொல்லாலே நலம் தந்து காத்தருள்வாய்
அம்மையப்பா என அழைப்போர் முன் உமைபங்கனாய் தோன்றிடுவாய்
இம்மையிலும், மறுமையிலும் வாழ்வுதனை வருத்திடுவாய்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

2-5

11. அஞ்சுதல் இல்லையென்று அறம் கூறும் நாயகனே
கொஞ்சும் குழந்தைமேல் உனக்கு ஏன் கோவப்பா
அஞ்சாதே எனும் சொல்லை, உன் வாயால் பகர்ந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

12. கண்எதிரே துன்பமுறும் பிஞ்சுதனை காணாயோ
மண்ணுயிர்க்கு அன்பு செய்யும் உன் இதயம் இரங்காதோ
விண்ணவரும், மற்றவரும் உன்மொழியால் அருள் பெறுவர்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

13. அன்பாய், ஆறுதலாய் கூத்தாட்டும் கோமகனே
என் எண்ணமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் நாதனே
உன்னசைவால் உலகமெல்லாம் ஆட்டிவைக்கும் ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

14. தேனூறி நிற்கும் தெள்ளமுதே, தெவிட்டாத இன்னமுதே
தேனூறி நிற்கும் இனியவனே எளியவனே அருட்சுவையே
தேனூறி நிற்கும் ஆண்டவனே பழச்சுவையே என்னுயிரே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

15. முக்கலையும் கற்ற மூத்தவனே ஈசனே எளியவனே
முக்கண்ணை அசைத்திட்டால் உலகமெல்லாம் இயங்கிடுமே
எக்கணமும் உனைநினைக்கின்ற உள்ளமதை வேண்டுவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

16. ஈன்றெடுத்த குழந்தை முகம் வாடலாமோ
அன்னையென வந்த பின்பும் பாராது இருக்கலாமோ
இன்னுயிரை ஈந்த நீயும் வாடவைத்து பார்க்கலாமோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

17. எங்கெங்கெளாதட்டி ஒளியாக பரவிநிற்கும் பரம்பொருளே
தாங்கவேண்டும் என்மனத்தை தங்கவேண்டும் உன்மனத்தே
எங்கும் நிறைந்திருக்கும், என்மனத்து, அன்புருவே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

18. வறியவர்க்கு இரங்குதல் இறைவனுக்கு இயல்பன்றோ
செறந்திருக்கும் உன்புகழை என் மனத்தில் இருந்தாயோ
அறிந்திருந்தும், அறியாதவன் போல் இருப்பதுவும் உனக்கு அழகாமோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

19. நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் உந்தன் மனம் உருகாதோ
அஞ்சுதலை தவிர்த்து பிணிதீர்க்க வாராயோ
வஞ்சமில்லா என்மனத்தை, கண்டு நீயும் இறங்காயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

20. தற்சொல்லை நாளும் நவில்கின்ற நாதமுனி நீயப்பா
அற்புதங்கள் செய்கின்ற உன் உருவை காட்டுமப்பா
பற்றுகின்றேன் உன்பதத்தை, செவிமருத்து கேளுமப்பா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

21. தவிக்கும் மனத்தாலே, தளராது அழைத்திருவேன்
ஈவிரக்கம் காட்டவேண்டி, நாளும் தொழுதிடுவேன்
ஓவியமாய் செய்தபிள்ளை, ஓடியாட செய்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

22. வேண்டியதை கேட்டருளும் புலித்தோலை அணிந்தவேன
அண்டி நிறக்கும் பூமனதை நாளும் அறிவாயோ
தண்டனையை தாராது, இறங்கிவிடு பெரியவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

23. மண்ணுயிரை, தன்னுயிர்போல் ஆட்கொள்ளும் இறையன்பே
விண்ணுலரும், மண்ணுலரும் உனக்குள்ளே கொண்டவளே
கண்ணசைவால் காத்திடுவாய் நலிந்திருக்கும் என்மனதை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

24. கொவ்வை வாய் திறந்து கனியமுதம் தருபவனே
எவ்விடமும் நிறைந்திருக்கும் என்மனத்து இனியவனே
எவ்வகையை நாடவேண்டும் உன்மனதை அறிவதற்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

25. வானாகி வந்து உயர்தோங்கும் இமயவனே
ஊனாகி நின்று ஊழ்வினையை மாய்ப்பவனே
தானாகி வந்து தடுத்தெம்மை ஆள்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

26. மூவுலகை ஒளிப்பிழம்பால் ஆண்டருளும் அருட்செல்வா
ஆவுடையன் பெயர்கொண்டு இன்சொல்லை தருபவனே
தாவுகின்ற உள்ளமதை, உன்மனத்தால் ஆள்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

27. நெஞ்சில் வஞ்சமில்லா மொழிபகரும் மூத்தவனே
கெஞ்சி நிற்கும் எனைக்கண்டு இன்சொல்லை தருபவனே
தஞ்சமென்று கரம் நீட்டி அழைப்போர்க்கு வருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

28. முக்கண்ணால் மூவுலகை ஆட்கொள்ளும் மூலவனே
இக்கணமே வந்து நீயும், உன் கருணை காட்டுமப்பா
எக்கணமும் உனைமறவா என்மனதை அறியுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

29. இமைப்பொழுதும் எனை நீங்கா உயர்ந்திருக்கும் இமையவனே
உமையம்மை ஓர் பாகம் கொடுத்துயர்ந்த ஆண்டவனே
எமையாளும் ஈசனே கடைக்கண்ணை திறக்கவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

30. நாதன் தான் தொழுகின்ற அடியவர்க்கு அப்பனப்பா
உதவாமல் போவாயோ, எனைவிட்டு சொல்லுமப்பா
ஏதற் கரியவனே எனைக்காண மறுப்பாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

31. உன்னருளே நின்னதன்று நினைக்கின்ற பக்தனப்பா
நின்கருணை காணாது நிற்கின்ற ஏழையப்பா
இன்னலுறும் உடல்நலிந்த பாலகனை காணுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

32. ஈசனே உன்னடியே சரணமென்று நினைத்தோங்க வைப்பவனே
நேசனே உன்னருளால் உலகமெல்லாம் ஒளிகாட்டும் மன்னவனே
வசம் என்று உன்னடியை தொழுபவரை காப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

33. நம்பினோர்க்கு நாளும் நயம்பயக்கும் நல்லவனே
இம்மையிலும், மறுமையிலும், உறுதுணையில் வருபவனே
அம்மையப்பன் பெயர் கொண்டு தொண்டாற்றும் மூத்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

34. நம்பி உனை நாளும் தொழுதேத்தும் எளியவனை காணுமப்பா
வெம்பி நிற்கும் பிஞ்சுதனை மலரவைக்கும் மன்னனப்பா
விம்மி உனை அழைப்பவரை சீர்தூக்கும் செல்வனப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

35. ஓசையின்றி உலகமெங்கும் நிறைந்திருக்கும்   ஒலியப்பா
அசையாத மண்ணுயிரும் உன்னொளியால் அசையுமப்பா
ஆசையுடன் வந்தபிள்ளை   உன்கையில் அடக்கமப்பா
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே.

36. கொன்றைமலர் சூடி காலனை உதைத்தவனே
நின்னடியே சரணமென்ன தொழுபவரை பிடிப்பவனே
இன்னலதை தாராது, இன்பமதை தருபவனே
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே.

37. ஏதிலார் கற்றமதை மன்னிக்கும் பெருந்தகையே
ஓதியுனர்வார் முன் எளியவனாய் வரும் முகிலே
ஆதியில்லா சிலம்பரசே, அடியவனாய் வரும்மானே
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே.

38. சித்ததத்தின் உள்ளே நிறைந்திருக்கும் அருளீசா
பித்தனாக எத்திக்குமு ஒளிர்ந்துநிற்கும் மணவாளா
அத்தனாக வந்து எனை தடுத்தாளும் அமுதீசா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

39. ஜோதியென நீக்கமற   நிறைந்திருக்கும் எளியவேன
அதிசயத்தை நாளும் நயம்படவே தருபவனே
உதிக்கின்ற பகலவனும் உன்னுள்ளே அடங்கிவிடும்
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே.

40. ஐம்பூதம் அடக்கி ஆளும் பரஞ்ஜோதி நாயகனே
கைம்மகவு ஏந்தி நிற்கும் ஏழைமுகம் காண்பவனே
நம்பியவர் உள்ளமதை மறுக்காமல் ஏற்பவனே
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே.

41. பொன்னான மேனியனே, பெண் மனது அறியாயோ
அன்னையென நம்பியவர், நலம் காண வேண்டாமோ
இன்னல்தனை அறிந்தவனே, இனியவார்த்தை கூறாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

42. கணநாதனாய் நீக்கமற நிறைந்திருக்கும் வெண்முகிலே
இணக்கமாக வந்துவிடும் என்மனத்து அருட்கடலே
காணவேண்டும் பிஞ்சுமுகம், காக்கவேண்டும் பாலகனை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

43. தாயுமாய், தந்தையுமாய், தனித்திருக்கும் பரம்பொருளே
காயுமாய், கனியுமாய், சேர்ந்திருக்கும் அருட்கடலே
சேயுமாய், அனைத்துமாய் நிறைந்திருக்கும் ஆருயிரே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

44. வண்டமர் சோலையிலே வந்தாடும் சிலம்பரசே
அண்டமெல்லாம் உன்பிடியில் அடக்கி வைக்கும் அறிவீசா
கண்கண்ட தெய்வமென உனைத்தொழுது ஏத்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

45. வாடிய பயிரை கண்டுள்ளம் வாடும் என் ஈசா
ஓடி வந்து எனைக்காண வரவேண்டும் வேந்தா
ஆடி நிற்கும் பொன்னம்பல ஆண்டவனே அப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

46. தியானிப்பவர் உள்ளமதில் வாழந்துவரும் எளியவனே
ஓயாது உனைத்தேடி வருபவரின் மலைத்தேனே
இயலாது வருவோரின் உள்ளமதை அறிபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

47. சுட்டும் விழியாலே அன்புதனை அருள்பவனே
எட்டுத் திசையும் உன்புகழை வளர்ப்பவனே
ஆட்டிவைப்பாய் உலகமதை உன் கண்ணசைவு காட்டி
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

48. சாட்சி சொல்ல பலருக்கு பாரினிலே வந்தாயே
ஆட்சி செய்வாய் உன் வாக்கால், பகர்ந்திடுவாய் நல்வார்த்தை
ஆட்டிவைக்கும் உன்குணத்தால், அழ வைக்கும் மனமேனோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

49. மனமிறங்கி வாராயோ, உனதருளை தாராயோ
கனமான உள்ளமதால், கை கூப்பி தொழுகின்றேன்
அனல் போன்ற உன்விழியால் குளிர்தன்னை தாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

50. பற்றினோரை கைவிடுதல் பரம்பொருளின் விளையாட்டோ
போற்றிவரும் எளியவர்க்கு மனமிரங்கி வாராயோ
தேற்ற வேண்டும் குழந்தை தன்னை, காட்ட வேண்டும் அன்புமழை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

51. உமையவளுக்கு ஓர் பாகம் அன்புடனே ஈந்தவனே
இமை போல நீயிருந்து மண்ணுயிரை காப்பவனே
அமைதியான உள்ளத்தில் உறைபொருளாய் இருப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

52. குறுமுனியாய் காட்சிதந்து உலகளவும் பெருமானே
உறுதுணையாய் நீயிருந்து நின்னருளை தருபவனே
இறுமாப்பு இல்லாத நின்னடியை வாழ்த்துகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

53. நின்னடியே தஞ்சமென ஏங்கும் மனம் வேண்டும்
என் நாவில் உன்நாமம் நாளும் ஒலிக்க வேண்டும்
நின் தாழ் வணங்கி மறவாது இருக்கும் உளம் வேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

54. கங்கைதனை தலையில் சூடி தண்ணொளியாய் ஒளிர்பவனே
தங்குமிடம் உன்மனது, தாங்குவது உன் இதயம்
எங்கும் ஒளிர்பவனே, ஏனிந்த சோதனையோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

55. தவித்து நிற்கும் உள்ளங்களை தழைத்தோங்க செய்பவனே
அவிழ்க்க வேண்டும் முடிச்சுதனை பகரவேண்டும் விடைதன்னை
ஈவிரக்கம் காட்டி நீயும் பூமகனை காண வேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

56. தாழ்வணங்கி எழுதுகின்றேன், தயவுடனே வாருமப்பா
ஊழ்வினையை அகற்றி, நல்வாழ்வு தாருமப்பா
ஏழ்உலகும் ஆள்பவனே, மனதிரங்க வேண்டுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

57. சிந்தனையை எந்தன்பக்கம் சிறிது நேரம் மாற்றாயோ
சிந்தையெல்லாம் நிறைந்திருக்கும் எந்தன்மனம் காணாயோ
சிந்தைசெய்து பார்த்து, விந்தைதனை காட்டாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

58. வாடாமலராய், மணம் பரப்பும் பொன்னம்பலமே
தேடாது நிற்பதேனோ, மனம் விழைய மறுப்பதேனோ
ஆடாது, அசையாது நிறுத்துகின்றாய் உன்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

59. உமை ஞாபாகம் கொண்டு உலகாளும் பித்தா
எமையும் நின் ஆருயிராய் நினைக்க வேண்டும் அத்தா
அமையாத நல்வாழ்க்கை, நலம்வாழ அருளவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

60. குருபரனுக்கு குரல் கொடுத்தாய்
அருகிலிருக்கும் எனை மறந்தாய்
உருவெடுத்து வந்தும் மகவுதனை ஏன் வெறுத்தாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

61. பிணிக்கு மருந்தாவாய், எளியர்க்கு தோள் கொடுப்பாய்
பணி செய்வாய் அடியவர்க்கு, நல்லதொரு
தணித்திடுவாய் துன்பமதை அன்புதனை ஏற்றிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

62. மகவுசெய்த குற்றமென்ன, உன்பதிலை கூறிவிடு
அகமதனை அறியவேண்டும், உன்மனது புரியவேண்டும்
இகமீது வந்துநீயும், ஏற்றதுனை அருளவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

63. காலனை உதைத்தவனே, பக்தர்துயர்தீர்த்தவனே
ஆலமரம் போல் நின்று, விழுதாலே காப்பவனே
உலகமெல்லாம் ஆட்டுவித்து வித்தைகளை செய்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

64. வான்வெளியான் ஒளிவிளக்கே, மண்ணுலகின் சுடர்ஒளியே
இன்சொல்லை வித்தாக்கி, தீபஒளி தருபவனே
வன்சொல்லால் குழந்தை தன்னை பாவையென ஆக்கியதேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

65. நாளும் அடியவர்க்கு சோதனைகள் தருபவனே
ஆளும் உன்மனத்தால் வாழும் வழி சொல்பவனே
தோளுக்கு பலம்தருவாய், பக்தருக்கு வளம்தருவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

66. உள்ளமதில் உறைபவனே எந்நாளும் வாழ்பவனே
தள்ளாது எந்தன் வார்த்தை செவிமருத்து கேளுமப்பா
கள்ளமில்லா பிஞ்சுமுகம் உந்தனக்கு தெரியலியோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

67. நெஞ்சமதில் நிறைந்திருக்கும் ஒப்பில்லா மாமணியே
கெஞ்சி நிற்கும் பேதைமுகம் ஏறெடுத்து பாராயோ
அஞ்சுதல் இல்லையென்று ஓர் வார்த்தை சொல்லாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

68. கண்கொடுத்த கண்ணப்பனுக்கு கண்ணொளியை ஈந்தவனே
வேண்டிநிதம் கேட்கின்ற எந்தன் குறை கேளாயோ
அண்டிநிற்கும் ஏழையரை, காண மனம் வாராதோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

69. வெண்ணீறு அணிந்தவனே, அம்பலத்து வானவனே
கண்ணீரை தந்து நீயும், காணாது இருப்பதேனோ
விண்ணுலகை ஆண்டவளே, மண்ணுலகை காணாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

70. கண்ணெதிரே தோன்றி, நலம் பயக்க வாராயோ
எண்ணமெல்லாம் நிறைந்திருக்கும் உன்முகத்தை காட்டாயோ
கண்ணார கண்டு, மனமார வாழ்த்து என்னெதிரே தோன்றாமோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

71. புனல்சூடி, மறைசூடி மல்மாலை அணிந்தவனே
கனல்போன்ற முக்கண்ணால் மூவுலகும் ஆள்பவனே
அனலான உன் விழியால் கண்ணொளியை தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

72. நித்தமென் நெஞ்சமதில் நீங்காது குடியிருப்பாய்
உத்தமன் நீயென்று நாளும் நினைத்திருப்பேன்
பித்தனாய் வந்து என்மனதில் நிறைந்திருப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

73. தாயினும் பரிந்து ஆட்கொள்ளும் இறையண்பே
உயிரினும் மேலான உனதன்பை காட்டாயோ
சேயிடம் பரிந்து வந்து அவன்குறையை தீர்ப்பாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

74. கல்லுக்குள் தேரை வைக்கும் மாயைதனை அறிந்தவனே
அல்லலுறும் அனைத்துயிரும் உனதன்பால் செழித்திடுமே
இல்லையென சொல்லாத உன்சொல்லால் துளிர்த்திடுமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

75. மனமுருகி வேண்டுவோர்க்கு வரமருளும் வாகீசா
ஏனப்பா இம்மௌனம், வார்த்தையொன்று கூறுமப்பா
தனல் போல தவிக்கின்ற உள்ளமதை அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

76. நாதமெனும் ஓசையிலே மனமிரங்கும் பாவலனே
வேதமெல்லாம் அறிந்தவனே, பிறர்துயரை துடைப்பவனே
ஆதரவை தருபவனே, காத்துதவி செய்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

77. ஆடி நிற்பாய் கயிலையிலே, துயர் துடைப்பாய் நல்வேளையிலே

தேடிப்பார்ப்பாய் எளியவரை, பாடி நிற்பாய் துயர்தீர்க்க
ஓடி வருவாய் பக்தர்காண, பற்றதுணை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

78. துயரென்று வந்தவரின் துயர் தீர்க்கும் வானவனே
அயராது உன்துணையை எந்நாளும் தருபவளே
நயமோடு நல்லிசையை உலகமெங்குமு வளர்ப்பவளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

79. அயராது நாளும் உன்னொளியை தரும் ஈசா
பயன்தன்னை நாளும் தருகின்ற குருநாதா
ஆயகலை அனைத்தும் உணர்ந்த என்அருள்நாதா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

80. பெருமானாய் உனைத் தொழுதேத்தும் அடிமை எனை
அருகினிலே நீ அழைத்து அன்பு மொழிகாட்டி
தருகின்ற நாள் எந்நாளோ பரம்பொருளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

81. நன்னெறி காட்டி நயந்தோரை வளர்ப்பவனே
உன்னொளிகாட்டி உய்விக்க வந்தவனே
அன்பேசிவமென்று ஆட்கொள்ளும் தயாபரனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

82. தத்துவ போதகனாய் குறுஉருவைக் காட்டி
எத்துணையும் எள்ளளவும் நீக்கமற நிறைந்து
உத்தமனாய் உலகமெங்கும் பயன்தன்னை அளிப்பவனே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

83. சரணமென்று வந்தவரின் குறைதீர்க்கும் குலவிளக்கே
சிரம் கொண்டு வணங்குவோர்க்கு சிவமயமாய் இருப்வனே
வரமனைத்தும் தந்திடுவாய், அன்புமொழி கேட்டுவிட்டால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

84. தருநிழலாய் தனித்துநிற்கும் ஏகாந்த நாதனப்பா
பெருவெள்ளம் சூழந்தபோதும் தனித்தீவாய் நிற்பவனே
உருகுகின்ற எனதன்பை உளமிரங்கி பாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே .

85. வறியவர்க்கு உறுதுணையாய், மாமணியாய் நிற்பவனே
சொற்கின்ற தேனூற்றை நாளும் அளிப்பவனே
கூறிநிற்கும் துன்பமதை துடைக்க நீயும் வாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

86. வல்லமை கொண்டு நாளும் உயர்ந்தோங்கி உறைபவனே
இல்லாமை சொல்லி வருவோரை காப்பவனே
பல்லாண்டு நிறைந்து நின்று உன்னருளை தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

87. வேண்டியதை வேண்டியோர்க்கு தந்தருளும் தயாயபரனே
கண்ணீர் மல்கி கசிந்துருகும் கடையவனை காப்பவனே
தண்ணீராய் உருகும் என் மனதை அறிந்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

88. அஞ்சுதல் இல்லையென்று ஓடிவரும் ஈசனப்பா
கெஞ்சி உன்பதம் பிடிப்பேன், மனமிறங்கி வரவேண்டும்
நெஞ்சமதில் வேதனையை சுமந்து நிற்கும் ஏழையப்பா

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

89. பொன்னான மேனியனே, விண்ணொளியாய் வருபவனே
வன்மொழியை தவிர்த்துநீயும் புன்னகையை தருபவனே
உன் காலில் வீழ்ந்திடுவேன், அரவணைக்க மாட்டாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

90. நானுனை நினைக்குங்கால் ஓடி வருபவனே
அனுதினமும் மறவாது, உனைத்தொழுது ஏத்திடுவேன்
வானுலகில் நிறைந்து நின்று வாழ்த்துகின்ற மணவாளா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

91. பற்றறற்றார் பற்றினை பற்றுவோர்க்கு அருள்பவனே
வேற்றுமனம் காட்டாது உன்னருளை தருபவனே
ஏற்றி உனை தொழுதிடுவேன் பார்க்கவேண்டும் எந்தனமனம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

92. எருதேறி வருபவனே, உமை ஒர்பாகம் கொண்டவனே
உருசிறிதானாலும், அகத்தியனுக்கு மதி பெரிதாய் அளித்தவனே
திருவுருவம் காட்டி, தெளிவுதனை தந்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

93. பாசமெனும் வலையினிலே விழவேண்டும் ஆண்டவனே
நேசமெனும் மொழியாலே உன்னருளை தருபவனே
வாசமுள்ள மலராய் மனம் பரப்பும் பெருந்தகையே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

94. தெவிட்டாத தேனமுதே, நீங்காத ஒளிவிளக்கே
செவிதனிலே, அமுதமென உன் நாமம் ஒலித்திடுமே
கூவி நின்று உனை அழைப்பேன், கேளாது போவாயோ

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

95. ஊனாகி நின்று, தானாகிவந்து கோனாகி உறைபவனே
தேனாகி வந்து, வெளியாகி நின்று இன்னமுதை ஈபவனே
கோனாகி நின்று, மலராகி மணம் பரப்பும் இனியவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

96. உற்றதுணையென ஊன்றுகோலால் உதவிடுவாய்
சொற்றுணை வேதியினாய், தேவைதனை அறிந்திடுவாய்
மற்ற துணை இல்லையென, பற்றும் துணையென வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

97. சித்தத்தில் சிவனாக, சீர்பெற்று நிற்பவனே
பித்தனாக, சித்தனாக, சிறப்புடனே வருபவனே
அத்தா என அழைப்பவர் முன் வரமளிக்கும் பெருமானே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

98. தாயாகி வந்து தவிப்போரை காத்தருள்வாய்
சேயாக எனை நினைந்து நாளும் அரவணைப்பாய்
ஓயாது உன்னருளை பிறர்காண தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

99. பூவாகி மலர்ந்து மணம் பரப்பும் அமுத்சா
நாவால் நான்றிடுவாய் உன்னருளை தந்திடுவாய்
காவாமல் இருப்பாயோ, காணாமல் போவாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

100. ஆற்றாது அழுவோர்க்கு ஆறுதலை அளிப்பவனே
ஏற்றிநின் புகழ்பாடும் எளியவனை பாருமப்பா
பற்றிய உன்னடியால் நாளும் உயர்த்திடுவாய்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

101. பற்றும் உன்கரத்தை தள்ளாது ஏற்பவனே
சிற்றம்பலத்துள் ஆடும் உலகாளும் ஆண்டவனே
உற்றுதனை கொடுத்து, ஆதரவை தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

102. காட்டு வெள்ளமென ஓடுவது உன்னருளே
கேட்டு செவிமருத்து உதவிடுமே உன்மனதே
சுட்டும் விழிச்சுடரால் தளியிருக்கும் தேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

103. தெவிட்டாத தெள்ளமுதம் நாளும் தருபவனே
செவி சாய்ப்பாய் என்றும் அடியவரின் மொழிகேட்க
தவிக்கின்ற நெஞ்சமதை, உன்கையால் தாங்கிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

104. வண்டு மொய்க்கும் பூவே தென்றல் தரும் காற்றே
கண்டுநித்தம் களிப்புற்று எளியவனாய் வருவாயே
வேண்டும் வரம் தந்துநீயும், உனதன்பை தருவாயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

105. உன்னுரையால் மறைமொழியாம் திருமுறைகள் தந்தவனே
இன்னுரையால் இனியமொழி எளியவர்க்கு ஈந்தவனே
துன்பமெல்லாம் உன் பணியால் கரைந்தோடச் செய்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

106. நின் திருவுருவை நாளும் மனத்தினிலே ஏற்றிடுவேன்
உன் அடியை நாளும் எண்ணமதில் இருத்திடுவேன்
உன் நெஞ்சே தஞ்சமென நினைவினிலே வைத்திடுவனே்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

107. கற்கண்டாய், கரும்பாய், கனியமுதாய் இனிப்பவனே
சொற்சுவையால் அடியவரை உந்தன்பால் ஈர்ப்பவனே
ஏற்றிடுவேன் உன்துணையை, பாடிடுவேன் உன்புகழை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

108. காயாகி கனிந்து தேனூறி நிற்கும் பரம்பொருளே
சோயக நினைந்து தாயாகும் தயாபரனே
வாயார பாடிடுவேன் மனமாற நினைந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

109. கூப்புகின்ற கரமதனை, கைக்குள்ளே அடக்கிடுவாய்
செப்பு மொழி அனைத்தினையும் உன் அகத்தே பெற்றிருப்பாய்
காப்பவனும் நீயன்றோ, கருதும் அன்பும் நீயன்றோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

110. நலிந்தோர்க்கு நாளும் உறுதுணையாய் இருப்பவனே
வலியவனாய் நீயிருந்து எளியவனை காப்பவனே
கலியுகத்தில் உனதுருவை வெளிப்படுத்தி தெரிபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

111. உறுதுணையாய், உள்ளொளியாய் உற்றவர்க்கு தெரிபவனே
வேறுதுணை தேடவில்லை, உந்தன்துணை நாடுகின்றேன்
கூறும்மொழி உந்தன்மொழி தேற்றிடுவாய் என்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

112. தனியாத உனதன்பால் ஆருயிராய் இருப்பவனே
அணிகலனாய் உன்நாமம் என்நாவில் ஒலித்திடுமே
பணிவுடனே கரம் பிடித்து உனதன்பை பெற்றிடுவேன்

நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே

113. கோடான கோடி அண்டங்களுக்கு அதிபதியே
தேடாமல் வருபவனே, தெளிவாக தெரிபவனே
பாடாது இருப்பதில்லை உன்நாமம்   விளக்காது ஓய்வுமில்லை
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே

114. தெவிட்டாத   தேனமுதே வற்றாத ஒளிப்புனலே
தவிக்கும் மனம் நீ அறிவாய், உனதன்பைத் தந்திடுவாய்
கவிபாட அழைத்திட்டாய், செவிமடுக்க மறுப்பதேனோ
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே

115. திகட்டாத கரும்பே வற்றாத ஊற்றே
பகட்டான என்மனதை நாளும் ஏற்பவனே
அகத்தினிலும், புறத்தினினுலம் உன் எழிலை ஒளிர்பவனே
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே

116. வற்றாத பொய்கையிலே வளர்கின்ற செந்தேனே
மாற்றமில்லாமலை தன்னதில் உறைகின்ற செங்கினயே
உற்றதுணை நீயிருக்க வேறுதுனை   தேடவில்லை
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே

117. இசையோடு கலந்துநாதமென ஒலிப்பவனே
திசையறியா எளியவர்க்கு வழிகாட்டு பெருமானே
அசையோடு ஒலியெழுப்பும் ஆனந்தப் பெருங்கடலே
நலம் பெறும்   நாமம் நமச்சிவாயவே

118. சுந்தரத்தமிழாலே, மழலை தன்னை காத்திடுவாய்
காந்தமான உன்கண்ணால் குழந்தை உள்ளம் ஏற்றிடுவாய்
ஏத்திடுவாய் உன்கரத்தால் மழலை பேசும் உள்ளமதை

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

119. வஞ்சமில்லா மனத்தோடு உள்ளமதை ஏற்றிடுவாய்
நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என்மனத்தை ஏத்திடுவாய்
கொஞ்சுமொழி பேசாத பிஞ்சுமனம் கண்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

120. நெஞ்சுருகி வேண்டுவோர்க்கு இல்லையென சொல்லுவாயோ
தஞ்சமென்று அடைக்கலமாய் வந்த என்னை மறுப்பாயோ
கெஞ்சுகின்ற எந்தன்குரல் உன்செவியில் ஒலிக்காதோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

121. வாழ்வுதனை அருள்பவனே, கேட்டவற்றை கொடுப்பவனே
தாழ்வு எனை சூழுங்கால், எனைத்தாங்கும் மனத்தானே
வீழ்ந்திருக்கும் குழந்தைவாழ்வு உன்னாலே உயர்வுபெறும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

122. தழைத்தோங்கி வளரவேண்டும் எந்தன்குல விளக்கு
அழைத்தவுடன் ஏற்றவேண்டும் எந்தன்மன விளக்கு
மழை காணும் பயிர்போல, மலரவேண்டும் ஒளிவிளக்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

123. நேசமதை மனத்தில் கொண்டு பாசமதை தருபவனே
வாசமுள்ள மலராக்கி மணம் வீசும் எளியவனே
பாசமுடன் அழைக்கின்ற எந்தன்குரல் கேட்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

124. சோதனையை தாராது, நேசமுடன் வந்துவிடு
வேதனையை தவிர்த்துநீயும், மனம்குளிர செய்துவிடு
வேதமெல்லாம் உணர்ந்தவனே, என்மனத்தை அறிந்துவிடு

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

125. நின்பதத்தை என்கரத்தால் நாளும் வணங்கவேண்டும்
உன்மனத்தால் என் துயரை அன்புடனே துடைக்கவேண்டும்
வன்கண்ணை தவிர்த்து நீயும் உனதருளைத் தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

126. தருகின்ற வெண்குடையாய் உன் நிழலை தரவேண்டும்
வருவதற்கு தடை ஏதும் இல்லாது வரவேண்டும்
அருகில் வந்து உனதன்பால் என்மனதை வருடவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

127. நல்லதொரு வார்த்தை நாளும் நவில்பவனே
அல்லலுற்று ஆற்றாது வருத்துவோர்க்கு எளியவனே
இல்லலுற்று வருந்துகின்ற மனத்துயரை தீர்ப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

128. தேற்றுகின்ற தெள்ளமுதே, தெவிட்டாத தேனமுதே
வற்றாத சுனைநீரே வருகனிற புதுப்புனலே
குற்றமில்லா மனத்தாலே ஏற்றமுள்ள மனத்தோனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

129. மண்ணுயிர்க்கு காட்சிதந்து சாட்சியாய் இருப்பவனே
விண்ணவரும், மற்றவரும் வந்தேத்தும் பெருங்கடலே
கண்ணை இமைகாப்பது போல், எனைக்காக்கும் பரம்பொருள்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

130. உலககெல்லாம் ஆள்பவனே, இன்னுயிராய் இருப்பவனே
கலமாக வந்துநீயும் உலகளக்க வைத்தவனே
சலனமின்றி இருப்பதேனோ, விடைகொடுக்க மறுப்பதேனோ

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

131. எவ்வுயிரும் உன்னுயிராய் நாளும் நினைப்பவனே
வவ்விநின் பாதத்தை மனங்குளிர பற்றிடுவேன
எவ்வினை வந்திடினும் உன்னருளால் மாறிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

132. உலகாளும்தாயன்பே, என்னுள்ளம் அறியாயோ
குலம் விளங்க வருவாயோ, உனதன்பை காட்டாயோ
ஆல விழுதெனவே, உனைப்பற்ற வாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

133. உன்னருளால் உலகமெங்கும் உய்யும் வகை செய்பவனே
அன்னையென வந்துநீயும் சேய்மனதை அறிபவனே
மன்னவனே, தென்னவனே, உலகாளும் இறையவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

134. வான்சுடரே, விண்மதியே ஆனந்தப் பெருங்கடலே
மின் ஒளியாய் ஒளிர்பவனே எங்கும் நிறைந்தவனே
என்மீது அன்புகொண்டு, என்மனதை அறிபவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

135. மனையதனில் குடிபுகுந்து உன்னொளியால் நிரப்புகின்றாய்
உனையே நினைந்தேங்கும் உள்ளமதில் குடிபுகுவாய்
நினைக்கின்ற என்மனத்துள் நாளும் உறைந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

136. காயாகி, கனியாக இனிக்கின்றாய் என் அகத்தே
தாயாகி, சேயாகி, உறவாவாய் என் மனந்தே
தேயாது, குறையாது வளர்ந்திடுவாய் என் உளத்தே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயே.

137. துணையாக நின்று வரும்துயரை தீர்ப்பவனே
கணையாக வந்துகடுந்துயரை நீக்குமப்பா
அணைக்க வேண்டும் உன்கரத்தால், தவிர்க்க வேண்டும் படும்துயரை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

138. கூப்பிட்ட குரலுக்கு ஓடிவந்து உதவிடுவாய்
அப்பனே, உனையின்றி யார்துணையை நாடிடுவேன்
தப்பேது செய்திடினும் பொறுத்தனே வேண்டுகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

139. கரம் தன்னை பற்றுவோர்க்கு காத்தருளும் பரம்பொருளே
சிரம் தன்னை தாழ்த்தி வணங்குவோர்க்கு அருளமுதே
வரம் ஒன்று தாருமய்யா, அதிசயத்தை காட்டுமய்யா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

140. வேண்டுவது வேண்டியாங்கு நாளும் தருபவளே
அண்டிவந்து அணுகுவோர்க்கு அருள்கொடுக்கும் ஆண்டவனே
தண்டிக்கும் மனம் நிறுத்தி விடுதலையை தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

141. மதியதனை சூடி கொன்றை மலர் அணிந்தவனே
துதிப்பவரை அரவணைத்து நாளும் மகிழ்பவனே
சுதியின்றி இருந்தாலும் சுருதியோடு அணைப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

142. அன்றலர்ந்த தாமரையே, தோன்றுகின்ற விண்மதியே
மன்றிலாடும் விரிசுடரே, மணம் பரப்பும் மாமணியே
தோன்றிடுவாய் என்முன்னே, வளமதனை தருவாயே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

143. காலைக் கதிரவனே, மாலை அம்புலியே
அலைகடலே, ஆனந்த பூம்புனலே
மலைக்கொழுந்தே, மரகதமாமணியே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

144. முத்தமிழும் உணர்ந்து செந்தமிழாய் வளர்பவனே
உத்தமனாய் நாளும் என்மனத்தில் திகழ்பவனே
பித்தனாய் இடம்பிடித்து, உயர்தோங்கி நிற்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

145. இடதுகாலை தூக்கி நின்றாடும் அம்பலமே
மடமான என்மனத்தை தேடாது இருப்பவனே
திடமான உள்ளத்தால், உன் நெஞ்சை உருக்கிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

146. உன்னையே நினைந்து நாளும் உருகுகின்ற ஏழையப்பா
நின்னையே சரணமென்று நாளும் தொழுகின்ற அடியனப்பா
என்தனை பார்க்கும் நாள் , எப்பொழுது கணியுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

147. ஊழ்வனையும் உனைக்கண்டு விடிவுன்றி ஓடிவிடும்
வாழ்வெல்லாம் உனைக்கண்டால் எந்நாளும் இனித்திருக்கும்
ஆழ்ந்துணரும் தன்மையாலே என்மனமும் அறிந்திருக்கும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

148. கன்னல்மொழி அளித்துவிடு, இன்னல்தனை நீக்கிவிடு
உன்கருணை காட்டிவிடு, வரும் துயரை துடைத்துவிடு
நின்னருளை தந்துவிடு, படும் நோயை தவிர்த்துவிடு

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

149. ஆற்றாது அழுவோரின் படும்துயரை தீர்த்திடுவாய்
வற்றாத அருளாற்றால் வந்ததுயர் தணித்திடுவாய்
தேற்றிடுவாய் என்மனத்தை உனதன்பால் எந்நாளும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

150. எண்ணியதை எண்ணியாங்கு நாளும் அருளிடுவாய்
வண்ணச் சுடர்தந்து வாழ்வினிலே ஒளி தருவாய்
கண்ணை இமை காப்பதுபோல் என்கவலை தீர்த்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

151. பெற்றவன் நீயன்றோ, பேதைமனம் அறியாயோ
கற்றதெல்லாம் உன்முன்னே, கருதாயோ என் எண்ணம்
உற்றவன் நீயென்று, கரம் கூப்பும் என் உள்ளம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

152. ஓதி உணர்ந்தவனே, உலகாளும் வித்தகனே
பாதி உருவமதை பார்வதிக்கு ஈந்தவனே
மதிதன்னை தந்து ஒளிகொடுக்க வந்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

153. உன்நாமம் எந்நாளும் என் நினைவில் இருக்குதப்பா
என்னுள்ளம் உன்மனத்தில் மறவாது நிறையுமப்பா
அன்னையென உனதன்பை காட்டுவது மாண்பப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

154. குன்றுதனில் குமரனிடம் உபதேசம் பெற்றவனே
உன்காலில் வீழ்ந்தவரை ஏற்றிவிடும் பெருமானே
இன்முகத்தை காட்டி, நல்வழியை தருபவனே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

155. மட்டமற்ற மகிழ்ச்சிதனை நாளும் தருபவனே
தட்டாமல் வரவேண்டும் உன்பெருமை காட்டவேண்டும்
இட்டதுயர் போதுமென்று, உன்னருளை பெறவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

156. தேவைதனை அறிந்து துயர் மறக்க வைப்பவனே
பாவை எந்தன் தேவைதன்னை அறிந்திடுவாய் உன்மனத்தால்
சேவை செய்யும் மனத்தோடு உன்முன்னே நிற்கின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

157. உயிர் பிறப்பின் மர்மமதை தனுக்குள்ளே வைத்தவனே
பயிர் தன்னை துளிர்க்க வைக்கும் மழைபோல வளர்ப்பவனே
வாயிருந்தும் மௌனமாக கண்ணீரால் வணங்குகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

158. குருமுனியை மாமணியாய் மாற்றும் மறையோனே
உருவதை மறைத்துநின்று கருணைதனை ஒளிப்பதனோ
மருகுகின்றேன் ஆண்டவனே, உன் மனத்தை அறியவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

159. கண்ணுக்கு எளியன் காட்சிக்கு அரியன்
விண்ணுக்கு ஈசன் மண்ணுக்கு இறைவன்
தண்ணொளியில் பகலவன் எண்ணமதில் விரிந்தவன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

160. குலவிளக்கே நீயப்பா, அன்னையென வருவாயோ
பலகற்றும் அறியாயோ தாயெனவே வாராயோ
உலகெல்லாம் அறிந்தவனே உணர்வுதனை அறியாயோ

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

161. அமுதசுரபியாய் வருவாயே
அமுதமழை பொழிவாயே
அமுதவாக்கு தருவாயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

162. அன்புதனை உலகமெல்லாம் உணரும்வகை செய்பவனே
என்புதோல் போர்த்திய உடம்புதனை காப்பவனே
என்னிலையை அறிந்து உன்னருளை தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

163. கண்ணைக் கருதி மண்ணுலகை காத்திடுவாய்
பண்பாடி தொழுபவரை மறவாது ஏற்றிடுவாய்
காண்பவர்க்கு எளியவனாய் அருகில்வந்து அருளிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

164. அன்னையென வந்து அன்புதனை காட்டிடுவாய்
தன்னிலை மறந்துநிற்கும் மகவுதனை காத்திடுவாய்
உன்னையை சார்ந்துநிற்கும் மழலைதனை ஏற்றிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

165. வந்துநிதம் தொழுபவரை தாங்கி நின்றுகாத்திடுவாய்
சிந்துகின்ற கண்ணீரை நன்னீரால் மாற்றிடுவாய்
தந்திடுவாய் அருள்தன்னை சிந்தையிலே நின்றிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

166. உற்றவனாய் நண்பனாய் யாவையுமாய் இருப்பவனே
குற்றமில்லா நெஞ்சோடு அடியவரை காப்பவனே
உற்றதுணை நீயென்று, பற்றுகின்றேன் உன்பாதமதை

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

167. மன்னித்து மனம் மகிழ்ந்து உதவிடுவாய் எந்நாளும்
உன்னையே நினைப்பவர்க்கு நாளும் அருளிடுவாய்
உன்னொளியால் நாளும் உயிர்துளிர்க்க செய்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

168. நல்லவரை உன்வல்லமையால் வாழ வழி வகுப்பாய்
இல்லலுற்று அழுவோர்க்கு கைத் துணையாய் வந்திடுவாய்
கல்லுக்குள் நீரைவைக்கும் உன் நெஞ்சில் ஈரம்வைப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

169. புல்லையும் பூவாக்கும் வில்லையும் வேலாக்கும் ஈசா
நல்லவையை தந்து அல்லல்தனை அகற்றிடுவாய்
வல்லமையை தந்து உன்மதை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

170. மாசற்ற சோதியனே, ஒளிகொடுக்கும் மணிவிளக்கே
பாசமதை காட்டி நேசமதை தருபவனே
ஈசனாக வந்துநீயும் ஒளிதன்னை கொடுப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

171. உருகாயோ, சிவனே, இரங்காயோ எனைநினைத்து
தருவாயோ, உன் அருளை பெறுவேனோ உனைநினைந்து
அருள்வாயோ மனமிரங்கி தருவாயோ நலமனைத்தும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

172. அன்புக்கு கட்டுண்டு, பிட்டுக்கு மண் சுமந்தாய்
என்தனக்கு கட்டுண்டு, வரும்நாளும் எந்நாளோ
உன்தனக்கு கட்டுண்டு, எனதன்பை காட்டிடுவேன்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

173. சொல்லெடுத்து கொடுத்து அடியவரை ஆள்பவனே
பல்லாற்றல் படைத்து, படைத்தவரை காப்பவனே
வெல்லும் சொல் அறிந்து எளியவரை காப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

174. தெவிட்டாத தெள்ளமுதே, வற்றாத வானமுதே
தவிக்கின்ற உள்ளமதை தெளிவாக்கும் தெள்ளமுதே
அவிழ்த்திடுவாய் கேள்விதன்னை பதிந்திடுவாய் என்மனத்தே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

175. குலமின்றி, குணக்குன்றாய் வளம்தன்னை தருபவனே
நலம் நாடும் மானுடர்க்கு வரம்தன்னை அருள்பவனே
மலர்நாடும் வண்டைப்போல் சுற்றிடுவேன் உண்ணுருவை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

176. சிரம் தாழ்த்தி நிற்பவரை, தாங்குகின்ற தாயுமானா
கரம் கூப்பி வணங்குபவரை, மகிழ்விக்கும் அருளாளா
பாரமான மனம் தன்னை எளிதாக்கும் செயலாளா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

177. தளர்வறியா நெஞ்சமதை தாங்குகின்ற மாமணியே
உளம் நிறைந்து வணங்குவோர்க்கு தஞ்சமென வருந்தேனே
இளகிடுவாய், உன்மனத்தால், தஞ்சமதை தரும்மலரே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

178. பண்பாடும் உள்ளங்களை செழித்தோங்க செய்பவனே
எண்ணற்ற இன்னல்களை கடைக்கண்ணால் தீர்ப்பவனே
கண் திறந்து பார்த்து, துயர்தன்னை துடைப்பவனே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

179. மட்டில்லா மாண்பாலே மகிழ்விப்பாய் மக்கள்தமை
கட்டுண்டு அன்பாலே பிட்டுக்கு மண்சுமந்தாய்
காட்டிடுவாய் அன்புதனை அருளாலே ஈர்த்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

180. கொன்றை மலர்சூடி புனலாக வந்திடுவாய்
வன்னி மரத்தடியில் வான்புகழ் வீற்றிருப்பாய்
மன்னித்து அருளிடுவாய் நலமனைத்தும் தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

181. ஆதரிக்கும் உன்குணத்தால் உன்பதத்தை பற்றிடுவேன்
உதவுகின்ற உன்மனத்தால் உன்கரத்தை நாடிடுவேன்
நாதமென்னும் உனதன்பால் அன்புமொழி பகிர்ந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

182. மனமும் கரையவேண்டும், உள்ளம்தான் ஏற்கவேண்டும்
அனல் போன்ற உன் கண்ணும் குளிர்தன்னை பொழியவேண்டும்
உனதன்பு காட்டவேண்டும் அமுதமென உணரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

183. உன்முகமாய் தோன்றுகின்றாய் அகமகிழ செய்கின்றாய்
எள்ளிநகையாடுவோர் முன், உன்மனத்தை உணர்த்திடுவாய்
அள்ளித்தரும் வள்ளலாக, என் முன்னே வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

184. அன்புஎன்ற சொல்லுக்கு கட்டுண்டு வந்திடுவாய்
உன்னிடமே அடைக்கலமாய் வரும் என்னை காத்திடுவாய்
அன்னையாக வந்திடுவாய் பக்கபலம் ஈந்திடுவாய்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

185. கண்ணப்பனுக்கு கண்கொடுத்து கருணை மழை பொழிந்தவனே
விண்ணுலகில் உமையோடு வாழ்வுதனை தருபவனே
மண்ணோடு இசைந்து ஆடுகின்ற நடராசா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

186. உள்ளமெனும் கோவிலிலே நிறைந்திருக்கும் உனதன்பை
அள்ள நினைக்கின்றேன் வற்றாத அருளமுதை
எள்ளளவும் குறையாது எடுக்க விழைகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

187. சந்தந்துடன் பாடவில்லை உந்தனடி தெரியவில்லை
அந்தமில்லா ஆதியில்லா உறைகின்ற பரம்பொருளே
எந்தன்மனம் அறிந்து நீயும் உந்தன்பதம் காட்டுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

188. தாயாகி, தந்தையாகி, மகவாக எனை அணைப்பாய்
சேயாகி, உன்னடியில் நாளும் ஈர்த்திடுவாய்
காயாகி, நிற்காது கனிந்துருக செய்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

189. உந்தனடி மெய்யெனவே பற்றிடுவேன் உய்வதற்கு
விந்தைதனை செயும் உனை நினைந்து வாழ்வதற்கு
ஈந்துபுறம் தந்து காக்கும் உனைநினைப்பதற்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

190. அன்பாக அழைத்திட்டால் அல்லல்தனை நீக்கிடுவாய்
உன் அன்பால் உலகுக்கு அருளமுதம் தந்திடுவாய்

அன்புக்கு கட்டுண்யடு திருவிளையாடல் புரிந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

191. தேடி அலைந்தாலும், தேர்ந்தவர்க்கு தெரிபவனே
ஓடி அழைத்தாலும், நல்லவர்க்கு அருள்பவனே
பாடி அழைப்பவரின் மணம் குளிரிச் செய்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

192. சக்திதனை பாதிவைத்து, புத்திதனை தருபவளே
உத்தி ஒன்று சொல்லுமப்பா, உன்மனதை அறிவதற்கு
பக்தியுடன் பாடிடுவேன், பக்கதுணை தாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

193. வாக்குதனை தரவேண்டும் மனமிரங்கி வரவேண்டும்
ஆக்குவது உன்கையால் வளருவது உன்வழியால்
சிக்கென்று படிப்பவர்க்கு உற்றதுணை நீயென்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

194. விண்ணுலகும், மண்ணுலகும் ஆள்கின்ற பரம்பொருளே
விண்மதியை சூடிநீயும் பாங்குடனே ஆடிடுவாய்
தன்னொளியை தலையில் சூடி, வான்மதியாய் தோன்றிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

195. ஆட்கொள்வாய் மனமதனை செந்தேனாய் இனித்திடுவாய்
ஆட்டிவைப்பாய் உலகனைத்தும் உறுதுணையாய் வந்திடுவாய்
ஈட்டிடுவேன் உன்னருளை தந்திடுவேன் என்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

196. எனையாளும் இறையன்பே, ஏந்துகின்றேன் உன்முன்னே
உனைவேண்டி அழைக்கின்றேன் உதவவேண்டும் மனமிரங்கி

உனைத்தேடி வழக்காடும் என்னுரையை கேளாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

197. எதைச்சொல்லி விளங்கவைக்க அதைச்சொல்லி தாருமப்பா
பதைபதைக்கும் நெஞ்சமதின் வேதனையை அறியுமப்பா
விதை ஒன்றை போட்டு, பலனின்றி செய்வதேனோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

198. எப்படியும் உன்னருளை பெறவேண்டி வணங்குகின்றேன்
இப்படித்தான் வழியென்றால் அவ்வழியை பற்றிடுவேன்
எப்படியும் காட்டிடுவாய் எனநம்பி ஏற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

199. வாக்கீசன் எனப்பெயர் பெற்று, வரமதனை அருள்பவனே
சிக்கென்று பிடிப்பவர்க்கு கேட்டவரம் தருபவனே
எக்கதியும் இல்லையெனில் உன்னருளை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

200. எந்தையென நினைந்து உந்தனையே பணிகின்றேன்
சிந்தையிலே குடிகொண்ட உந்தனருள் பெற்றிடுவேன்
தந்தையென என்சிந்தையில் குடிகொண்ட பெருமானே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

201. ஓரறிவு உடையவரும் உனைநினைந்தால் ஆறறிவு பெற்றிடுவர்
தரணியிலே உனைபோற்றி உன்னருளை ஏற்றிடுவர்
ஈரமுள்ள உன்மனத்தால் கருணை மழை அறிந்திடுவர்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

202. கங்கைதனை தலையில் சூடி பித்தனென பேரெடுத்தாய்
உங்கையில் அடைக்கலமாய் வந்தவரை காத்திடுவாய்

ஏங்கி நிற்கும் எளியவரை உன்காத்தால் தாங்கிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

203.வெந்தனலில் வீழ்ந்தவரை மழையெனவே காத்திடுவாய்
ஈந்திடிவாய் உன்கரத்தால் அறிந்திடுவாய் எளியவரை
சந்தமென இசைத்திடுவாய் உனதன்பால் வாழ்த்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

204.பனியதனை அகற்றும் பகலவனே நீயப்பா
இனித்துன்பம் இல்லையென்று உனதன்பால் காட்டிடுவாய்
குனித்த வாய்மலர்ந்து உன்னருமை சொல்லிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

205.வனமதிலே வீற்றிருப்பாய் விண்முகிலாய் ஓடிடுவாய்
கனல்போன்ற துயரனைத்தும் உன்விழியால் மறைத்திடுவாய்
தனல்போல வருகின்ற துன்பமதை தீர்த்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

206.ஏனிந்த மௌனப்பா, சினம் தணிந்து வாருமப்பா
கனிந்து நீயும் வந்து, குணமாக்க வேண்டுமப்பா
தனித்து நிற்கும் குழந்தைதனை மனமிரங்கி பாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

207.சந்தங்கள் தரும் தேனே, பண்ணோடு இயைந்தவனே
அந்தமில்லா அருட்சுடரே, நன்னெறியை தருபவனே
காந்தமென ஈர்ப்பவனே, கசிந்துருகி வேண்டுகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

208.விழிச் சுடராய் ஒளிதருவாய்
இழிநிலையை மாற்றிடுவாய்

பழிதன்னை நீக்கிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

209. வெட்டவெளிதனிலே தனித்து நிற்கும் தன்னொளியே
ஆட்டமதை நிறுத்திவிட்டால் உலகமெல்லாம் ஓய்ந்திடுமே
விட்டுவிடநினையாது, அணைத்திடுவாய் அண்டமதை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

210. கொன்றைமலர் அணிந்துநீயும் தேவைதனை நிறைவிப்பாய்
அன்றலர்ந்த மலரென்ன மணமெங்கும் பரப்பிடுவாய்
கன்னலென இனத்திடுவாய் காண்பவரை மயக்கிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

211. உற்றவனாய் பெற்றவனாய் வந்திடுவாய் எந்நாளும்
கற்றவனே உன்துணையை நாடி நிற்போர் உயர்ந்திடுவார்
எற்றுணையும் வேண்டாவாம் உன்துணையை நாடிநின்றான்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

212. சென்னிதனில் கொன்றைகொண்டாய்
மின்னொளியை கண்ணில்கொண்டாய்
அன்புதனை மனத்தில் கொண்டாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

213. வாடிநிற்கும் மகவுகண்டு, மனம் பதைத்து உதவிடுவாய்
ஆடிநிற்கும் உன்னழகால் வளம் கொடுக்க வந்திடுவாய்
தேடி அலைபவர்க்கு உன்னருளை ஈந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

214. நாடி தனை அறிந்திடுவாய் நலம் கொடுக்க வந்திடுவாய்
தேடிவரும் பக்தர்துயர் உன்னொளியால் துடைத்திடுவாய்

பாடி நிற்கும் என்னுள்ளம் அறியும்நான் எந்நாளோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

215. தழைப்பதற்கு வழிவகையை மண்ணுயிர்க்கு அளிப்பவனே
அழைத்திட்டால் வந்திடுவாய் துயர்தன்னை நீக்கிடுவாய்
விழைகின்றேன் உனைக்காண அன்புடனே வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

216. பிறைசூடி தருகின்றாய் ஒளிதன்னை உலகமெங்கும்
அறைகூவி, அழைப்பவர்க்கு தருகின்றாய் உன்நிழலை
மறை நான்கும் அறிந்தவனே என்மனதை அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

217. கன்றுதனை காக்கும் பசுவென்ன காத்திடுவாய்
கொன்றைமலர் சூடி, வன்னிநாடி அமர்ந்திடுவாய்
மன்றாடி அழைப்பவர்க்கு தெய்வமென வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

218. நயம்பட உரைக்கும் நாவன்மை படைத்வனே
அயராது காத்திடுவாய் அன்புடனே அழைத்திட்டால்
தயவாக அழைக்கின்றேன் ஆறுதலை தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

219. அம்மா என்றழைக்கும் பொழுது ஓடிவரும் தாயே
சும்மா இருப்பேனோ, உன்புகழை பாடாது
இம்மகவு செய்யும் பிழைதன்னை மன்னிப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

220. தாயாக வந்திடுவாய் துள்ளும் நடை காட்டிடுவாய்
காயாக நிற்பவரை கனிந்துருக செய்திடுவாய்

தேயாத உன்புகழை தொழுதேத்தி மகிழ்ந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

221.பெண் உருவம் பாதிகொண்டு தாயுள்ளம் படைத்தவனே
வேண்டிநிதம் வருவோரை அன்புடனே ஏற்பவனே
கண்ணீரால் அழைத்திட்டால் கண்முன்னே தெரிபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

222.ஈரம்தான் உந்தன்உள்ளம் கனியமுதம் உந்தன்மனம்
சிரமமென நினையாது என்னருகே வாருமப்பா
கரம் கூப்பிவணங்கிடுவேன், சிரம் தாழ்த்தி வேண்டிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

223.வரம் கொடுக்கும் எளியவனே கரம் கூப்பி வணங்குகின்றேன்
இரக்கமதை மனதில் வைத்து உத்தரவு தந்திடுவாய்
பரமதை இறக்கிடுவேன் உன்மனத்தில் ஏற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

224. குற்றமதை ஏற்றிடுவாய் புனல்நீரால் நீக்கிடுவாய்
பற்றற்ற நிலையில்கூட உன் பெருமை நிறுத்திடுவாய்
ஏற்றமிகு உனதன்பை எந்நாளும் காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

225. வன்னிநாடி மகிழ்ந்திருப்பாய்
மின்னொளியால் ஈர்த்திடுவாய்
உன் நினைவை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

226.உற்றவனே நீயென்று என்மனத்தை காட்டிவேன்
பற்றும் மரம் நீயென்று நிழல்தன்னை காட்டிடுவாய்

மற்றவனாய் நினையாது, பற்றுதலை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

227. தேற்றுவது உன்மரபு மாற்றுவது உன்நினைவு
மாற்றமது வந்துவிடும் உன்கருணை பெற்றுவிட்டால்
ஆற்றிடுவாய் உள்ளமதை தண்ணொளியால் நிறைத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

228. அடியேன் செய்தமழை உன்னருளால் மறைந்துவிடும்
கொடி கொம்பாய் நின்றிடுவாய் பக்கதுணை தந்திடுவாய்
அடி முடியில்லா தாயன்பே தயவுடனே வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

229. இன்னிசைக்கு மயங்கிடுவாய் விடைமீது வீற்றிருப்பாய்
மின்னொளியாய் வந்திடுவாய் கசிந்துருகி நின்றிருப்பாய்
கன்னலென இனித்திடுவாய், வாய்திறந்து மலர்ந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

230. பண்ணியது பாவமென்றால் கண்ணீரால் கழுவுகின்றேன்
மண்ணில் வழி தெரியவில்லை காண்பதற்கு பார்வையில்லை
எண்ணிநீயும் வரவேண்டும் நன்னெறியை தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

231. எழுதும் முறை அறியவில்லை எண்ணியதை காணவில்லை
அழுத கண்ணீர் மாறவில்லை உந்தன்பதம் பற்றவில்லை
தழு தழுக்கும் நாவாலே உன்மனத்தை உருக்கிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

232. பிழையிருப்பின் திருத்திவிடு என்மனத்தை மாற்றிவிடு
தழைக்கும் வழி கொடுத்துவிடு என்னுள்ளம் அறிந்துவிடு

அழைக்கும் முறை சொல்லிவிடு என்னருகே வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

233. கரையேற்றி கரைசேர்க்கும் மலைக்கோர் அரசனப்பா
உரைகூற முடியாத மூவுலகின் வேந்தனப்பா
தரையிறங்கி வந்துநீயும் எந்தன்கரம் பற்றுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

234. வெற்றிதனை தருபவனே விண்மீனாய் அலைபவனே
தேற்றிடுவாய் உன்மனத்தருளால் மாற்றிடுவாய் குருவாக
பற்றுதல் உனக்கின்றி பற்றுவோர்க்கு அருளிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

235. அம்புலியை சூடி வெந்தனலாய் அமர்ந்தவனே
இம்மைக்கும் மறுமைக்கும் உந்தனருள் வேண்டுகின்றேன்
ஐம்புலனை மீட்டி அறிவுதனை ஊட்ட வேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

236. சுடராக வருபவனே தூண்டிடுவாய் உன்னொளியை
விடமதனில் நஞ்சு வைத்தாய் தென்றலென வீசிடுவாய்
இடர்தன்னை நீக்கிடுவாய் உன்மனத்தில் இடம் தருவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

237. கூவிஉனை அழைத்திட்டால் அன்புடனே வந்திடுவாய்
குவிந்திருக்கும் மனம்தன்னை மலர்போல விரித்துடுவாய்
பாவி என் வேண்டுதலை மனம்குளிர நிறைவிப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

238. மேருமலை வீற்றிருப்பாய் மலைதனிலே உறைந்திடுவாய்
ஊரும் பேரும் அறியாத அருட்கடலே குணக்குன்றே

அருமையான உன்மனத்தில் ஓரிடம் நீதரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

239. சிக்கெனப் பிடிப்பவர்க்கு வேண்டும் வரம் தருபவனே
வாக்குக்கு நாதனப்பா எத்தனக்கு தந்தையப்பா
ஆக்கமதை தருபவனே இக்கணமே வந்திடுப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

240. வரமதனை தந்துதவி அசுரனையும் காப்பவனே
இரக்கமதில் அன்னையப்பா கொடுத்துதவும் தந்தையப்பா
கரமதனை பற்றுகிறேன் பதமதனை தந்திடுக
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

241. அஞ்சுதலை இல்லையென அடியவரை காப்பவனே
நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அருளாளா ஆண்டவளே
வெஞ்சுடரை விரித்து என்றும் தஞ்சமதை தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

242. விண்மீது பகலவனாய் ஒளிபரப்பும் இறையன்பே
கண்ணுக்கு இமையாக பார்வைக்கு ஒளிதருவாய்
எண்ணமதில் பொருளாகி விளங்கவைக்க வைத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

243. பார்வைக்கு எளியவனே என்மனத்தை அறிபவனே
ஈர்த்திடுவாய் அடியவரை காத்திடுவாய் உனதன்பால்
ஆர்வத்தால் அழைத்திட்டால் குழந்தையென வருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

244. எங்கும் நிறைந்திருக்கும் முடிவில்லா பரம்பொருளே
தாங்குகின்ற உன்மனத்தனில் அடியவரை அறிபவனே

ஏங்குகின்ற எளியவனை ஏறெடுத்து பாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

245. அன்பென்னும் கயிற்றாலே ஈர்த்திருக்கும் இன்பவானா
உன்பார்வையெனும் காந்தத்தால் இழுக்கின்ற அருளூற்றே
கன்னலெனும் வார்ததையாலே கவர்கின்ற பரமசிவா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

246. ஆழ்ந்தகன்ற நல்லறிவை அகத்தியனுக்கு பயிற்றுவித்தாய்
ஊழ்வினையால் வாடுவோர்க்கு உன்கருரண தந்திட்டாய்
தாழ்திறக்க வேண்டுமய்யா தாங்கிடுவாய் உன்மனத்தால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

247.தொண்டனுக்கு அடியவனே ஆண்டருளும் ஆண்டவனே
கண்ணுக்கு இனியவனே காட்சிக்கு எளியவனே
விண்ணுக்கு பரம்பொருளே மண்ணுக்கு அருள் ஒளியே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

248. வாழும் வகையதனை வறியவர்க்கு உரைப்பவனே
அழுகின்ற குழந்தைக்கு அமுதப்பால் தருபவனே
நழுவாமல் வந்திடுவாய் நயம்பலவும் கூறிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

249. குறைவில்லா வாழ்வுதனை மண்ணுயிர்க்கு அளிப்பவனே
மறைநான்கும் உணர்ந்தவனே இன்னுயிராய் இனிப்பவனே
உறைவிடத்தை காட்டாது நீக்கமற நிறைந்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

250. நினையாத ஒன்றைகாட்டி மறைநான்கும் உணர்ந்தவனே
உனை வேண்டி அழைப்பவர்க்கு உன்மனதை தருபவனே

மனைதனில் வந்திடுக பிணிதன்னை நீக்கிடுக
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

251. நஞ்சுதன்னை உண்டு மிடறு தன்னில் வைத்தவனே
தஞ்சமென்று வந்தவரை தன்னிடுதல் முறையாமோ
கெஞ்சி நின்றுகேட்பவர்க்கு தஞ்சமென வருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

252. மனக்கதவை திறந்துநீயும் உன் எழிலை காட்டிவிடு
உன தன்பை பெறவேண்டி, கெஞ்சி நிற்பேன் பற்றிடுவேன்
எனதுள்ளம் அறிந்துநீயும் இருள்தன்னை நீக்கிவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

253. ஐம்புலனை அடக்கியாளும் வித்தையதை அறிந்தவனே
இம்மையிலும் மறுமையிலும் உன்பாதம் பற்றிடுவேன்
உம்மைச் சார்ந்துவரும் எனதன்பை சாற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

254. ஏற்றுகின்றேன் உந்தன்புகழ் உனைப்பாடி துதித்துடுவேன்
ஆற்றாது அழுபவரை உன் மனத்தால் தேற்றிடுவாய்
பொற்றாமரைக் குளத்தினிலே விளையாடல் புரிந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

255. ஊற்றுப்போல் உனதன்பை புனலாக தருபவனே
வற்றாத உன்மனத்தால் அன்புதனை கொடுப்பவனே
பெற்றவனாய் நீயிருந்து உற்றதுயர் தீர்ப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

256. தீப ஒளிகாட்டி அண்ணமலையில் அருள்பவனே
அபயம் என்றழைத்தவர் முன் அஞ்சலென வருபவனே

உபயக்கரம் நீட்டி வருவோரை காப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

257. உன்னொளியை காட்டி நீயும் உன்னொளியை தருபவனே
இன்முகத்தை காட்டிநீயும் கன்னல்மொழி பேசிடுவாய்
வன்சொல்லை மறுத்துநீயும் அன்புதனை அளித்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

258. இருள்தன்னை தீக்கி, ஒளிதன்னை தருபவனே
ஆருயிராய் வந்துநீயும் , மனத்துயரை துடைப்பவனே
அருளமதை தந்து நீயும் காலனையும் உதைப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே

259. தாயாக உனை நினைந்து நாளும் தொழுகின்றேன்
சேயாக நீ நினைந்து எனைக்காண வாருமப்பா
காயாக்கி வெம்பாக்கி பிஞ்சுதனை மாற்றவாமோ
ஈயாமல் இரங்காமல் நீ இருத்தல் அழகன்றோ
தேயாத உடல்தன்னை பாலகனுக்கு அருளுமம்மா
நாயாக நான் திரிந்து உனை நாடி அலைகின்றேன்
ஓயாமல் ஒழியாமல் உன்னடியை பேணுகின்றேன்
தயாபரனே பேசாது இருப்பதேனோ

260. ஈயாது இருப்பாயோ கருணை உள்ளம் கொண்டவனே
கருணை மொழி பேசுகின்ற அன்புள்ளம் கொண்டவனே
ஓயாது அழைத்தாலும் பேசாது இருப்பதேனோ
ஒருமையுடன் வணங்கிடுவேன் உனதன்பைப் பெறுவதற்கே.

261. வாழும் வகையதனை வறியவர்க்கு உரைப்பவனே
அழுகின்ற குழந்தை முகம் பாராமல் போவதேனோ
நழுவாமல் வந்திருப்பா நலமதனை தந்திருப்பா

நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

262. குறைவில்லா வாழ்வுதனை மண்ணுயிர்க்கு அருள்பவனே
மறைநான்கும் உணர்ந்தவனே இன்னுயிரை ஈந்தவனே
உறைவிடத்தை காட்டாமல் நீக்கமற நிறைந்தவனே
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

263. நினையாத ஒன்றை காட்டி மறையதனை அறிந்தவனே
உனை வேண்டிகேட்கின்றேன் என்மனதை அறியுமப்பா
மனையதினில் வந்திருக்க பினிதன்னை நீக்கிடுக
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

264.உள்ளொன்று வைத்து மனமின்றி இருப்பதேனோ
அள்ளி அணைக்காமல் தள்ளி நிற்றல் முறைதானோ
எள்ளி நகையாடி அழவைத்தல் சரிதானோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

265.நின் அருளைப் பெறுவதற்கு உன்காலடியில் சரணடைந்தேன்
என் மனதை அறியுமப்பா உந்தன் மனம் அருள்வதற்கு
என்ன செய்து வேண்டுவது உந்தன்மனம் அருள்வதற்கு
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

266. ஏந்திழையை வாடவிட்டு ஏங்காமல் இருப்பதேனோ
செந்நாலை திறந்து ஓர் வார்த்தை கூறிடுப்பா
வந்துநீயும் காத்திருப்பா அன்பு மொழிதந்திருப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

267.உன் அருளைகாட்டாமல் நீயும் அலைகின்றாய்
என்ன சொல்லி கூறுவது எந்தன்குறை அறிவதற்கு

இன்னல்களை தீர்க்கவேண்டும் எழுந்து சேயும் நடக்கவேண்டும்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

268.எப்படியோ பாடுகின்றேன் அப்படியும் குளிரவில்லை
தப்பாமல் வந்துநீயும் தளிர்நடையை தாருமப்பா
இப்படியும் தண்டிக்க வண்மை உள்ளம் வந்ததேனோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

267. தலரே செய்திடினும் மன்னித்தல் மரபன்றோ
உவகையுடன் மழலையதை தண்டித்தல் முறைதானோ
சேவடியை தொழுகின்றேன் வந்துதவி செய்யும்படி
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

268. கேட்டவரம் தருகின்ற எழில் கொஞ்சும் ஈசனப்பா
வாட்டமுடன் கேட்கின்றேன் கேட்டவுடன் தாருமப்பா
மாட்டேன் என்றுரைத்தல் ஈசனுக்கு அழகாமோ
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

269. நின் இதயமது தஞ்சமென வரம் கேட்டு அழுகின்றேன்
உன்னிடத்தில் கேட்காமல் யாரிடத்தில் சொல்லுலது
நின்னருளை தேடி நிற்கும் பாலகனை பாருமப்பா
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

270. கொஞ்சும் இனியதனை கூண்டிலே அடைகலாமோ
தஞ்சமென வந்தவரை ஈரமின்றி ஒதுக்கலாமோ
லெஞ்சினம் ஏனப்பா மனமிளகி வாருமப்பா
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

271. மறை நான்கினையும் நாளும் உழைப்பவனே மதியதனை அணிந்தவனே
உறைவிடத்தை காட்டாமல் மறைந்திருப்பது முறைதானோ

குறையதனைதந்து ஒளிந்திருப்பது வகைதானோ
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

272. காட்டாமல் உன் எழிலை மகிழ்ந்திருக்கும் இறையன்பே
பாட்டாலே உமை மகிழ்விப்பேன் நீ பாராமல்
இருப்பதேனோ
கேட்க வேண்டும் என்குரலை இரங்கவேண்டும் உன்மனது
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

273. பாடாமல் இருந்துவிட்டேன் அறியாமல் விழ்ந்துவிட்டேன்
ஓடாமல் ஒளியாமல் என்னருகில் வாருமப்பா
தேடாமல் இருப்பதேனோ, ஒளிந்து நீயும் செல்வதேனோ
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

274. வலிக்கின்ற என்மனதை அறியாமல் இருப்பதேனோ
ஒலிக்கின்ற உன்நாமம் தேனூற செய்யுமப்பா
சலித்ததுவோ உன்உள்ளம் எழுத்து ஓடிவாருமப்பா
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

275. அன்புதனை காட்டாமல் துன்பதை தந்ததேனோ
என்னுயிரும் நீயன்றோ எழுந்துநீயும் வாராயோ
தன்னுயிர் போல் மண்ணுயிரை காப்பதுவும் நீயன்றோ
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

276. சிவமாய் அருள்பிழம்பாய் நீக்கமர நிறைந்தவனே
உவந்து ஓர் வார்த்தை நீ அருள வேண்டுமப்பா
பாவமது செய்துவிட்டால் பணி போல கரைந்துவிடு
நலம் பெற நாமம் நமச்சிவாயவே.

277.குழந்தைதனை சுமந்து நிற்கும் உமையவளை காணுமப்பா

மழலை மொழிகேட்டு மனமிரங்கி வாருமப்பா
நீழலை காண்பதற்கு என்னவகை வேண்டுமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

278. புண்பட்ட நெஞ்சமது வெந்தனலாய் வீசுமப்பா
எண்ணி ஏங்கிநிற்கும் ஏழைமுகம் காணுமப்பா
கண்ணொலியை காண்பதற்கு பார்த்து நிற்கும் பாவையப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

279. ஒதுக்கி வைக்கும் நிலையதனை கொடுப்பது நீயன்றோ
செதுக்கி நிற்கும் சிற்பம் போல் மகவுதன்னை ஏன்செய்தாய்
தீதுதனை தந்துவிட்டு கல்லாகி இருப்பதேனோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

280. காண்பதற்கு ஒளிதன்னை தந்தருளும் மறைவண்ணா
அண்மையிலே வாருமப்பா அருளுமதை தாருமப்பா
எண்ணியதை தாருமப்பா எழில்முகத்தை காட்டுமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

281. பேசாமல் நீயும் மௌனித்து இருப்பதுவும் நலம்தானோ
வீசாதோ வந்திருப்பா, எழில் முகத்தை வாராதோ
கூசாமல் வந்திருப்பா எழில்முகத்தை காட்டிடுப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

282. என்னருகே வாருமப்பா அன்புதனை தாருமப்பா
உன்னருகே வருவதற்கு மறுப்பதுவும் முறைதானோ
கன்னல் மொழிபேசி கனியமுதை காக்கவேண்டும்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

283. லிங்கமாய் வந்தருளி உலகெலமெல்லாம் உணர்பவனே

அங்கெங்கெனாதபடி எங்கும் ஒளிர்பவனே
எங்கெங்கும் பிரகாசமாய் ஆனந்தமாய் அருள்பலனே
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

284. உன்னையே வந்தடைந்தேன் தஞ்சமென்று சரணடைந்தேன்
என்மனதை அறியாயோ உன்மனதை காட்டாயோ
தன்னிலையை மறந்து நானும் புகலிடமாய் வருகின்றேன்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

285. கண்எதிரே தோன்றாயோ, களி உவகை காட்டாயோ
பண்ணெடுத்து பாடுகின்றேன் காணாமல் போவதேனோ
உண்மையதை பகரவேண்டும் உன்னொளியை தரவேண்டும்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

286. நினையாத ஒன்றை என்முன்னே நிறுத்துகின்றாய்
உனையே நினைத்துருகும் ஏழையென்னை நோக்குமப்பா
தனைமறந்து போகாமல் உனைநினைக்கும் ஏழையப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

287. உடம்பெல்லாம் புண்ணாக்கி மகிழ்ந்திருப்பது ஏனப்பா
ஊடல் கொண்டு என்னிடத்தே ஒளிவதும் ஏனப்பா
அடம்பிடிக்கும் குழந்தையென வரமறுப்பது ஏனப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

288. குழந்தைகளை நோகடித்து மகிழ்ந்திருப்பது ஏனப்பா
மழலையதை பாருமப்பா மனமுருகி தாருமப்பா
நீழலை பிடிக்கின்றேன் தவிர்த்துநீயும் செல்லாதே
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

289.என்னசொல்லி உனை அழைக்க மறுக்காமல் வந்தருள்க

உன்னருகே வருவதற்கு ஏற்றவழி கூறிடுக
சின்னமுதை பாருமப்பா அறிவுதன்னை தாருமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

290. அழைக்காமல் வந்தருளும் எந்தனருள் மணிவாசா
ஊழையும் உப்பக்கம் மாற்றிடுடும் தன்மையதை அறிந்தவனே
தழைக்க வேண்டும் சின்ன உடல் பிழைக்க வேண்டும் உன்னருளால்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

291. கெஞ்சி, கூத்தாடி, உன் கரத்தை நான் பிடிப்பேன்
தஞ்சமென வந்தருள் பிஞ்சுதனை காக்குமப்பா
வெஞ்சினத்தை தள்ளிவிட்டு வெண்குளிராய் வாருமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

292. தாயடித்தால் தந்தை அணைப்பர் நீயடித்தல் யாரணைப்பர்
மாயமாய் மறையாமல் உன்னருளை தாருமப்பா
தயவாக கேட்கின்றேன் தவப்பயனாய் வாருமய்யா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

293. கரங்கு போல் சுழலும் காலம் போல் நிற்காமல் சுழல்வதேனோ
ஆரமுதே அன்பே பேரின்பவெள்ளமே சுடர்விழியே
இரக்கமதை காட்டப்பா கண்ணொளியை அருளுமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

294. செழுங்குணங்கள் கொண்டவனே பிறைந்தலை அணிந்தவனே
எழுந்து கடிவாராத மகவுதன்னை படைத்ததேனோ
அழுகின்ற என்மனதை செவிகொடுத்து கேட்காயோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

295.பழம்தேடும் பறவைபோல் நலம்நாடும் பேதைநான்
எழுந்து நீயும் வாருமப்பா நினைந்து என்னை பாருமப்பா
செழுமையுடன் வாழ்வதற்கு வகையொன்று தாருமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

296.பண்ணியது பாவமென்றால் மறைவதற்கு வழியென்ன
எண்ணியது தாராமல் கல்லாகி சமைந்ததேனோ
கண்ணாலே நோக்காது காற்றாகி பறந்ததேனோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

297. திறவுகோலாய் நீ இருந்து என்மனதை காணுமப்பா
உறங்குகின்ற உன்மனதை திறந்து வழி சொல்லுப்பா
மறவாது வாருமப்பா மனப்புயலை அடக்குமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

298. நடுக்கடலில் அலை மோதும் ஓடம்போல் என்மனது
கடுகளவும் காணாது கல்லாக மாறியதோ உன்மனது
தடுத்தென்னை ஆட்கொண்டு என்மனதை தேற்றப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

299. வழியொன்று தெரியவில்லை வகையொன்றும் அறியவில்லை
கழிவிறக்கம் கொண்டு விட்டேன் கரையேற்ற கரமுமில்லை
வழி வகைகள் தெரிந்துவிட்டால் உன்காலடியை சரண்டைவேன்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

300. தஞ்சமென வந்திருக்கும் பிஞ்சுதனை காணுமப்பா
கெஞ்சி நிதம் அழுகின்ற பிள்ளைதனை பாருமப்பா
தஞ்சமென வந்தநிற்கும் ஏழையென காணுமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

301. நிற்பதற்கும் நடப்பதற்கும் காண்பதற்கும் வழிவகுக்க வேண்டுமப்பா
வற்றாத நீருற்றாய் வந்திறங்கி காக்கவேண்டும்
முற்றாது நிற்கும் மூளை தனை முடுக்குமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

302. பற்றுகின்றேன் உன்பதத்தை பாராமல் இருப்பதேனோ
உற்றதுணை நீ என்று உவகையுடன் பாகுமப்பா
ஆற்றாது அரற்றுகின்ற என்மனதை பாருமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

303. உறுதியுடன் பிடிக்கின்றேன் உந்தன் திருவடியை
மறுக்காமல் வந்தெனக்கு வரமதனை தாருமப்பா
உறுதுணையாய் வரவேண்டும் மகவுதனை மீட்பதற்கு
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

304.அழகில் ஜோதியனே ஆனந்த பரம்பொருளே
எழுவதற்கு வழியில்லை பார்ப்பதற்கு ஒளியில்லை
அழுவதற்கு ஓசையில்லை எனிந்த கோவமப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

305. ஈன்றெடுத்த் தாயாக வந்துதல வேண்டுமப்பா
என்மனதை அறிந்துநீயும் ஆறுதலை தாருமப்பா
உன்நிலையே புகலிடமாய் ஏக்குகின்ற பேதையப்பா
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

306. மதி நிறைந்த மன்னவனே மாசறு ஜோதியனே
உதிக்கின்ற செங்கதிராய் ஒளிவெளியாய் வருபவனே
மதித்து நீயும் வந்தருளி சிரமதனை காக்கவேண்டும்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

307. மனக்கோயில் திறந்து நீயும் சேயதனை காக்குமப்பா
இனம் தெரியா கவலை நீக்கி, மகிழ்ச்சியதை நல்குமப்பா
சினமிருந்தால் நீக்கிவிடு மனமிளகி தந்துவிடு
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

308. நடுக்கடலில் தத்தளிக்கும் ஓடம்போல் மகவுதனை தளக்கவிட்டாய்
உடுப்பதற்கு உயிர் இருந்தும் உடலிருந்தும் செதுக்கிலைத்த சிலையாக மாற்றியதேன்
தேருகின்றேன் உன்னருளை ஒளியாமல் வந்துவிடு
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

309. செதுக்கி வைத்த சிற்பமாக உரைவில்லா ஓவியமாகவைத்ததேனோ
பாதுகாக்க யாருமில்லை ஒதுங்குவதற்கு வழியுமில்லை
ஓதுவது உன் நாமம் காண்பதுவோ உன் உருவம்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

310. தவிக்கின்ற நெஞ்சமதை தள்ளாது காணப்பா
குவிந்துநிற்கும் உள்ளமதை காணாமல் போவதேனோ
பாவிமனம் தெரியலையா செவிசாய்க்க வாராயோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

311. வணங்குகின்றேன் உன்பாதம் தயங்காமல் வாருமப்பா
கணுலுகின்றது என்நெஞ்சம் தணிக்கநீயும் வேண்டுமப்பா
இணங்காமல் இருப்பதேனோ, காணாமல் செல்வதேனோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

312. கண்நிறைந்த மகவுதனை காணாமல் போவதேனோ
காண்பதற்கு ஒளியில்லை சிந்திக்க வழியுமில்லை
பண்ணெடுத்து பாடுகின்றேன் சடுதியிலே வந்திருப்பா

நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

313. மின்னொளியாய் வந்துநீயும் வாழ்வுதனை தந்திடுப்பா
என்னசொல்லி அழைக்க வேண்டும் வழியதனை சொல்லிவிடு
இன்னலதை தந்துவிட்டு தீர்க்காமல் போவதேனோ
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

314. வாடிய உயிரைகண்டு வாடும் என்மனதை பாருமப்பா
பாடியும் வாராது பகைமை கொள்ளும் நெஞ்சம் ஏனோ
ஓடிவந்து உதவுமப்பா செயல் கொடுக்க வேணமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

315. அழைப்பதற்கு வார்த்தையில்லை கேட்பதற்கு நெஞ்சமில்லை
பிழையதனை செய்திடினும் மன்னித்தல் மரபன்றோ
ஊழையும் உப்பக்கம் காட்டவேண்டும் உன்னருளால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

316. குழந்தையதன் உணர்வுகளை மீட்டவேண்டும் உன்தயவால்
இழந்துநிற்கும் செயலதனை உணர்வோடு தரவேண்டும்
உழலுகின்ற என்மனதை பணபடுத்த வாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

317. மூளையதை ஒதுக்கி வைத்து, உணர்வுகளை அழித்ததேனோ
சளைக்காது வேண்டுகின்றேன் மறக்காமல் வந்துவிடு
இளைக்கின்ற என்மனதை கருதாமல் போலதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

318. கெஞ்சிடினும் பலனில்லை கொஞ்சிடினும் பயனில்லை
தஞ்சமென வந்தாலும் தள்ளியெனை போவதேனோ
அஞ்சலென வரவேண்டும் பிஞ்சுதனை காணவேண்டும்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

319. கசிந்து கண்ணீர் மல்கி உன்பதத்தை கழுவுகின்றேன்
நசித்துநீயும் குழந்தைதனை நளவடையச் செய்யதேனோ
பசியறியா பாலகனை ஆசியுடன் வாழவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

320. கண்இருந்தும் குருடாய், வாயிருந்தும் ஊமையனாய்
உண்மையறிந்தும் வளையாமல் இருப்பதேனோ
வண்மையுடன் இருக்கின்றாய் வலுவிழக்கச் செய்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

321. செங்கமல நாயகனே மறைநான்கும் உணர்ந்தவனே
மங்கலமாய் ஓர் வார்த்தை அன்போடு அருளிடுக
ஏங்கி நிற்கும் மகவுதனை காணாமல் போலதெங்கே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

322. உன்மடியில் வாழவேண்டும் அன்புதனை பெறவேண்டும்
இன்முகமாய் ஓடிவந்து குழந்தைதனை காணவேண்டும்
கன்னல் மொழிபேசி கண்ணொளியைதரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

323. தவறுதன்னை பொறுத்தருளி மகவுதன்னை காத்தருள்க
உவந்து வந்துநீயும் தாழ்வதற்கு வழியதனை தந்தருள்க
ஏவுவதற்கு வழியில்லை நிற்பதற்கு வகையில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

324. வினாவதனை தந்து விடையளிக்காமல் போவதேனோ
கனவினை தந்துவிட்டு காட்சியதை மறைத்ததேனோ
நனவாக்கி தரவேண்டும் அறிவுதனை பெறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

325. புழுபோல மாற்றிவிட்டாய் புலன் அனைத்தும் மறைத்துவிட்டாய்
அழுவதற்கு உணர்வில்லை எழுவதற்கு தெரியவில்லை
தழுதழுக்கும் மனத்தாலே உன்கரத்தை பிடிக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

326. இதயமதை அறியாது எங்கு நீயும் அலைகின்றாய்
ஏதற்குரிய உன்குணத்தை நான் அறிய செய்துவிடு
காதல் கொண்டு அழுகின்றேன் மனமொடிந்து வேண்டுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

327. ஆதியும் அந்தமும் இல்லாத இறைவா
ஓதியும் வேண்டியும் வாராது போவதேனோ
கதியொன்றும் இல்லை வரமொன்றுதரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

328. மனமெல்லாம் உன்நினைவு காணாது ஏன்சென்றாய்
மனமெல்லாம் அலைகின்றாய், உளமகனை காணாயோ
ஈனப்பிறவியென நினைப்பதுவும் ஏனப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

329. வார்த்தை இனி இல்லையப்பா மனமிறங்கி வாருமப்பா
சர்வமும் நீ என்று உன்னடியை பணிகின்றேன்
ஆர்வத்துடன் வந்து நின்று உனதன்பைப் பெற்றிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

330. கசிந்துருக, உள்ளமில்லை, செவிமடுக்க நேரமில்லை
பசி எடுத்து அழுவதற்கும், உணர்வின்றி ஏன்படைத்தாய்
பேசி அழைப்பதற்கோ, குரல்தனில் ஒலியில்லை

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

331. தேடுகின்ற உன்னருளை தெரியாமல் வினை செய்தாயோ
பாடுகின்ற பேதைதனை பாராமல் இருப்பதேனோ
ஓடுவது உன் இயல்பு தேடுவது என்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

332. மோதுகின்றேன் உன் இதயமதை தள்ளி நிற்றல் முறைதானோ
ததும்பி நிற்கும் கண்ணீரை காணாமல் இருப்பதேனோ
ஓதுவது உன்நாமம், ஒதுங்குவது உன் மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

333. அறியாத உண்மையதை தெளிந்து கூறல்மரபன்றோ
அறிவு தன்னை தாராது சிறகொடித்தல் வலியன்றோ
செறிந்து நிற்கும் அறிவுதனை மழலைதனக்கு ஊட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

334. நிலவுதன்னை படைத்தநீயும் பகலவனையும் படைத்தாய்
உலவுகின்ற உன்மனத்தை என்னிடத்தே செலுத்துமப்பா
குலவி தன்னை கண்ணற்று ஒளியதனை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

335. தஞ்சம் கேட்டு நிற்கின்றேன் மனமிரங்கி வரவேண்டும்
நெஞ்சமதில் லஞ்சமில்லை கெஞ்சி நிதம்வேண்டுகின்றேன்
பஞ்சமின்றி உன்னருளை பிஞ்சுவிடம் காட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

336. அறியாத உணர்வுண்டு தெரியாத மறையுண்டு
சிறியனுக்கு அருள்செய்ய உன்மனதில் இடம் வேண்டும்

வெறியோடு அழைக்கின்றேன் மகவுதன்னை காக்குமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

337. வினாவிற்கு விடையளிக்காது எங்கே நீ சென்றாயோ
தேனாகி வந்து இன்னமுதை தாராயோ
கோனாகி வந்து தடுத்தாள வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

338. மனமுருகி வேண்டுகின்றேன் மனமிறங்கி வாராயோ
கனக்கின்ற உள்ளத்தால் கரமதனை பற்றுகின்றேன்
கனன்றிருக்கும் சினமதனை தணிந்து நீயும் வாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

339. சிந்தையது தெளியாது மனம் வெதும்பி நிற்கின்றேன்
பந்தமதை தந்துவிட்டு ஒதுங்கி நிற்றல் சரிதானோ
தந்துவிட்டாய் எழில் மகவை சிரமதனை காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

340. துள்ளி வரும் மானைப்போல் எழில் கொஞ்ச வருவேண்டும்
எள்ளி நகையாடுவதற்கு எழில்மகவை ஏன் படைத்தாய்
அள்ளி அணைக்காமல் தள்ளி நின்று பார்க்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

341. தங்கமகவை தந்துவிட்டு, வெதும்பி நிற்க வைத்துவிட்டால்
எங்கெங்கும் இருப்பவனே, நீக்கமற நிறைந்தவனே
தங்கி நிற்க தருநிழலாய், ஓடிவந்து தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

342. வேண்டுதலை கேட்டபடி எங்கு நீ மறைந்தாயோ
அண்டிநிற்கும் ஏழைதனை தண்டித்தல் சரிதானோ

கண்டுகொள்ள வழியில்லை செல்வதற்கோ வழயில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

343. நட்டாற்றில் தவிக்கவிட்டாய் கடந்து செல்ல வழியுமில்லை
பட்டது போதாதென்று படைப்பதனில் குறைவித்தாய்
காட்டாற்று வெள்ளமென படுதுயரில் மாட்டிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

344. கேள்வியதை தந்துவிட்டு பதிலதனை மறைத்ததேனோ
வேள்வியிலே இட்டுவிட்டாய், காப்பதுவோ எக்காலம்
பள்ளிக்கு செல்லாது படுக்கையிலே கிடத்தினாயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

345. நினையாத ஒன்றை என்முன்னே ஏன் வைத்தாய்
நினைக்கின்ற போதெல்லாம் கண்ணீரை வரவழைத்தாய்
அனைத்துயிர்க்கும் அன்புகூரும் உன்மனது வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

346. மன்றாடும் எந்தன்குரல் உன் செவியில் ஏலிக்கலையோ
மன்றிலாடும் ஈசனே, என்ன சொல்லி எழுப்புவது
மன்னிக்கும் இயல்புதன்னை ஏன்விடுத்தாய் கோமகனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

347. உறங்குகின்றது உந்தன்மனம் மயங்குகின்றது எந்தன்உள்ளம்
இறங்கி நீயும் வாருமப்பா, இரக்கம் நீயும் கொள்ளுமப்பா
பறக்கின்ற உன்மனதை கரையிறங்க செய்யுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

348. தக்கதுணை யாருமின்றி உந்தன்துணை வேண்டுகின்றேன்
சிக்கலை நீ தந்ததெனக்கு சிறகொடித்து வைத்ததேனோ

பக்கதுணை வேண்டுமென்று பற்றதுணை வேண்டுகிறேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

349. பதிலதனை வேண்டுகின்றேன் பாராமல் இருப்பதேனோ
மதிக்கின்றேன் உன் பதத்தை மிதிக்காமல் வாருமப்பா
ஆதியாய் வந்தெனக்கு நல்லபதில் தாராயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

350.பற்றதுற்கு உற்றதுணை, உந்தன் துணையன்றோ
எற்றுணையும் பாராது சிந்தை கலங்க செய்ததேனோ
தேற்ற வேண்டும் என்மனதை, மாற்றவேண்டும் துன்பதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

351. ஒலிக்கச் செய்வது உந்தன் அருள், ஒளிரச்செய்வது உன்கருணை
சலித்திருப்பது எந்தன்மனம் குளிரச் செய்வது உன்நாமம்
மலிந்திருப்பது பிணியின் கூட்டம், அகலச்செய்வது உன் பெருமை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

352. அகலாது பிரியாது உந்தனருள் தேடிநின்றேன்
புகலிடமாய் உனைத்தேடி வருகின்ற பேதை
சகலமும் நீயெனவே, உன்னிடமே சரணடைந்தேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

353.கொதிக்கின்ற கொதிகலனாய் என்நெஞ்சம் தவிக்குதப்பா
மதிக்கின்றேன் உன்மனதை மனமிரங்கி வாருமப்பா
துதிக்கின்றேன் இருகரத்தால் பிடிக்கின்றேன் உன்பதத்தை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

354. நிற்பன, ஊர்வன, பறப்பன, இவையனைத்தும் படைத்திட்டாய்
பற்றுவதற்கு கோலின்றி கல்லாக மகவுதனை ஏன்சபித்தாய்

கற்பதற்கோர் அறிவில்லை, தெரிவதற்கோர் உணர்வுமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

355.பொறுமையுடன் உன்னடியை நாளும் பற்றுகின்றேன்
சிறுமையதை தந்தாயே உணர்வுதனை மறுத்தாயே
மறுக்கின்றாய் உன்னருளை புலையனேன் என்தனக்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

356. பொறுப்பற்று செல்லாமல் வேண்டுதலை கேளுமய்யா
சிறுத்துநிற்கும் என் மனதை புரிந்துகொள்ள வேண்டுமய்யா
மறுக்காமல் வந்துவிடு, நோயதனை தீர்த்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

357. பெறுவதற்கு உந்தன்அருள் தேடிநிற்கும் பேதைநான்
மறுப்பதற்கு வழியின்றி தரவேண்டும் உன்னருளை
பொறுமையுடன் வந்திடுக, உந்தனருள் தந்திடுக
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

358. காக்கவேண்டும் செல்வமதை, வரவேண்டும் எனைத்தேடி
சிக்கெனப் பிடிப்பேன் உன்பாதம், நழுவாமல் வந்துவிடு
இக்கணமே வரவேண்டும், பிணியதனை தீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

359. ஓம் என்ற சொல்லே பிரணவமாய் வந்துநிற்கும்
அம்மையுமாய், அப்பனுமாய் அரவணைக்க வந்துபார்க்கும்
இம்மையிலே வழி ஒன்று எந்தலுக்கு சொல்லவரும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

360. ஆசானாய் நீ வந்து வழி நடத்தவேண்டுமப்பா
பேசாது நிற்கும் பிள்ளை, தவழ்வதற்கோர் வழியில்லை

பாசாங்கு செய்யாது, மனமிறங்கி வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

361. ஈனனை பிள்ளையதை மாற்ற மனம் வந்ததேனோ
கனன்று கொண்டிருக்கும் என் உள்ளமதை பாராயோ
சினம் கொண்ட உன்மனதை சாமரத்தால் தணிக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

362. நல்லோர் மனதை நடுங்க வைத்தல் முறைதானோ
அல்லலுற்று அழுகின்றேன் எந்தன் துயர் தராயோ
இல்லையென்று சொல்லாது என்னிடம் நீ வாராயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

363. மனத்துயரை சுமப்பதற்கோர் மனதினிலே வலுவில்லை
உனக்குமட்டும் கருணையில்லை, உள்ளத்திலே ஈரமில்லை
எனக்கு மட்டும் வாராமல் எங்கு நீ மறைந்தாயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

364. கல்லுக்கு உயிர்கொடுத்து சிலையாக வடித்ததேனோ
கல்லுக்கும் ஈரமுண்டு உன் நெஞ்சு மட்டும் மரத்ததேனோ
பல்லுயிரை படைத்தலனே எனக்கு மட்டும் மறுத்ததேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

365. தெரிந்து நீயும் செய்து புரியாமல் வைத்ததேனோ
அரிய மகவைபடைத்து அவலத்தில் விட்டதேனோ
பரிவு காட்டமாட்டாயா நினைவு கூர்ந்து நோக்காயா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

366. இரவுதன்னில் இருக்கும் ஈட்டில்பூச்சியாய் மகவுதன்னை படைத்துவிட்டாய்
சிரமதிலே வைத்துவிட்டாய் தொடர்தையாய் பிணியதனை தந்துவிட்டாய்

சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

367. பந்தமென்று சொல்லதற்கு பக்க துணையாய் வந்துவிடு
சிந்தையதில் வந்துநிற்கும் செல்லமே, சிவபெருமானே
வெந்துநின்று கேட்கின்றேன் மனமிரங்கி வாராயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

368. வெந்தபுண்ணில் வேல்பாய்ச்ச, உந்தன்மனம் கல்லோ
ஈந்துதவும் உந்தன்குணம் ஏன் இறங்கி போனதப்பா
உந்துதல் இல்லாமல் மூளைதனை மாற்றியதேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே .

369. உச்சிமுதல் உன்கால்கள் வரை சோதனையை செய்ததேனோ
உச்சிமோந்து பாராது குத்தி மகிழ்ந்ததேனோ
எச்சம் போல் விட்டுவிட்டு மகிழ்ந்திருப்பது எளிதன்றோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

370. உச்சிமோந்து பாராது, எச்சமாக்கி விட்டதேனோ
பேச்சதனை நிறுத்தி இன்பமுறல் சரிதானோ
ஏச்சுக்கும், பேச்சுக்கும் இடமதனை அளித்ததேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

371. மாமலரை தூவி மனமாற வேண்டுகின்றேன்
சேமமதை தரவேண்டும் அறிவுதன்னை கொடுக்கவேண்டும்
மாமணி வண்ணனவன் வல்லவனாய் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

372. பொழுது புலர்ந்தாலும் மனக்கதவு திறக்கவில்லை
தழுவாமல் நிற்கின்றாய் காணாமல் போகின்றாய்

அழுகின்ற எந்தன்குரல் உன்மனதில் உரைக்காதோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

373. தெளியாமல் நிற்கின்றாய் தேற்றாமல் இருக்கின்றாய்
அளிக்கவில்லை வரமதனை தீர்க்கவில்லை எந்தன்குறை
களித்து நிற்க மணமில்லை, சலிப்படைந்து வேண்டுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

374. எழுவதற்கு வழியுமில்லை எடுத்து இயம்ப தெரியவில்லை
நழுவி நீயும் செல்வதேனோ, பகைக்காமல் இருப்பதேனோ
நழுவாமல் வந்துவிடு தெளிவு தனை தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

375. சின்னஞ்சிற காலால் நிற்பதர்க்கோர் வழியுமில்லை
வன்மையுடன் தண்டித்தாய், சிந்தை இறங்க மறுத்துவிட்டாய்
என்ன சொல்லி அழைக்கவேண்டும் உந்தன் அருளை பெறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

376. பேதை சொல்லை கேட்கவேண்டும் மனமிரங்கி வரவேண்டும்
எதைச் சொல்லி வேண்டுவது என்ன சொல்லி வணங்குவது
அதைச் சொல்லி தாருமப்பா அப்படியே நடக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

377. கடைக்கண்ணால் பார்த்தருள்க, இன்சொ;லை தந்திடுக
அடை காக்கும் குஞ்சைப் போல், உன்னருகே வருகின்றேன்
தடை ஏதும் சொல்லாது, மகவுதன்னை காத்தருள்க
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

378. அதிசயத்தை செய்யவேண்டும், உன்பயனை அடையவேண்டும்
மதியதனை தரவேண்டும், மனதில் அருள்வரவேண்டும்

கதியென்று உன்பதத்தை என் கரத்தால் பற்றுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

379. விதியதனை மாற்றவேண்டும், நல்லவழி விடவேண்டும்
மதித்து வரவேண்டுமப்பா, சிந்தையதை தூண்டுமப்பா
குதித்து வரவேண்டும் பிள்ளை, பிரித்துரை வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

380. சிந்தையதை அறிந்தவனே, உத்தியதை தாருமப்பா
விந்தையதை காட்டுமப்பா, ஓடோடி வந்திருப்பா
உந்தனையே நினைக்கின்றேன், நிந்தனை அற்று வாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

381. வாய்குளிரப் பேசுவதற்கு வஞ்சனையை செய்தாயோ
ஆய்ந்தறிய மனமில்லை, சொல்லுதற்கோர் வார்த்தையில்லை
ஓய்வின்றி வேண்டுகின்றேன், உய்வதற்கு வழியாதோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

382. கண்குளிர பார்க்க வேண்டும், உந்தனருள் தேடவேண்டும்
உண்மையதை சொல்லிவிடு, ஒளியாமல் வந்துவிடு
எண்ணமெல்லாம் நிறைந்தவனே, உதவியதை செய்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

383. அண்டமெல்லாம் ஒலிப்பவனே, மலையதனில் ஒளிர்பவனே
கண்டுகொள்ள வேண்டுமப்பா சிரமதனை தாங்குமப்பா
எண்ணியதை பற்றுவதற்கு பரம்பொருளாய் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

384. அருளைபொழிய வேண்டும் அங்கமெல்லாம் குளிரவேண்டும்
அருகில் நீயும் வாருமப்பா, குழந்தையுடன் பேசுமப்பா

திருவடியை வணங்குகின்றேன், மகவுடனே ஆடவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

385. கண்எதிரே வரவேண்டும், காலமெல்லாம் காணவேண்டும்
பண்ணிய பாலமதை, பனித்துளிபோல் மாற்றவேண்டும்
கண்ணதனை தந்தாலும், காட்சியதை அளிக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

386. சொந்தங்கள் நீ என்று உந்தனிடம் கேட்கின்றேன்
பந்தமதை உதறிவிட்டு, எங்கு சென்றாய் என்னுயிரே
சிந்தனையை சிதறிவிட்டாய் கேட்பதையும் மறந்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

387. சலிக்காது எந்தன் மனம், ஓயாது எந்தன்கரம்
பலியாக மாற்றாதே, வேண்டுதலை மறுக்காதே
வலிப்பதுவோ எந்தன்மனம் சிதறுவது பிஞ்சின்ராம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

388. பறக்கின்ற பறவையதன் சிறுகடித்து பார்க்கின்றாயே
அறமதனை சொல்லிவிட்டு, பாராமல் இருப்பதேனோ
மறப்பதர்கோர் மனமில்லை, அறிவதர்கோர் தெளிவுமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

389. கையதனில் குழந்தைதந்து பாரமதை தந்ததேனோ
கைமகவு ஏந்தி, காலடியை வணங்குகின்றேன்
கையசைலை தாருமப்பா, செயலதனை தந்திருப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

390. பதில் அளிக்க வேண்டுமப்பா, கெஞ்சும்குரல் கேட்கலையா
பதிகின்ற உந்தன் நாமம், என் மனதில் ஒலிக்குதப்பா

பாதி உடல் ஈந்தவனே, பலனதனை தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

391. பகைமை கொண்டு என்னிடத்து பாராது இருப்பதேனோ
தகைமை கொண்ட உந்தன்குணம், மணமிறங்கி லாராதோ
ஈகையது உன்பண்பு, கொடுத்துஉதவல் உன்மாண்பு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

392. செவிகொடுத்து கேளப்பா, எந்தன் குறை தீருப்பா
ஈவிரக்கம் கொள்ளப்பா, ஒளியதனை தாருமப்பா
கேலிநிதம் அழுகின்றேன், எந்தன் குறை தீருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

393. தந்துயர் தீருமப்பா நோயதனை தீருமப்பா
வந்துதுயர் தீர்வதற்கு அருமருந்து தாருமப்பா
எந்த இடர் வந்தபோதும், நீக்கிவிட வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

394. பண்புதனை கொண்டவனே பாசமுடன் வாருமப்பா
மண்ணுயிர்க்கு நீயும் நலம் வாங்க செய்திடுப்பா
கண்ணாலே கருதவேண்டும், கலக்கமதை நீக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

395. என்று நீ வந்திடுவாய் ஆர்வமுடன் காத்திருப்பேன்
கன்று காணும் பசுவைப்போல் உந்தன்முகம் பார்த்திருப்பேன்
ஊன்று கோலாய் வந்துநிற்கும் உந்தன் உளம்கண்டு நிற்பேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

396.தேற்றவேண்டும் எந்தனையே மாற்றவேண்டும் பிஞ்சுதனை
பெற்றவனாய் வாராது சிந்தை மறந்து நிற்பதேனோ

ஏற்றதுணை நீ என்று, உன்னடியில் விழுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

397. துயரமதை தந்துவிட்டு இன்புறுதல் சரிதானோ
மாயமாய் வந்திடுக, எந்தன்துயர் தீர்த்திடுக
இயக்கமதை தந்திடுக, இயம்புவதை கேட்டிடுக
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

398. மரத்துவிட்ட உந்தன் நெஞ்சம் தஞ்சமதை தரவேண்டும்
இரக்கம் கொண்டு வாருமப்பா, குழந்தை தன்னை பாருமப்பா
சிரமதனை ஏந்திடுக சீர்த்திருத்தம் செய்திடுக
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

399. செவிமடுக்க வேண்டுமப்பா கரம் கூப்பி நிற்கின்றேன்
தவிக்கின்ற உள்ளமதை உணராமல் இருப்பதேனோ
கூவி உன்னை அழைக்கின்றேன் மறுக்காமல் வந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

400. கண் அதனை தந்துவிட்டு, கண்ணொளியை ஏன் பறித்தாய்
கண் மூன்று இருப்பதனால் காணாமல் செய்கின்றாய்
அண்மையிலே வந்து நீயும் அன்புமழை பொழிந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

401. என்ன சொல்லி அழைத்தாலும் பாராமுகம் காட்டுகின்றாய்
அன்னநடை பயிலாமல் கிடப்பதை நீ பாராயோ
சின்னவாய் பேசாமல் அடைத்து வைத்தல் சரிதானோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

402. பேதலித்து அழுகின்றேன் ஒளிந்து காணல் சரிதானோ
ஆதரிக்க வரவேண்டும் ஆக்கமதை தரவேண்டும்

ஈதல் உன் செயலப்பா, மறுக்காது தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

403.நல்கவேண்டும் பேரருளை தீர்க்க வேண்டும் பிணியதனை
வெல்ல வேண்டும் நோயதனை வந்து நீயும் அணுகவேண்டும்
ஒல்கும் வகை செய்ய வேண்டும் அல்லலதை நீக்க வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

404. சேய்எனை நினைத்து தாயாக வரவேண்டும்
தேய்பிறை போல் மாறாது வளரவேண்டும் உந்தன்பிள்ளை
உய்வதற்கு வழி செய்து பிணிதீர்க்க மருந்து வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

405.உனைக்காண வரவேண்டும், பிணிதீர்க்க வகை வேண்டும்
அனைத்துயிரும் இன்பமுற வழியதனை செய்ய வேண்டும்
மனையதலில் வாருமப்பா, மகவு குறை தீருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

406.ஒளியின்றி, ஒலியின்றி எழுவதற்கு வழியின்றி கிடப்பதை நீ காணுமப்பா
கேளி செய்ய இடமின்றி நொடியதனில் தீர்த்திடப்பா
கனி உவகை கொள்ளாது இரக்கமதை காட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

407. முக்கண்ணை உடையவனை கண்ஒளியை ஏன் எடுத்தாய்
பக்கமதில் வாருமப்பா நோயதனை நீக்குமப்பா
சிக்கலை தந்துவிட்டு தீர்வுகாண மறுப்பதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

408. அன்பு காட்டும் உந்தன் உள்ளம் மூடியது ஏனப்பா
மன்னித்து வரவேண்டும் மனமிறங்கி காணவேண்டும்

சின்னக் குழந்தையதை அரவணைக்க வேண்டுகிறேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

409. சுற்றமதை தந்துவிட்டு, தனித்துவிடல் நல்லதன்றோ
பற்றுதனை தந்துவிட்டு பாராது இருப்பதேனோ
வெற்றுடலாய் இருக்கின்ற உயிர்தன்னை தூண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

410. வேதமதை தெரிந்தவனே மண்ணுயிரை காப்பவனே
இதயமதை காட்டிவிட்டேன் சொல்லதற்கு வழியில்லை
பதமாக எடுத்துரைத்தும் வருவதற்கு மறுக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

411. லிங்கமாக நினைக்காது உயிராக நினைக்கின்றேன்
தங்காமல் செல்கின்றாய், தவிக்கவிட்டு போகின்றாய்
அங்கமெலாம் வாடுகின்ற மகவுதன்னை காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

412. தெளிவாக இருப்பவனே ரகசியமாய் மறைபவனே
அளிக்கவேண்டும் வரமதனை கேட்கவேண்டும் எந்தன்குறை
ஒளியதனை தரவேண்டும், காட்சியதை காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

413. அடியவர்க்கு அருள்பவனே இன்பமதை தருபவனே
தேடித்தேடி அலைகின்றோம் உந்தன் அருள் பெருவதற்கு
பாடி நித்தம் கேட்கின்றோம் பிணியதனை தீர்ப்பதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

414. வார்த்தைகளை தேடுகின்றேன் நெகிழவேண்டும் உந்தன்மனம்
தேர்ந்தெடுத்து அழைத்தாலும் வாராது போவதேனோ

கர்ணனாக வந்திடுப்பா காரிருளை போக்கிடுப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

415. இல்லறத்தில் இருந்தாலும் நினைக்கின்றேன் உந்தனையே
செல்லாது வந்திடுப்பா தாயாக அணைத்திருப்பா
கல்லாக செய்துவிட்டாய் உணர்வுதனை தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

416. பனியும் உருகுமப்பா கல்லும் கரையுமப்பா உந்தன்மனம் இளகாதோ
இனி அழுவதர்கோர் நீரில்லை, தேற்றுவதற்கோ
வழியில்லை
மனிதன் கூடமாறிடுவான் உந்தன்மனம் மரத்தது ஏன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

417. சிந்தனையை தூண்டாது வேதனையை தந்தது ஏன்
வந்துதவி செய்யுமப்பா தக்கதுணை தாருமப்பா
காந்தமென விழியைதந்து ஒளியதனை எடுத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

418. சிறியேன் உனை வேண்டுகின்றேன் கருணையதை காட்டவேண்டும்
அறிந்திருந்தும் குழந்தையதன் உணர்வுதனை மறைத்ததேனோ
குறிப்பறிந்து செய்யவேண்டும் குறைதீர்க்க வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

419. காலடியை பற்றுகின்றேன் தள்ளாது வாருமப்பா
ஓலமிட்டு அழுதாலும் ஒதுங்கி நிற்றல் முறைதானோ
கலக்கமதை தந்துவிட்டு காணாது போனதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

420. வேதனையை தந்துவிட்டு சிந்தையதை மறைத்தது ஏன்

உதவவேண்டும் உன்கரங்கள் தீர்க்க வேண்டும்
பிணியதனை
ஆதரிக்க யாருமில்லை பேதலித்து நிற்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

421. தருவதற்கு மறுக்கின்றாய் புரியாமல் தவிக்கின்றேன்
உருவத்தை காட்டவேண்டும் தருநிழலாய் வரவேண்டும்
வருகின்ற வழியதனை விழி வைத்து காத்திருப்பேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

422.புத்தியதை தாராது, மறைத்து வைத்தல் சரிதானோ
எத்திசையும் காணாது தவித்துநிற்கும் பேதைமனம்
சித்திரம் போல் செய்துவைத்து சிந்தைதனை மறைத்ததேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

423. பிச்சைகேட்டு நிற்கின்றேன் தாராது போவதேனோ
அச்சம் கொள்ள வைத்துவிட்டு எஞ்சியதை தந்ததேனோ
இச்சமயம் வந்திருப்பா உந்தன்மகனை காத்திருப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

424. உறுதியாக வரவேண்டும் திறமதனை தரவேண்டும்
மறுக்காமல் கொடுத்துவிடு புத்தியதை செலுத்திவிடு
உறுதுணையாய் வந்துநித்தம் உணர்வுதனை தெளியவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

425. பகைமை கொண்டு சிசுவதனை சிதைத்ததேனோ
வகையதனை செய்துவிடு வஞ்சனையை மறந்துவிடு
ஈகையதை காட்டவேண்டும் என்மனதை உணரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

426. தேவையதை தெரிந்துகொண்டு உதவிமனம் மறுத்துவிட்டாய்
அவையதனில் வெட்கும்படி சிரமதனை சிதைத்துவிட்டாய்
அவையம் அதை அடக்கிவிட்டாய் செயலதனை மறுத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

427. எழுதுவது புரியலையோ நினைப்பதுவும் தெரியலையோ
அழுவதற்கோர் குரலில்லை எழுவதர்கோர் செயலில்லை
கழுவி விட்டாய் உந்தன்கரம் எழுதிவிட்டாய் என் விதியை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

428.சொல்லுதர்கோர் வார்த்தையில்லை நினைப்பதற்கு உரமுமில்லை
கல்லைப்போல் இருக்கின்றாய் உருகாது உந்தன்மனம்
செல்லுமிடம் தெரியவில்லை வெல்லுவதற்கு வழியுமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

429. நம்பிக்கை இழக்கின்றேன் தேர்லதர்கோர் வழியுமில்லை
ஆம்புவிட்டது எந்தன்மனம் உந்தனருள் காணாமல்
அப்பா என்று அழைப்பதர்கோர் வழியில்லை குழந்தைக்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

430. வானவர்க்கு முதல்வனே, எனை ஆளும் ஈசனே
இமைதனை கண்டுகொள்ளும் உயிர்தன் போல் அறியவேண்டும்
மனமதனை காட்டிவிட்டேன் மறுமலர்ச்சி தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

431. மறப்பதர்கோர் மனமில்லை இரப்பதர்கோர் இடமில்லை
சிறகொடிந்த பறவையாய் சிதறியது எந்தன்மனம்
இறக்கிவிட்டாய் எந்தன்நிலை பறநதுவிட்டாய் காணாமல்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

432. இன்னுயிராய் இருப்பவனே ஈகையதை செய்பவனே
தன்னிகரில்லா இறையன்பே மூவுலருக்கும் முதல்வனே
மேன்மையதை தரவேண்டும் சிதைக்காது காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

433. பிணிக்கு மருந்தே மின்னொளியாய் வருபவனே
அணிக்கு அணிகலனே பிறைநுதலை உடையவனே
தணிக்க வேண்டும் தளர்ச்சியதை பெறவேண்டும் உன்னருளை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

434. மன்னுயிரை ஆள்பவனே அன்புக்கு அடைக்கலமே
தன்னுயிராய் நினைப்பவனே மதியதனை கொண்டவனே
சென்னிதளை காக்கவேண்டும் எழுந்துவர வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

435. கொடியவினை வந்திடினும் அகற்றும் விதம் அறிந்தவனே
ஓடிநீயும் வரவேண்டும் வல்லனையை நீக்கவேண்டும்
மடிப்பிச்சை கேட்கின்றேன் ஒலியதனை தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

436. வேண்டுதலை கேட்டிடுவாய் பற்றுதலை தந்திடுவாய்
அண்டங்களுக்கு அதிபதியே தவறுதனை சீரமைப்பாய்
ஆண்டவனே நீயென்று அடைந்து விட்டேன் உன்கதியை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

437. எண்ணுதற்கு இனியவனே பேரின்பம் தருபவனே
பேணாது எனைநீயும் வெறுப்பதும் முறைதானோ
மண்ணுலகில் உனையின்றி உறுதுணை யாருமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

438. துதிக்கின்றேன் உந்தன்பதம் நினைக்கின்றேன் உந்தன்துணை
சோதிவடிவானவனே ஒளிப்பிழம்பாய் திகழ்பவனே
ஆதிமுதல்வனே ஒதுக்காமல் வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

439. ஆதரவை தருபவனே பெரும்பேற்றை கொடுப்பவனே
சோதனைகள் செய்வதேனோ மனம் கூம்ப வைப்பதேனோ
மதம்பிடித்த யானைபோல் சிதறுவது எந்தன்மனம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

440.சொல்லுக்க முதல்வனே, மலையதனில் ஒளிர்பவனே
அல்லலதை களைந்து சிந்தை நிறைக்க செய்பவனே
இல்லாமல் செய்த உணர்வுதனை மீட்டியருளி தருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

441. வேதமதை உணர்ந்தவனே சித்தமதை தெரிந்தவனே
கதறுகின்றேன் காலடியில் வீழுகின்றேன்
பதறுவது எந்தன்மனம் தெளியாது உந்தன்உள்ளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

442.கொன்றை மலர் அணிந்தவனே மதியதனை பெற்றவனே
மன்னித்தலை அடகுவைத்தாய் சிந்தனையை சிதறவிட்டாய்
தன்னிலையை மறந்துவிட்டாய் என்னிலையை காண்பதில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

443.பேரருளைத்தருபவனே ஞானஒளியாய் திகழ்பவனே
அரவமின்றி இருக்கின்றேன் வார்த்தையின்றி தவிக்கின்றேன்
சிரம் கூப்பி வணங்குகின்றேன் வலிப்பதனை நீக்குமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

444. அம்பலத்து சிற்றரசே மேருமலை கோமகனே
விம்மி அழுதாலும் உருகாதோ உந்தன்மனம்
தேம்புகின்றேன் உந்தன் துணை காண்பதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

445. இரக்கமதை அருள்பவனே வானர்க்கு மன்னவனே
தரவேண்டும் அன்புமழை தீர்க்கவேண்டும் மனக்குறையை
சிரமதனை விட்டுவிட்டாய் சீரமைக்க மறந்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

446.தெளிவான அமுதீசா மாறாத தியாகராஜா
அளிக்கவேண்டும் நலமதனை காட்டவேண்டும் காட்சிதனை
ஒளியதனை தரவேண்டும் துன்பமதை நீக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

447. மூவுலகை ஆள்பவனே எளியவர்க்கு அருள்பலனே
கேவும் குழந்தை பார்க்கலையோ பிணியதனை நீக்கலையோ
தாவுகின்ற உள்ளமதை தாங்கி நிறுத்தவேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

448. நலமே தருபவனே அற்புதங்கள் செய்பவனே
குலமதனை காப்பவனே ஈந்துவக்கும் பெரியவனே
உலகமெலாம் அறிந்தவனே உட்பொருளை அறிந்தவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

449. நிலையான இன்பதை நாளும் தருபவனே
மலையாக வந்ததுயர் நிலையாமல் செய்பவனே
சிலையாக நிற்காது கருணை மழை பொழிபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

450. வருங்காலம் நலம் காக்க உன்கரத்தால் அருள்பவனே
தருகின்ற வரமதனை தாழ்த்தாமல் தருபவனே
அருகில் வந்து எமைகாக்கும் எமைஆளும் ஈசனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

451. துயர் தெரிந்து அழிப்பவனே சுடரதனை தருபவனே
செயலதனை கொடுப்பவனே மனம் குளிரச் செய்பவனே
அயராது உலகமெங்கும் துணையாக இருப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

452. பிரணலாய் நின்று மந்திரத்தை ஒளிப்பவனே
சேரவேண்டும் உந்தனருள் கூடவேண்டும் உந்தன் அருள்
பேரரலம் ஒலித்திடினும் யோக நிலையில் இருப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

453. சிந்தனையில் குடிகொண்டவனே சீரான வாழ்வுதனை கொடுப்பவனே
எந்தையுமாய் இருப்பவனே எழில் உருவம் கொண்டவனே
பந்தமதை அறிந்தவனே, தெளிந்தமனம் தருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

454. வளமான காலத்தை அன்போடு தரவேண்டும்
ஆளவேண்டும் எந்தன் வாழ்வு தரவேண்டும் குலவிளக்கு
மௌனமதை விடவேண்டும் நலவாழ்வுத் தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

455. அன்பைத்தருபவனே ஆருயிராய் இருப்பவனே
உன்னையே நினைத்து ஏங்குகின்றேன் ஆண்டவனே
தேன்போன்று இனிப்பவனே வற்றாத தெள்ளமுதே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

456.கொஞ்சுகின்ற பிஞ்சுதனை அன்புடனே ஈந்தவனே
தஞ்சமென்று வந்தவரை தழைத்தோங்க செய்பவனே
அஞ்சவேண்டாம் சொல்லிநீயும் வந்து எதிரே நிற்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

457. செல்வங்களை காப்பவனே அருள்ஜோதியென தெரியனே
வல்லமையை தாருமப்பா நல்வழியை காட்டுமப்பா
அல்லலுற்று நிற்கும் நெஞ்சம் விம்மி உனை வேண்டுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

458.தயவென்று வந்துவிட்டால் தளராது உதவிடுவாய்
செயலதனை தாருமப்பா பணிவுடனே வேண்டுகின்றேன்
இயல்பான வாழ்க்கையதை அன்புடனே தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

459. பாமாலை சூட்டுகின்றேன் பரம்பொருளை வேண்டுகின்றேன்
பூமாலை போட்டு நித்தம் கரம்கூப்பி வணங்குகின்றேன்
உமாபதியே உந்தனடி பணிகின்றேன்வேண்டுகோளை கேட்டருள்க
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

460. நமச்சிவாய என்பது உன்நாமம் நயம்பயக்க வைப்பது உன் கண்கள்
சேமற விழைகின்றேன் செஞ்சுடரே வந்தருள்க
கோமகனே வந்திடுக உந்தன் கழல் காட்டிடுக
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

461. மறைநான்கினுக்கு அதிபதியே கண்எதிரே வரவேண்டும்
உறைகின்ற உந்தனருள் விரைந்துஓடி தரவேண்டும்
நிறைந்திருப்பது உந்தன் ஒளி, சிறந்திருப்பது உந்தன்மாயம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

462. ஆசையுடன் அழைக்கின்றேன் ஆரமுதே வாருமப்பா
அசையாமல் இருக்கின்றாய் செவிமறுக்க வேண்டுமப்பா
இசையமைத்து பாடவில்லை பாமாலை எழுதுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

463. தரிசனத்தை தரவேண்டும் கசிந்துருகி வரவேண்டும்
ஓரிடத்தில் நிற்காமல் வேறிடத்தை காண்பதேனோ
மவாரிபோல வரவேண்டும் கொடையதனை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

464. திருநீற்றை அளிபவனே மூலவனாய் இருப்பவனே
கருகாமல் காத்தருள்க நலமதனை தந்தருள்க
பெருக்கவேண்டும் உந்தனருள் கண் ஒளியை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

465.பட்டதுயர் போதுமப்பா துயரதனை நீக்குமப்பா
சுட்ட திருநீற்றால் நோயதனை தீர்க்குமப்பா
பட்டமரமாய் மாற்றாமல் பசுந்துளிராய் தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

466. விடையதனை தருபவனே பணியதனை செய்பவனே
தடைஏதும் இல்லாது நடைபயின்று வரவேண்டும்
விடையதனை தரவேண்டும் மழலையது பேசவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

467. பிஞ்சுதனை கண்ணுற்றம் வெஞ்சினத்தை காட்டலாமா
தஞ்சமென்று காலடியை சுற்றி நிற்கும் ஏழை நெஞ்சம்
வஞ்சமது கொள்ளாமல் நலம் அருள வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

468.உருகவேண்டும் உந்தன்மனம் வரமதனை தரவேண்டும்
அருகில் வரவேண்டுமப்பா உமைதனை தரவேண்டும்
ஆருயிராய் இருப்பவனே எழில் முகத்தை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

469. ஆதனையாய் பிறந்தவனே என்னுயிராய் இருப்பவனே
மதிமுழுதும் நிறைந்தவனே மண்ணுயிரில் நிற்பவனே
விதியதனை நல்லதாக்கு மழலையதை உருவாக்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

470. வேண்டிநித்தம் கேட்கின்றாய் மனங்கசிந்து வாருமய்யா
அன்புநிற்கும் பக்தருக்கு வளமதனை தாருமய்யா
காண்பதற்கு எளியவனே எழில்வடியை காட்டுமய்யா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

471. ஏங்கிநிற்கும் ஏழை என்னை தாங்கிநிற்க வேண்டுமப்பா
பாங்கடனே வரவேண்டும் வேண்டியதை தரவேண்டும்
சிந்தைகுளிரச் செய்யவேண்டும் விந்தையதை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

472. அடியவர்க்கு அருள்பவனே மின்னொளியை தருபவனே
வாடிய மனிதனுக்கு மகிழ்வுதனை அளிப்பவனே
தேடி வந்து தொழுகின்றேன் என்குறையை கேளுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

473. வன்னிமரத்தடியில் மனமகிழ அமர்பவனே
சென்னியதை தாழ்த்துகின்றேன் தலைநிமிர செய்யுமப்பா
நின் திருவுளத்தை தேடுகின்றேன் காட்டவேண்டும் உன்னொளியை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

474.அன்பொழுக அழைக்கின்றேன் இன்பமுடன் வந்தருள்க
உன்னிருக்கை அறியவில்லை அலைகிறது எந்தன்மனம்
கன்னலொடு கனிசேர்த்து தேனமுதை தருகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

475. செந்தமிழால் பாடுகின்றேன் பாவெழுதி அழைக்கின்றேன்
சிந்தையிலே ஒன்றுமில்லை உந்தன்நிழல் தேடுகின்றேன்
வந்து எனை காணவேண்டும் தந்துதவி செய்யவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

476. வகுப்பது உன் தொழிலப்பா தொகுப்பதும் உன் அருளப்பா
மகுடம் போல் நீ இருந்து மனக்குறையை தீர்க்குமப்பா
பகுத்தறிவை தாராது பார்ப்பதும் சரிதானோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

477. அலைகடலின் ஓசையே, உயர்ந்தோங்கும் மலையரசே
கலைகின்ற மேகம்போல் வேதனையை மாற்றுமப்பா
சிலையாக நிற்காது அறிவுதனை ஊட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

478. குறுமுனியாய் வருபவனே நெடுமலையாய் நிற்பவனே
உறுதுணையாய் வந்துவரும் நாளில் காக்கவேண்டும்
சிறுவனவன் சிந்தனையை சீர்தூக்கி விடவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

479. ஆராவமுதே அன்பே உற்றதுணையாய் வருபவனே
பாராமுகம் காட்டாது எனை நோக்கிவரவேண்டும்
சீராக்கி சிந்தனையை சீர்தூக்க வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

480. மலரவைத்தல் உந்தன்குணம் விரியவைத்தல் நிந்தன்மணம்
இலகுலாகவரவேண்டும் இளகி நீயும் தரவேண்டும்
உலகமெலாம் உணர்ந்தவனே தூண்டவேண்டும் சிந்தனையை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

481. மௌனமே உந்தன் மொழி அழைப்பதுவோ எந்தன்குரல்
ஆளவேண்டும் சிறுகுழந்தை பேசவேண்டும் வாய்திறந்து
இளகாதோ உந்தன்மனம் பயிலாதோ நடையதனை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

482. பேருவகை தருபவனே ஜோதிப்பிழம்பாய் தெரிபவனே
வரும்வகையை காட்டாது மறைத்து நிற்பது சரிதானோ
அரும்புதனை பாருமப்பா காட்சியதை தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

483. தெரிவதற்கோ வழியில்லை அறிவதற்கோ ஒளியில்லை
காரிருளை நீக்குமப்பா செவிமடுத்து கேளுமப்பா
சிரிக்கவேண்டும் உந்தன்செல்வம் மகிழவேண்டும் எந்தன் உள்ளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

484. அலைகிறது எந்தன் உள்ளம் தெரியவேண்டும் உந்தனருள்
நிலையதனை அறியுமப்பா வலுவதனை தாருமப்பா
தலையதனில் என்ன வைத்தாய் சொல்வதற்கோர் வார்த்தையில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

485. இருக்கும் நிலை அறியாயோ, அறியாதவன் போல் இருக்கின்றாயோ
வருவதற்கு உளம்வேண்டும் பிணியதனை போக்கவேண்டும்
சேருவதற்கு இடமில்லை உந்தனிடம் சரணடைந்தேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

486.எழுவதற்கு வழியில்லை காண்பதற்கு முடியவில்லை
எழுச்சியதை தரவேண்டும் மகிழ்ச்சியதை காணவேண்டும்
பாகும் எந்தன் மனம் உந்தன்துணை நாடுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

487.தேசனே தெள்ளமுதே வற்றாத தேளமுதே
பாசமுடன் அழைக்கின்றேன் நோகடித்தால் முறைதானோ
நேசமுடன் காணவேண்டும் எந்தன் குறை தீரவேண்டும்
நலம் பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

488. பாகாக உருகாமல் கல்லாக இருக்கின்றாய்
ஆகாது என்ற நினைக்காது வலியதை தரவேண்டும்
நோகாமல் வரவேண்டும் எண்ணியதை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

489. எழுத்துநீயும் வரவேண்டும் பெருந்துயரை நீக்கவேண்டும்
ஆத்துகின்ற மனமதனை சீராக்கிதரவேண்டும்
தழுதழுத்து நிற்கின்றேன் எந்தன்குறை அறியவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

490. ஆதி முதல்வனே அன்புக்கு அடைக்கலமே
வேதிப்பொருளாய் இருப்பவனே வேண்டியதை அருள்பவனே
அதிசயத்தை காட்டுமப்பா குரலதனை தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

491. தேடுகின்றேன் உந்தன்ஒளி வேண்டுகின்றேன் குறைதீர்க்க
பாடுகின்றேன் உன்பெருமை ஓடுகின்றேன் உன்னைத்தேடி
ஆடுகின்றாய் தில்லையிலே அறியாயோ எந்தன்குறை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

492.நிற்கின்றாய் மரகதமாய் உத்தரகோச மங்கையிலே
தேற்ற வேண்டும் எந்தனையே தீர்க்க வேண்டும் கேள்வியதை
மாற்றவேண்டும் சிந்தையதை தளிர்நடையை காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

493. கடையூரில் இருப்பவனே அமுதமழை பொழிபவனே
விடையதனை தரவேண்டும் பற்றுக் கோலாய்வரவேண்டும்
தடைஏதும் இல்லாமல் காட்சியதை காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

494. வெந்தழலாய் வருபவனே வெண்குளிராய் இருப்பவனே
சிற்றுவதற்கு கண்ணீர் இல்லை இறக்கிவைக்க இடமில்லை
எந்தவழியை தேடவேண்டும் உன்னைநான் அணுகவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

495. கேட்டவரம் தருபவனே நல்வாக்கு அளிப்பவனே
ஆட்டுவிப்பது நீயப்பா நீயறிவாய் அனைத்தினையும்
பட்டதெல்லாம் அறிவாயே என்மனத்தை அறிவாயே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

496. ஆதியும்நீயே அந்தமும் நீயே அண்டமும் நீயே
கதியென்று பிடிக்கின்றேன் மறவாது உன்கரத்தை
மதியதனை தரவேண்டும் நடையின்று வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

497. உருகவேண்டும் உந்தன்உளம் வரவேண்டும் எந்தன்இல்லம்
பெருகவேண்டும் வளமனைத்தும் கைகூப்பி வணங்கவேண்டும்
அருகில் வந்தணைக்கவேண்டும் மகலின்பிணதீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

498.மறைக்காட்டில் உறைபவனே அடியவரை ஈர்ப்பவனே
உறைந்திருப்பது உந்தன் உள்ளம் எழுப்பறியும் வரவேண்டும்
இறைவா நீ வந்திடுப்பா காத்திருக்க வழியுமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

499. தண்டனையை தந்துவிட்டாய் தவறதனை திருத்திவிடு
ஆண்டவனே அருட்கடலே அன்புருலாய் வந்துவிடு
காண்பதற்கோ காட்சியில்லை பேசதற்கு வழியுமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

500. விடையதனில் அமர்ந்தவனே மதிமுகத்தை கொண்டவனே
கடையனாக நினைத்துவிட்டாய் ஏங்கமனதை விட்டுவிட்டாய்
தடையாக நிற்காது வழியதனை வகுக்குமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

501.ஆதரவைத் தேடிநிற்கும் அபலை என்னை பாருமப்பா
உதவிக்கரம் நீட்டுமப்பா பாலகனை பாருமப்பா
பேதலித்து நிற்கின்றேன் இரங்காதோ உந்தன்மனம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

502.வரவேண்டும் வளமான வாழ்வுதனை தரவேண்டும்
தரவேண்டும் வரமதனை படும்பாட்டை தீர்க்கவேண்டும்
அரவம் இன்றி வந்திடுப்பா துன்பமதை தீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

503.மழலை கொஞ்சம் முகமதனை பார்த்துநீயும் மாறாயோ
குழந்தையதன் பிஞ்சுமுகம் கண்டுநீயும் பாராயோ
வேழமுகத்து தந்தையே வேண்டும்வரம் தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

504. தெரிந்து நீயும் வரவேண்டும் அன்புமழை பொழியவேண்டும்
பரிந்துரைக்க வரவேண்டும் பாசமுடன் தரவேண்டும்
உரிமையுடன் கேட்கின்றேன் உணர்ந்து நீயும் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

505. மலையதனில் ஒளிர்கின்றாய் அருவியாய் பொழிகின்றாய்
தலையதனில் என்னசெய்தாய் தொல்லைகளை கொடுத்துவிட்டாய்
உலையிலிட்ட நெஞ்சம் போல் தவிப்பதோ என்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

506. செந்தமிழில் சொல்லெடுத்து மாலை என சூட்டுகிறேன்
வந்து நித்தம் பாருமப்பா குரலதனை கொடுக்கவேண்டும்
தந்துநீயும் உதவவேண்டும் பார்வையதை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

507. மோதுகின்ற கவலையது தவிக்கின்ற நெஞ்சமது
ஓதுகின்றேன் உன் நாமம் உன்னொளியை காட்டவேண்டும்
தூதாக வந்துநிற்கும் வேண்டுதலை அருளவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

508.கெஞ்சி நிற்பேன் உன்காலடியில் தள்ளவேண்டாம் என்சிசுவை
தஞ்சம் தன்காலடியென அடைக்கலமாய் வந்துள்ளேன்
சஞ்சலத்தை தவிர்த்துவிட்டு உந்தன்குரல் கேட்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

509. பொய்யுடம்பு ஆனாலும் பிணியின்றி தரவேண்டும்
செய்யவேண்டும் உன்பணியை கனிவுடனே வரவேண்டும்
உய்வதற்கு வழிவேண்டும் மன்றாடி வேண்டுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

510. நித்தம் உன்காலடியில் ஏங்கி நிற்கும் பாவை
உத்தரவு தரவேண்டும் பாலகனை காணவேண்டும்
பித்தனே பிறைசூடனே உன்செவியை எங்குவைத்தாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

511. மலரதனால் வணங்காது பாக்களால் வணங்குகின்றேன்
இரக்கம்கொண்டு வரவேண்டும் இன்சொல்லை தரவேண்டும்
உரக்கஉன்னை அழைத்திடுவேன் வரவேண்டும் அன்புடனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

512. அணிகலனாய் இருப்பவனே அருட்பண்பை உடையவனே
பணிவுடனே கேட்கின்றேன் நினைப்பதை நீ அறியுமப்பா
பிணியதனை தெரிந்துநீயும் குணமதனை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

513. பேறு பெற்றேன் உனை பாடுதற்கு
ஆறுதலாய் வரவேண்டும் வாழ்வுதனை தரவேண்டும்
இறுமாப்பை நீக்குமப்பா என்அன்பே இன்னுயிரை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

514. தேடுகின்றேன் உன்பதத்தை காட்டாமல் ஒளிகின்றாய்
ஆடுவது உந்தன்தொழில் கேட்பது எந்தன்முறை
உடுக்கையதை ஆட்டிநீயும் எங்கும் நீ திரிகின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

515. காடெல்லாம் திரிபவனே பித்தனாக அலைபவனே
தேடாத இடமில்லை கண்களுக்கு தெரியவில்லை
தேடாமல் போகின்றாய் தரவேண்டும் கேட்டவரம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

516. காரிருளை நீக்கவேண்டும் கனிந்துநீயும் வரவேண்டும்
வாரி வழங்கவேண்டும் உன்னருளால் பிழைக்க வேண்டும்
மாரியாக வருபவனே தேடிநிற்பேன் உனைநாடி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

517. நித்தம் உனை நினைக்கின்றேன் சிறியேன் எனை காணுமப்பா
உத்தரவைத் தந்துநீயும் உளங்குளிர வைக்கவேண்டும்
எத்துணையும் இரங்காது, இருப்பதுவும் உன்செயலோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

518. பெருங்கடலில் தவிக்கவிட்டு தவிர்த்து நீயும் செல்லலாமோ
வருங்காலம் பொற்காலமாக மாற்றவேண்டும் உன்னருலில்
ஆருயிரே இன்னுயிரே இரங்கவில்லை உன்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

519. வறியவனாய் உன்முன்னே மண்டியிட்டு கேட்டுகின்றேன்
அறியவேண்டும் என்மனதை வரவேண்டும் விரைவாக
ஆறவேண்டும் என்மனது நீக்கவேண்டும் மனக்குறையை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

520. பரவி நிற்கும் உந்தன்ஒளி தெரியவேண்டும் கண்முன்னே
குரல் எழுப்பி அழைக்கின்றேன் மாறாமல் வந்துவிடு
தரவேண்டும் ஆதரவை வரவேண்டும் என்னருகே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

521. பெருங்கருணை அருட்கடலே யாலையுமாய் இருப்பவனே
தருவதற்கு மனம்வேண்டும் கேட்பதை நீ அறியவேண்டும்
வருவதற்கு மனமின்றி கலைந்துநீயும் பேலதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

523.கரைகாணாக் கடலே காண்பவர்க்கு இனியவனே
வரைகின்றேன் உன் உருவம், தெரியவேண்டும் உந்தன்எழில்
இரையாக வந்து நின்று இறையாண்மை தேடுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

524. மலர் போன்ற உன்உருவம் நிழலாக வரவேண்டும்
மலைமேலே உருக்கொண்டாய் பனிபோல் இருக்கின்றாய்
ஓலையதை விடுக்கின்றேன் உன் உருவம் காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

525. ஆழமான உந்தன்மனம் எளிதாக மாறவேண்டும்
தாழதனை போடாதே போற்றி உன்னை தொழுகின்றேன்
மிழற்றும் எந்தன் சொல்லமுதை தட்டாது கேட்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

526.பேரன்பை கொண்டவனே உமையவளை சேர்த்தவனே
ஆரமுதே உள்ளத்தில் எளியவனே சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்
இரக்கம் கொண்டுவரவேண்டும் கழிபாக்கம் காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

527. ஆசையுடன் வருகின்றேன் எழிலுருவம் காணவேண்டும்
அசையாத உயிர்களுக்கும் உயிரூட்டம் தருபவளே
ஓசையின்றி இருப்பவரும் உன்னருளால் ஒளிபெறுவர்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

528. நெருக்குருகி அழைத்தாலும் ஓசையின்றி செல்கின்றாய்
பக்கமதில் வரவேண்டும் மதிமுகத்தை காட்டவேண்டும்
இக்கனமே வரவேண்டும் அன்புதனை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே

529.நல்வினைகள் செல்பவர்க்கு நலம்பெருக வைப்பவனே
வெல்லவேண்டும் பிணியதனை தள்ளவேண்டும் துன்பமதை
அல்லலுற்று அழுகின்றேன் ஆற்றாமை காட்டுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

530.சரணம் என்று உன்காலடியில் வீழ்த்துவிட்ட சிறுபறவை
ஆரமுதே அப்பனே காத்துநிற்பது உன்கடமை
பேரருளை காட்டிநீயும் குஞ்சுதனை காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

531. ஐம்புலனை அடக்கிவிட்டாய் கல்லாக சமைத்துவிட்டாய்
அம்மா எனநினைத்து உன்னிடமே இறைஞ்சுகின்றேன்
உம்மையே வழித்துணையாய் நித்தமும் நினைக்கின்றேன்
நலம்பெற வைக்கும் நாமம் நமச்சிவாயவே.

532. அடியனாக வந்து உந்தன் பாதத்தை தொழுகின்றேன்
ஆடி நீயும் வரவேண்டும் அன்புதனை பொழியவேண்டும்
தேடிநித்தம் வணங்குகின்றேன் வழித்துணையாய் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

533. அடியவரை ஏங்கவிட்டு இன்பமுதல் தரும்தானோ
ஓடிஉந்தன் கரம்பிடிப்பேன் விடுத்து நீயும் செல்லலாமோ
கூடிநிற்கும் மனக்கவலை தகர்ந்தறிய வேண்டாமோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

534. மெய்தொண்டு ஆற்ற வேண்டும் நலம்விழைய அருளவேண்டும்
பொய் பேசித்திரியாமல் உன்னருளை நாடவேண்டும்
செய்யவேண்டும் எனக்குதவி ஐம்புலனை மீட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

535. அன்னையென அன்புகாட்டி வேண்டியதை தரவேண்டும்
உன்னையே நினைந்துருகும் என்குறையை நீக்கவேண்டும்
தன்னிகரில்லா ஆண்டவனே ஒளிவிளக்கை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

536. அஞ்சலென வரவேண்டும் அன்புமலர் அணிந்தவனே
கெஞ்சிநித்தம் அழைக்கின்றேன் கொஞ்சிநீயும் வரவேண்டும்
வஞ்சனையை செய்யாது ஊக்கமதை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

537. சக்திக்கு ஓர்பாகம் தந்தவனே வன்னிகொன்றை அணிந்தவனே
உக்தி ஒன்று சொல்லவேண்டும் உன்னருளை பெறுவதற்கு
எக்கதியும் இல்லையப்பா உணர்வுதனை ஊட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

538. பிறவியதை தந்துவிட்டு அறிவுதனை மறுத்ததேனோ
சிறகுதன்னை கொடுத்துவிட்டு வைத்தல் சரிதானோ
பறக்கலைக்க நினைக்காமல் சிறகொடித்தல் வழிதானோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

539. நற்கதியை காட்டவேண்டும் நல்லுதவி செய்யவேண்டும்
ஆற்றாமையில் இருக்கின்றேன் ஆறுதலை தரவேண்டும்
வேற்றுமையை காணாது குணமதனை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

540. கடம்பமாலை அணிந்தவனே கடம்பவனத்தில் அருள்பவனே
அடம்பிடிக்காது வந்துவிடு காட்சியதை தந்துவிடு
விடமதனை கழுத்தில்வைத்து வான்உலகில் அலைபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

541. ஓதுக்கவேண்டாம் வேண்டுகோளை தவிர்க்க வேண்டாம் என்மனதை
தீது சொல்லல் நல்லதல்ல நல்வார்த்தை தரவேண்டும்
ஓதுவது எந்தன்முறை பயனளிப்பது உந்தன்முறை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

542. விடுகதையாய் தந்துவிட்டாய் பதிலளிக்கவரவேண்டும்
தடுப்பதற்கு தடையில்லை எழுச்சியதை தரவேண்டும்
ஈடுசெய்யமுடியாத துன்பமதை தீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

543. தேடிக் கரங்கள் நீட்டுவோர்க்கு படியளப்பது உந்தன்தொழில்
மடிநீட்டி வேண்டுகின்றேன் என்தனக்கு உதவவேண்டும்
கடிவாலம் போடாமல் திறக்கவேண்டும் சிந்தனையை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

544. கருவறைக்குள் ஒளியாமல் உன்பெருமை காட்டவேண்டும்
வரும் துன்பம் போக்கவேண்டும் உன்னருளை பேசவேண்டும்
மேருவாய் நிற்பவனே உனதன்பைப் பெறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

545. முறையாக அழைக்கின்றேன் தவிர்க்கின்றாய் வருவதற்கு
குறையிருந்தால் களைந்துவிடு நிறைவாக செய்துவிடு
அறை கூவல் விடுக்கின்றேன் பசியறிந்து வந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

546. சிறியவனாய் இருந்தாலும் சிந்தைநெகிழ வேண்டுகின்றேன்
வறியவனாய் ஆக்கிவிட்டாய் நோய்ப் பசியை தந்துவிட்டாய்
தேறிவரவேண்டும் பிள்ளை அறிவுதனை புகட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

547. தெளிவுதனை தரவேண்டும் குறையறிந்து வரவேண்டும்
அளிப்பது உந்தன்செயல் கேட்பது எந்தன்முறை
ஒளிபிழம்பு நீயப்பா என்னமுதம் நீயப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

548. தெள்ளுதமிழ் சொல்லெடுத்து உந்தனையே வணங்குகின்றேன்
வள்ளலாக நீயிருந்தும் தாராது இருப்பதேனோ
தள்ளவேண்டாம் என்குறையை, வரவேண்டும் மன நிறைவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

549. மூச்சாக இருப்பவனே பேச்சைநீயும் தரவேண்டும்
பச்சிளங் குழந்தையை நோகவைத்தல் முறைதானோ
உச்சிமோந்து பார்க்காது, தத்தளிக்க விட்டாயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

550. விலங்குமனத்தை வேரறுத்து வெளிப்பாடாய் வரவேண்டும்
கலங்கி நிற்கும் உள்ளமதை காணாமல் இருப்பதேனோ
உலகெல்லாம் அளப்பவனே உணர்வூட்ட மறுக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

551. வார்த்தையதை தேடுகின்றேன் கரம்பிடிக்க விழைகின்றேன்
ஆர்வமதை தருபவனே அன்புஉரை தருபவனே
ஈர்க்கவேண்டும் உன்மனதை வளர்க்கவேண்டும் அறிவுதனை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

552. உத்தரவு வரவேண்டும் உண்மையதை அறியவேண்டும்
எத்துணையும் இல்லையப்பா உந்தன்துணை வேண்டுமப்பா
ஈத்துவக்கும் இன்பமதை அறிந்துவனே என்படியை அளக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

553. பணிந்து நித்தம் வேண்டுகின்றேன் பனிமலையின் கோமகனே
தனியாமல் இருப்பதேனோ தவிக்கவிட்டு பார்ப்பதேனோ
துணிவுடனே வரம்கேட்பேன் மறுக்காமல் தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

554. மறக்கவேண்டும் என்று நினைத்தாலும் மனக்கண்முன் நிற்கின்றாய்
உறக்கமின்றி விழிக்கின்றேன் தயக்கமின்றி தரவேண்டும்
தறுவாயில் இருக்கும் பாலகனைபாருப்பா மனமிறங்கி வாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

555.தேனிசையால் அழைக்கவில்லை பாவாலே அழைக்கின்றேன்
இனியும் வருத்தாது சிரமதனை முணமாக்கு
குனித்த புருவம் உடையவனே விடமுண்ட கண்டனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

556. கனல் வடிவாய் இருப்பவனே உணர்வுதனை மீட்டவேண்டும்
புனலதனை கொண்டவனே மந்திரச்சொல் உடையவனே
அனலாக தகிக்காது குளிர்மதியை காட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

557. மெய்பூசி இருந்தாலும் பொங்கும் உளம் காணவில்லை
உய்வதற்கு வழிவேண்டும் சென்னியதை காக்கவேண்டும்
ஆய்ந்தறியது உந்தன்குணம் கேட்டு நிற்பது எந்தன்மனம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

558.கரைஇல்லா குணக்கடலே விரைந்து நீயும் வாருமப்பா
இரையாகமாற்றாமல் இறையாக வரவேண்டும்
உரைக்கின்றேன் உன்இயல்பை பைந்துளிரை காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

559. வழியதனை காட்டவேண்டும் மீளும் வழி கூறவேண்டும்
கிழிவாக நினைக்காது இயல்புடனே வரவேண்டும்
குழியதனில் தள்ளிவிட்டாய் மீட்கவேண்டும் உன்னருளால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

560. தொல்வினையை அகற்றவேண்டும் கருத்துயரை நீக்கவேண்டும்
நல்வினையை தந்துநீயும் படும்பாட்டை விலக்கவேண்டும்
இல்லலதை நீக்கவேண்டும் அல்லல்கண்டு இறங்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

561. துணையதனை தந்துநீயும் மனம்மகிழச் செய்யவேண்டும்
கணையதனை செலுத்திநீயும் பிழையதனை நீக்கவேண்டும்
மனையதனில் வந்துநீயும் பக்க துணையாய் இருக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

562. அழகுதனை தந்துவிட்டு அறிவுதனை விடுத்ததேனோ
குழவியதை ஈத்துவிட்டு கொடுஞ்செயலை செய்துவிட்டாய்
மழலை தன் சிரமதனை சீராக்க மறுக்கலாமோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

563. வெண்ணிலவே இன்னிசையே எந்தையே எம்பிரானே
கண்ணிருந்தும் குருடனாய் வாயிருந்தும் ஊமையாய் வைத்ததேனோ
உண்மையை உரைத்துவிடு உன்புகழை சேர்த்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

564. வேல்கொண்டு பாய்ச்சிவிட்டாய் வெந்தனலில் வீழ்த்திவிட்டாய்
வெல்லுவது உந்தன் செயல் வரவேண்டும் காப்பதற்கு
சொல்லவேண்டும் ஓர்வார்த்தை பசுந்துளிராய் வளரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

565. கசிந்து உன்னை கேட்கின்றேன் நல்வார்த்தை கூறவேண்டும்
ஆசியதை தரவேண்டும் ஆசையுடன் கேட்கின்றேன்
பேசி நித்தம் அழைக்கின்றேன் மருத்துவத்தை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

566. தழைக்கவேண்டும் குழந்தைச் செல்வம் துளிர்க்கவேண்டும் உன்னருளால்
பிழை ஏதும் செய்யவில்லை பிணியதனை நீக்கவில்லை
அழைக்கின்றேன் ஆசையுடன் தவிர்க்காது வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

567. தொழும் அடியவரை உயர்ந்தோங்க செய்பவனே
இழுக்கின்றாய் என்மனதை வருடவேண்டும் உன்மனதை
கழுபிணியை நீக்கவேண்டும் என்னுயிராய் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

568. ஆர்வத்தை உணர்வாக்கி ஆக்கமதை தருபவனே
அர்த்தமுள்ள உன்நாமம் என் மனத்தில் ஒலிக்கவேண்டும்
ஈர்த்து நிற்கும் பரம்பொருளே நித்தம் உனை அழைக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

569. வெண்குடையை தலையில் வைத்து சென்னியதில் மதியை வைத்தாய்
கண்ணீரால் வேண்டுகின்றேன் என் முன்னே வரவேண்டும்
அண்மையிலே வருகின்றோம் காணாமல் போகின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

570. அறியவேண்டும் உன்புகழை தெரியவேண்டும் உன்எழிலே
செறிந்திருப்பது உந்தன்புகழ் கொடுத்திருப்பது உந்தன்கரம்
கெட்டுபோகும் நெஞ்சம் உன்னெழிலை காணவேண்டும்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

571. கரம் கூப்பி வணங்குவோர்க்கு உன்னமுதம் தருபவனே
சிரம் தாழ்த்தி வருவோர்க்கு தடையின்றி செய்பவனே
மரம் போன்று நிற்பவர்க்கும் மனமிரங்கி வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

572. தேடி அலைகின்றேன் உன்பதத்தை காண்பதற்கு
ஓடிநீயும் வரவேண்டும் உந்தன்எழில் தெரியவேண்டும்
அடியவரை காணவேண்டும் ஏக்கமதை தீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

573. அன்பாகி, ஆர்வமாகி, இன்புறுலாய் எல்லாமாய் இருப்பவனே
தேன்குடித்த வண்டாக உன்பின்னே அலைகின்றேன்
உன்னழகை காணவேண்டும் கண்டுநித்தம் பாடவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

574. கொன்றைமலர் சூடிநித்தம் பித்தனாக அலைபவனே
வன்னிமரம் நாடி அடியவரை ஆள்பவனே
தன்னிகரற்று திகழ்பவனே ஜோதி மயமாலைனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

575. ஆனந்தமானவனே அருட்கடலே ஒளிப்பிழம்பே
கனலாக தெரிகின்றாய் காட்சியதை தரவேண்டும்
அனலாக இருப்பவனே ஆறுதலை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

576. விடையதனில் அமர்ந்தவனே மூவுலகை ஆள்பவனே
கடையனாக நினைக்காது வரைந்துநீயும் வரவேண்டும்
மடைதிறந்த வெள்ளமென பரவசத்தைக்காணவேண்டும்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

577. உமையொருபாகனே ஈசனே என்னுயிரே அன்புருலே
இமைபோல காக்கவேண்டும் இனியமொழிதரவேண்டும்
அமைதியதை விட்டுவிடு செயலதனை காட்டிவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

578. முக்கண்ணை உடையவனே மூத்தவனே முதல்வனே
எக்கதியும் இல்லையென்று உன்பதத்தில் விழுகின்றேன்
ஆக்கமதை தரவேண்டும் ஊக்கமதை பெறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

579. விடமுண்ட கண்டனே நெற்றிக்கண்ணை உடையவனே
ஊடகமாய் நான்இருந்து உந்தனருள் பெறவேண்டும்
அடம்பிடிக்கும் குழந்தையாக வாராது இருக்காதே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

580. மலைமேது இருப்பவனே குளிர்மதியை தருபவனே
கலையனைத்தும் உணர்ந்தவனே வெந்தனலை உடையவனே
வலை வீசித்தேடினாலும் வீழாது இருப்பதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

581. கரையில்லா ஒலிக்கடலே குறையில்லா ஓவியமே
இரையாக நினைக்காது இயல்பாக வந்துவிடு
உரைசொல்ல வரவேண்டும் இமைபோல காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

582. பனிபோல வந்ததுயர் நீராக உருகிடுமே
கனிவாயை திறக்கவேண்டும் மின்னொளியாய் வரவேண்டும்
இனி உன்னடியே சரணமென சிரமதனை தாழ்த்திநிற்பேன்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

583.அன்னையைப்போல் அனைப்பவனே பிள்ளையென காப்பவனே
என்னருகே வந்துநித்தம் உந்தனருள் காட்டவேண்டும்
கன்னலென இனிப்பவனே கருந்துயரை மாற்றவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

584. அடைக்கலம் நீஎன்று வந்தவரை காப்பவனே
அடைகாக்கும் தாயைப்போல் மகவுதன்னை பேணவேண்டும்
கடைக்கண்ணால் பார்த்தாலும் பிணிஎல்லாம் மறைந்துபோகும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

585. பட்டபயிர் துளிர்க்க வேண்டும் எந்தன்குறை மாறவேண்டும்
இட்டதுன்பம் நீக்கவேண்டும் மன்னுயிரை காணவேண்டும்
ஆட்டுவிப்பது நீயப்பா நிறுத்துவதும் உன் அருளப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

586. பிடிக்கின்றேன் உன்பதத்தை பாராது போவதேனோ
ஈடில்லா உந்தன்புகழ் நினைந்து நாளும் பெறவேண்டும்
ஓடிநீயும் போவாயோ நினைந்து என்னைப் பார்ப்பாயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

587. பிடிக்க வேண்டும் உன்னருளை பொங்கவேண்டும் அன்புமழை
அடிமுதல் உச்சிவரை நின்னருளை பொழியவேண்டும்
தேடிநிற்கும் பேதைக்கு இன்னருளை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

588. வரும்பொழுது உன்னருளால் நல்லதாக மலரட்டும்
இருள்மயங்கி உன்தருளால் பகலவனும் ஒளிரட்டும்
மருள்நீங்கி உன்னருளால் வெளிச்சமதை உணரட்டும்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

589. இக்கணமே வந்திடுக மருதீசா, திருலீசா என்னுயிரேசா
சிக்கெனபிடிக்க வேண்டும் பைந்துளிரும் துளிர்க்கவேண்டும்
ஊக்குவிப்பது உந்தன்குணம் இரங்குவது உந்தன் உள்ளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

590. அம்மையாக அருளவேண்டும் அப்பனாக தரவேண்டும்
இம்மையிலே வேண்டுகின்றேன் உன்தன்பைப் பெறவேண்டி
உம்மிடமே வந்துவிட்டேன் உன்பதத்தை பிடித்துவிட்டேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

591. வேண்டும் அருள்தருபவனே உன்னருளை பெற்றிடுவேன்
தண்டிக்க வேண்டாமப்பா நான்உனது ஏழையப்பா
கண்டு என்னைபாருமப்பா யாசகத்தை தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

592. உறுதியாக கேட்கின்றேன் உன்னருளை தந்திடப்பா
ஆறுதலாய் வந்திடப்பா உன்பதமே தஞ்சமப்பா
இறுமாப்பு இல்லையப்பா எந்தன்முகம் பாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

593. ஒருமையுடன் நினைப்பவர்க்கு உன்உதவி தரவேண்டும்
அருமையான என்மனது உன்னருளை நாடுதப்பா
ஆருயிரே என்னுயிரே குளிர்ச்சிதனை தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

594.திருவடியில் வீழ்கின்றேன் பரம்பொருளாய் வரவேண்டும்
உருவமாய் வந்து என்னும் உனதருளை காட்டவேண்டும்
அருமையென வந்து பசுந்துளிராய் மாற்றவேண்டும்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

595. பழமாக இருக்கின்றாய் கசிந்துநீயும் வரவேண்டும்
அழகான குழந்தையதை அள்ளி அணைக்க வரவேண்டும்
நீழலை காட்ட வேண்டும் உன்மனத்தை பற்ற வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

596. உத்தமனே அடியவர்க்கு அடியனே ஆண்டவனே
இத்தருணம் வரவேண்டும் ஈந்துநீயும் செல்லவேண்டும்
ஈத்துஉலத்தல் உந்தன்குணம் எனநினைந்து வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

597. உறவாக வரவேண்டும் நல்லபொழி கூறவேண்டும்
மறக்காது நினைக்கவேண்டும் வந்துமுன்னே தோன்றவேண்டும்
அறத்தொழிலை காட்டவேண்டும் அன்புடனே ஈர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

598. தரிசனத்தை காட்டவேண்டும் உந்தன்எழில் காணவேண்டும்
அரியவனாய் நினைக்கின்றேன் தெரிந்தவனாய் காட்டவேண்டும்
எகியும் என்மனத்தை கண்டு நீயும் இரங்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

599. சிவனாய் இருப்பவனே ஜோதி வடிவம் கொண்டவனே
பாவனையில் உயர்ந்தவனே சிலைவடிவாய் இருப்பவனே
இவன் எவன் என இல்லாது எங்கும் நிறைந்தவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

600. வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு நாடுகின்றேன்
அவயத்தில் குறையின்றி துளிர்ப்பதற்கு வேண்டுகின்றேன்
ஈவது உந்தன் நிறை கேட்பது எந்தன்முறை

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

601. நாடுகின்றேன் உன்னடியை காணவேண்டும் உந்தனடி
தேடுகின்றேன் உனை காண மறைந்துள்ளாய் மலையோடும்
உடுக்கை கொண்டுஅலைகின்றாய் ஊடகத்தில் இருக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

602. உயிராக இருப்பவனே உணர்வாக களப்பவனே
பயிர்தனக்கு நீருற்றி வாழ்வாக இருப்பவனே
சேயின் மனமறிந்து உயிராக வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

603. மருதீசா மருந்துதன்னை நீயருள் பிணிதன்னை போக்கவேண்டும்
உருவமதை தந்துவிட்டு இயக்கமதை கொடுக்கவேண்டும்
மருநீக்கி தரவேண்டும் மாற்றமதை பெறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

604. கரைந்து நிற்கவேண்டுமப்பா என்குறையை கேட்டுநீயும்
விரைந்து வந்து நல்லதொரு வார்த்தை நயம்பட உரைக்கவேண்டும்
உரைக்கின்றேன் உந்தன்மொழி தரவேண்டும் உந்தன்மொழி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

605. பெருமையுடன் நினைப்பதற்கு உந்தன் எழில்வர வேண்டும்
தருவதற்கு விடையிருந்தும் மறுப்பதுவும் சரிதானோ
உருவமதை மாற்றிவிட்டாய் உணர்வுகளை ஓய்த்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

606. சிவலிங்கமே என்னுயிரே வாடாமலரே வாகீசா
அவனியிலே உன்னருளை நாடிநிற்கும் ஏழையப்பா
ஆவது அறியாமல் உன்முகத்தை பார்த்துநிற்கும் எளியனப்பா

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

607.மலரடியை தொழுகின்றேன் வண்ணமலர் அளித்திடுவேன்
இல்குலாக வரவேண்டும் வசந்தமதை தரவேண்டும்
கோலவடிவானவனே கொஞ்சும் முகம் கொண்டவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

608. சிவனடியை பற்றுகின்றேன் எந்தனுயிர் பரம்பொருளே
உவந்துநீயும் வரவேண்டும் உன்பெருமை பாடவேண்டும்
தவழ்ந்து செல்வம் வரவேண்டும் தளிர்நடையை காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

609. அருமையுடன் உன்பெருமை நாளும் நினைக்கின்றேன்
தருநிழலாய் வந்துநீயும் குளிரதனை தரவேண்டும்
ஆருயிர்க்கு அன்புசெய்யும் உந்தன்மனம் தேடுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

610. வேதனையை தாராது இன்பமதை காட்டவேண்டும்
ஆதரவை தேடிநிற்கும் அயலை என்னைகாணவேண்டும்
உதவிசெய்ய மறுப்பதேனோ அருட்கடலே மதுமலரே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

611. தருணமதை பார்த்திருந்து தக்க துணை தரவேண்டும்
அருமையான ஓர் சொல்லால் எழுச்சியதை பெறவேண்டும்
திருமந்திரத்தை பயன்படுத்தி உணர்வுதனை ஊட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

612. விந்தையதை காட்டி அடியவரை ஈர்ப்பவனே
வந்துநிற்கும் என்முகத்தை பாராது இருப்பதேனோ
ஈந்துஉலக்கும் உன்தன்மை வெளிக்கொணர வேண்டுமப்பா

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

613.அடியவர்க்கு இறையே பாடலுக்கு உரையே
தேடிநிற்கும் எளியவர்க்கு கொடையே
வாழ வேண்டி நித்தம் ஏங்குவோர்க்கு பொருளே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

614. மழலையதை தந்துவிட்டு மடிசுமக்க விடவில்லை
அடிவைத்தல் சரிதானோ உன்மனது இரங்காதோ
ஆழம் உந்தன் உள்ளமப்பா தேடிநிற்கும் ஏழையப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

615. புறமாக திரிகின்றாய் அகமாக வரவேண்டும்
அந்ததொழிலை செய்கின்றாய் அலையவிட்டு பார்க்கின்றாய்
ஆறறிவு உயிராக படைத்துநீயும் ஓரறிவை தந்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

616. வேறாக நினைத்துவிட்டாய் என்னருகே வருவதற்கு
ஆறாது எந்தன் உள்ளம் சூறாயோ உந்தன்மொழி
சேறாக விட்டுவிட்டாய் மனக்கவலை ஈந்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

617. உறவாக நினைக்கின்றேன் பகையாக செல்கின்றாய்
அறம் வழியில் செல்பவனே எந்தன்குறை தீரவேண்டும்
பேறதனை தரவேண்டும் மனமகிழ்ச்சியடைய வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

618. நலம்பெற வேண்டும் அன்புடனே விழைகின்றேன்
உலகுக்கு ஒளிகாட்டுபவனே பாலகனை காணவேண்டும்
காலமது கனிந்ததென கனிசகத்தை அழைக்கின்றேன்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

619. நம்புகின்றேன் நாதனருள் கிடைக்குமென்று
அம்மாவென அழைப்பதற்கு ஆண்டவனின் அருள்வேண்டும்
உம்மையே கதியென்று உன்பாதத்தை பிடிக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

620. வளவொளிர் நாதனே வாழ்வளிக்கும் இமையவனே
தளராது அழைக்கின்றேன் தளிர்நடையை காட்டவேண்டும்
ஏளனமாய் நினைக்காது எழுந்தருளி வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

621. நம்பினோர் கெடுவதில்லை ஆண்டவனே உன்தீர்ப்பு
அம்மையுமாய் அப்பனுமாய் இங்குவந்து அருளவேண்டும்
உம்மையின்றி வேறுகதி யாருளரோ ஒளிவீசா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

622. பதமாக உன்பாதமதை தொழுகின்றேன் இறைவா
இதமாக நீவந்து அருளாசி தரவேண்டும்
ஈதலே நல்லதென்று உலந்துநீயும் அருளவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

623. தெவிட்டாத உன்னருளை அன்புடனே கொடுக்கவேண்டும்
நவிலவேண்டும் நல்லுரையை தரவேண்டும் உன்னரையை
அவிழ்க்க வேண்டும் துன்பமதை வழங்கவேண்டும் இன்பமதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

624. அடம்பிடித்து அழுதாலும் அணையாது செல்கின்றாய்
விடமதனை கழுத்தில் வைத்தாய் உள்ளமதில் என்னவைத்தாய்
ஓடமென விட்டுவிட்டாய் தத்தளிக்க செய்துவிட்டாய்

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

625.வகையறியாமல் நிற்கின்றேன் வழிதெரியாமல் விழிக்கின்றேன்
ஈகை உந்தன் செயலன்றோ மனமிரங்கி தரவேண்டும்
பகைவேண்டாம் உள்ளத்தில் அருள்வேண்டும் எண்ணத்தில்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

626. பகலவனாய் வரவேண்டும் வெளிச்சமதை தரவேண்டும்
இகழவைத்தல் சரிதானோ என்னுயிரும் நீயன்றோ
புகழ்மாலை சூட்டுகின்றேன் சூடாமல் போவதெங்கே.
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

627. தள்ளாமையை தந்துவிட்டு இல்லாமை ஆக்காதே
வள்ளலாக இருப்பவனே வரவேண்டும் கொடைத்தன்மை
தள்ளிவிட்டாய் கவலையிலே தீர்க்கவேண்டும் துன்பமதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

628. பிள்ளையென நீநினைத்து என்குறையை தீர்க்கவேண்டும்
தள்ளி நிற்றல்முறைதானோ பிள்ளைதனை காணவேண்டும்
எள்ளி நகையாடவிட்டு தொலைவில் நின்றுபார்ப்பதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

629. தவிக்கின்ற உள்ளமதை பாராமல் இருப்பதேனோ
புவியதனை காப்பவனே வீழ்ந்த எனை மீட்கவேண்டும்
ஈகவி எடுத்து பாடுகின்றேன் சிரமதனை மீட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

630.பாரமதை ஏற்றிவிட்டாய் பரிதவிக்க விட்டுவிட்டாய்
இரக்கமதை காட்டாது உவகையுடன் இருக்கின்றாய்

தரணிக்கு வந்துநீயும் தவப்புதல்வனை மீட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

631.தாங்கவேண்டும் பாரத்தை இறக்கவேண்டும் கவலைதனை
ஓங்குவது எந்தன்மனம் தாங்குவது உந்தன்குணம்
பாங்குடனே அழைக்கின்றேன் உதவுவது உந்தன்மனம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

632. ஒப்பில்லா பரம்பொருளே உதவவேண்டும் நாற்கரத்தால்
அப்பனுக்கு அப்பனாய் நினைத்து ஏங்கி அழைக்கின்றேன்
எப்பதிலும் சொல்லாமல் ஒதுங்கி நிற்றல்சரிதானோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

633. காரணத்தை அறிந்தவனே வண்ணமலர் அறிந்தவனே
வீணடித்தேன் நேரத்தை உன்புகழை பாடாமல்
கனங்களுக்கு நாதனே காணாமல் போவதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

634. தேனாக இருப்பவனே அர்ப்பனாக இருந்தாலும் அருள்புரிய
வேண்டுமப்பா
அனலாக தெரிபவனே குளிரதனை தருபவனே
தனலாக தகிக்காது வேண்டுதலை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

635. புண்பட்ட நெஞ்சுக்கு மருந்தாக வரவேண்டும்
காண்பது உந்தன்ஒளி கேட்பதுவோ உந்தன்நாமம்
கண்ணுக்கு காட்சியாய் சொல்லுக்கு வேந்தனாய்வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

636.தளர்வறியா மனமதனை தந்துநீயும் உதவவேண்டும்
அளவில்லா அருட்கடலே அன்புமழை பொழியவேண்டும்

உளங்கனிந்து ஓர்வார்தை நல்லதாக உரைக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

637. கேட்டுதவி வருவோர்க்கு மறுக்காமல் தரவேண்டும்
பட்டதுயர் நீக்கி இன்பமழை பொழியவேண்டும்
ஆட்டுவிக்கும் நீயன்றோ சூட்சமத்தை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

638. பிறவியதை கொடுத்துவிட்டு உணர்வுதனை எடுத்துவிட்டாய்
உறவுசொல்ல தந்துவிட்டு அறிவுதன்னை மறுத்ததேனோ
மறக்க மனமில்லையப்பா நடையதனை தந்திடுப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

639. வழியதனை அடைத்துவிட்டு ஒளிகொடுக்க மறுத்ததேனோ
இழிவாக தள்ளிவிட்டாய் சிரமதனை ஒடுக்கிவிட்டாய்
அழியாத உணர்வுதனை ஊக்குவிக்க மறந்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

640. நிலையில்லா வாழ்வுக்கு குறையதனை தந்துவிட்டாய்
அலைபாயும் நெஞ்சோடு மன்றாடி கேட்கின்றேன்
மலைத்துநிற்கும் மனம்கண்டு உருகாதோ உந்தன்உளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

641. வளர்ஒளியாய் வருபவனே தேய்பிறையை தந்ததேனோ
உளம்உருகி வேண்டுகின்றேன் முருமதியாய் தரவேண்டும்
களமிறங்கி வரவேண்டும் பக்கதுணை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

642. மங்கலமாய் ஓர்சொல்லை தந்திடுப்பா என்தனக்கு
உங்கையில் பிள்ளை உனக்கே ஈத்துவிட்டேன்

எங்கையில் தந்துநீயும் மனமகிழ்ச்சி தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

643. ஆண்டவனே உன்னருளை பெறுவதற்கு தவம்கிடப்பேன்
உண்மையதை உரைக்கின்றேன் உன்னிடமே வேண்டுகின்றேன்
ஆண்டருள வந்துவிடு நல்வாக்கு தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

644. பேரின்பம் அடைவதற்கு உன்னடியைத் தொழுகின்றேன்
அரிய ஒரு அற்புதத்தை பாலகனிடம் காட்டவேண்டும்
உரியவன் நீயப்பா உன்பெருமை காட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

645. ஆண்டருள வந்துவிடு உந்தன்புகழ் சேர்த்துவிடு
கண்ணாக வந்துவிடு காட்சிதனை தந்துவிடு
அண்டமெல்லாம் வியக்கும்படி தளிர்நடையை காட்டிவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

646. படைத்துவிட்டாய் ஓர்பிள்ளை சேர்க்கவேண்டும் உன் உள்ளமதில்
அடைத்துவிட்டாய் வேலைதனை மறுத்துவிட்டாய் கொடுப்பதற்கு
விடையளிப்பாய் நம்புகின்றேன் உன்காலடியில் விழுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

647. தவமிருப்பேன் உதவிநாடி கண்டுநீயும் வந்துவிடு
ஆவலுடன் காத்திருப்பேன் உந்தன்துணை காண்பதற்கு
காவலனாய் வரவேண்டும் வேண்டுகோளை கேட்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

648. இசையோடு பாடவில்லை பாவோடு அழைக்கின்றேன்
ஆசையுடன் வேண்டுகின்றேன் ஆர்வமுடன் வரவேண்டும்

அசையாத உயிரினமும் உன்நாவசைவால் அசைந்துவிடும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

649.விழைகின்றேன் காண்பதற்கு தேற்றாமல் செல்கின்றாய்
அழைக்கின்றேன் அன்புடனே ஏங்கிநிற்பேன் பதில்காண
தழைக்கவேண்டும் உந்தன்பிள்ளை மலரவேண்டும் அதன்வாழ்க்கை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

650. உன்னையே சரணமென்று வீழ்கின்றேன் காலடியில்
அன்னையாக உனைநினைந்து ஏங்குகின்றேன் பதிலுக்கு
என்னைக்கண்டு இரங்கவேண்டும் என்நிலைமை அறியவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

651. பாவமதை மாற்றிவிடு அடைக்கலமாய் ஏற்றுவிடு
ஈவதற்கு மனம்வேண்டும் உந்தன்துணை பற்றவேண்டும்
தவழ்ந்து மகவுவரவேண்டும் தளிர்நடையை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

652. ஏழ்மையிலே விட்டுவிட்டாய் வறியவனாய் மாற்றிவிட்டாய்
ஆழ்ந்து நிற்கும் மனக்கவலை மாற்றநீயும் வரவேண்டும்
ஊழ்வினையை தீர்க்கவேண்டும் நல்வழியை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

653. பிழைஏதும் செய்திடினும் திருத்தவேண்டும் உனதன்பால்
அழைக்கின்றேன் உருகிஉனை நினைந்துநீயும் வரவேண்டும்
தழைக்கவேண்டும் மைந்தன்வாழ்வு செழிக்கவேண்டும் அவன் வளர்ச்சி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

654.நஞ்சுதனை கழுத்தில் வைத்து அமுதத்தை அளிப்பவனே
கெஞ்சிநின்று கேட்கின்றேன் தளராது பிடிக்கின்றேன்

வஞ்சனையை விட்டுவிடு தஞ்சமதை தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

655.வேகமாக ஓடும் எண்ணம் நினைப்பது உந்தன் உள்ளம்
அகமகிழ வரவேண்டும் உன் பெருமை கூறவேண்டும்
ஆகமமாய் இருப்பவனே வெந்தனலில் நிற்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

656. குடிசிறக்க வரம்வேண்டும் உந்தனாகி பெறவேண்டும்
மடிப்பிச்சை கேட்டுநித்தம் உன்வாசல் நிற்கின்றேன்
அடிஎடுத்து வாராமல் பகை கொண்டு நிற்பதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

657. தெளிவுதனை தரவேண்டும் தளர்வுதனை போக்கவேண்டும்
களிப்புடனே வரவேண்டும் குருபனாய் காட்சிவேண்டும்
அளிக்கவேண்டும் வரமதனை சிரமதனை சீராக்க
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

658. வெற்றியதை தந்துநீயும் உன்பெருமை சேர்க்கவேண்டும்
ஆற்றாது ஆற்றுகின்றேன் நித்தம்உனை நினைக்கின்றேன்
உற்றகுறை தீர்க்க ஒதுங்காது வந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

659. துதிப்போரை காக்கவேண்டும் மனத்துயரம் தீரவேண்டும்
ஆதியுமாய் அந்தமுமாய் ஆனந்தமாய் வரவேண்டும்
விதியையும் வென்றுநீயும் இட்டதுயர் தீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

660. தீபத்தை காட்டிவிட்டு ஒளியை நீ அணைத்துவிட்டாய்

அபயக்குரல் கொடுக்கின்றேன் தீர்க்கவேண்டும் என்குறையை
உபயம் என்று உன்உதவி எனக்கு நல்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

661. தொலைத்துநிற்கும் குழந்தையாய் தேடிநிற்பேன் உனைநாடி
அலைபோல பாயும் நெஞ்சை கரைசேர்க்க வேண்டுமப்பா
மலைபோன்ற என்துயரை தரையாக்க வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

662.தேங்கிநிற்கும் எந்தன்குறை தீரவேண்டும் உன்நினைவால்
அங்கிங்கெனாதபடி நீக்கமற இருப்பவனே என்முன்னே வந்துநின்றால்
தாங்கிடுவேன் உன்னடியை மலர்ந்திடுவேன் உனதன்பால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

663. தேவையில்லை என்றுநீயும் ஒதுக்காமல் வரவேண்டும்
அவையத்தின் குறையை உனதன்பால் மாற்றவேண்டும்
பாவையெனை அறிந்து உவந்தளிக்க மனம்வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

664. அழைக்கும் வகைதெரியவில்லை மறுக்கின்றாய் வருவதற்கு
ஊழையும் விரட்டவேண்டும் நாம் காக்க வரவேண்டும்
ஏழை என்று எண்ணிநீயும் பிடிகொடுக்க மறுக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

665. பாசம்கொண்டு அழைக்கின்றேன் வந்துநீயும் பார்க்கவேண்டும்
நேசமுடன் அணைக்கின்றேன் காணாமல் செல்வதேனோ
வாசமுள்ள நறுமலரே தேன்ஊறும் பூச்செண்டே
வரவேண்டும் என்னருகே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

666. தேன்குடித்த வண்டாக உன்னிடமே சுற்றுகின்றேன்

அன்புடனே வரவேண்டும் என் உள்ளமதை அறியவேண்டும்
கன்னல் மொழிகூறி, தளிர்நடையை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

667.நினைத்திருப்பது என்னவென்று அறியாமல் இருக்கின்றேன்
மனையதனில் விடுமப்பா பாலகனை பாருமப்பா
உனைவேண்டி அழைக்கின்றேன் கனியும்நான் எப்பொழுதோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

668. அருளதனை பெறுவதற்கு வேண்டிநித்தம் நிற்கின்றேன்
அருமையதை தெரிந்துகொள்ள உன்னொளியை காட்டவேண்டும்
இருளிலே பார்க்கவிட்டு இளைப்பிறல் சரிதானோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

669. நேர்ந்துவிட்ட கதியதனை யாரிடம் போய் விளக்குவது
ஊர்ந்து செல்லும் புழுவைப்போல் எந்நிலையை மாற்றியதேன்
தேர்ந்து உனை வேண்டுகின்றேன் தள்ளாது வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

670. அமுதத்தை தந்துநீயும் விடமதனை வைத்துக் கொண்டாய்
சமுத்திரத்தில் ஓர்துரும்பாய் தத்தளித்து நிற்கின்றேன்
அமுதசுரபி உந்தன்குணம் இரங்கவேண்டும் உந்தன்மனம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

671. ஓசையின்றி செல்கின்றாய் மனமுவந்து வரவேண்டும்
ஆசையுடன் அழைத்தாலும் வாராமல் செல்வதேனோ
இசைந்து நீயும் வரவேண்டும் மைந்தன் முகம்காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

672. தனியாக தவிக்கவிட்டு ஓடி ஒளிந்து கொண்டாய்

கனியாமல் இருப்பதேனோ செந்தனலை தந்ததேனோ
இனிவேண்டும் பொற்காலம் உன்கரத்தை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

673. அல்லல்தனை தந்துவிட்டு அலைபாய விட்டதேனோ
இல்லல்தனை நீக்கிவிட்டு இன்பமதை காட்டவேண்டும்
பல்லுயிரும் படைத்தவனே கொன்றைமலர் அணிந்தவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

674. அவலத்தை அறுக்கவேண்டும் நோயதனை நீக்கவேண்டும்
ஆவதும் உன்னாலே ஆக்குவதும் உணர்வாலே
ஈவதும் உன்னாலே இயங்குவதும் உன்னாலே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

675. பேணி உன்னை வேண்டுகின்றேன் நலம்காக்க வேண்டுமப்பா
அணியவேண்டும் உன்னருளை பெறவேண்டும் அமுதம்மழை
தணியவேண்டும் உன்கோபம் காக்கவேண்டும் பாலகனை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

676. மயங்கி நித்தம் வேண்டுகின்றேன் காலடியில் நிற்கின்றேன்
அயராமல் அழைக்கின்றேன் எனைத்தேடி வரவேண்டும்
உயர்வதற்கு வழிவேண்டும் உய்வதற்கு வகைவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

677.உற்றவன் நீ என்று உன்துணையை கேட்கின்றேன்
ஆற்றாது அழைத்தாலும் எட்டிநின்று பார்க்கின்றாய்
கற்றவன் நீயப்பா கடுந்துயரை நீக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

678. ஓதி நித்தம் அழைக்கின்றேன் ஓயாமல் கேட்கின்றேன்

ஆதியாய் இருப்பவனே என்குரலை கேட்கவேண்டும்
மதிமயங்கி நிற்கின்றேன் நின்னருளை பெறுவதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

679.நெஞ்சமதில் குருதிதனை வடியவிட்டாய்
தஞ்சமென்று வந்த என்னை வெந்தனலில் தள்ளிவிட்டாய்
கெஞ்சிநித்தம் கேட்டாலும் உதைக்கின்றாய் என்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

680. அறக்கடவுள் நீயென்று உன்னடியை சரணடைந்தேன்
மறந்துநீயும் செல்கின்றாய் கனியும் காலம் வரவேண்டும்
தேறவில்லை உன்மனது தேற்றவில்லை என்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

681. புலம்புகின்றேன் நாளெல்லாம் நலம்காண அழைக்கின்றேன்
ஓலமிட்டு அழைத்தாலும் உறங்கி நீயும் போய்விட்டாய்
இலகுவாக வந்திடுவாய் என நினைத்து அழைக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

682. பயனாக தரவேண்டும் பலனாக வரவேண்டும்
அயராது அழைக்கின்றேன் அன்புடனே காணவேண்டும்
துயரமதை தந்துவிட்டு கேளாமல் சென்றுவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

683. நெஞ்சில் நினைக்கின்றேன் நெடுந்தூரம் சென்றுவிட்டாய்
வஞ்சி எனை காணாது வாளாமல் இருந்துவிட்டாய்
அஞ்சுகின்ற நெஞ்சினுக்கு ஆறுதலை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

684.கற்கவேண்டும் உன்வேதம் பிடிக்கவேண்டும் உன்பாதம்

அற்பனாக நினைத்து என்னை துன்பத்தில் தோயவிட்டாய்
ஆற்றாது இரைஞ்சுகின்றேன் வேண்டுகோளை ஏற்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

685. நித்தமொரு குறைகூறி உன்னிடமே வருகின்றேன்
அத்தனையும் ஏற்றுநீயும் ஆறுதலை தரவேண்டும்
எத்துணை வந்திடினும் உன்துணையே பெரிதப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

686. கேட்டவரம் தரவேண்டும் வேண்டிநித்தம் அழுகின்றேன்
இட்டுவிட்டாய் சாபமதை பெறவேண்டும் உன்னருளால்
ஆட்டுவிக்கும் ஈசனே காலமது கனியவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

687. குணங்குன்றாய் இருப்பவனே மணவாளா வாகீசா
கனங்களுக்கு அதிபதியே மனம்நாடும் அருளீசா
காணவேண்டும் உன்னருளை பாலகனை தேற்றவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

688. திருமுறைகள் கொண்டவனே திருமறைகள் அறிந்தவனே
அருகினிலே வரவேண்டும் அற்புதத்தை பெறவேண்டும்
இருப்பதுவோ ஓர்மனது ஏங்கவைப்பது உன்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

689. பிள்ளைநடை பார்க்கவேண்டும் பேரின்பம் அடையவேண்டும்
அள்ளி அணைப்பதற்கு உணர்வுதனை தரவேண்டும்
தள்ளி நிற்காது கண்ணொளியை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

690. நிம்மதியில்லா உலகமிது நிலையில்லா வாழ்வுஇது

அம்மாவென அழைத்தாலும் விருப்பமில்லை வருவதற்கு
நம்பி உன்னை கரம்பிடிப்பேன் நழுவாமல் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

691. முதலும் முடிவுமாலலைனே மூவுலகும் அறிந்தவனே
உதவிகேட்டு வந்தவரை தள்ளுவது முறையாமோ
ஆதரவு தரவேண்டி கனிந்துருகி வேண்டுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

692. நன்மகவை தாரது தவிக்கவிட்டாய் என்மனதை
உன்னிடமே முறைகேட்பேன் தக்கபதில் உரைக்கவேண்டும்
என்புதோலை போர்த்திவிட்டு உணர்வுகளை ஒளித்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

693. பெற்றவனே அடித்தால் பிள்ளைநான் செய்வதென்ன
ஆற்றாது அழுதாலும் உன்னருளை பெறவில்லை
உற்றவன் நீயெனினும் நழுவித்தான் செல்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

694. தடுமாறி நிற்கின்றேன் தக்கபதில் தரவேண்டும்
ஆடுவது அம்பலத்தில் ஆட்டுவது சிரமதனில்
ஓடுகின்றாய் எனைவிட்டு தேடுகின்றேன் உன்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

695. செல்கின்றாய் என்மனதை விட்டு அகலாது வரவேண்டும்
அல்லல்படும் என் நெஞ்சை காணாது மறைகின்றாய்
தொல்வினையை அகற்றிநீயும் என்துயரை துடைக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

696.வெல்லவேண்டும் உன்னருளை தள்ளவேண்டும் குறையதனை

இல்லாமை சொல்லி உன்எதிரே நிற்கின்றேன்
எல்லோரும் இன்புற நினைக்கவேண்டும் உன்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

697. உற்றவன் நீ என்று உன்காலடியில் வீழ்கின்றேன்
ஏற்றவேண்டும் என் விளககை ஒளியதனை தரவேண்டும்
மாற்றானாய் நினைக்காது உற்றதுணை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

698. ஏத்துகின்றேன் உன்புகழை மாற்றமதை தாராயோ
எத்துணையும் தாராது மறந்து நீயும் போவாயோ
இத்துணையே போதுமென்று உன்பாதமதில் சமர்ப்பிக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

699. இனியமொழி தரவேண்டும் தேனூறும் உன் சொல்லாலே
கனிவாய் திறந்துநீயும் பிள்ளைப்பிணி போர்க்கவேண்டும்
இனியும் தேடவைத்தல் உன்தனக்கு அழகாகமோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

700. நண்பனாக வருபவனே உற்றதுணை காணவேண்டும்
வெண்ணீறு பூசுகின்றேன் மந்திரச் சொல்தரவேண்டும்
கண்ணீரால் அர்ச்சிப்பேன் பாதத்தை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

701. நம்பி உன்னை கரம்பிடிப்பேன் பாதமதை தொழுதிடுவேன்
உம்கைப்பிள்ளை நான் உனக்கே அடைக்கலம் தான்
அம்மாவென அழைப்பதற்கு ஒலியதனை மறுத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

702. தடைஏதும் சொல்லாமல் விரைந்து ஓடி வரவேண்டும்

அடைவதற்கு வழியில்லை உன்கதியை வேண்டுகின்றேன்
கடையனாக விட்டுவிட்டாய் கண்ணீரால் நனைத்திடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

703. இகழ்வதற்கு என்று எண்ணி பிள்ளைதனை படைத்துவிட்டாய்
அகழ்ந்து நானும் வந்திடுவேன் உன்னருளை காண்பதற்கு
புகழ் வேண்டி நிற்கவில்லை புகலிடத்தை கேட்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

704.தேறாத பிள்ளையென்று தேற்றாது விடலாமோ
ஆறாத புண்ணாக என்மனதை மாற்றலாமோ
கூறாது இருக்காதே உந்தன் மொழி கூறலாமோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

705. மொழிஏதும் இல்லையப்பா உனைக்கூவி அழைப்பதற்கு
வழியதனை காட்டவேண்டும் என் பிள்ளை மாறவேண்டும்
விழியாலே சுட்டுவிட்டாய் வென்தனலை காட்டிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

706. விழிச்சுடரால் காத்திடுவாய் வேண்டிநித்தம் வந்திடுவாய்
அழிவதனை மாற்றிடுவாய் குளிர்மழையை தந்திடுவாய்
ஊழிமுதல்வனே முக்கண்ணை பெற்றவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

707. உறுபசி தீர்ப்பவனே உறுதுணையாய் வருபவனே
மறுக்காது வருபவனே பட்டதுயர் தீர்ப்பவனே
வெறுக்க மனமில்லையப்பா தவிர்க்கவில்லை உன் எண்ணமதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

708. ஆரிருளை தவிர்ப்பவனே காரிருளை மறைப்பவனே

உரியவனே பெற்றவனே காப்பவனே என்ஈசனே
அரியஉன்பரம் பொருளை நான் அறிய வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

709.கவர்ந்துவிட்டாய் என்மனதை காந்தமாக வந்துவிட்டாய்
தவறாது வந்துநித்தம் என்குறையை தீர்த்திடுவாய்
உவந்து உன்னை பிடிக்கின்றேன் தவழ்ந்து பிள்ளை வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

710. தள்ளுவது நல்லதல்ல உருகவேண்டும் உனதுள்ளம்
உள்ளுவது உந்தன் உள்ளம் நெகிழ வேண்டும் உன்மனது
அள்ளவேண்டும் உன்நினைவை தள்ளவேண்டும் துன்பதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

711. பேணவேண்டும் பிள்ளையதை கேட்டவரம் தரவேண்டும்
காணவேண்டும் கண்ணொளியால் பாடவேண்டும் உன்புகழை
மனமதனை தரவேண்டும் வாழ்வுதர வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

712. கொஞ்சிநிற்பேன் உன்எழில் கண்டு பிள்ளையாக வரவேண்டும்
வஞ்சமில்லா மனதோடு அழைக்கின்றேன் உனைக்காண
எஞ்சிநிற்பது என்மனது தஞ்சமென்று தருகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

713. வெயிலென்னக் காய்ந்துவிட்டாய் குளிரதனை மறைத்துவிட்டாய்
பயிருக்கு மழையன்ன உடலுக்கு உயிரானவனே
உயிராக நினைக்கின்றேன் உன்மனதை தொடுவதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

714. நம்பிக்கை வைக்கின்றேன் உன்னாகி பெறுவதற்கு

உம்மிடமே வரம்கேட்பேன் உன்கருணை பெறுவதற்கு
எம்மிடமே வரவேண்டும் எனதன்பைக் காண்பதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

715. சிலனே என வேண்டினாலும் சிலையாக நிற்கின்றாய்
அவனியிலே வந்துநீயும் உன்புகழை நாட்டவேண்டும்
ஆவதுவும் உன்னாலே இயக்குவதும் உன்மரபாலே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

716. அவலத்தை அறுப்பவனே இனிமைதனை தருபவனே
தவறாது நினைக்கின்றேன் உன்நினைவலை ஆட்கொண்டனே்
ஈவது உன்மறப்பா வள்ளல் உந்தன்குணமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

717. பாகாக உருகின்றேன் உன்பாதம் காண்பதற்கு
போகாது காத்துநிற்பாய் உன்எழிலை பெறுவதற்கு
ஆகாது எந்தன்உரை உந்தன் மொழி கேட்காமல்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

718. தெள்ளுமொழி பயிற்றுகின்றாய் தேனூறும் வாயாலே
ஆள்கின்றாய் உன்எழிலால் பூணுகின்றாய் கொன்றைமலர்
அள்ளி இன்பம் தந்திடுவாய் பெற்றிடுவேன் என்மனத்தால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

719. ஆளவந்தாய் மூவுலகை அள்ளத்தந்தாய் உன்னருளை
இளகுவாக வந்திடுவாய் அடியவரை காத்திடுவாய்
தளர்ந்துநிற்கும் என்மனது உந்தன் முகம் பாராமல்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

720. விடமதனை கொண்டவனே அமுதமழை தந்தவனே

இடம் ஓர்பாகம் கொடுத்தவனே உமையவளை கொண்டவனே
தடமதனை பதித்த நீயும் மண்ணுயிரை காப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

721.தருநிழலாய் வந்துநீயும் குளிர்ச்சியதை தருபவனே
அருமை உந்தன் உள்ளமப்பா எந்தனுயிர் நீயப்பா
பெருமைதனை தந்துநீயும் மனங்குளிரச் செய்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

722. அன்பினில் தோய்ந்த இன்னமுதே விண்ணவர் ஏத்தும் வான்முகிலே
கன்னலென இனிப்பவனே தேனில் தோய்த்த பழச்சுவையே
மென்பொருளை அறிந்தவனே ஈடு இணையற்றவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

723. இரங்கி நிற்பது உன்மனது தேறி நிற்பது என்மனது
ஆரமாக நாகமதை கொண்டவனே இனியவனே
பாரமான என் உள்ளமதை பனிபோல உருக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

724. தேடிநித்தம் அலைந்தாலும் உன்ஒளியை காணவில்லை
ஆடிநிற்பாய் அம்பலத்தில் ஓடிவருவாய் அடியவர்க்கு
பாடிநித்தம் கேட்வர்க்கு மனமிரங்கி வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

725. சீர்தூக்கி பார்த்து என்னை அணைக்க வேண்டும் அன்புடனே
வேர் அறுந்த பயிராக உணர்வற்ற உயிரைப்பார்
தேர்போல அசைந்து நின்று பாராமல் ஒளியாதே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

726. கேட்டு நித்தம் அலைபவர்க்கு ஓடிவரும் மலையரசே

பட்டஉள்ளம் நோகாது பறந்து ஓடிவருபவனே
இட்டதுயர் போதுமென்று உன்எழிலை அருள்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

727. மறந்துநின்ற என்மனதில் அடிஎடுத்து வைத்தவனே
அறம் கூறி வளர்ப்பவனே சிந்தனையை தருபவனே
ஆறாமல் இருக்கும்பிணி உன்மருந்தால் தீருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

728. நட்டாற்றில் ஒதுக்காமல் நல்லநிலை தருபவனே
பட்டதுயர் நீங்கவேண்டும் தென்றலாய் வரவேண்டும்
விட்டுவிட்டாய் என்தனையே உந்தனடி காணாமல்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

729. சின்னஞ்சிறு பிள்ளையென பிஞ்சுமுகம் காட்டவேண்டும்
கன்னலென இனிப்பவனே கனிஉவகை தருபவனே
தன்னொளியால் நிறைந்தவனே ஈடில்லா வாகீசா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

730. தேன்தமிழ் சொல்லாலே உன்புகழை பாடிடுவேன்
மான்விழிக் கண்கொண்ட உமையவளை கைப்பிடித்தாய்
என்வழியில் வரவேண்டும் நல்லுரையை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

731. ஒப்பில்லா ஆண்டவனே அண்டமதை ஆள்பவனே
அப்பனுக்கு அப்பனே ஆனந்த பேரொளியை
இப்பொழுதே வரவேண்டும் எந்தனுள்ளம் காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

732. விடமதனை கழுத்தில் கொண்டு அருளதனை தருபவனே
அடம்பிடிக்கும் குழந்தையென அருகில் வரமறுப்பதேனோ

தடுமாறிச் செல்லாமல் என்னருகே வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

733. அடுமறைக்கு அதிபதியே அடிமுதலை அறிந்தவனே
திருமுறைகள் தந்தவரை மனங்குளிரச் செய்தவனே
மருநீக்கி தெரிபவனே வருதவற்கு மறுப்பதேனோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

734.செவிகுளிர உரைத்திடுவேன் உன்நாமத்தை ஒலித்திடுவேன்
பாவியென ஆக்கிவிட்டு தீப்பிழம்பாய் தெரிகின்றாய்
ஓவியமாக வளர்ந்தாலும் கற்சிலையாய் நின்றாலும் உன்மனது என்னதப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

735. நிலையதனை அறிந்துகொண்டு அன்புதன்னை காட்டவேண்டும்
அலைபாயும் நெஞ்சமது உன்நினைவால் மாறவேண்டும்
மலையதனில் இருந்துகொண்டு தழைத்தோங்க செய்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

736. வேண்டும் அருள்தருபவனே வேண்டிநித்தம் அழைக்கின்றேன்
காண்பதற்கு எளியவனே காட்சியதை தரவேண்டும்
தண்ணொளியை தந்துநித்தம் ஒளிவிளங்க செய்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

737. காலடியை பிடிப்பவரை ஏற்றிவைக்கும் பெரியவனே
காலமதை தூதுவிட்டு உன்னருளை பெறவேண்டும்
கோலமென உன்திருவடியை நித்தமும் நான் வரைகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

738. வெல்லுஞ்சொல் தெரியவில்லை உன்கருணை அறியவில்லை
வல்லமையை தருபவன வருந்துயரை அடியவனைகாணவேண்டும்
இல்லாமை சொல்ல வந்துநிற்கும் அடியவளை காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

739. பல்லுயிரும் பகுத்து வழிவகையை சொல்பவனே
கல்லாக இருக்கும் நெஞ்சும் கனிந்துருகும் உன்னைக்கண்டு
ஆல்போலதழைக்க வைப்பாய் வருந்துயரை நீ துடைப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

740. கலசமாக நீயிருப்பாய் உறுதுணையாய் வந்திடுவாய்
கலங்காது எந்தன்மனம் உனைக்கண்டு ஏங்கும் உள்ளம்
உலகுதனை உய்ப்பவன் நீ உமைத்தன் போல் நடிப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

741. கேள்வி கேட்கும் என்மனதை ஆறுதலாய் உறங்கவைப்பாய்
அள்ளி எந்தன் உள்ளமதை கொள்ளை கொண்டாய்
பெருமானே
தள்ளி நிற்றல் சரிதானோ உன்தகைமை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

742. பள்ளமதை நேர்செய்து சமன்தூக்கி நீ பார்ப்பாய்
கள்ளமில்லா மனதோடு விரைவாக வந்திடுவாய்
கோள் அனைத்தும் அடக்கிநின்று தோள்கொடுப்பாய் கோமகனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

743. பொன்னம்பலத்தில் ஆடுகின்ற ஈசனே சிற்றம்பலத்தரசே
உன்புகழை பாடாது என்நாவும் அசைந்திடுமோ
அன்போடு அரவணைப்பாய் தாயன்பை காட்டிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

744. வன்னிமரம் அமர்ந்தவனே வான்புகழை கொண்டவனே
என்னுயிரும் நீயன்றோ உன்புகழை பாடுமன்றோ
தேன்போன்று இனிப்பவனே செங்கதிராய் வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

745. தொன்று தொட்டு உந்தன் புகழ் அடியவர்கள் பாடிடுவர்
ஈன்றுபுறம் தந்தாய் எந்தனுயிர் காவலனே
உள்ளொளியை காணாது எந்தனுயிர் வாடிடுமே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

746. கேட்டவரம் தந்திடுவாய் எளியவர் முன் வந்திடுவாய்
பட்டதுயர் நீக்கிடுவாய் மென்காற்றாய் வீசிடுவாய்
ஆட்டுவிப்பாய் மண்ணுயிரை மனத்துயரை மாற்றிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

747. வித்திட்ட வினை தன்னை விலக்கிடுவாய் உன்னருளால்
எத்துணையும் இல்லையென்று உன்விழிதன்னை பார்க்கின்றோம்
அத்துணையும் உண்மையென உன்னொளியால் பகர்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

748. இன்பமதை காட்டிவிட்டு இயல்புடனே இருப்பவனே
வன்னிமரத்தடி அமர்ந்து வரமதனை ஈந்து வளர்ப்பவனே
என்னருகே நீயிருந்தால் இட்டதுயர் மறைந்துவிடும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

749. ஆடவல்லானே வாழவைக்கும் வாகீசா அருளீசா
தேடநினைக்கும் உள்ளமதில் உன்னொளியை அருள்பவனே
பாடநினைக்கும் என்னொலியில் ராகமதை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

750. ஊன்றுகோலாய் வந்துநித்தம் ஏற்றமதை தரவேண்டும்
கன்றுவை கண்ணுற்ற தாயைப்போல் உன்முகம் நோக்குகின்றான்
ஈன்றவனே என் இனியவனே அருள்நாதா அழகேசா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

751. உள்உருகி நிற்கின்றேன் மன்றமதை காட்டவேண்டும்
தள்ளிவைத்தல் தரும்தானோ தருநிழலை பெறவேண்டும்
உள்வாங்கி ஏற்றுகிற்றேன் உன்எழிலை பெறுகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

752. தனக்கு ஒப்புமை இல்லாதவனே மரகதமாமணியே
தனதாக்கி கொள்ளவேண்டும் வேண்டுகோளை ஏற்கவேண்டும்
ஊனமுற்ற என்மனதை வருடவேண்டும் உன்நினைவால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

753. ஆருயிர்க்கெல்லாம் அன்னையாக வரவேண்டும்
மருகி நிற்கும் என்மனதை சீர்தூக்கி நிறுத்தவேண்டும்
அருகில் வந்துநீயும் அருமையதை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

754. ஆளவைக்கும் அரசே முக்கண்ணை உடையவனே
தாளமுடியாத்துயரத்தால் தத்தளிப்பது என்மனது
மீளவைப்பது உன்மனது ஆற்றுவது உன்மருந்து
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

755. மகிழ மரத்தடியை தன்னிடமாய் கொண்டவனே
ஆழமது உந்தன் உள்ளம் தேடுவது என்மனது
இழந்துநிற்கும் உணர்வுதனை மீட்டுவது உன்தயவு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

756. கடம்பவனத்தடியால் காண்பவரை ஈர்ப்பவனே
உடம்புக்கும் உணர்வுக்கும் மீட்டுதலை தரவேண்டும்
தடயமாக வரவேண்டும் மலர்முகத்தை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

757. ஒளிரவைத்து காட்டிவிட்டாய் மாற்றுவோய் வந்துவிட்டாய்
அளிக்க வேண்டும் மீட்டவேண்டும் சிரமதனை
எளியவனை காணநீயும் மனமுவந்து வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

758. மலைகளுக்கு அதிபதியே உமையவளை இடப்பாகம் சேர்த்துவனே
அலைகடலாய் மோதிநிற்கும் எண்ணமதை மாற்றவேண்டும்
விலையேதும் இல்லாத ஒப்பற்றமாமணியே மாசற்ற மன்னவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

759. பேர்சொல்ல ஓர் பிள்ளை பெரும்பயனாய் தந்துவிட்டாய்
ஆர்வமதை காட்டாது ஆற்றவதை எடுத்துவிட்டாய்
ஈர்க்கின்ற காந்தமென உன்னருளால் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

760. உடைமையாக எனைநினைத்து உய்வதற்கோர் வழிவேண்டும்
அடைக்காக்கும் தாயைப்போல் சேயெனைப் பேணிவேண்டும்
இடைமறித்து நிறுத்திவிட்டாய் வழிதொடர வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

761. தியாகராச பெருமானே திரு ஆரூரானே
ஈயாது நிற்காதே எனக்கு உரை தந்துளம்
தாயாகி நின்று தனிப்பிழம்பாய் வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

762. காரிருளை நீக்கும் பகலவன் நீயப்பா
அரிதாக வந்துவிட்ட நோயிருளை மாற்றுமப்பா
பெரிது உந்தன் உள்ளமப்பா தொடைவள்ளல் நீயப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

763. அன்பின் அமுது நீ பாசத்தின் படைப்பு நீ
என்னுயிரை உன்நெஞ்சமன்றோ மன்றாடும் பிள்ளையன்றோ
உன் எழிலைக்காணாது எந்தன் உள்ளம் உறங்காது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

764. மகிழ்விக்க சொல் வேண்டும்
அகிலமெல்லாம் நலம் வேண்டும்
சகிப்பது உந்தன் உள்ளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

765. சுமைதாங்கி நீ எனவே பாரமதை விட்டுவிட்டேன்
அமைதியாக ஆண்டருளி பக்தர்துயர் தீர்ப்பவனே
இமைக்காது அண்டமதை அரசாளும் கோமகனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

766. ஓடும் எந்தன் நினைவலைகள் உன்னிடமே தஞ்சமப்பா
ஆடுவது உந்தன்தொழில் தேடிநிற்பது எந்தன் குணம்
தேடுவது உன்அருளை வணங்குவது உன்பதத்தை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

767. பூரணமாய் குணமாக்கி உந்தன் அருமை சேர்க்கவேண்டும்
அரவணைக்க வேண்டுமப்பா பிள்ளைக்குறை தீர்க்குமப்பா
ஆரமென நாகமதை கழுத்தினிலே அணிந்தவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

768. ஓடமாக நீ இருந்து கரை சேர்க்க வேண்டுமப்பா
தடமாறி சென்றுவிட்ட பிள்ளைப்பிணி தீர்க்க வேண்டும்
விடமதனை கழுத்தில் கொண்டு அமுதமழை சொரிபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

769.வசந்தங்கள் வரவேண்டும் வண்ணமலர் காட்டவேண்டும்
பாசமழை நெஞ்சில்வைத்து வாடும் பயிர்துளிர்க்கவேண்டும்
நேசமுடன் வேண்டுகின்றேன் நெஞ்சில் பயில் ஆண்டவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

770. கேட்டசெல்வம் தந்துவிட்டாய் கரும்பிணியில் வாடவிட்டாய்
தட்டாமல் வரவேண்டும் பிணி நீங்கதரவேண்டும்
ஆட்கின்றாய் உள்ளமதை கேட்டுநிற்பாய் என்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

771. தேவாதி தேவனே தென்முகத்து கடவுள் நீயே
பாவாக்கம் தந்துவிட்டேன் பரிந்துரைகள் செய்யவேண்டும்
அவாகொண்டு கேட்கின்றேன் உன்நிலை பகரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

772.அடி முதல் இல்லா இறையவனே மருநீக்கி தருபவனே
ஆடிநிற்பாய் சிதம்பரத்தில் தேடிநிற்பாய் கயிலையிலே
ஓடிவரும் பக்தருக்கு ஆடல் அரசாய் தெரிபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

773.குணமதனை காட்டி மனநிறைவு செய்யவேண்டும்
மணம் நிரப்பும் உந்தன்குணம் நிறைவேற்றும் உந்தன்மனம்
கனங்களுக்கு அதிபதியே மறைநான்கும் உணர்ந்தவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

774.தடுத்துவிட்டாய் உணர்வுதனை தரவேண்டும் ஊக்கமதை
அடுத்துவரும் காலங்கள் நல்லதாய் அமையவேண்டும்
எடுத்துரைப்பது எந்தன்மனம் கேட்டுத்தீர்ப்பது உந்தன் உளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

775. மன்றத்திலே கேட்கின்றேன் பதிலேதும் சொல்லவில்லை
உன்நினைவால் நிரப்பிவிட்டாய் பிள்ளைதனை மாற்றிவிட்டாய்
அன்போடு அழைத்தாலும் அருமருந்தை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

776. வெந்தனலில் இருப்பவனே விழிச்சுடரால் எரிப்பவனே
தந்துநீயும் உதவவேண்டும் பிணியதனை அகற்றவேண்டும்
வந்து நித்தம் நற்சொல்லை நாளும் பயிற்ற வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

777. தேறாமல் இருக்கும் செல்வம் உன்முகத்தை பார்க்குதப்பா
ஆறாமல் உள்ள நோவலை ஆற்றுவது உந்தன் உள்ளம்
மாறாமல் இருக்கின்றாய் மாற்றவேண்டும் வளப்பதனை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

778. உமை ஒருபங்கனாய் அடியவர்க்கு காட்சி தந்தாய்
எமையும் ஓர்பொருட்டாக குறைதன்னை கேட்கவேண்டும்
அமையவேண்டும் நல்வாழ்க்கை பிள்ளையதை பேணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

779.பெற்றவனாய் நீயிருந்து உன்மகவை நோக்கவேண்டும்
உற்றதுயர் நீங்கவேண்டும் உன்பெருமை பாடவேண்டும்
ஆற்றாது அழுததுயர் உன்துணையாய் மாறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

780. பட்டதுயர் நினைத்தாலே நடுநடுங்க செய்யுமப்பா
இட்டதுயர் போதுமென்று உன்பாதம் பிடித்து வேண்டுகின்றேன்
ஈட்டவேண்டும் உன்கருணை வந்துயர் தீரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

781. தாளாது அரற்றுகின்றேன் என்புலம்பல் கேட்கலையா
மாளாத துயரத்தில் ஆழ்த்திவிட்டாய் மகவுதன்னை
மீளாத துன்பதை உன்அன்பால் துடைக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

782. கேளாது நிற்காதே என்துயரை தீர்த்திடு
ஆளாத துயரத்தை அரவணைப்பால் மாற்றிடுவாய்
தோளாக வந்துநின்று என்சுமையை தாங்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

783. வேற்றுமையாய் நினைக்காது பிள்ளைதனை காணவேண்டும்
மாற்றவேண்டும் உணர்வுதனை பேசவேண்டும் குரலெடுத்து
தேற்றவேண்டும் பார்ப்பதற்கு நடக்கவேண்டும் உன்பார்வை நோக்கி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

784. கொஞ்சவேண்டிய பிள்ளை இன்று கெஞ்சிநிற்கும் கோலமென்ன
அஞ்சவைத்தது உந்தன் செயல் எஞ்சியது உன் நினைவு
ஊஞ்சல் போல என்மனதை அசைந்தாட வைத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

785. ஒருபொழுதும் உன்னடியை மறவாது இருக்கின்றேன்
தருவதற்கு இல்லையென்று மறுக்காது தந்துவிடு
அருஞ்செல்வமதை அலைகழிக்க விடலாமோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

786. காலமெல்லாம் உன்னடியே தஞ்சமென வணங்கி நிற்பேன்
ஓலமிட்டு அழைத்தாலும் உரைக்காது செல்வதேனோ
உலகமதை உய்விக்கும் ஓங்கார நாயகனே எம்பிரானே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

787. திருநீறு அணிந்தவரை அடைகாக்கும் தாயப்பா
உருவமது காட்டாது அருவமாக நிற்பவனே
அருமருந்தை தரவேண்டும் பிணியதனை நீக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

788. கனிந்து உருகும் காலமதை காண்பதற்கு காத்திருப்பேன்
இனிமேலும் தயங்காதே தடையதனை நீக்கிவிடு
தனிமரமாய் நிற்கின்றேன் தவித்து உன்னை அழைக்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

789. நிதம் உன்னை பணிகின்றேன் உதவாது போகாதே
அதர்மத்தை வெல்பவனே அன்புமழை பொழிபவனே
ஈதல் உந்தன் செயல் ஏற்பது எந்தன் பயன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

790. சக்தி ஒரு பாகனாய் உலகத்தில் அருள்பவனே
எக்கதியும் காணாமல் உன்கதியை தேடிநிற்பேன்
ஊக்குவிக்க வேண்டுமப்பா ஒளியதனை காட்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

791. வெல்கின்ற வழியும் அறியாது திகைக்கின்றேன்
அல்லலை மாற்றி உந்தன் கன்னல் மொழிதரவேண்டும்
இல்லலை அகற்றிநீயும் உன்பெருமை கூட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

792. கேளாது செல்கின்றாய் பெருந்துயரை தருகின்றாய்
தாளாது அழைக்கின்றேன் தகைமையுடன் கேளப்பா
மாளாத மகவுதுயர் பாகாக உருக வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

793.ஓயாது அழைக்கின்றேன் உவகையின்றி பார்க்கின்றேன்
தாயாக வரவேண்டும் சேயின் குரல்கேட்கவேண்டும்
சாயாத உந்தன் உள்ளம் நீராக உருகவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

794. சேயன் எனை படைத்து புழுவாக மாற்றிவிட்டாய்
மாயமாய் வரவேண்டும் கருணைமழை பொழியவேண்டும்
அயராமல் அழைத்திடுவேன் கண்ணொளியை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

795. தென்றல் என என்வாழ்க்கை புயலாக மாறியதேன்
உன்னாற்றல் காணவேண்டும் சிரமுக்கு சீர்வேண்டும்
மன்றிலாடும் பொன்னம்பலமே மயங்காது வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

796. உற்றநண்பனாய் நீ இருப்பாய் மனச்சுமையை குறைத்திடுவா
பற்றவேண்டும் உன்பதத்தை பிடிக்கவேண்டும் உன்கரத்தை
ஆற்றவேண்டும் உன்உதவி மாற்றவேண்டும் உணர்வுகளை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

797.மங்கலச்சொல் தரவேண்டும் உணர்வு மீண்டுவரவேண்டும்
அங்குமாய் எங்குமாய் அண்டமெல்லாம் நிறைந்தவனே
தங்கவேண்டும் என்மனதில் மனச்சுமையை மாற்றவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

798.திருவடிவே தேன்சுடரே வான்முகிலே வண்ணமலரே
கருவிலே வளர்ந்த பிள்ளை உணர்வுகளை இழந்தது ஏன்
அருவமாய் வந்துநீயும் குழந்தை தனை மாற்றவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

799.மாறாத உன்புகழை கண்டுநித்தம் மகிழவேண்டும்
ஆறாத மனப்புண்ணை உன்னருளால் வருடவேண்டும்
தேறாத எந்தன்பிள்ளை உன்மனத்தால் மாறவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

800. சிற்பமாக வரைகின்றார் சிலையாக வடிக்கின்றார்
ஏற்று நிற்பாய் உன்மனத்தால் உணர்வாக வந்துநிற்பாக
ஆற்றாது அரற்றுகின்றேன் நலமதை பெறவேண்டி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

801. ஈனப் பிறவியென மகவுதனை மாற்றிவிட்டாய்
ஊமைதை தந்துவிட்டு பாராது செல்கின்றாய்
அனலாக கொதிக்கும் மனம் உன்னீரால் குளிரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

802.சித்தனாக வரவேண்டும் உடம்புதனில் புகவேண்டும்
காத்துநிற்பாய் குழந்தைகளை தளிர்நடையாய் வரவேண்டும்
பித்தவனே உனக்கிருக்கும் மந்திரத்தால் ஒளியதனை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

803. நிலம்தனிலே வரவேண்டும் நீகபுகழ் தரவேண்டும்
கலமாக நீ இருந்து என்குறையை ஏற்கவேண்டும்
தலமாக நிறைந்திருந்து ஊடுருவ வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

804.அற்புதம் காட்டிநிற்பாய் மறுப்பதற்கு ஏதும் இல்லை
ஆற்றவேண்டும் உன்தொழிலை குழந்தை முகம்காணவேண்டும்
பொற்றம்பலநாதனே விண்ணரசே என்னருகே வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

805. ஐம்புலனை அடக்கிவிட்டாய் உணர்வுதனை அழித்துவிட்டாய்
அம்மா என அழைத்தாலும் கசிந்துருக மறுப்பதேனோ
இம்மண்ணுலகில் உனையன்றி உற்றதுணை யாருமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

806. இருள் அகற்றி ஒளிவிளக்கை ஏற்றவேண்டும்
மருள் நீக்கி மாண்புபுகழ் தரவேண்டும்
அருள் வெள்ளம் அளித்து ஒவியாக வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

807. களையவேண்டும் பிணியதனை தழைய வேண்டும் உணர்வுகளே
இளைப்பாற உன்மனது வேண்டிநிற்கும் வருகின்றேன்
சளைக்காது எந்தன்மனம் உறங்காது சிந்தையது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

808. தூயவனே விந்தையதை காட்டி நிற்கும் கோமகனே
அயராது வேண்டிநிற்பேன் உன்னருளை பெறுவதற்கு
தயவுகூர்ந்து வரவேண்டும் ஒளிவெள்ளம் தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

809. அற்பப் பதரென்ன ஆக்கிவிட்டாய் என சிந்தனையை
கற்பது உந்தன்நாமம் கேட்பது உந்தன்குரல்
ஆற்று நீராய் வரவேண்டும் என்துன்பம் களையவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

810. இறையன்பே ஈரமான உள்ளமதை கொண்டவனே
கறைநீக்கி தரவேண்டும் வளர்ச்சியதை மீட்டவேண்டும்
உறைகின்ற உன்கருவறையில் எந்தன்மனம் நிற்குமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

811. வேதனைகள் ஏங்கிநிற்கும் நிலைமைதனை பாருமப்ப
ஆதரவு காட்டி நல்வழியை வகுக்கவேண்டும்
உதவவேண்டும் உன்மனது வழிவேண்டும் என்தனக்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

812. இல்லம் நோக்கி வரவேண்டும் ஈன்றமகவை பார்க்கவேண்டும்
இல்லாமல் ஆக்கிவிட்ட உணர்வுதனை தரவேண்டும்
கல்லாக இருக்கும்மனம் உனைக்கண்டு உருகுதப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

813. தாகமதை தந்துவிட்டாய் உணர்வுதனை வீழ்த்திவிட்டாய்
அகமாக வந்துநித்தம் உன்முன்னே நிற்கின்றேன்
ஆகமமாய் வந்துநிற்பேன் உந்தன்பதம் தொழுதிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

814. மணக்கவேண்டும் மகவுவாழ்க்கை ஊக்கமதை தந்துவிடு
இணக்கமாக வந்துவிடு நல்வார்த்தை கூறிவிடு
கனப்பொழுதில் வந்துநிற்பாய் எந்தன்மனம் குளிரவைப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

815. திருத்தி அமைத்து சிரமதனை சீராக தரவேண்டும்
வருத்தி நிற்கும் பார்வைதனை ஒளியாக்க வரவேண்டும்
கருவரையில் இருந்துகொண்டு கரைசேர்க்க வேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

816. நாயகனாய் வரவேண்டும் நற்புகழை பெறவேண்டும்
மாயமாக மறையாது என்முன்னே வரவேண்டும்
தயவுடனே வரவேண்டும் பாதையதை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

817. பசுமை உந்தன் உள்ளமப்பா என்சுமையை தாங்குமப்பா
வீசுவது உன்காற்று அரவணைப்பாய் உன் அன்பால்
சிசுவதனை கண்டு நோக்கி அருமருந்தை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

818. சித்தமதில் குடிகொண்ட சிங்கார பெருமானே
அத்தனையும் உன்னருளால் துளிர்த்துநிற்க வேண்டுமப்பா
இத்துணையே போதுமென்று உன்நிழலில் வாழ்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

819. நிலையான உன்னருளால் மடிச்சுமையை இறக்கிவிட்டேன்
தலைவனாக வந்துநீயும் குறைகேட்டு தீர்க்கவேண்டும்
அலைபாயும் நெஞ்சம் உன்னொளியால் ஒடுங்குதப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

820. துணையாக வருவாய் என உன்பாதம் பணிகின்றேன்
அணைவாக வந்துநீயும் இன்பத்தை காக்கவேண்டும்
இணையில்லா ஆண்டவனே உந்தன்மனம் உருகாதா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

821. இன்னும் வரதாமதித்தல் உனக்கே தான் அழகாமோ
என்னுயிராய் இருப்பவனே எடுத்து இயம்ப வார்த்தையில்லை
ஈன்றெடுத்த தாயினைப்போல் இசையோடு வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

822.அன்னையென வரவேண்டும் நண்ணுணர்வை தரவேண்டும்
இன்னதென புரியாது உன்வரவை நாடுகின்றேன்
உன்அசைவை பெறவேண்டி ஏங்கிநிற்கும் ஏழைதான்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

823. இரங்கவேண்டும் நிலைபார்த்த வரவேண்டும் வீடுதேடி
ஈரமுண்டு உன்மனதில் இரங்கி நிற்கும் உன் உள்ளம்
கரமதனை நீட்டவேண்டும் காப்பவனாய் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

825.கருணை காட்டு உந்தன் கண்ணொளியால்
இருள் அகற்றி ஒளிகாட்டி உன்னருளால்
தருணம் அது வந்ததென வரவேண்டும் மகவு நோக்கி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாபவே.

826.ஆளவந்த பிள்ளையதை பாவையென செய்துவிட்டாய்
உளம் உருகி அழைக்கின்றேன் வந்து என்னை பாருமப்பா
களமிறங்கி வரவேண்டும் ஆதரிக்க வேண்டுமென்ன
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

827. நன்மையதை தந்துவிடு இரக்கமதை காட்டிவிடு
தன்னிகரில்லா இனியவனே அருட்சுடரே தனிவிளக்கே
உன்னையே வந்தடைந்தேன் எழிலுருவம் காண்கின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

828.பிஞ்சுமுகம் கண்டுநீயும் மனம் இரங்கி வாராயோ
தஞ்சமென்று உன்முகத்தை நாளும் பார்க்கின்றேன்
அஞ்சவேண்டாம் என்றுகூறி என்னருகில் வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

829.மலையிலே ஒளிப்பிழம்பாய் வானிலே ஜோதியுமானவனே
அலைகடலாய் ஒலிப்பவனே ஓங்கார நாதனே
தலை வணங்கி நிற்கின்றேன் தாங்கவேண்டும் உன்னருளால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

830. சந்ததியை தருபவனே அருள்ஞானம் உடையவனே
உந்தனிடம் ஓடிவந்தேன் மடிப்பிச்சை கேட்டுநின்றேன்
தந்த ஓர்பிள்ளை மனப்பாரமாக மாற்றிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

831. பசித்திருந்தேன் உன்திருவடியை காண்பதற்கு
ஆசியதை தரவேண்டும் வளம் பெருக்க வரவேண்டும்
ஆசிந்துருகி நிற்கின்றேன் உன்எழிலை காணாமல்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

832. காரணமாய் செய்திடுவாய் பொருளெதுவும் தெரியவில்லை
அரவணைப்பை தந்திடுவாய் தாயாக மாறிடுவாய்
இரவு பகல் இல்லாது இயைபுடனே வந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

833. கருவறையில் இருந்துகொண்டு காரியமாய் பார்த்திடுவாய்
அருகினிலே வந்துநீயும் அன்புடனே அணைத்திடுவாய்
பெருஞ்செல்வம் வந்ததென உன்எழிலை பருகிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

834. தகுதியின்றி கேட்டாலும் வெகுமதியை தந்திடுவாய்
ஆகும் நாளை குறித்திடுவாய் அறியாதவனாய் இருந்திடுவாய்
மகுடம் உந்தன் அருள்வெள்ளம் தேங்கிநிற்கும் என்அன்பு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

835. தளர்ந்துநிற்கும் பலிரதனை துளிராக மாற்றவேண்டும்
அளக்கும்படிகொண்டவனே ஆய்ந்தறிய வேண்டுமப்பா
இளகவேண்டும் பாகாக மாறவேண்டும் அன்பாக
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

836. தீர்க்க வேண்டும் குறையனைத்தும்
தீர்வு செல்ல வரவேண்டும்
தேர்வு உந்தன் உள்ளமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

837.ஆண்டவனே உனை தொழுதேத்தி நாளும் வணங்குகின்றேன்
காண்பவரை அரவணைத்து பரவசத்தை தருபவனே
உண்டுநித்தம் களிக்காது உனைத்தேடி வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

838.வில்வமரம் நாடி வீற்றிருக்கும் நாகநாதா
ஆல் போல தழைத்தோங்க உன்னருளை வேண்டிநிற்பேன்
இல்லையென சொல்லாது வள்ளலென வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

839. உமை ஒரு பாகனாய் காட்சி தரும் திருவாரூரானே
அமைதியான நாடி புகலிடமாய் வருகின்றேன்
எமை ஆளும் ஈசா உன் நிழலே தஞ்சமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

840. முடிவில்லா அருளாளா எனை ஆளும் பரமசிவா
அடி முடி இல்லா ஆண்டவனே எந்தன் முகம் காணவேண்டும்
படியளக்கும் இறையவனே எளியவனை குணமாக்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

841. அஞ்சுதலை பாம்படியில் அருள்பொழியும் வாகீசா
கெஞ்சி நிற்கும் பேதை எனை காணாமல் நிற்பதேனோ
தஞ்சமென உன்கருவறையில் சிந்தனையை செலுத்திடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

842. நந்தி என எனை நினைத்து என்முன்னே வரவேண்டும்
வந்து நிற்கும் ஏழை எந்தன் உள்ளமதை அறிவாயோ
உந்தன் புகழ்பாடிடுவேன் உன்பெருமை போற்றிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

843.ஒடுக்கிவிட்டாய் என்மனதை ஒதுக்கிவிட்டால் பைந்துள்ளரை
அடுக்கிவைத்தாய் நோயதனை தள்ளிவிட்டாய் துன்பமதில்
ஈடுஇணையற்றவனே ஆடுகின்றாய் அம்பலத்தில்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

844. பித்தனாக மாற்றிவிட்டாய் சித்தனாக வரவேண்டும்
அத்தா எனவேண்டுகின்றேன் என்குறையை மாற்றவேண்டும்
இத்தருணம் வரவேண்டும் நற்சொல்லை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

845. ஓயாத கவலையினால் ஓய்ந்து நிற்கும் உள்ளமது
சேயாக அழைத்தாலும் தாயாக மறுக்கின்றாய்
ஈயாது இருக்கின்றாய் உன்னருளை மறைக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

846. சொல்வதற்கோர் வார்த்தையில்லை தேடிவரமனமுவில்லை
அல்லலுற்கு அழுதாலும் கேட்பதற்கு எண்ணமில்லை
இல்லமது சிறப்பதற்கு நல்வார்த்தை பகர வேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

847. அன்புக்கு அடிபணிவாய் ஆருயிர்க்கு அருள்செல்வாய்
உன்கைப்பிள்ளை உனக்குக அடைக்கலமென காத்திடுவாய்
உன்னை நான் தொழுதிருப்பேன் நாளும் வணங்குகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

848.உடுக்கையதை கையில்கொண்டு விடமதனை கழுத்தில் வைத்தாய்
அடுக்காக வந்து நிற்கும் பெருந்துயரை நீக்கிவைப்பாய்
இடுக்கண்ணை தவிர்த்திடுவாய் தெளிந்த நலம் தந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

849. நன்னெறிக்கு உய்ப்பவனே நலிந்தவரை காப்பவனே
உன்னை நித்தம் வணங்கிடுவேன் நயம்பயக்க செய்துவிடு
அன்னையென அன்புகாட்டி ஆசையுடன் வந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

850. விளித்து உன்னை வேண்டுபவரை உன் அணைப்பால் காத்திடுவாய்
அளித்துவிடுவாய் நல்லவரம் பேணிடுவாய் அழைப்பவரை
களி உவகை கொண்டிடுவாய் உனை அழைக்கும் போதினிலே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

851. தவிப்புடனே நிற்பவரை தளிர் கையால் காத்திடுவாய்
அவிழ்த்து நிற்பாய் தீவினையை காத்திடுவாய் நல்வினை
ஈவிரக்கம் காட்டிநிற்பாய் எளியவரை கண்டவுடன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

852.வேண்டிநின்று ஏந்துவோர்க்கு அள்ளித்ரும் ஆண்டவனே
தண்டிக்கவேண்டாம் சிசுவை தரமாக தந்துவிடு
மண்டியிட்டு அழைப்பவரை அருள்மழையால் நனைப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

853. மன்றாடி அழுபவர்க்கு தென்றலென வருபவனே
கன்றாக வருபவரை மடிப்பாலால் நிறைப்பவனே
தன்னிகரற்ற பெரும் பொருளே காந்தமென ஈர்ப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

854. வளமுடன் வாழ்வதற்கு நலமெல்லாம் தருபவனே
அளவில்லா அன்புதனை வழங்குகின்ற ஈசா
·உளம் கனிந்து வந்துநீயும் உலகமதை காக்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

855. நீயின்றி ஓர் உயிரும் மண்ணுலகில் வாழ்வதில்லை
உயிரனைத்தும் உன் இசையால் வளம் பெற்றுநுற்குமப்பா
கோயிலிலே உறைந்தாலும் மனதினிலே வாழ்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

856. தேன்குடிக்கும் வண்டெனவே, உன்அகத்தை சுற்றுகின்றேன்
உன்நினைவால் வாடிநிற்கும் பேதையெனை காணவேண்டும்
அன்பூறும் கண்ணாலே எனைவிளித்து பாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

857. காணவேண்டும் உன்அன்பை தேடவேண்டும் உன்முகத்தை
பேணவேண்டும் மகவுதன்னை விழையவேண்டும் உன்னுள்ளம்
குணக்குன்றே ஆடிவரும் தெள்ளமுதே வான்முகிலே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

858. மாறாத அன்பினிலே வாழவைப்பாய் எளியவரை
ஆறாத மனத்துயரை உன்அருளால் வீழ்த்திடுவாய்
ஊறாத கருணைகூட உன் விழியால் வந்திடுமே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

859. தாளாத மனத்துயரை உன்கரத்தால் துடைத்திடுவாய்
கேளாது நிற்பவரும் உன்னொளி கண்டு மாறிடுவர்
மாளாத வரும் துயரை பனிபோல உருக்கிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

860. மகிழ்ந்து உன்னை அழைத்திடுவேன் மனச்சுமையை மாற்றிடுவாய்
தடுக்கின்ற உள்ளமது பனிபோல குளிர்ந்திடுமே
முகில் எனவே வந்திடுவாய் பகல்விளக்கை தந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

861. பெற்றவளாய் வந்திடுவாய் வரும்துயரை நீக்கிடுவாய்
உற்றது நீயென்று உன்னிடமே சரணடைவேன்
பற்றவேண்டும் உன்பதத்தை தேற்றவேண்டும் என்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

862. தவித்து நிற்கும் உள்ளமதை கண்டவுடன் ஏங்கிடுவாய்
ஏவிவிடும் தீயசக்தி உன்னொளியால் மறந்துவிடும்
கூவிநிற்கும் அன்பர்களை கண்டுஇரங்கும் ஈசனப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

863. கண்முன்னே வரவேண்டும் கனிஉவகை கொள்ளவேண்டும்
தண்ணொளியை காட்டிநீயும் உய்விக்கும் வேண்டுமப்பா
அண்மையிலே வருவாயோ ஒளிக்கதிரை தருவாயோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

864. என்னவென்று உரைப்பது உன்மனதை பெறுவதற்கு
மன்னுபுகழ் உடையவனே மருதீசப் பெருமானே
அன்புடனே அழைத்தாலே அரவணைத்துக் கொள்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

865. மலையினிலே வாழ்ந்திடுவாய் மனக்கதவை திறந்திடுவாய்
மலைபோல வந்துயர் பனிபோல நீக்கிடுவாய்
கலையார்வம் கொண்டவனே அம்பலத்தில் ஆடுகின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

866. இடர்இல்லா வாழ்வுதனை நாளும் தருபவனே
தடுமாறி செல்லுகின்ற பிள்ளையதை காணாயோ
அடம்பிடிக்கும் குழந்தையென மாற்றமதை மாற்றிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

867. காட்டாற்று வெள்ளமென கரைபுரண்டு ஓடுமப்பா உந்தன்அன்பு
பாட்டாலே மகிழ்விப்பேன் மனங்குளிர வரவேண்டும்
கட்டுண்டு நிற்கவேண்டும் என்அன்பு மொழிகேட்டு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

868.கேட்டவரம் தந்திடுவாய் வேண்டிநித்தம் கேட்டிடுவேன்
பட்டதுயர் தீர்ப்பவனே வெஞ்சுடரை அணிந்தவனே
இட்டஅடிபார்த்துநிற்பாய் வெண்மதியாய் ஒளிர்ந்திருவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

869.உள்ளமதில் கோவில் கொண்ட சிற்பசபையின் நாதா
கள்ளமில்லா உன்மனதில் குடியிருப்பேன் நாள்தோறும்
தள்ளாது வந்திடுவாய் வளம்சிறக்க வாழ்த்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

870. வெண்முகிலாய் வருபவனே இணையில்லா குறுமுனியே
மண்ணில் உள்ள உயிரனைத்தும் உன்ஒளியால் வழிபெறுவர்
கண்ணொளியாய் மண்ணுலகை மாண்புறவே செய்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

871.புனல் போல வந்திடுவாய் பக்தர்துயர் தீர்த்திடுவாய்
அனல்மேலே நிற்கின்றாய் குளிரூற்றை தந்திடுவாய்
மனமதனை மகிழ்விப்பாய் தென்றலென வந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

872. அடிபணிவேன் உன்தாழினையை என்மனதை அறியுமப்பா
இடிஇடிக்கும் ஓசையிலே மின்னொளியாய் வந்திடுவாய்
மடிநிறைத்து தரவேண்டும் மனமிரங்கி வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

873. கொந்தலிக்கும் உள்ளமதை குளிர்விக்கசெய்பவனே
தந்தையாக வந்திடுவாய் எனக்கு கருணை காட்டிடுவாய்
நாளை வகுத்திடுவாய் எந்தன்மனம் நிறைவதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

874. தாயுமானவே என்னுயிரே ஏங்கிநிற்பேன் உனைக்கான
காயுமாய் கனியுமாய் அனைத்திலுமாய் நிறைந்தவனே
சேயுமாய் சிந்தனையாய் உன்னருகில் வந்துநிற்பேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

875. உறைகின்ற உன்னிடத்தில் ஏங்கி நிற்கும் எந்தன்மனம்
மறையாது உன்நினைவு தேயாது என்மனது
குறைகாண முடியாத முடிவில்லா ஆண்டவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

876.குருவாக எனக்கு நல்வார்த்தை அருளவேண்டும்
தருநிழலாய் உனைநினைத்து உன்னிடமே ஓய்வெடுப்பேன்
இருள்நீக்கி ஒளிவெள்ளம் உன்னருளால் காணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

877. உள்ளம் நிறைந்தவனே எந்தனுயிர் பரம்பொருளே
வள்ளல் பெருங்குணத்தால் வளம் சிறக்க தருகின்றாய்
உள்ளுவது உந்தன் மனம் தள்ளாது தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

878. தெய்வமென வரவேண்டும் கண்ணெடுத்து பார்க்கவேண்டும்
ஆய்ந்தறிந்து பார்க்காது என்மனதை அறியுமப்பா
உய்வதற்கு உந்தன் மொழீ ஓர் அசைவால் தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

879. படுகின்ற துயர் அனைத்தும் உன் அசைவால் வந்ததப்பா
விடுபடும் வழியதனை உன்நாவசைவால் காட்டுமப்பா
தடுக்கவேண்டும் துயரனைத்தும் மீட்டவேண்டும் உன்னொளியால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

880. பற்றுகலால் பற்றுகின்றேன் உன்பதத்தை எந்நாளும்
உற்றதுணை நீயன்றி எவர் உள்ளார் என்மனத்தில்
ஆற்றுவதர்க்கு உன்மனது பாராமல் செல்லாதே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

881. நுண்ணுணர்வாய் என்மனத்தில் என்றோ புகுந்துவிட்டாய்
ஆண்டவனே உனைக்காண என்மனமும் ஏங்குதப்பா
தண்டனையை தவிர்த்துவிடு வழித்துணையாய் வந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

882. மனச்சுமையை இறக்கிவைக்க உன்மனதே சுமைதாங்கி
ஈனப்பிறவியென உன்மனது சொல்லியதேன்
தானமாக தந்திடுவாய் ஐம்புலனை மீட்டிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

883. கற்சிலையாய் நின்றாலும் கனிந்துருகி வந்திடுவாய்
அற்பனென்று நினைத்து என்னை தள்ளவேண்டாம் உன்மனதில்
ஆற்றுநீராய் வந்துயர் உன்னசைவால் ஓடிவிடும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

884. புலித்தோலை அணிந்தவனே முதல் அடி அற்றவனே
நலிந்து நிற்கும் அடியவரை கண்போல் காப்பவனே
கலியுகத்தை காப்பவனே என்மனதை அறிந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

885. சடைமுடியாய் அலைபவனே ஆனந்தக் கூத்து ஆடுகின்றாய்
விடைதரும் நாளை கேட்டு ஏங்கி நிற்கின்றேன்
தடை ஏதும் சொல்லவேண்டும் அருவேண்டும் ஆசிகளை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

886. நந்திதனை சித்தனாக்கி உன்முன்னே கைக்கொண்டாய்
எந்நாளும் வணங்குகின்ற எந்தன்முகம் நோக்காயோ
வந்துநிற்பாய் குழந்தைமுன்னே பிஞ்சு விரலை மீட்டிநிற்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

887. பெண்தனக்கு பாகம் தந்தாய் உமை உரிமை கொடுத்துவிட்டாய்
கண்முன்னே வரவேண்டும் ஒளிப்பார்வை தரவேண்டும்
வேண்டுதலை கேட்டுநிற்பாய் பதிலதனை தந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

888. கைப்பிள்ளை காணவேண்டும் உன்முன்னே நிற்கவேண்டும்
கைப்பிடித்து வரவேண்டும் கால்நடையை தரவேண்டும்
அப்பனாக வந்துநீயும் அவன்குறையை தீர்க்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

889.உங்கை அடைக்கலமென வருபவரை வாழ வைப்பாய்
எங்கெங்கும் நிறைந்திருப்பாய் நிறைவு தரவந்திடுவாய்
தங்குமிடம் உன்மனமே நல்லுணர்வை தந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

890. உன்மன்றத்தில் வழக்குரைப்பேன் நல்தீர்ப்பதனை தரவேண்டும்
என்குறையை கேட்டுநீயும் தீர்ப்பதனை வழங்கவேண்டும்
உன்கையில் ஒப்படைப்பேன் பிள்ளைதனை பேணவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

891. என்னசொல்லி உரைக்க வேண்டும் உன்அன்பை பெறுவதற்கு
தன்னிலையை மறந்த செல்வம் உணர்வுதனை பெறவேண்டும்
அன்னமென வந்திடுவாய் வேண்டுதலை காத்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

892. ஓய்ந்துவிட்டேன் உனை அழைத்து ஒதுக்கிவிட்டாய் என் உணர்வை
சாய்வதற்கு உன்தோள்கள் மீட்பதற்கு உன் நாமம்
ஓய்வெடுக்க உன்மனது நலம்காண உன்பதங்கள்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

893. வழித்துணையாய் வரவேண்டும் வல்வினையை நீக்கவேண்டும்
பழித்துயரை தீர்த்துவிடு விடுகதையை தீர்த்துவிடு
செழித்துயர்ந்து நிற்பவனே விண்முகிலாய் வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

894. அருமையாக பிறந்தபிள்ளை உன்அரவணைப்புக்கு ஏங்குதப்பா
தருவதற்கு மறுக்காதே அணிகலனாய் நாகமதை அணிந்தவனே
உருவாக அருவாக எங்கெங்கும் நிறைந்தவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

895. இடபம் அதைவாகனமாய் அண்டமெங்கும் அலைபவனே
ஊடகத்தே ஊடுருவிச் செல்லும் உனை எங்குநின்று காண்பேனோ
தடைமாறிச் செல்லும்வாழ்வு உன்னருளாளல் தழைத்தோங்கும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

896. கடவுள் என உனைக்கூறி வணங்கினாலும் பெற்றவளே நீயப்பா
இடவேண்டும் கட்டளையை தரவேண்டும் பிணி நீக்கி
ஆடவரசே மகவுதன்னை பயமுறுத்தி உளதன்னை அளிக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

897.தேடித்திரிகின்றேன் காலடியில் பணிவதற்கு
ஓடிஉனை பார்க்கின்றேன் காணாது மறைகின்றாய்
சேவடியாக எனை நினைத்து பணிவிடைகள் செய்திடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

898.பெற்றவள் நீயிருக்க மற்றதுணை தேவையில்லை
பற்றற்ற முனிவனாய் கடுந்தவங்கள் செய்திடுவாய்
பெற்றது போதும் எனமகவுதனை மறக்காதே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

899. கற்றது ஏதும் இல்லை உற்றதுணை யாருமில்லை
ஏற்றுநிற்பாய் குழந்தைதன்னை உன்தயவை தந்திடுவாய்
பற்றதுணை நீயென்று உன்மனதை பற்றிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

900. இல்லையொன்று சொல்லிடாதே அரற்றுகின்றேன் உன்மடியில்
அல்லிக்காகவடுத்து நடக்கவில்லை குரல் இருந்தும் எழும்பவில்லை
ஒலியதனை மறுத்துவிட்டாய் ஒளியதனை மறைத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

901. தேடிய விழுச்செல்வம் எந்தனுயிர் காவியம்
ஆடிநிற்கும் அருட்செல்வம் பார்த்துநிற்கும் கருணைஉள்ளம்
ஓடிவரும் பெருந்தெய்வம் எனை ஆளும் ஒளிப்பிம்பம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

902. வெண்முகிலில் வந்திடுவாய் ஒளிகாட்டதந்திடுவாய்
தண்ணொளியை தருவதற்கு வெண்மதியாய் வந்திடுவாய்
விண்ணுயிரை வாழவைக்க விடமதனை தேக்கிநிற்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

903. சங்குநிறம் கொண்டவனே சமயமதை வளர்ப்பவனே
உங்கழுத்தில் பாம்புண்டு விடமதனை ஏற்றுநிற்பாய்
தங்கநிற மலையுண்டு தகிக்கவைப்பாய் வெப்பத்தால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

904.நல்லமொழி தருபவனே சடைமுடியை கொண்டவனே
பல்லுயிரை காப்பவனே வெண்மதியை அணிந்தவனே
கல்லாக நிற்காமல் கன்னல் மொழில் தருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

905. அனைத்துயிடும் அன்புகொள தானிறங்கி வருபவனே
எனை ஆளும் ஆண்டவனே அன்புசெய வருபவனே
உனை வேண்டி வருவோரை கைநீட்டி அணைப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

906. மலிந்து நிற்கும் துன்பமெல்லாம் நீங்கிவிடும் உந்தன்ஒளி காண்பதால்
ஒலிக்கின்ற கடலோசை நின்றுவிடும் உந்தன் கண்அசைவால்
சலித்து ஏங்கும் மனதெல்லாம் தெளிவுபெறும் உன்நாமத்தால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

907. இமைப்பொழுதும் எனை நீங்கா உந்தன் உருவரவேண்டும்
உமைவேண்டி அழைக்கின்ற சிறியவனை காணவேண்டும்
எமை ஆளும் ஆண்டவனே நலம்காண வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

908. எந்தையாக வந்துநீயும் எமக்கருள வேண்டுமப்பா
சிந்தையதில் வந்துநீயும் எனை ஆள வேண்டுமப்பா
விந்தையதை தந்துநீயும் எனை தேற்றவேண்டுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

909. இதயமதின் தாமரையே உதயமாவது எந்நாளோ
ஈதலே உன் கொள்கையப்பா இரங்குவது எந்நாளோ
ஓதவேண்டும் உன்நாமம் இறங்குவது எந்நாளோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

910. உதயமாவாய் பகலவனாய் வருகின்றாய் இரவியாக
பதமாக உரைத்திடுவாய் அம்பலத்தில் ஆடிடுவாய்
இதமாக எடுத்துரைப்பாய் நல்லுயிரை காத்துநிற்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

911. சுழல் காற்றாய் வந்திடுவாய் தென்றலாக வீசிடுவாய்
மழலை மொழி பேசிடுவாய் கொன்றைமலர் சூடிடுவாய்
பழம் போல இனித்திருவாய் வில்வமரம் வீற்றிருப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

912. அள்ளித்தருவதில் வள்ளலப்பா கொடை உந்தன் செய்கையப்பா
தள்ளாது குறைகேட்பாய் கேட்டுநீயும் தீர்த்து வைப்பாய்
கோள்களெல்லாம் அசையுமப்பா உந்தன் அசைவு கண்டதனால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

913. வற்றாத ஊற்று நீ பாகாக இனித்திடுவாய்
பெற்ற துயர் தீர்ப்பதற்கு மனமிரங்கி வந்திடுவாய்
ஆற்றுகின்றாய் மருந்தாக மக்கள் துயர் தீர்க்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

914. வண்டுமொய்க்கும் மலர்களிலே வாசமாக இருப்பவனே
பண்ணெடுத்து பாடுகின்ற நாவசைவால் நாதமப்பா
காண்கின்ற காட்சியிலே எழில் கொஞ்சும் இயற்கையப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

915. மாசில்லா பரம்பொருளே மலர்ந்து நிற்கும் மாமணியே
கசிந்துருகம் குணக்குன்றே எந்தனுயிர் மாமறையே
நேசிக்கும் தனிப்பொருளே விரிந்து நிற்கும் தூமணியே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

916. குருவாக வந்து மனக்கதவை திறப்பவனே
உருமாறிவந்து மனத்துயரை தீர்ப்பவனே
அருவமென வந்துநீயும் மனச்சுமையை ஏற்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

917. உன்னருகே காண்பதற்கு முறைதந்தை உரைக்கவேண்டும்
தன்னுயிராய் நினைக்காது வேற்றமுகம் காட்டவதேன்
உன்நினைவால் ஏங்கிநிற்கும் என்மனதை சிதைக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

918. பெற்றவனாய் நினைக்கவில்லை மனத்துயரை வளர்க்கின்றாய்
ஆற்றவேண்டிய உன்மனது பாரமதை ஏற்றியதேன்
பற்றி நிற்க ஊன்றுகோலாய் வாராது இருப்பதென்ன
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

919. தடுமாறி நிற்கும் உளற்ளம் தடமாற்றி வைத்துவிட்டாய்
உடுக்கையதை கையில்கொண்டு வெறுங்கையால் அனுப்பிவிட்டாய்
அடுக்குமா உந்தனருகே எண்ணற்ற பிணிகள் தந்தாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

920. வாட்டுகின்ற உள்ளமதை மனம் நிறைவாய் தந்துவிட்டாய்
ஆட்டுகின்றாய் இல்லமதை ஈரமில்லா மனத்தோடு
காட்டவில்லை உன்னருளை கடும்துயரை காட்டிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

921.வந்ததுயர் சேர்க்கின்றேன் இரங்காதோ உந்தன்மனம்
எந்தையாய் காணவில்லை வரும்துயரை தீர்க்கவில்லை
உந்நாவை அசைக்கவில்லை நல்வார்த்தை தரவில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

922. பட்டபாடு கொஞ்சமில்லை இரங்கவில்லை உன்மனது
மட்டற்ற மனத்துயரை மறவாது தந்துவிட்டாய்
இட்டதுயர் மாறுமுன்னே இன்னல்களை அளிக்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

923. பாலகனை கண்ணுற்றால் பேய்கூட மனமிரங்கும்
உலகளக்கும் உன்மனது மூடியதேன் சொல்லப்பா
கோலமதை சிதைக்கின்றாய் காணல்நீராய் ஆக்குகின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

924.பழிப்பெயரை சூட்டிக் கொண்டாய் எனைவிட்டு சென்றுவிட்டாய்
அழியாத உன்உருவம் ஒளிந்ததெங்கே சொல்லப்பா
கழித்துவிட்டாய் வேண்டுகோளை தனித்துவிட்டாய் குழந்தைதனை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

925. நம்பிக்கை அழித்துவிட்டாய் எங்கேயோ மறைந்துவிட்டாய்
அம்மா என்றழைத்தபோதும் ஓடிவிட்டாய் விலக்கி என்னை
உம்மருளை பெறுவதற்கு ஏங்கிநின்ற என்மனதை ஒதுக்கிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

926.தருவதற்கு இனித்துயரம் இல்லையென்று சொல்லிவிட்டாய்
வருகின்ற மனத்துயரை மாற்றாது அலைகின்றாய்
அருகினிலே வாராது தூரத்தில் சென்றுவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

927. வெந்தபுண்ணில் பாய்ச்சிவிட்டாய் வேதனையை தந்துநீயும்
தந்ததுயர் தீரவில்லை வரும்துயரை மாற்றவில்லை
வந்து நீபாராமல் வழீப்போக்காய் சென்றுவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

928. மகவுதன்னை தந்தநீயும் மனக்குறையை விட்டுவிட்டாய்
அகம்நோக்கி வந்துநீயும் பிணியதனை கூட்டுகின்றாய்
சோகமதை தந்துவிட்டு மனம்நிறைந்து செல்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

929. விட்டுவிட்டாய் பாலகனை தள்ளிவிட்டாய் படுகுழியில்
இட்டதுயர் போதவில்லை அளிக்கின்றாய் மறுதுயரை
கட்டவிழ்த்தாய் சோதனையை அவுதியுனும் பிள்ளையின்மேல்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

930. என்னதுயர் செய்தேன் நான் ஏனிந்த சோதனை
இன்னல்களை தந்துநீயும் விடுத்ததென்ன பாலகனை
உன்பதத்தை சரணடைந்த என்மனதை உதைத்தென்ன
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

931. பற்றவந்தேன் காலடியை விட்டுவிட்டாய் என்நினைவை
உற்றதுணை நீயென்று வந்த என்னை ஒதுக்கிவிட்டாய்
காற்றுப்போல் விரைந்து வரும் உன்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

932. தீயிலிட்ட புழுவாக துடிக்கும் ஓசை மறந்துவிட்டாய்
உயிர்தன்னை விட்டுவிட்டு உடல் எல்லாம் துளைபோட்டாய்
கோயிலில் வீற்றிருக்கும் உன்மனதும் உறைந்துள்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

933. புழுவாக இருந்திடினும் ஊர்ந்து செல்ல வழிதந்தாய்
அழுகின்ற எந்தன் உள்ளம் கரைக்கவில்லை உன்மனதை
பழுக்கக் காய்ச்சிய கம்பியினால் சுட்டுவிட்டாய் வெந்து
நிற்பதுஎன்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

934. மரத்துநிற்கும் உணர்வுதனை மறுத்துவிட்டாய் மீட்டுதற்கு
உரத்து உரைத்தும் ஒலிமறுத்தாய் விட்டுவிட்டாய் உன்கரத்தை
இரந்து உன்னை அழைத்தாலும் காணாமல் செல்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

935. தள்ளிவிட்டாய் என்குறையை விட்டுவிட்டாய் உணர்வுதனை
உள்ளுணர்வை தள்ளிவிட்டாய் என்உணர்வை பகைக்கின்றாய்
எள்ளி நகையாடிவிட்டாய் வாழ்வுதனை நடுஞ் கலைத்தாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

936. பட்டதுயர் கொஞ்சமில்லை சுமை இறக்க வழியுமில்லை
இட்டுவிட்டாய் துயரனைத்தும் நாவுதனை தந்துவிட்டாய்
கட்டவிழ்த்தாய் துயரனைத்தும் விட்டுவிட்டாய் பசுந்துளிரை

நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

937. பெருகி வந்த விழிநீரும் சேர்ந்து நிற்கும் குளமாக
அருகினிலே வாராது தொலைதூரம் சென்றுவிட்டாய்
கருவிழியில் ஒளியில்லை குரலெழுப்ப ஒலியில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

938. பாலகன் அவன் படும்துயரை காண்பதற்கு பொறுக்கவில்லை
கலகமதை செய்துவிட்டாய் விழிநீரை துடைக்க விட்டாய்
மலராக வாராது முட்டிதரை காட்டிவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

939. தேடிநின்ற உன்பதத்தை பாதத்தால் நசுக்கிவிட்டாய்
வாடிநிற்கும் பைந்தளிரை வாடவிட்டு காணலாமோ
பாடி உனை அழைப்பதற்கு தருகி இல்லை என்னிடமே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

940. நினைத்துருகி உன்பதத்தை தொழுதஎன்னை பார்க்கவில்லை
அனைத்துயிரும் உன்னாலே துளிர்த்தெழுந்து வளர்ந்திடுமே
பனைத் துயர்ந்த துன்பம்கூட உன் அசைவால் மாறிவிடும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

941. தவிக்கின்ற என்மனதை அறியாமல் செல்கின்றாய்
பாவி என எனைநினைத்து பாராமல் திரிகின்றாய்
ஈவிரக்கம் காட்டவில்லை உன்வழியே செல்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

942. விண்மீனாய் ஒளிர்பவனே வீற்றிடுப்பாய் நாயகனாய்
அண்டமெல்லாம் உன்வசமே ஒளிபிழம்பாய் தெரிபவனே

பண்பாடும் நெஞ்சமதை அன்பாலே வருடிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

943. கட்டவிழ்த்தாய் என்மனதை கவர்ந்துவிட்டாய் உன்மனதை
தொட்டுவிட்டாய் இதயமதை என்மனதில் புகுந்துவிட்டாய்
விட்டுவிட மனதில்லை ஏங்கிநிற்பேன் உனைக்காண
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

944. பிடிக்கின்றேன் உன்பதத்தை தொழுதிடுவேன் உன்பாதத்தை
ஆடிநிற்பாய் சிதம்பரத்தில் இடமதில் வந்திடுவாய் மேருமலை மீது
தேடி உன்னை அலைத்திடுவேன் தெவிட்டாத தீங்கனியே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

945. வேண்டிநிற்கும் அடியவரை அன்பாலே அணைத்திடுவாய்
அன்புவந்து நிற்பவர்க்கு உன்றிழலை தந்திடுவாய்
மண்டியிட்டு வணங்கிநிற்பேன் உன்பதத்தை காண்பதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

946. கரைசேர்ப்பாய் உள்ளமதில் பெருமுனியாய் வந்திடுவாய்
அரை ஆடை அணிந்துநிற்பாய் புலித்தோலை உடுத்திடுவாய்
இரை கேட்டுவந்து நிற்கும் எளியவரை தூக்கி நிற்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

947. பாட்டுடைத் தெய்வமாக மறைநூலில் விளங்கிடுவாய்
ஏட்டதனில் உனைப்பாடி திருமுறையாய் தந்துநிற்பர்
வெட்ட வெளி உன்வீடு தேடிநிற்பாய் என்வீடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

948. ஆட்டுவிப்பாய் அனைத்துயிரை அரவணைக்கும் அன்பினாலே
காட்டிநிற்பாய் உன்உருவை களிஉவகை கொண்டுநீயும்

மட்டற்ற தீஞ்சுவையே உன்னருமை யார்அறிவார்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

949. வெண்ணிலவின் ஒளிநீயே வீசும் காற்றில் தென்றல் நீயே
கண்ணின் கருவிழி நீயே பாட்டுக்கு பண்நீயே
வண்ணமலர் நீயப்பா நேசமுள்ள அருள்நீயே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

950. காண்பதற்கு பெருவிருந்தே அன்பு மயமானவனே
வேண்டுகின்ற வரமனைத்தும் நொடிப்பொழுதில் தருபவனே
அண்டிவரும் அடியவர்க்கு பெருந்தகையாய் வருபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

951. மனத்தில் நிற்கும் அசைவுகளை அவையறிந்து பார்ப்பவனே
கனலாக வாராது கன்னலென வந்திடுவாய்
புனல்போல உன் கருணை ஊற்றுநீர் உன் உள்ளம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

952. தெய்வமாக வந்துநின்று திருவுருவை காட்டிடுவாய்
மெய்அன்பு காட்டிஉந்தன் காலடியை பணிகின்றேன்
ஆய்ந்தறியும் உள்ளம்கொண்டு அனைத்துயிரை காப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

953. ஓடிஉன்னை வேண்டுவோர்க்கு அன்புதனை தருபவனே
அடியெடுத்து வந்திடுவாய் வரும்துயரை நீக்கிடுவாய்
ஈடில்லா உன்னழகை இயம்புதற்கோர் வார்த்தையில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

954. வாடுகின்ற உள்ளமதை மனம்குளிரச் செய்பவனே
தேடுகின்ற உள்ளமதை பார்த்துநிற்கும் பரமசிவன்

ஆடுகின்ற உன்னழகை தேடுகின்றேன் எந்நாளும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

955. புனல்நீரை அணிந்தவனே எந்தனுயிர் காவலனே
அனல்மீது அமர்ந்திடினும் குளிர்நீரை அணிந்தவனே
கனலாக இருக்கும் உள்ளம் கனிவரும் உன் அசைவாலே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

956. கொன்றைமலர் சூடிநித்தம் தேடிநிற்பாய் அடியவர்களை
மூன்று கண்கள் இருப்பதனால் ஒளிக்கதிரை வீசுகின்றாய்
அன்பினாலே அரவணைப்பாய் ஆதரவை தந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

957. சங்கு உந்தன் உள்ளமப்பா அறிந்துதரும் அன்னையப்பா
தங்கு தடையில்லயப்பா உன்அன்பை பெறுவதற்கு
பொங்கிநிற்கும் உன்கருணை பாய்ந்து செல்லும் தன்மையப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

958. வீசுகின்றாய் தென்றலாக பாய்கின்றாய் அருவியாக
மாசுநீக்கும் பண்பதனை உன்உள்ளம் காட்டுமப்பா
தலைத்தேடும் கன்றாக உன்னைநாடும் எளியனப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

959. ஆலமதை கழுத்தில்வைத்து கன்னலதை தருகின்றாய்
கலமாக வந்துநின்று வழித்துணையாய் காத்திடுவாய்
காலமெல்லாம் உன்மடியில் வீழ்ந்துநிற்கும் ஏழையப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

960. வன்னிமரம் வேண்டிநின்று தவமிருப்பாய் பித்தனாக
கொன்றைமலர் விரும்பிநீயும் அணிந்துநிற்பாய் உறைவிடத்தில்

அன்றலர்ந்த மலராக விரிந்து நிற்பாய் என்மனத்தில்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

961. இயற்கை உந்தன் காலடியில் மணம்பரப்பும் உன்மடியில்
தயக்கம் இன்றி வந்திடுவாய் தயவு கூர்ந்து அருளிடுவாய்
இயக்கம் அதை தந்திடுவாய் உன்பதத்தை பற்றியதால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

962. வெட்ட வெளி பித்தனாக உலவிடுவாய் நள்ளிரவில்
இட்டதுயர் நீக்கிவிடுவாய் உன் அடியை நாடிவிட்டால்
பட்டமரம் துளிர்த்திடுமே உன்கண்ணசைவை கண்டதனால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

963. உனைக்காண வருபவரை கனிவாயால் வாழ்த்திடுவாய்
மனை எங்குமு உன்புகழ்நாமம் நாளும் ஒலித்திடுமே
எனை ஆளும் ஆண்டவனே உன்கருணை என்றுகாண்பேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

964.விண்முகிலில் வந்திடுவாய் உன்எழிலை காட்டிடுவாய்
அண்டமெல்லாம் உன்நிழலில் உறங்குதப்பா உன்வழியில்
ஆண்டவனே உன்கருணை மழையாக பொழியுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

965. அன்னையுமாய் அப்பனுமாய் நின்னருளை தந்திடுவாய்
உன்னையன்றி வேறுகதி எந்தனுக்கு இல்லையப்பா
இன்னவகை இல்லாது உன்கருணை காட்டிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

966. பட்டதுயர் தீர்த்திடுவாய் பழங்கனைக்கை மாற்றிடுவாய்
தட்டாமல் வந்திடுவாய் பனிபோல உருகிடுவாய்

இட்டகுறை மறைத்திடுவாய் வான்போல உயர்ந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

967. கன்றுமுட்டும் பசுவைப்போல் உந்தனிடம் ஓடிவந்தேன்
இன்னுயிரும் நீதானே வரும்துயரை துடைப்பவனே
சான்றோனாய் மாற்றிடுவாய் படும்துயரை அறிந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

968. பித்தனாக அலைந்தாலும் பெற்றவனாய் வந்துநிற்பாய்
தத்தளிக்கும் என்மனதை கரையேற்றி சேர்த்திடுவாய்
அத்தனையும் உன்தனக்கே சமர்ப்பிபேன் என்குறையை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

969. அலைக்கழிக்கும் என்மனதை ஆற்றவேண்டும் உன்னருளால்
மலைமீது ஜோதியாய் ஒளி வெள்ளம் தந்திடுவாய்
கலைக்கோயில் நீயப்பா கடுத்தவத்தை கலைத்திடுப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

970. ஒளிவேண்டும் உன்னருளால் ஒலிவேண்டும் உன்தயவால்
அளிக்கவேண்டும் நடையதனை தரவேண்டும் உணர்வுகளை
கனிஉவகை கொள்ளவேண்டும் பாலகனின் மாற்றம்கண்டு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

971. பற்றிடுவேன் உன்கரத்தை நழுவாமல் வந்துவிடு
ஆற்றவேண்டும் என்மனதை அருளவேண்டும் உன்மனத்தால்
தேற்றவேண்டும் மகவுதன்னை வாய்திறந்து பகரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

972. சடைமுடியை கொண்டவனே பிறையதனை அணிந்தவனே
அடைகாக்கும் பறவைபோல் பாலகனை காத்திடுவாய்

தடைஏதும் சொல்லாதே மறுக்காமல் வந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

973. என்குறையை சொல்வதற்கு உனையன்றி யாருமில்லை
உன்னிடமே முறையிடுவேன் எனையாளும் ஆண்டவனே
அன்னையென உன்மடியில் புகலிடமாய் வந்திடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

974. தாயடித்தால் தந்தை அணைப்பர் நீயடித்தால் யார் அணைப்பர்
நேயமுடன் உன்முன்னே வந்துநிற்கும் பேதையப்பா
காயம்பட்ட நெஞ்சோடு கதறுகின்றேன் உன்முன்னே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

975. இரங்காதோ உன்மனது தயங்குவதேன் பொருளென்ன
சிரம் கூப்பி வணங்குகின்றேன் அன்னையென அழைக்கின்றேன்
பாரமாக நினைத்துவிட்டால் ஒதுக்கிவிடு என்மனக்குறையை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

976. கேலி பண்ணும் மனிதர் முன்னே பாவியாக மாற்றிவிட்டாய்
பலி ஆடாய் ஆக்கிவிட்டாய் பாலகனை வீழ்த்திவிட்டாய்
சலித்துவிட்டது உன்மனது விட்டுவிட்டாய் என்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

977. இரக்கம் கொள்ளும் என்மனதை இரத்தம் கசிய செய்துவிட்டாய்
ஈரம் இன்றி உன்மனதை கல்லாக மாற்றிவிட்டாய்
பரம்பொருளே நீயென்று உன்பாதம் பணிகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

978. நினைவெல்லாம் உன்உருவே தெரிந்து நிற்பது உன்பதமே
அனைத்துயிரை காப்பவனே அண்டமெல்லாம் நிறைந்தவனே

மனைக்கு நீயும் வந்தருளி காக்கவேண்டும் உன்வரத்தால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

979. சுட்டுவிட்டாய் மனமதனை ஆற்றவில்லை மனமிறங்கி
ஆட்டுவிக்கும் உன்மனதை தொட்டுப்பார்க்க விடவில்லை
விட்டுவிட்டாய் என்கரத்தை மறுக்கின்றாய் தருவதற்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

980. உனைப்பிடிப்பேன் கெஞ்சிநின்று வரமறுத்தால் வேண்டிநிற்பேன்
அனைத்துயிர்க்கும் அன்னையென வந்தருளும் அழகேசா
உனையின்றி வேறுதுணை யாருமில்லை என்மனமாற்ற
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

981. அண்டமதில் ஊடுருவி எங்கும் நிறைந்து நிற்பாய்
தண்டமென எனைநினைத்து வரமறுத்து நீ நிற்பாய்
கண்டமதில் விட வைத்து நெஞ்சமதில் உமை வைத்தாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

982. உமையவளே அன்னையென பரிந்துரைக்க உன்னருளை நாடிநிற்பேன்
இமையெனவே வந்துநின்று பாலகனை காக்கவேண்டும்
உமைகாக்கும் ஈசனிடம் வரம்கேட்டு தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

983. உமையொருபாகனே பெண்மனதை அறிந்து நிற்பாய்
எமை கண்டு இரங்கிநீயும் வரமதனை தந்திடப்பா
அமைதி காத்து நிற்கின்றாய் விடைபெறுவது எந்நாளோ
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

984. வேதனையை விளங்கவைக்க வார்த்தை இனி ஏதுமில்லை
ஆதரவை தாராது ஆட்கொண்டாய் என்மனதை

இதமனைத்து மறுத்துவிட்டாய் கருவறையில் நிற்கின்றாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

985. நசுக்கிவிட்டாய் இன்பமதை குடிவைத்தாய் வேதனையை
பசுமையாக இருந்த உள்ளம் கொந்தளிக்கும் கடலானதே
பேசுவதற்கு வார்த்தையில்லை உரைப்பதற்கு ஒலியுமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

986. உள்ளே கருவறையில் பதுமையாக வீற்றிடுப்பாய்
அள்ளித்தரும் சுரங்கமென உன்மனதை திறந்துவைப்பாய்
உள்ளிருந்து காத்திருப்பாய் இதமாக வந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

987. வெளியே நின்றென்உள்ளம் உன்முகத்தை காணுதப்பா
அளித்திடுவாய் நல்வரத்தை காத்திருவாய் பாலகனை
ஒளிவடிவாய் திகழ்பவனே வெணமதியாய் தெரிபவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

988. பரந்த வெளிசந்தன் இடம் பரம்பொருளாய் வந்திடுவாய்
இரந்து உன்னை வேண்டுவோர்க்கு மனமுவந்து தருபவனே
கரம்கூப்பி நிற்பவரை கைதூக்கி எழுப்பிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

989. பாதுகாவல் உன்உளமே என்மனமே உந்தனிடம்
ஓதுவது எந்தன்மனம் கரம்கூப்பி வணங்கிடுவேன்
தீது என நினைப்பவற்றை உன்விழியால் சுட்டிவிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

990. மூலப்பொருளாய் விளங்கிநிற்பாய் எழில்உருவம் காட்டிநிற்பாய்
தலமனைத்தும் உன்சொந்தம் உன்மனமே என்சொர்க்கம்

உலகனைத்தும் உன்னடியில் ஏங்கிநிற்பேன் உன்மடியில்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

991. தூரமாக நிற்கின்றாய் வெகுதொலைவில் செல்கின்றாய்
பாரமாக நினைக்காதே பரம்பொருளே வந்திடுப்பா
சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன் உயர்த்தவேண்டும் உன்கரங்கள்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

992. வடிவம் பலஎடுத்திடுவாய் அடியவர்க்கு காட்டிடுவாய்
விடியலை நீகாட்ட வேண்டும் மனமிறங்கி வரவேண்டும்
படிக்கவில்லை உன்மனதை பதியவில்லை உன்மனது
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

993. நகர்கின்ற பொருளனைத்தும் உன்காலடியில் வீழ்ந்துவிடும்
பகரவேண்டும் ஓர்வார்த்தை மனமிறங்கி வரவேண்டும்
போகிநினைக்கும் உன்மனது தடுத்துநிற்கும் பாலகனின்முகம் கண்டு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

994. எல்லா உயிரும் உன்நிழலில் காத்துநிற்கும்
பல்லுயிரை காத்திடுவாய் நலம்பலவும் செய்திடுவாய்
கல்லாக சமைந்திடினும் உன்மனமும் உருகிடுமே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

995. புகட்டிடுவாய் நல்லுணர்வை நாளும் எமை காத்திடுவாய்
அகமதிலே வந்திடுவாய் வெகுமதியை தந்திடுவாய்
பாகமே உமையவயை ஓர்பாதி கொண்டவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

996. வளமான வாழ்வுதனை பாலகனிடம் காட்டுமப்பா
இளகவேண்டும் உன்மனது பாகாக உருகவேண்டும்

களமிறங்கி வந்திடுவாய் மனதிறங்கி செய்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

997. சர்வசக்தி உந்தனிடம் தேடிநிற்பேன் உன்னிடமே
ஈர்க்கின்றாய் காந்தமென இரும்பாக வந்திடுவேன்
பார்க்கவேண்டும் உன்அசைவால் மகவுகுறை தீரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

998. புண்பட்ட நெஞ்சமது தத்தளிக்குது நடுக்கடலில்
காண்பதற்கு ஒளியில்லை எடுத்துச்சொல்ல குரலில்லை
அண்மையிலே வந்துநீயும் ஆதரவை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

999. அவதியுறும் மனம் எனக்கு தந்துவிட்டாய் கருணையின்றி
ஆவது உன்னாலே நோய்தீர்க்கும் மருத்துவனே
இவன் இன்றி ஓர் அணுவும் அசையாது என்றுரைப்பர்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1000. மருத்துவனாய் வரவேண்டும் பிணிதீர்க்கும் மருந்தொன்று தரவேண்டும்
அருமருந்தை தந்துநீயும் ஆற்றவேண்டும் கடமைதனை
ஆருயிரும் நீயப்பா அன்புமொழி தருகின்றாய் வளமதனை தந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1001. நிம்மதியை தேடுகின்றேன் உன்கண்ணசைவால் மலருகின்றேன்
அம்மையென அழைத்திடுவேன் ஆண்டவனாய் தொழுதிடுவேன்
உம்மைவேண்டி அழைக்கின்றேன் வந்திடுப்பா மனமிறங்கி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1002. நெஞ்சமதில் உன்னைவைத்தேன் மனம்நிறைய வந்திடுவாய்
தஞ்சமென்று வரும் என்னை உன்கரத்தால் காத்திடுவாய்

வஞ்சமேதும் இல்லையப்பா நலவாழ்வை வளர்த்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1003. தாள்தனை வணங்கிடுவேன் கரம்கூப்பி தொழுதிடுவேன்
ஆளவைக்கும் உந்தன்குணம் தேடிநிற்கும் எந்தன்மனம்
இளகுவாக வந்திடுவாய் என்கரத்தை பிடித்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1004. இமைகாக்கும் விழிபோல என்மனதை காத்திடுவாய்
உமை ஓர்பாகம் கொண்டு மதியதனை தலையில் வைத்தாய்
உமை வணங்கும் எளியவரை கைதூக்கி ஏற்றிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1005. வாழவைப்பாய் பாலகனை வழித்துணையை தந்திடுவாய்
ஆழம் தான் உன்மனது அதைக்காணும் என்மனது
உழவேண்டும் உன் உள்ளமதை பெறவேண்டும் வேண்டுதலை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1006. வைத்தியனாய் வந்துநீயும் பிணியதனை நீக்கவேண்டும்
அத்தனையும் உன்படைப்பே ஆண்டவனே ஆட்கொண்டாய்
எத்துயரும் உன்முன்னே பனிபோல நீங்கிவிடும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1007. நந்திக்கு முதலிடத்தை தந்துநிற்கும் குருதேவா
உந்தனையும் கண்டுநித்தம் களிஉலகை அடைகின்றேன்
எந்ததுயர் வந்திடினும் உன்தயவால் நீங்கிடுமே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1008. மேருமலை மீதமர்ந்து உலகமதை காக்கின்றாய்
அருமை உந்தன் உள்ளமப்பா மனமிரங்கும் தன்மையப்பா

ஒருமையுடன் வேண்டுகின்றேன் உன்தாளை வணங்குகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1009. கோவில் அதில் குடிகொண்டாய் கருவறையில் வீற்றிடுப்பாய்
பாவி உன்னை வேண்டுகின்றேன் என்மனதை அறியவேண்டும்
தவிக்கும் மனது கேட்கலையா தயவுகூர்ந்து உதவவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1010. தொலைதூரம் இருந்தாலும் என்மனத்திலே குடியிருப்பாய்
அலைபாயும் நெஞ்சானாலும் என்மனத்தில் அடைத்திடுவேன்
கலைகண்ணால் ஆடுகின்றாய் அம்பலத்தில் சிதம்பரமாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1011. குணமாக்க வந்திடுவாய் நோய் நீக்கதந்திடுவாய்
மணம் நிறைந்து வந்திடுவாய் உளமதனை அறிந்திடுவாய்
காணாமனம் விழையுதப்பா இன்சொல்லை தந்திடுப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1012. பகீரதியை தலையில் வைத்தாய் உருவமதில்
ஜோதிகொண்டாய்
வாகீசா எனப்பெயர் கொண்டாய் வல்லமையை காட்டிடுவாய்
பாகீரதி மனத்தில் கொண்டாய் குளிர்ச்சி தனைதந்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1013. அமுதமழை பொழிந்துநின்றாய் விடமதனை கழுத்தில்வைத்தாய்
அமுதம் உந்தன்சொல்லப்பா தேவை உந்தன் உள்ளமப்பா
அமுத கடசேன் நீயப்பா வாய்மொழியை கூறப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1014. பாற்கடலில் வந்துநிற்பாய் நஞ்சுதனை கழுத்தில் கொண்டாய்

வேற்றுமையாய் நினைப்பதில்லை எந்தனுயிர் நீயன்றோ
ஆற்றி நிற்பாய் உன்கடமை தேற்றி நிற்பாய் அடியவரை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1015. மின்னொளியும் உந்தன் சொந்தம் கடல்ஒலியும் உன்அடிமை
அன்புடனே அழைப்பவரை அரவணைத்து வரம்கொடுப்பாய்
கன்னல் மொழி கூறிடுவாய் பைந்தமிழில் பாடிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1016. வில்வமரம் குளிர்ச்சியிலே உள்ளமதை தந்திடுவாய
வெல்லவரும் உன்மனதை அன்புடனே ஏற்றிடுவாய்
பல்லுலகும் உன்கையில் பரிந்துரைப்பாய் மனமிரங்கி
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1017.ஆருயிர்க்கு அன்பு செய்வாய் வெண்ஒளியை தந்திடுவாய்
மேருமலை உந்தன் இல்லம் உந்தன் மனம் எந்தன் சொந்தம்
அருமை மொழிபகிர்ந்திடுவாய் உருக்கொள்வாய் என்மனத்தில்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1018. உணர்வுகளை மதித்திடுவாய் உவகையுடன் வந்திடுவாய்
இனக்கமுடன் அழைத்திடுவாய் அன்புமொழி கூறிடுவாய்
காணவரும் பக்தர்களை கரம்நீட்டி வரவேற்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1019. அடியவன் எனைக்காண வந்திடுமோ உந்தன் உள்ளம்
படியாதமனம் கூட உன்எழிலில் மகிழ்ந்திடுமே
ஈடில்லா உந்தன்மனம் அழைப்பை ஏற்கவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1020.சடைமுடியை கொண்டவனே மதிமலரை அணிந்தவனே

விடைதருவாய் என்மனதில் வேண்டிநிற்பேன் உனைவேண்டி
தடைஇல்லை உன்னிடத்தில் கொடையாக தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1021. அடைகாக்கும் பறவைபோல் என்மனதை அறியவேண்டும்
மடைதிறந்த வெள்ளம் போல் உன்பவனை தரவேண்டும்
கொடை கொடுப்பது உந்தன்கரம் ஏற்று நிற்பது எந்தன் மனம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1021.கலையாத மனச்சுமையை மேகம்போல் கலைத்திடுப்பா
அலைபாயும் உள்ளமதை பனிபோல உருக்கிடுப்பா
மலைபோல வரும் துயரம் உன்பார்வைகண்டு துகளாகும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1022. பெண் என்றால் பேயும் கூட இரங்குமப்பா
புண்பட்ட நெஞ்சமதை குணமாக்க வரவேண்டும்
வேண்டிநிற்க என்மனதில் இனி ஏதும் இடமில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1023. நாதமென வந்திடுவாய் கீதமென உருக்கிடுவாய்
வேதப் பொருள் அனைத்தும் உந்தனிடம் அடங்குமப்பா
ஆதரவு தந்துநீயும் தரணியிலே வாழ்த்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1024. மழையாக வந்திடுவாய் நறுந்தென்றல் தந்திடுவாய்
அழைக்கும் பொழுது அஞ்சலென வந்துமுன் காத்திடுவாய்
இழையோடி இடுக்கும் துயரமதை நீக்கிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1025. குளிர்ச்சயான வில்வத்தை விரும்பி நீயும் அணிந்திடுவாய்

அளித்திருப்பாய் அருள்வள்ளம் மறைத்திடுவாய் காரிருளை
உளி கொண்டும் செதுக்கும் சிற்பம்போல் பாலகனை மாற்றிவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1026. சங்கடங்க்ள தீர்ப்பவனே சஞ்சலத்தை மாற்றவா
உங்கையில் பிள்ளை உன்னிடமே வந்துநிற்கும்
ஏங்குபுகழ் கொண்டவனே தருகின்றேன் என்வணக்கம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1027. கதிர்ஒளியை காட்டிநீயும் உலகத்தை உய்விப்பாய்
மதியதனை தலையில்சூடி உலகத்தை குளிர்விவ்பாய்
பாதிஉடல் உமையவளுக்கு ஈந்துநீயும் சிறப்பிப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1028. தவமிருந்து உன்னை வணங்குவோரின் கரம்பிடிப்பாய்
ஆவதறியாது ஏங்கும் பேதை நெஞ்சை கண்டுநீயும் உருகாயோ
எவர்குறை என்று அறியாத ஏழை நெஞ்சம் தவிக்குதப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1029. இடர்களைந்து இனியவாழ்க்கை கொடுக்கவேண்டும் உன்கரத்தால்
தேடவைப்பாய் உன்மனதை திறந்துவைப்பாய் உன்கதவை
படமெடுத்துஆடும்பாம்பின் விடமதனை உன்கழுத்தினிலே வைத்திருப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1030. சிவனே உனைநாளும் வணங்கும் எளியவனை பாருமப்பா
அவதாரம் எடுத்துநின்று பாலகனை மாற்றவேண்டும் உன்மனத்தால்
பாவமென எனைநினைத்து தரவேண்டும் மடிப்பிச்சை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1031. உருகாதா உன்மனமும் வேண்டிநித்தம் கெஞ்சுகின்றேன்
மருகிநிற்கும் உள்ளம்கண்டு உணர்வுதனை மீட்டவேண்டும்
ஆருயிரே கண்ணொளியை எடுத்துவிட்டாய் கருத்தைதர மறுத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1032. தவிக்கின்ற உள்ளமதை தாங்கிநிற்பாய் உன்மனத்தால்
ஈவிரிக்கம் காட்டிநிற்பாய் மனத்துள்ளே வந்தொளிர்வாய்
குவிந்துஇருக்கும் உள்ளமதை விரித்திடுவாய் உன் அருளால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1033. பாட்டுடைத் தலைவன் நீயப்பா என்மனத்துள் ஒலித்திடுவாய் எந்நாளும்
ஈட்டுவிப்பாய் உணர்வுதனை எந்நாளும் மனத்திருளை நீக்கிடுவாய் மறவாமல்
நட்டுவைப்பாய் உன்கருணை என்மனத்தில் வளர்த்திடுவாய் வாழ்வுதனை உன்னருளால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1034. வார்த்தைகளைத் தேடுகின்றேன் உன்மனத்தை மகிழ்விக்க
ஆர்வமுதை தூண்டிவிட்டாய் உனைக்காண விழைகின்றேன்
ஈர்க்கவேண்டும் உன்மனதை நிறைவு செய்யும் உன்மனதை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1035. விட்டுவிட்டேன் உன்கையில் பாரமதை இறக்கிவிட்டேன்
சுட்டுநிற்கும் என்நெஞ்சம் உன்விழியால் குளிர்ந்ததப்பா
ஆட்டுவிப்பாய் என்மனதை நிறைத்து நிற்பாய் என்நெஞ்சை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1036. என்மனதில் நிறைந்து நிற்பாய் வண்ணஒளி காட்டிடுவாய்

உன்மனமே என்கோவில் உன்காலடியை என்தஞ்சம்
அன்றில் பறவையென உன்காலை சுற்றிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1037. வெட்டவெளி உன்வீடு தாங்கி நிற்பாய் உன்மனத்தில்
பட்டதுயர் மாற்றிடுவாய் மனமிரங்கி வந்திடுவாய்
ஆட்டுவது என்உள்ளம் தேடுவது உன்கரத்தை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1038.விழித்திருந்து பார்த்திடுவாய் பக்தர்துயர் தீர்த்திடுவாய்
எழில் உருவம் கொண்டவனே தாயுள்ளம் படைத்தவனே
ஊழிக்கால முதல்வனாய் மூத்தகுடி பிறப்பித்தாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1039. மகிழவேண்டும் உன்மனது வாழ்த்ததனை கூறவேண்டும்
அகில்போல நறுமணத்தை உன்உள்ளமதில் பரப்பவேண்டும்
தகிக்கின்ற வெயில்கூட உன்மதியால் குளிர்ந்துவிடும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1040. இரவெல்லாம் பகலாகும் காயெல்லாம் கனியாகும்
மரமெல்லாம் துளிர்த்திடும் தருநிழலை தந்துவிடும்
பாரமெல்லாம் எளிதாகும் பாலகனும் உணர்ந்திடுவான்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1041. வேதத்தின் நாதமப்பா என்மனத்தின் ஓசையப்பா
பாதமதை தொழுதிடுவேன் உன்கரத்தை பற்றிடுவேன்
ஆதரவு தருபவனே அறம்பொழியச் செய்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1042. உன்கையில் பாலகனை நின்குழந்தையென தந்துவிட்டேன்

என்மனதை ஆற்றிநின்று மனம் மலரச் செய்யவேண்டும்
கன்னலென உன்புகழை மனதார பாடிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1043. உன்பாதமதை சரணமனெ நாளும் பற்றிடுவேன்
என் வயத்தில் வந்திடுப்பா என்மனதை அறிந்திடுப்பா
இன்னலது வாராது உன்மனத்தை பற்றிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1044.எளியமனம் உன்வசமே காந்தமென வந்துவிடு
அளிக்கவேண்டும் உன்மனத்தை தெரியவேண்டும் என்எண்ணம்
எளிமை உந்தன் உள்ளமப்பா அகமகிழ்ந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1045. மனக்கதவை திறந்துவிடு என்வசமாய் வந்துவிடு
தனக்கு உவமை இல்லாத உன் அருளை காட்டிவிடு
ஈனப்பிறவி என்னிடமே உன்கருணை தந்துவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1046. வேண்டுவதற்கு இல்லையென உன்மனக்கதவை பூட்டிவிட்டாய்
கண்டுகொள்ள மனமில்லை திறப்பதற்கு வழியும் இல்லை
எண்ணியதை அறிந்துகொண்டு மனமகிழ்ந்து வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1047. தெளியவேண்டும் உன்மனது தீர்க்கவேண்டும் என்வேதனையை
ஒளி வடிவானவனே உள்ளுணர்வை அறியவேண்டும்
அளித்திடுவாய் ஓர்வரத்தை மனமுவந்து உன்கரத்தால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1048. தெரியவில்லை வணங்கும்முறை ஒலிக்கவில்லை எந்தன்குரல்
அரிது உந்தன் கருணைவெள்ளம் தரமறுக்கும் சிந்தையப்பா
சரி என்று ஓர்வார்த்தை சொல்ல ஓர் மனதில்லை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1049. உமை ஓர் பாகனப்பா அருள்நிதியும் நீயப்பா
உமை வந்து வணங்குவோர்க்கு அடைக்கலமாய் வந்திடுவாய்
இமை காக்கும் கண்ணைப்போல் பாலகனை காத்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1050. இடபம் அதில் அமர்ந்திடுவாய் புலித்தோலை நீ அணிந்திடுவாய்
பீடமதில் வீற்றிருந்து மதியதனை சூடி நிற்பாய்
வடமாக நாகமதை கழுத்தினிலே அணிந்துகொள்வாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1051. அறியவில்லை உன்மனத்தை தெரியவில்லை புரிவதற்கு
சிறியபிள்ளை உன்னெதிரே உன்மனத்தால் அறியுமப்பா
வறியவனாய் உன் முன்னே நிற்கும் எனை காணுமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1052. கண்டு உன்னை கேட்பதற்கு காட்சியாய் தெரியவில்லை
உண்டு உடுத்தி கழிக்கின்றேன் உனைக்காணவிழைகின்றேன்
அண்டி உன்னை வருவோர்க்கு அமுதசுரபி நீயப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1053. தழைக்கவேண்டும் சிறுபிள்ளை நடக்கவேண்டும் உன்னருளால்
அழைக்கவேண்டும் உன்நாமம் அமுதவாயை திறக்கவேண்டும்
உழைத்துநிற்க அவன் கையில் உரமதனை தரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1054. உந்தன் பேரழகை காண்பதற்கு ஒளியதனை தரவேண்டும்
எந்தன் உறைதெய்வமப்பா என்னருகே வாருமப்பா
வந்து உன்னை காணவேண்டும் தாயெனவே வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1055.அன்னையாய் இருக்கவேண்டும் உன்னொளியை காணவேண்டும்
அன்புமழை காட்டிநீயும் பிள்ளையென ஏற்கவேண்டும்
அன்புடனே அரவணைத்து தாயாக வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1056. தந்தையென வந்துநீயும் பாலகனை குணமாக்கு
விந்தையென வந்துநீயும் பிணியதனை நீக்கிவிடு
உந்தனக்கே சொந்தமென உன்னருளை காட்டிவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1057. நிம்மதியை காண்பதற்கு உன்பதத்தை தொழுதிடுவேன்
இம்மையிலே உன்அழகை தேடிநித்தம் அலைத்திடுவேன்
அம்மையுமாய் அப்பனுமாய் என்னருகே வந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1058. மனஅலைகள் பாய்ந்திடுமே உந்தன்எழில் காண்பதற்கு
இனமில்லா ஈசன் உந்தன்நிழல்காண விழைகின்றேன்
அனலாக இருக்கும் உந்தன் உறைவிடமே சொர்க்கமப்பா எந்தனுக்கு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1059. சிவன் எந்தன் குழந்தையப்பா என்மடியில் அமர்ந்திடுவாய்
பாவமாக நானிருக்கும் எந்தன் கோலம் கண்டிரங்கு
ஆவல் எந்தன் உள்ளமப்பா உன்அடியை பணிகின்றேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1060. தெய்வமாக என்முன்னே காட்சியருள வேண்டுமப்பா
உய்வதற்கு உனையின்றி வேறுகதி யாரப்பா
மெய்யன்பர் அழைத்தவுடன் ஓடிவரும் ஈசனப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1061. திருவாசகமே உன்வாசம் என உறைவிடத்தை கண்டவனே
இருப்பதற்கு உன்மனதை தேடி அலைவது என்மனது
கருவறைக்குள் இருந்தாலும் எனமனைவறைக்குள் இருப்பவனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1062. உன்வாசகம் கேட்டறிய என்மனது துடிக்குதப்பா
உன்னையன்றி பற்றுதற்கு வேறுதுணை யாருமில்லை
உன்மனதே என்வாசம் எனதினந்தோறும் வந்துநிற்பேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1063. சக்திதனை அடக்கி ஆண்டருளும் வாதவூரா
உக்தி ஒன்றை கூறவேண்டும் உன்பாதம் தொழுவதற்கு
எக்கதியும் எனக்குஇல்லை உன்பதமே என்கோவில்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1064. சக்தியதை தந்துவிட்டால் வேறுதுணை தேவையில்லை
பக்தியுடன் அழைக்கின்ற என்மனத்தை உணருமப்பா
ஊக்கமுடன் விழைந்திடுவேன் என்னருகே நீயிருந்தால்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1065. நன்றிக்கடன் பட்டிடுவேன் உறுதுணையாய் வந்துவிட்டால்
உன்னையன்றி வேறுகடன் பற்றவில்லை என்மனத்தில்
என்னருகே வந்துவிடு என்கரத்தை பற்றிவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1066. செப்புகின்ற சொல் அனைத்தும் உனைநாடி ஓடிவரும்
அப்பனாக வந்துநிற்பாய் ஆர்வமுடன் அரவணைப்பாய்
ஒப்பில்லா பரம்பொருளே நிகரில்லா அருட்கடலே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1067. குழந்தையென உன்னிடத்தில் பதம்பிடித்து நின்றிடுவேன்
மழலை மொழிகேட்க வேண்டும் நடைபயின்று வரவேண்டும்
கழல் பணிந்து எழுதுகின்றேன் உன்மொழிக்கு காத்திருப்பேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1068. சிந்தையிலே இருக்கின்றாய் எழில்முகத்தை காட்டுகின்றாய்
தந்தையென வந்துநிற்பாய் என்குறையை தீர்த்துவைப்பாய்
உந்தனிடம் வேண்டிநிற்பேன் பணிந்துஉன்னை வணங்கிடுவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1069. அருள்நிறைந்த உள்ளமப்பா உந்தன்உள்ளம் என்னதப்பா
அருமை உந்தன்கருணையப்பா எந்தனிடம் வாருமப்பா
பெருமை உந்தன் இரக்கமப்பா உன்பதிலை தாருமப்பா
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1070. உளம்கனிந்து வேண்டுகின்றேன் உந்தனிடம் இறைஞ்சுகின்றேன்
வளமான உந்தனிடம் என்முறையை கூறுகின்றேன்
இளகவேண்டும் உள்ளமப்பா மனமிரங்கி வரவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1071. நித்தம் உனைபணிந்திடுவேன் கரமதனை பிடித்திடுவேன்
ஈத்துவுத்தல் உந்தன்குணம் கேட்டுநிற்றல் எந்தன்மனம்
காத்துநிற்பாய் பாலகனை ஈர்த்திடுவாய் அவன்உணர்வை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1072. உனைவேண்டி தொழுபவரை கைப்பிடித்து காத்துநிற்பாய்
எனைபார்க்க வேண்டுமப்பா என்உணர்வை அறியுமப்பா
தேனைப் போல் உந்தன்மனம் இரங்கிவரும் எந்தனிடம்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1073. தாள் தொழுது பணிந்திடுவேன் படும்துயரை தீர்த்திடுவாய்
உள்ளமதை தந்திடுவாய் உனைக்காண வருவோர்க்கு
கள்ளமில்லா மனத்தாலே இரங்கிநித்தம் வரம்கொடுப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1074. வெற்றி தரவேண்டுமப்பா உமைஒரு பாகனப்பா
பற்றுதல் வரவேண்டி உனைவேண்டி துதிக்கின்றேன்
ஆற்றவேண்டும் என்துயரை இயங்கவேண்டும் பாலகனே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1075. குற்றமதை பொறுத்தருள்வாய் விண்மீதில் சுடராவாய்
உற்றதுயர் நீக்கிடுவாய் வெண்மதியை சூடிடுவாய்
பெற்றபிள்ளை காத்திடுவாய் முக்கண்ணை திறந்துவைப்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1076. திருநீற்றை அணிந்து நிற்பாய் பிறைநுதாலய் வீற்றிருப்பாய்
ஆருயிரை காத்துநிற்பாய் வெண்முகிலாய் வந்திடுவாய்
ஈருயிரை கொண்டிருப்பாய் பசுபதியாய் தோன்றிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1077. ஓசையின்றி காத்திடுவாய் இடபமதில் வீற்றிருப்பாய்
அசையாத ஓரினமும் உன்னொளியால் அசைந்திடுமே
இசைகேட்டு ஆடிடுவாய் வான்வெளியில் ஒளிர்ந்திடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1078. மனதுக்கு ஆறுதலாய் மாமறையாய் ஒலித்திடுவாய்
அனலாக மலையினிலே ஜோதியென ஒளிர்ந்திடுவாய்
கொன்றை மலர்சூடி நின்று குளிர்தென்றலென வீசிடுவாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1079. நாமத்தை ஒலித்திடுவேன் உன்பெருமை அறிந்திடுவேன்
இமயமென உயர்ந்துநிற்கும் உன்புகழை பாடிநிற்பேன்
எமதென்று இல்லையென உன்னிடமே சரணடைவேன்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1080. வீசும் தென்றல் நீ எனக்கு எந்தனுள்ளம் உந்தனக்கு
பேசும் விழி உந்தனக்கு எந்தன்மனம் உந்தனிடம்
மாசு இல்லா மனதுக்கு மறக்கவில்லை உன்மனத்தை
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1081. கோவிலில் குடியிருப்பாய் வீடுதோறும் நிறைந்திருப்பாய்
ஓவியமாய் வந்துநிற்பாய் உன்கருணை காட்டி நிற்பாய்
காவியமாய் விளங்கிடுவாய் சிறப்பென நிலைத்து நிற்பாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1082. நிலையான உந்தனருள் நாளும் நிறைந்திருக்கும்
கலையாக நின்றிடுவாய் அம்பலத்தில் ஆடிநிற்பாய்
அலைபாயும் என்மனத்தை உன்னருளாளல் அடக்கிவிடு
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1083. தலைதாழ்த்தி வணங்குகின்றேன் குலம் விளங்க வேண்டுமப்பா
மலைபோல உள்ளதுயர் பனிபோல நீங்கவேண்டும்
மாலையிட்டு பார்வதிக்கு ஓர்பாகம் கொடுத்துவிட்டாய்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1084. முக்கண்ணை உடையவனே வான்மதியை தந்தவனே
எக்கணமும் உனைத்துதிக்கும் வரமதனை தரவேண்டும்
இக்கணமே வந்துநின்று உன்எழிலை காட்டவேண்டும்
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1085. ஜோதிவடிவானவனே உன்னருளை பெறவேண்டும்
கதி எனக்கு யாருமில்லை உன்பதத்தை வணங்கிநிற்பேன்
பாதிஉடல் ஈந்தவனே உலகாளும் பரம்பொருளே
நலம் பெறவைக்கும் நாமம் நமச்சிவாயவே.

1086. கதிரொளியை பரப்பிநீயும் காரிருளை நீக்குகின்றாய்
உதிக்கின்றாய் கதிரவனாய் ஒளிமழையாய் தருகின்றாய்
மதியாக தோன்றிநீயும் குளிரொளியை பரப்புகின்றாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1087. செல்வமென நீ வருவாய் மழலை மொழி பேசிடுவாய்
கால்களிலே பிஞ்சுவிரல் என்முகத்தில் மிதித்திடுவாய்
பால்வடியும் முகத்தாலே உன்குரலை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1088. கொஞ்சும் மொழி பேசிடுவாய் பிஞ்சுநடை காட்டிடுவாய்
அஞ்சிநிற்கும் என்முகமோ உனைக்கண்டால் மலர்ந்துவிடும்
எஞ்சியது உன்நாமம் என்மடியில் வரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1089. மழலையென வந்திடுவாய் உன்குரலை காட்டிடுவாய்
குழந்தையென என்மடியில் கொஞ்சி விளையாடிடுவாய்
ஆழம் உந்தன் உள்ளமப்பா உணரவில்லை உன்மனதை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1090. செய்தபாவம் என்னவென்று அறியவில்லை என்மனது
உய்வதற்கு வழி ஒன்றை உன்மொழியால் கூறிவிடு
காய்கூட கனிந்துவிடும் உன்மனதை அறியவில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1091. உள்ளுணர்வாய் வந்திடுவாய் என்நெஞ்சில் நிறைந்துநிற்பாய்
கள்ளமில்லா சிரிப்போடு பாலகனாய் தவழ்ந்திடுவாய்
உள்ளமதில் குடிகொண்ட எந்தனுயிர் அருட்செல்வா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1092.ஓசையின்றி வந்திடுவாய் என் உள்ளமதில் குடிகொள்வாய்
அசையாத பொருள்கூட உன் ஒலியால் அசைந்திடுமே
இசைபாடி அழைத்திடுவேன் பாலகனாய் வந்துநிற்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1093. பிறவிதனை தந்துவிட்டாய் கரம்நீட்டி காத்திடுவாய்
அறம் வளர்க்கும் கரத்தாலே ஆறுதலை தந்திடுவாய்
கறங்கு போல் சுழல்கின்ற உருவமதை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1094. தவழ்ந்துவந்து என்னருகே அணைக்கவேண்டும் உன்கையால்
உவந்து வந்து என்முன்னே திருவுருவம் காட்டவேண்டும்
ஆவதும் உன்னாலே அணைப்பதும் உன்கையால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1095. வேதனையை புரிந்துகொண்டு விலக்கிடுவாய் உன்னருளால்
வேதமெல்லாம் உன்கையில் என்பிள்ளை உன்மடியில்
ஆதரவு காட்டி என்றும் பரம்பொருளாய் வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1096. பாலகனாய் வந்துநீயும் என்மடியில் அமரவேண்டும்
உலகாளும் பெருமானே என்னிடமோ மடிப்பிள்ளை
கோலமதை காணவேண்டும் தளிர்நடையை காட்டவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1097. பொறுமையுடன் நினைக்கின்றேன் மனக்கண்ணே வரவேண்டும்
உறுதுணையாய் வந்திடுவாய் உன்பெருமை காட்டிடுவாய்
பேறுபெறும் நிலை வேண்டும் உனைக்காணும் வரம் வேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1098. தண்டனையை தவிர்த்துவிடு குற்றமதை நீக்கிவிடு
அண்டமெல்லாம் உன்வசமே காத்துநிற்பாய் உன்கரத்தால்
கண்டுகொள்ள வேண்டுமப்பா கனிந்துருகி வாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1099. சக்தியாக நீயிருந்து இயக்கவேண்டும் பாலகனை
பக்தியினால் வேண்டி நிற்பேன் மனமிளகி வரவேண்டும்
காக்கவேண்டும் வல்லமையால் ஈர்க்கவேண்டும் உன்வசத்தில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1100. நெக்குருகி வேண்டிநிற்போர் கண்எதிரே வந்திடுவாய்
வாக்குறுதி உடையவனே நோக்கவேண்டும் என்குறையை
ஆக்கவேண்டும் பாலகனை போற்றவேண்டும் உந்தனையே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1101. இமைப்பொழுதும் நீங்கவில்லை என்மனத்தே உறைகின்றாய்
உமை வேண்டி தொழுகின்றேன் உன்பாதம் பணிகின்றேன்
எமை ஆளும் ஆண்டவனே எந்தனுயிர் பாலகனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1102.நெஞ்சமதில் குடிகொண்டாய் ஆனந்தநடம் ஆடுகின்றாய்
தஞ்சமென்று வந்தவரை தாங்கி நிற்கும் மனுதுடையாய்
வெஞ்சினத்தை அடக்கிவிடுவாய் அருந்துயரை நீக்கிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1103.மகிழ வேண்டும் என்மனது நெகிழ வேண்டும் உன்மனது
அகில் எனவே வாசமதை உலகெங்கும் நிறைத்திடுவாய்
மகிழமரம் உன்வாசமப்பா என்உணர்வை அறியுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1104.நித்திரையை கலைத்துவிட்ட என்உணர்வை அறிந்துவிடு
காத்திருக்கும் அடியவரை கண்டுநித்தம் வந்திடுவாய்
எத்துயரம் வந்திடினும் விரைந்தோடி வந்துநிற்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1105. தெவிட்டாத தெள்ளமுதே இனிக்கின்ற இசையமுதே
தவிக்கின்ற உள்ளமதை தேற்றுகின்ற மலையரசே
நவில்கின்றேன் உன்நாமம் போற்றுகின்றேன் உன்னடியை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1106. இருள் அகற்றி வந்திடுவாய் பகலவனாய் தோன்றிடுவாய்
தருகின்றாய் உன்நிழலை வளர்த்திடுவாய் உலகமதை
உருக்கிவிட்டாய் என்மனதை கருதிடுவாய் என்உள்ளமதை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1107. தாமதமாய் வந்திடாதே உன்வரவை நாடி நிற்பேன்
அமரன்போன்று இருந்திடுவாய் ஆன்றபுகழ் சேர்த்திடுவாய்
இமயமலை உன்வாசம் என்மனமோ உன்நேசம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1108. உயிர்களெல்லாம் உன்வசமே உன்மனமோ என்வசமே
பயிருக்கு மழைபோல என்னுயிரும் நீயன்றோ
கோயில் உந்தன்குடியிருப்பு எந்தன்மன் உன்னிருப்பு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1109. எளியமனது உந்தனப்பா ஏற்கவேண்டும் என்மனதை
அளிக்கவேண்டும் உந்தனருள் சேர்க்கவேண்டும் உணர்வுதனை
களித்துமகிழ்வேன் உனைக்கண்டு எடுத்துரைப்பேன் உன்புகழை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1110. நன்று உந்தன் அருட்செய்கை நட்புடனே வந்துநிற்பாய்
உன்உணர்வை அறிவதற்கு உன் மனைநாடி நிற்பேன்
என்மனக் கோவில் நீயப்பா தெய்வமாக உறைந்திருப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1111. நிலையான உந்தன்புகழ் உள்ளொளியாய் வரவேண்டும்
அலைபாயும் மனம்கூட உன்னொளியால் மயங்கிடுமே
மலைபோன்ற துயர்கூட மணல்போல துகளாகும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1112. தலைவனாக வந்திடுவாய் உனைவேண்டி வரும்போது
கலைஆர்வம் கொண்டிடுவாய் பொன்னம்பலத்தில் ஆடிடுவாய்
அலைகூட நின்றிடுமே உந்தன் அருள் கிடைத்துவிட்டால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1113. காலமெல்லாம் என்மனத்தில் கொலுவாக வீற்றிருப்பாய்
ஆலம்விழுதெனவே உன்மனத்தை பற்றிநிற்பேன்
இலகுவாக வந்துஎன் மனத்துள்ளே புகுந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1114. நன்று உந்தன் மனமென்று உன்னிடமே சரணடைவேன்
என்துன்பம் கண்டுநீயும் கனிந்துருக தொழுதிடுவேன்
உன்காலடியை தஞ்சமென்று என்னாளும் வேண்டிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1115. வரவேண்டும் பாலகனாய் தரவேண்டும் முத்தத்தை
காணவேண்டும் கண்ணொளியை வரவேண்டும் நடையின்று
சிரமமதை பாராது மழலை மொழி காட்டவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1116. மங்களம் உந்தன் சொல்லப்பா கேட்டுஉள்ளம் நெகிழுமப்பா
உங்கையின் பிள்ளை அடைக்கலமாய் உனைப்பார்க்கும்
அங்கிங்கெனாதடி நிறைந்துநின்று காத்துநிற்பாய் பாலகனை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1117. அன்பு உந்தன் மனமப்பா மகிழ்ந்து நீயும் வரவேண்டும்
என்நிலையை அறியுமப்பா இரங்கிநீயும் தரவேண்டும்
இன்னல்தனை நீக்குமப்பா புரிந்தநீயும் காக்கவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1118. குறைநீக்கும் சலனப்பா கொடைவள்ளல் உன்குணமே
உறைவிடமே உன்மனது என்மனதை உன்மனக்கோவில்
இறையன்பாய் நிறைந்து நிற்பாய் நீக்கமற இயங்கிநிற்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1119. எதைவேண்டி பெறவேண்டும் உன்பார்வை பெறுவதற்கு
விதைத்து விட்டாய் உன்நாமம் வளரவேண்டும் எந்தனிடம்
வதைக்காதே என்மனதை மழலையாக வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1120. நடுங்குகின்ற என்மனதை வளரவிடல் முறைதானோ
ஒதுக்குகின்றாய் புலனதனை விரிக்கவேண்டும் உணர்வுதனை
படுத்திருக்கும் பாலகனை நடைபயில செய்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1121. தேற்ற வேண்டும் என்மனதை மழலையென மொழிபேசு
உற்றநண்பன் நீயென்று என்குறையை உரைக்கின்றேன்
குற்றமில்லா மனத்தோடு ஐம்புலனை மீட்டிவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1122. சிலையாக இருந்தாலும் உணர்வாலே நிறைந்திட்டாய்
அலைபாயும் மனதிருந்தும் உன்பக்கம் இழுத்துவிட்டாய்
உலைபோல கொதிக்கும் மனம் உன்னருளால் குளிர்ந்துவிடும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1123. நினைவுகளை அடக்கிவிட்டு உன்னொளியை காட்டிடுவாய்
உனைவேண்டி வருபவரை உன்கரத்தால் காத்திடுவாய்
எனை ஆளும் ஆண்டவனே அன்னையென வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1124. மெய் அன்பு காட்டிநித்தம் அன்பர் துயர் தீர்ப்பவனே
பொய்உடலை சுமந்து நிற்கும் எளியவரை காப்பவனே
சாய்ந்து கொள்ளும் தோளாக உன்மனதை தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1125. விடிவெள்ளி உன்விழிகள் குளிர்கொடுக்கும் உன்திங்கள்
கொடைவள்ளல் உன்கரங்கள் மணம் பரப்பும் உன்குணங்கள்
தடைகள் வாரா உன்கருணை எனைகாக்கும் உன்மனமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1126.தவமிருந்து பெற்றவரம் உந்தனருகே சமர்ப்பணமே
அவனியிலே உனையின்றி வேறுதுணை யாருமுண்டோ
ஆவதும் உன்னாலே அழிவதும் உன்னாலே யார் வருவார் உன் முன்னாலே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1127. மலர்கின்ற மலரெல்லாம் உனைக்காண ஏங்குமப்பா
பலதோற்றம் உன்னிடத்தில் எத்தோற்றம் என்னிடத்தில்
உலகாளும் அம்மையப்பா மழலைமொழி அறியவில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1128. பிறவி உன்னால் வந்ததப்பா நலம்பயக்க செய்யுமப்பா
மறந்துவிடு என்குறையை தந்துவிடு உணர்வுதன்னை
பெறநினைக்கும் கண்ணொளியை மறுக்காமல் தந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1129. கனல் தெறிக்கும் கண்ணாலே கண்ணொளியை ஈந்துவிடு
மனதாலே நீ நினைத்து மழலை குறைதீர்த்துவிடு
உனதுமனம் இரங்கவேண்டும் உன்உதவி தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1130.கானல் நீராக மாற்றவேண்டாம் உன்மனதை
மனமிரங்கி வந்துநீயும் மழலை மனம்புகுந்துவிடு
உனதருளை வேண்டிநின்று உன்பாதம் பணிந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1131. தோற்றமெல்லாம் சிவனாக என்மனத்தே புகுந்திட்டாய்
ஏற்றதொரு சொல்லை என்அகத்தே புகுத்திட்டாய்
உற்றதுணை நீயென்று நாளும் பற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1132. கேட்பதற்கு மனமில்லை நினைப்பதற்கு எண்ணமில்லை
பட்டுவிட்டேன் துயரத்தால் விட்டுவிட்டாய் பாலகனை
தட்டிஉனை கேட்பதற்கு தெரியவில்லை என்தனக்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1133.கேட்டுப்பெற தெரியவில்லை உன்மனதை அறியவில்லை
மட்டற்ற மகிழ்வுதனை தருவதற்கு மனமில்லை
விட்டுவிடமனதில்லை வேணடிப் பெறத் துடிக்கின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1134. மௌனமொழி பேசுதற்கு வார்த்தை ஏதும் தேவையில்லை
தளமாக போட்டுவிட்டேன் உன்அன்பை என்மனதில்
களமதனில் இறங்கிவிட்டேன் உனைக்காணை விரைந்துவிட்டேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1135. பெறவேண்டி உனதன்பை அமர்ந்திருப்பேன் ஆர்வமுடன்
அறத்தொழிலே உன்னதப்பா ஆறுவது உன்மரபே
பேறனைத்தும் பெறநினைத்து உன்னடியில் தவமிருப்பேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1136.விரும்பி உனை அழைப்பதற்கு அடியவனாய் வந்திடுவாய்
தருகின்றேன் என்மனதை விரும்பிநீயும் ஏற்கவேண்டும்
அருமை உந்தன் உள்ளமப்பா ஆற்றது உன்கரமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1137. வெற்றிதனை தரவேண்டும் உள்மனத்தை அறியவேண்டும்
பற்றற்ற பரமநிலை தந்துவிட்டாய் பாலகனுக்கு
ஆற்றாமல் அரற்றுகின்றேன் கேட்டுப்பெற அறியவில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1138. கற்பனையில் வாழ்கின்றேன் கடுந்துயரை அறிந்திட்டேன்
உற்றதோர் குழந்தை உணர்வின்றி பார்க்கின்றேன்
பற்றதுணை யாதுமின்றி ஒளியிழந்து நிற்கின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1139. சுவை உந்தன் உணர்வப்பா அறியவேண்டும் உன் உணர்வை
அவையதனில் வரவேண்டும் மீட்கவேண்டும் பாலகனை
தேவையதை அறிந்துநீயும் தெளிவுதன்னை தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1140. அருள்பழுத்த கனியமுதே தீஞ்சுடரே
இரந்து உன்னைகேட்கின்றேன் என்உணர்வை அறிந்துவிடு
ஈரம்உந்தன் உள்ளமப்பா உவகையுடன் வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1141. பயிர்வளர உதவிடுவாய் படுவதற்கு நினைப்பாயோ
உயிரனைத்தும் செழித்தோங்கும் உன்பார்வை கணடதனால்
சேயிடத்தில் அன்புசெய்யும் அன்னையாக காத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1142. பேறு பெற்றேன் உனைநினைத்து நிறைந்துநிற்பாய் என்மனத்தே
நீறு அணிந்து உன்முன்னே உனைநினைந்து மகிழ்ந்திடுவேன்
மறுக்காமல் வந்திடுவாய் உனைநினைந்து உருகிவட்டால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1143.தேடுகின்றேன் உன்மனதை அறியாமல் அலைகின்றேன்
ஓடுகின்றாய் எனைவிட்டு ஒதுங்குவதும் உனக்கழகோ
வீடுநோக்கி வரவேண்டும் உன்பார்வை பெறவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1144. மலையரசி மணமகனே வெஞ்சுடராய் இருப்பவனே
அலைகடலில் ஒலிப்பவனே ஜோதி வடிவமானவனே
கலையரசாய் இருப்பவனே அம்பலத்தில் ஆடுகின்றாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1145. மலர்கொன்றை அணிந்தவனே பைஞ்சுடராய் ஒளிர்பவனே
ஆலவாய் அரனே, ஒளிவிளக்காய் மிளிர்பவனே
ஏலவார்குழலியை ஓர்பாகம் கொண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1146. தேடும் நிலா நீ எனக்கு பாடும் உலா நான் உனக்கு
தேடுகின்றேன் உன்மனக்கதவை திறந்துவிடு எனைப்பார்த்து
தேடுவது உந்தன்உள்ளம் வாடுவது எந்தன்மனம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1147. விரிந்துநிற்கும் உந்தன்மனம் மழைச்சாரல் உந்தன்குணம்
தெரியும் எந்தன்மனம் உனக்கு வருவதற்கு ஏன்தயக்கம்
அரிது உன்மனம் அறிதல் பெறவேண்டும் உன்னருளை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1148.துடித்துநிற்கும் என்உள்ளமதை அறிந்துநீயும் வரவேண்டும்
கடிதுயரை நீக்கவேண்டும் வரவேண்டும் என்மனத்துள்ளே
பாடிஉனை வணங்கிடுவேன் மனமிறங்கி வரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1149. பெற்றவனாய் நீ இருந்தும் உந்தன்மனம் உருகவில்லை
ஆற்றுகின்ற பெரும் பொறுப்பை ஏற்றவனும் நீதானே
உற்றதுணை நீயன்றி வேறுதுணை யாருளரோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1150.விழைகின்றேன் உன்மனமறிய வரவேண்டும் என்னருகே
தழைக்கவேண்டும் என்இல்லம் துளிர்க்கவேண்டும் பாலகனே
அழைத்திடுவேன் என்மனதில் குடியிருக்க வரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1151. குலம்விளங்கவரவேண்டி உனைஏத்தி வழிபடுவேன்
ஆலவாய் அரனேநீ உனைக்காணும் வழியாது
பலவாறு நினைத்தாலும் முறைஏதும் அறியவில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1152. விளக்காக ஒளிதருவாய் மலராகமணம் பெறுவாய்
உளம்கனிந்து வேண்டுவோரை உன்ஒளியால் வளர்த்திடுவாய்
தளர்கின்ற மனம்கூட, உன்னொளியால் பொலிவடையும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1153. கரும்பினிது என்பர் உன்மனதை அறியாதோர்
அரும்பொருளாய் வந்திடுவாய் உனைவேண்டி வணங்குவோர்க்கு
உருமாறிமுன்நிற்பாய் உனைத்தொழுது வணங்குவோர்க்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1154. தேன் இனிது உன்மனது மலரினிது உந்தன்மணம்
இன்னிசை உந்தன்குரல் கரும்பினிது உந்தன் எண்ணம்
தோன்றிடுவாய் எந்தன்முன்னே வண்டாக சுற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1155. கடல்பெரிது உந்தன்உள்ளம் மலைபெரிது உந்தன் மனம்
தேடநினைத்தல் அரிதப்பா அறிந்துநானும் தேடுகின்றேன்
ஊடகத்தை அறியவில்லை உந்தன்உரு தெரியவில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1156.செம்பவள வாய்திறந்து அழைக்கும் நாள் எந்நாளோ
அம்மையாக வந்துநின்று என்குறையை தீர்ப்பதென்றோ
உம்மை யன்றி வேறுதுணை யாருமில்லை எந்தனுக்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1157.பால்போன்ற வெண்முகத்தான் முத்தன்ன வெண்நகையான்
ஆல்போன்ற விழுதுடையான் வெஞ்சுடராய் திகழ்கின்றான்
மால் காணமுடியுடையான் எனைக்காண அவன் வருவான்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1158. பொன்வண்ணமேனியனே தேன்போன்று இனிப்பவனே
அன்னம் போல் வெண்முகத்தோன் ஆடிவரும் தேர் போன்றோன்
இன்முகத்தை காட்டிடுவான் கன்னல்மொழி பேசிடுவான்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1159. பசுவைத் தேடிவரும் கன்றைபோல் உனைநாடி நான் வருவேன்
வீசுகின்ற தென்றல் நீ பாசமுள்ள தாய் எனக்கு
மாசு இல்லா பரம்பொருள்நீ ஆதரவை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1160. வண்ணநிலா உந்தன்ஒளி வெஞ்சுடரே உந்தன்குழல்
தண்ணொளியே உந்தன்முகம் புலித்தோலே உன்ஆடை
பண்பாடும் இசைஎனக்கு அன்னைமுகம் உன்னிடத்தில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1161. நாகமதை தலையில் கொணடாய் விடமதனை கழுத்தில் வைத்தாய்
தேகமெல்லாம் கருணை வெள்ளம் முகமெல்லாம் ஒளிவட்டம்
அகமெல்லாம் நிறைந்துநிற்பாய் புறமெல்லாம் உன் உணர்வே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1162.சொல்லவேண்டும் உன் அருமை தெரியவேண்டும் உன்பெருமை
இல்லமதில் வந்திடுவாய் என்மனதை அறிந்திடுவாய்
கல்லைக்கூட கரைத்திடுவாய் தேனாக இனித்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1163. அற்புதம் உன்படைப்பு பொருள் ஏதும் தெரியவில்லை
கற்று தெரிதல் அரிதப்பா அண்டமெல்லாம் உன்பிறப்பு
ஏற்று நிற்பாய் என்எளியமனம் தேர்ந்தெடுப்பாய் உன்படைப்பை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1164.கனிந்து நிற்பாய் எளிய முகம் கண்டு
குனிந்து நிற்பேன் உன் முன்னே
தனித்து நிற்பேன் உன் முன்னே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1165. படிக்கவில்லை உன்மனதை புதிராக மறைந்தள்ளாய்
தேடிஉன்னை வருவோர்க்கு திருமுகத்தை காட்டிடுவாய்
மபுநிறைந்த உள்ளமது உனைக்கண்டால் வந்துவிடும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1166.நித்தம் உனை நினைக்கின்றேன் நீக்கமற நிறைந்துள்ளாய்
அத்தனையும் உன்படைப்பு அற்புதமே உன்வடிவு
பித்தனாக திரிந்தாலும் ஆடிடுவாய் அம்பலத்தில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1167. பிறைகுழலை உடையவனே அழகாணா மூத்தவனே
மறையாவும் கற்றவனே உலகாளும் கோமகனே
இறையாக வந்தவனே மனதாளும் மாமணியே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1168. லிங்கனாக உருதரிப்பாய் ஈசனாக வீற்றிருப்பாய்
தங்கமென மின்னிடுவாய் குளிர்ஒளியை தந்திடுவாய்
அங்கமெல்லாம் ஒளிவெள்ளம் தந்திடுவாய் அன்புமொழி
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1169. அன்பு கொண்டேன் உன்னிடத்தில் கசிந்துநிற்பேன் காலடியில்
என்றும் உந்தன் அடிமையப்பா உருகிநிற்கும் ஏழையப்பா
கன்று தேடும் பசுவைப்போல் உந்தனிடம் வந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1170. வாழ்ந்திருப்பேன் உன்நினைவால் வரவேண்டும் எனைநினைந்து
ஊழ்முன்நின்றாலும் உன்னொளியால் மறைந்துவிடும்
தாழ்ந்து உனை வணங்கிடுவேன் நலம்பயக்கச் செய்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1171. அடி, முடி காணா இறையன்பே மூவுலகும் உந்தனுக்கே
தேடிநித்தம் அலைந்தாலும் காற்றாக செல்கின்றாய்
ஓடி உனைப் பிடிப்பதற்கு காட்சிதனை மறுக்கின்றாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1172. செம்மையே உந்தன்பதம் உன்மனமோ எந்தனிடம்
அம்மையப்பன் உந்தன்வடிவம் உன்கரமோ என்கையில்
இம்மையிலே பற்றிடுவேன் வேண்டியதை பெற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1173.வரமனைத்தும் உந்தனுக்கே பெறவேண்டும் உனைவேண்டி
அரனாக வந்திடுவாய் அன்பாலே கட்டிடுவாய்
உரமதனை தந்திடுவாய் ஊட்டமதை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1174.இடபமதில் வீற்றிருப்பாய் பெற்றதுணை தந்திடுவாய்
விடமதனை உண்டுநீயும் வீற்றிருப்பாய் மலையரசர்
அடம்பிடிக்கும் குழந்தையென உன்காலை பற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1175.விட்டுவிடமனதில்லை உனதருகே வந்திடுவேன்
ஆட்டுகின்றாய் பிள்ளைதனை தவிக்கவிட்டாய் என்மனதை
பட்டதுயர் நீக்கிவிடு உன்னருமை காட்டிவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1176. என்னசொல்லி பாடிடுவேன் உன்னருளை பெறுவதற்கு
உன்னொளியை காட்டிவிடு நீக்கமறநிறைந்துவிடு
இன்முகத்தை காட்டாது ஏங்கிவிடல் சரிதானோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1177. ஊட்டவேண்டும் உணர்வு தன்னை
காட்டவேண்டும் மலர்முகத்தை
இட்டதுயர் தீர்க்கவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1178. பூந்தோட்டம் உன்நினைப்பு வாசமிடும் நறுமணமே
எந்தையென நிறைந்திருப்பாய் வணங்குவோரை
வாழ்த்திடுவாய்
சிந்தையிலே ஒலித்திடுவாய் ஏற்றமிகும் நறுந்தேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1179. பிஞ்சுமனம் உந்தனிடம் எந்தனிடம் பாலகனே
கொஞ்சும் முகம் உன்னிடமே அன்புடனே வந்திடுப்பா
கெஞ்சி நிற்பேன் உன்முன்னே பிள்ளையென வரவேண்டும்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1180. துதிக்கின்றேன் மனத்தினுள்ளே குடிபுகுவாய் என்னுள்ளே
கதியென்று உன்பதத்தை பிடித்துடுவேன் நீயும் உன்மனத்தில் நிறுத்தவேண்டும்
மதியென்று வந்திடுவாய் ஒளிவெள்ளம் ஈந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1181. ஏங்கி நிற்பாய் மலையாக தங்கிடுவாய் என்மனத்தே
பாங்குடனே கேட்டிடுவேன் உன்பார்வை பெற்றிடுவேன்
தாங்கவேண்டும் என்மனத்தை புகுந்திடுவாய் என்உள்ளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1182. காக்க வேண்டும் உன்கரத்தால் பார்க்கவேண்டும் உன்விழியால்
ஆக்கவேண்டும் பாலகனை நீக்கவேண்டும் பிணியனைத்தும்
போக்கவேண்டும் உற்றதுயர் பற்றவேண்டும் உந்தன்துணை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1183.வற்றவில்லை உன்மனது ஊறவேண்டும் உன் இரக்கம்
பெற்றவனே விட்டுவிட்டால் எங்குசெல்வேன் உனைவிட்டு
ஆற்றாது உற்றதுயர் உரைப்பதற்கு உனையின்றி யார்உள்ர்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1184.கள்ளமில்லா மனத்தோடு கையேற்றி நிற்கின்றேன்
அள்ளித்தரும் உன்இயல்பு எனைக்கண்டு நீங்கிடுமோ
ஆள்கின்றாய் உலகமெல்லாம் பிஞ்சுமனம் தெரியாதோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1185. தெளிவுபெற வேண்டுகின்றேன் உன் விழைவு யாதென்று
அளித்திடுதல் உன்மரபு கொடைவள்ளல் உன்கரங்கள்
எளியவனை அரவணைப்பாய் ஆறுதலை தந்திடுவாய்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1186. வெல்வதற்கு வழிவேண்டும் உன்னருளை பெறவேண்டும்
அல்லல் தீர்க்க வகை வேண்டும் உன்நெஞ்சம் அறியவேண்டும்
இல்லல்தனை நீக்கவேண்டும் உன்மனது புரியவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1187. எல்லையில்லா நின்புகழை அறிவதெல்லாம் அருஞ்செயலே
மல்லல் ஞாலம் பெற்ற உன்னை புரிந்துகொளல் பெருந்தவமே
வெல்லுஞ்சொல் அறிந்த உன்னைத் தேர்ந்தெடுத்தல் என்பயனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1188. வல்லான் உளன்என்று உன் பாதம் பணிந்திடுவேன்
மல்லல் ஞாலம் அடைந்திடுவேன் உன்கரத்தை பற்றிநின்று
இல்லமது வந்திடுவாய் உன்முகத்தை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1189. வித்தகன் என எண்ணி உன்னிடமே சரணடைந்தேன்
எத்துயரும் துடைத்திடுவாய் உன்பார்வை அருள் தந்தால்
அத்தனையும் அன்புமயம் எந்தன் மனம் உந்தன் மயம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1190. அங்கமெல்லாம் திருநீறு உந்தன்முகம் பாலாறு
தங்க நிறம் உந்தன்முகம் வெஞ்சுடரே உந்தன் உளம்
செங்கமலம் உன்பாதம் பைங்குயிலே உன்நாமம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1191. காணவைப்பாய் உன்எழிலை மனம் திறப்பாய் எளிதாக
ஆணவத்தை அடக்கிவிடுவாய் அடியவரை அரவணைப்பாய்
பேணவைப்பாய் எளியவரை முகம்கண்டு இரங்கிடுவாய்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1192.சீலம் பெரிது உடையவனே முக்கண்ணால் வளர்ப்பவனே
ஆலமதை உண்டவனே அமுதமென தந்தவனே
இலகுவாக இரங்கிடுவாய் எளியவழி தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1193. இன்மொழியால் ஆண்டிடுவாய் அண்டமெல்லாம் அடக்கிவைப்பாய்
தேன்சுவையே உந்தன்சொல்லப்பா அறுஞ்சுவையாய் வந்திடுவாய்
அன்னையென ஈந்திடுவாய் கேட்டவரம் தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1194. உன்மத்தன் போல் அலைவாய் அன்புகுவாய் தோன்றிடுவாய்
என்மனத்தில் குடியிருப்பாய் ஏற்று நிற்பாய் என்மனத்தை
அன்னம்போல் வெண்நகையான் என்அகத்தே புகுந்திடுவான்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1195.வேலையாக படைத்திடுவாய் அடக்கிவைப்பாய் உன்மொழியால்
தலையில் கங்கை ஓடிடுமே அரவுகூட குடியிருக்கும்
மலைமகனை பாதிகொண்டாய் அரவணைப்பாய் அன்புடனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1196.பெண்மனதை அறியவேண்டும் தாயன்பாய் வரவேண்டும்
ஆண்டு கொண்டாய் என் உள்ளமதை தேற்றிடுவாய் என்மனத்தை
வேண்டியதை தரவேண்டும் தெரியவேண்டும் உன்மனத்தில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1197.சிறுமைதனை நீக்கவேண்டும் இழிசொல்லை மாற்றவேண்டும்
எறும்புகூட ஊர்ந்துசெல்லும் பிள்ளைநிலை என்சொல்ல
மறுக்கின்றாய் தருவதற்கு பிழையில்லை என்மனத்தில்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1198.கானல்போல பிள்ளை வாழ்க்கை கடிவாயில்நிறுத்திவிட்டாய்
அனல்போல தகிக்கின்றாய் வெஞ்சுடராய் எரிக்கின்றாய்
மனம் இல்லை உந்தனுக்கு பிணிநீக்க மருந்தில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1199. நிலைகொள்ளா என்மனத்தை அறியமனம் ஏன் இல்லை
அலைபாயும் உள்ளமதை உன் அருளால் அடக்கிவிடு
உலைபோல கொதிக்கின்ற என்மனத்தை அறியவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1200. வஞ்சம் ஏதும் இல்லாத என்மனத்தை அறியவேண்டும்
தஞ்சமென்று வந்த என்னை கரம்நீட்டி காக்கவேண்டும்
வெஞ்சினத்தை அடக்கிநீயும் அஞ்சேல் எனச்சொல்லவேண்டும
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1201.இரவைப்பகலாக மாற்றிடும் தன்மை அறிந்தவன் நீ
ஞாயிறை திங்களாய் மாற்றிடும் தன்மை உணர்ந்தவன் நீ
பிணியை நலனாக மாற்றவைப்பாய் உன்னருளால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1202.சிவனாய் அரனாய் மலையாய் உயிராய் இருப்பவனே
ஆவதெல்லாம் உன்னாலே அழிவதெல்லாம் உன்செயலே
அவதியுறும் மனம்நாடி மனம்போல காத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1203. செய்தகுற்றம் அறியவில்லை தவறு இருந்தால் மாற்றிவிடு
ஆய்ந்தறிந்து செய்யும்மனம் என் உணர்வை அறிந்துவிடு
தேய்ந்து நிற்கும் உள்ளமதை ஆதரவாய் வருடிவிடு

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1204. ஊமை மனம் அறிந்துவிடு என்குறையை தீர்த்துவிடு
ஆமைகூட ஊர்ந்துசெல்லும் வகையில்லை எந்தனுக்கு
அமைதி வேண்டி அலைகின்றேன் அலைகடலாய் ஆக்கிவிட்டாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1205.மோதி நிற்பேன் உன்எதிரே குறை கேட்பேன் உன்முன்னே
ஆதி இல்லா பரம்பொருளே உனையின்றி கதியாதோ
உதிக்கின்றாய் செங்கதிராய் மிதிக்கின்றாய் என்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1206. புதிர்போல குழந்தை வாழ்க்கை உன்பதிலை நோக்குகின்றான்
அதிசயத்தை செய்பவனே ஏன்தயக்கம் உன்மனத்தில்
விதி வசத்தால் சிக்குண்டேன் தவிர்க்க வேண்டும் தீவினையை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1207. கட்டுண்டாய் என்மனத்தில் ஓங்கிநிற்பாய் என்னுள்ளே
பிட்டுக்கு மண்சுமந்தாய் என்மனத்தை நீ சுமப்பாய்
காட்டவேண்டும் உன்னருளை கடைத்தேற வேண்டுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1208. உன்மத்தன் ஆகிவிட்டேன் உன்னருளை பெறவேண்டி
என்மனத்தில் குடிகொண்டாய் துயரமதை நீக்கிடுவாய்
அன்புஎன்னும் சொல்லாலே அடக்கிடுவேன் உன்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1209.ஆட்டிவைப்பாய் உலகமெல்லாம் தவிர்த்திடுவாய் வன்நெஞ்சை
கேட்டிடுவேன் உன்துணையை பிணிணெயெல்லாம் நீக்கிடுவாய்
தட்டிகேட்பேன் உன்மனத்தை எழுப்பிடுவேன் உன்னருளை

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1210.நலம்வேண்டி அழைக்கின்றேன் உன்மனத்தை தேர்ந்தெடுப்பேன்
கலமாக உன்மனத்தை நிரப்பிடுவேன் என் அழைப்பால்
உலகமெல்லாம் உன்னடியில் உயர்ந்துநிற்கும் உன்விழியில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1211. பாட்டுடை தலைவனாய் நீ இருப்பாய் என்மனத்தே இடம்பிடிப்பாய்
ஆட்கொண்டாய் என்மனத்தை மறுக்காமல் வந்துநிற்பாய்
மட்டற்ற மகிழ்ச்சிதனை உன்னொளியால் தந்திடுக
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1212. வெண்முகிலாய் கலைந்திடுவாய் என்மனத்தே வந்திடுவாய்
அண்மையிலே வந்திடுவாய் எனைக்காண விரும்பிடுவாய்
உண்மைமொழி கூறிவிடு ஆற்றிவிடு என்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1213. வேற்றுமுகம் காட்டாதே என்மனத்துள்ளே புகுந்துவிடு
ஆற்றுப்படுத்தல் உன்நெறியை தேர்ந்தெடுத்தல் உன்வழியே
பெற்று அன்னைநீ எனவே உன்முன்னே பணிகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1214.வாடிநிற்பேன் உனைக்காண வரவேண்டும் மகிழ்வுடனே
தேடிநிற்கும் குழந்தையென உனைநாடி வந்திடுவேன்
மடி மீது உறங்கவேண்டும் அரண்போல காக்கவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1215. அருட்பெரும்கடலே ஆனந்த சுடரே
மாலை மதியமே தேடும் தெய்வமே
மலையின் தீபமே அலையின் ஓசையே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1216. கருப்பொருளாய் இருப்பவனே காட்டிடுவாய் உன் தவத்தை
உருவமின்றி மறைபவனே ஒளிவிளக்கின் உட்பொருளே
அருவமென ஒளிபவனே காட்சிதரும் வித்தகனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1217.காலம் கனிந்துவிடும் கருப்பொருளை அறிந்துகொள்ளும்
சலமீது நடந்திடுவான் நற்புகழை அடைந்திடுவான்
நலமனைத்தும் பெற்றிடுவான் நயமாக உரைத்திடுவான்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1218. கனிந்திடுவாய் உன்தயவால் பெற்றிடுவான் நலமனைத்தும்
இனித்திடுவான் உன் அருளால் கற்றிடுவான் கலையனைத்தும்
தனித்திருவான் உன்மனத்தில் தவிர்த்திடுவான் துயரனைத்தும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1219. அமரர் தொழுது ஏத்திடுவர் உன்புகழை பாடிடுவர்
அமர்ந்து இருப்பாய் தியானத்தில் உயர்ந்திருப்பாய் மலைமீது
கோமகனாய் வீற்றிருப்பாய் தேர்ந்தெடுப்பாய் அடியவரை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1220. சுற்றிவரும் கோளவைத்தும் வந்துவிடும் உன்வசமே
பற்றிநிற்கும் உயரனைத்தும் உந்தன்மொழி காத்துநிற்கும்
தோற்றமெல்லாம் உன்னிடமே, அண்டமெல்லாம் உன்கண் அசைவே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1221.முக்கண்ணால் பார்த்திடுவாய் வெஞ்சுடராய் ஒளிர்ந்திடுவாய்
ஆக்கமெல்லாம் உன்வசமே அசைவெல்லாம் உன்விழியே
தாக்கமெல்லாம் உன்மொழியில் உயிரெல்லாம் உன்னிடமே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1222.வழிபாடு செய்கின்றேன் உனைத்துதித்து ஏற்றுகின்றேன்
பழி பாவம் அறியவில்லை உன்னமனமும் தெரியவில்லை
இழிவாக நினைத்து என்மனத்தை அழிக்காதே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1223. ஆணை ஒன்று பிறப்பிப்பாய் உணர்வுதனை காட்டிடுவாய்
அணைத்திடுவாய் பாலகனை ஆருயிராய் நினைத்திடுவாய்
இணையில்லா ஒளிப்பிழம்பே இன்னுயிராய் ஒளிர்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1224. சிந்தையெல்லாம் உன்உருவம் அடைந்திடுவேன் பெரும்பேற்றை
விந்தையெல்லாம் உன்செயலே அடுத்துவமாய் வந்திடுவாய்
தந்தையாக வளர்த்திடுவாய் உன்ஒளியால் காத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1225. திறந்துவைப்பாய் உயிர்க்கதவை ஊட்டிடுவாய் உயர்வுதன்னை
அறம்காட்டி உய்விப்பாய் கரம்நீட்டி வளர்த்திடுவாய்
ஆறாத சினமனைத்தும் கருணையினால் கலைந்திடுமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1226. இடர் அனைத்தும் நீங்கிடுமே படர்கின்ற உன்னருளால்
ஊடகமாய் நின்றிடுவாய் உயிரனைத்தும் உய்வதற்கு
தேடநினைக்கும் எந்தன்மனம் காணாமல் ஏங்கிடுதே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1227. ஆதியும் நீயப்பா அந்தமும் நீயப்பா
வேதிப் பொருளும் நீயப்பா ஆண்டவனும் நீயப்பா
உதிக்கின்ற ஞாயிறுப்பா துதிக்கின்ற தெய்வமப்பா

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1228. வரவேண்டும் சிவனாக, தரவேண்டும் உன்னருளால்
அரவமின்றி வந்திடுவாய் தக்கதுணையென வந்திடுவாய்
இரக்கமுள்ள ஈசனப்பா என்குறையை அறிந்திடுப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1229. தொடர்ந்து உனை பற்றிடுவேன் பாலகனை காத்திடுவேன்
விடமறுக்கும் எந்தன்மணம் உன்பாதம் பற்றிவிடும்
இடர்அனைத்தும் நீங்கிடுமே உன்கண் அசைவை பெற்றுவிட்டால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1230. பிறந்த குழந்தை அழவில்லை உன்மனத்தை அறியவில்லை
ஆற வைப்பது உந்தன் மனம் திறந்து கொள்ளும் மனிதமனம்
தேறவைக்கும் உந்தன்குணம் அளப்பறியா ஈகைகுணம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1231. சடைமுடியால் அறிந்தவனே பக்தர்துயர் தீர்ப்பவனே
அடைந்திடுவேன் உன்னருளை தேடிடுவேன் உன்புகழை
விடை கொடுப்பாய் மறுக்காது பதில்தருவாய் மறவாமல்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1232. நுண்ணுணர்வு உந்தன் செயல் என் உணர்வு உந்தன்மனம்
கண்ணுக்குள் காந்தன்வழி என்மனத்துள் அரங்கேற்றம்
தண்ணொளியே உன் இயல்பு தரும்நிழலே உன் உள்ளம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1233. உற்றவர்க்கு உதவும் கொடைக்குணம் உந்தனுக்கு
ஆற்றும் உந்தன்மனமே எந்தனுக்கு சொந்தமாகும்
பற்றுதலை தந்துநீயும் பரம்பொருளாய் வீற்றிருப்பாய்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1234. எல்லை இல்லாம் அறம்பொருளாய் நீக்கமற நிறைந்திருப்பாய்
அல்லலுற்று அவதியுறும் நெஞ்சமதை அன்புடனே ஏற்றிடுவாய்
இல்லமதில் குடிகொண்டு நிறைந்துநிற்பாய் ஆண்டவனாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1235. மங்கை எந்தன் முகக்குறிப்பை அறிந்துநீயும் தீர்த்துவிடு
உங்கைப் பிள்ளையாக நாளும் இருந்திடுவேன்
சங்கு வண்ணம் உந்தன் எண்ணம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1236. வழிபடுவேன் கரம்கூப்பி சிரம் தாழ்த்தி வணங்கிடுவேன்
எழில் வடிவம் காண்கின்றேன் உந்தனுயிர் அறிகின்றேன்
கழி உவகை கொண்டிடுவேன் உந்தன்முகம் பார்த்துவிட்டால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1237.உதவும் பெருமான் உனையன்றி யாருளரோ
ஆதரவு தருபவனே எழில்முகத்தை கொண்டவனே
பதவி ஆசையில்லையப்பா உன்எழிலை படுகிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1238. வேடிக்கை உன்செயலே தீர்த்து வைத்தல் உன்குணமே
அடித்துவிட்டாய் என்உள்ளமதை ஆட்டிவைப்பாய் என்மனத்தை
படிக்கவேண்டும் உன்மனத்தை தெரியவேண்டும் எந்தனுக்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1239. படைத்துவிட்டாய் பிறவிதன்னை ஆக்கவேண்டும் நல்எண்ணம்
கடைசேர்ப்பாய் பிள்ளைகளை தவிர்க்கவேண்டும் குற்றங்களை
மடை திறந்த வெள்ளம் தீ காட்டும் அருள்பார்வை

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1240. அதிசயத்தை செய்துவிட்டாய் உன்உருவம் கண்டுவிட்டேன்
வேதிமாற்றம் செய்திடுவாய் உட்பொருளை காட்டிடுவாய்
மதியிழந்து நிற்பவரும் உன்னருளால் கரை சேர்வர்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1241. கோபம் கொண்டு சென்றுவிட்டாய் தென்றலென வந்துவிட்டாய்
அபயக்குரல் கொடுப்போர்க்கு செங்கரத்தால் காத்திடுவாய்
மாபதத்தை பணிந்துநிற்பேன் பைங்கரத்தை பற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1242. உள்ளமெல்லாம் நிறைந்திடுவாய் ஓங்காரமென ஒலித்திடுவாய்
தள்ளநினைப்பது கவலைதனை பெறவேண்டியது உந்தனருள்
அள்ளவேண்டும் உன்மனத்தை நிறைக்கவேண்டும் உன்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1243. வெந்தனலில் வீழ்ந்திடுவாய் அலைகடலில் ஒலியாவாய்
பைந்தமிழை வளர்ந்திடுவாய் மலையரணாய் வீற்றிடுப்பாய்
செந்நாவில் புகுந்திடுவாய் வந்தவரை வாழவைப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1244. கோடி கொடுத்தும் பெறஅரிது சிற்றறிவில் எட்டவில்லை
அடி எடுத்து வைக்கின்றேன் உன் மனத்தில் இடம்பிடிக்க
தேடி நித்தம் அலைந்தாலும் உனைக்காண ஏங்குகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1245. எண்ணமெல்லாம் உன்நினைவே, இடம்பிடிக்க அலைகின்றேன்
வண்ணமயம் உன்உருவே தடம் காண விரைகின்றேன்
ஒளியெல்லால் உன்வடிவே வருதேடி வருகின்றேன்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1246. வேண்டியதை நிறைவேற்று கெஞ்சுகின்றேன் உன்பாதத்தில்
அண்டி உன்னை வேண்டிநித்தம் தேடுகின்றேன் உன்னடியை
தண்டனை தந்திடாதே மாறுதலை கொடுத்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1247. தாள்பணிந்து வணங்குகின்றேன் உன்தயவை நாடுகின்றேன்
வேள்போன்ற உன்கண்ணால் துயரனைத்தும் நீக்கிவிடு
அள்ளி அணைத்து உன் அன்பை வழுவாமல் காட்டிவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1248. பூரணமாய் நம்பிவிட்டேன் உந்தன்துணை நாடிவிட்டேன்
அரவணைக்க வந்திடுவாய் பரம்பொருளாய் காத்திடுவாய்
ஆரமாக நாகம் கொண்டாய் வழித்துணையாய் வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1249. கருணை உந்தன் உடன்பிறப்பு நான் உந்தன் வழிப்பிறப்பு
அருகில் வந்து காத்திடுவாய் அன்புடனே அரவணைப்பாய்
உருவமின்றி இருப்பவனே ஆட்கொள்வாய் என்மனத்தே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1250. உயிரனைத்தும் உடலுக்குள் நீ எந்தன் மனத்துள்ளே
பயிரனைத்தும் நீருக்குள் அண்டமெல்லாம் உந்தனுள்ளே
விதையெல்லாம் மண்ணுக்குள் கருணையெல்லாம உன்னுள்ளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1251. குழந்தைமனம் கொண்டவனே பிஞ்சுவிரல் நீட்டுகின்றாய்
அழகான உள்ளமதை நானறிவேன் என் மனத்துள்ளே
ஆழமான உன்மனம் கூட என்பாவால் அசைந்திடுமே

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1252. ஆலயமே உன் உறைவிடமாம் என்மனமே உன்திருக்கோவில்
காலமெல்லாம் உன்நினைவே கசிந்துருகி வேண்டி நிற்பேன்
கலமாக உன்மனத்தை நாளும் நிரப்பிடுவேன் என்அன்பால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1253. இறைவனே கேட்டிடுவாய் என்குறையை தீர்த்திடுவாய்
மறைப்பொருளாய் இருப்பவனே மறைந்து எங்கும் நிறைந்திருப்பாய்
பிறைநுதலை உடையவனே உமையொரு பாகம்கொண்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1254. மந்திரத்தை சொல்லிவிடு குணமாக்கி தந்துவிடு
தந்தையென நீ இருந்தால் பிள்ளைதனை காக்கவேண்டும்
விந்தைகாட்டி ஒளிபவனே உன்தந்திரத்தை சொல்லிவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1255. பிடித்துவிட்டேன் உன்கரத்தை தவிர்க்க வேண்டாம் என்மனத்தை
அடிகொடுப்பாய் அர்ப்பனுக்கு அடிபெறுவாய் பிட்டுக்கு
முடி அடி இல்லா அருட்பொருளே ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1256. சக்திதனை தரவேண்டும் குருபரனாய் மாற்றவேண்டும்
ஆக்கமதை தரவேண்டும் உணர்வுதனை மீட்டவேண்டும்
ஊக்கமதை தரவேண்டும் பார்வைதனை ஊட்டவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1257. நடைபயின்று வரவேண்டும் தெய்வத்தை தொழவேண்டும்
அடைகாத்து பெறவேண்டும் எளியமகன் பெறவேண்டும்
மடைதிறந்த வெள்ளம்போல் உனை நினைந்து பாடவேண்டும்

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1258. அழைத்திடுவேன் உனைவேண்டி பூர்த்திசெய்வாய் என் வேண்டுதலை
பிழையிருந்தால் பொறுத்திடுக நான் உந்தன் பிள்ளையப்பா
ஏழையென் பிழையை கருணையுடன் மாற்றிடுக
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1259. வேந்தன் முன்னே நிற்கின்ற குடிமகன்கள் நாங்களப்பா
தந்திடுவாய் உன்னருளால் ஏற்றமிகு வாழ்வுதன்னை
உந்துசக்தி உந்தனிடம் தந்திடுவாய் பேரனிடம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1260. எழுந்து நிற்கும் குழந்தைச்செல்வம் உன்னருளை பெற்றுவிட்டால்
இழுக்கின்றாய் என்மனத்தை உந்தனிடம் காந்தம் போல்
உழுகின்றாய் உன் உள்ளமதை பண்படுத்த நினைப்பதனால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1261. சொல்ல வேண்டும் உன்அசைவால் நலம்யாவும் கிடைக்குமென்று
பல்லுயிரை படைத்தவனே உன் உள்ளம் எளிதன்றோ
பால்மேனி உடையவனே பக்தர்துயர் தீர்ப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1262. பூசுகின்றாய் திருநீறு என்மனமோ உன்வசமே
மாசு இல்லா குணக்கடலே என்மனத்தின் நிறைகுடமே
வீசுகின்றாய் தென்றலென என்னுள்ளே விரைந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1263. அற்புதங்கள் செய்பவனே ஆட்டிவைப்பாய் உலகனைத்தும்
கற்சிலையாய் இருந்தாலும் உணர்வானாய் உலகமெல்லாம்
பற்றி நிற்பேன் உன்மனத்தை வருந்தாது வந்துவிடு

நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1264. இறைஅருளே இன்னிசையே வெண்முகிலே
இறைகூவி அழைத்தாலும் மறைந்திருக்கும் மர்மமேனோ
பறைசாற்றி சொல்லிடுவேன் என்னுயிரே நீயன்றோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1265. பெறநினைக்கும் என்மனத்தை உன்கரத்தால் பற்றிவிடு
ஆறவேண்டும் எந்தனுள்ளம் கூறவேண்டும் உன்பெருமை
மறக்கமனம் இல்லையப்பா மறுக்காமல் வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1266.பறைசாற்றி கூறவேண்டும் உன்பெருமை பகரவேண்டும்
இறையருளை விளக்கவேண்டும் உந்தன்புகழ் பாடவேண்டும்
மறை நான்கும் உணர்ந்தவனே மன்றாடி அழைக்கின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1267. அண்ணாமலை தீபமே பொன்னம்பல நாயகனே
விண்ணுலகை ஆள்பவனே வரமனைத்தும் தருபவனே
ஆண்டு கொண்டாய் என்மனத்தை வருவதற்கு மனமுண்டோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1268. பிள்ளையென வரவேண்டும் பெரும் உவகை தரவேண்டும்
தள்ளாத மனம் வேண்டும் மறக்காத உளம் வேண்டும்
கள்ளமில்லா அன்புவேண்டும் குறைவில்லா கருணைவேண்டும்
வள்ளலென வழங்கவேண்டும் என்மனதை தொடவேண்டும்

1269. சிற்சபையே உந்தன் இல்லமப்பா உன்மனமே என்கோவிலப்பா
ஆற்றுவது உன்மரபு ஏற்றுக் கொள்ளது என் இயல்பு
பேற்றை தருவது உன்மனது பெறநினைப்பது என்மனது

மாற்றிவிட்டாய் என்மனதை உன் அடியில் சேர்த்துவிட்டாய்

1270. பஞ்சபூதம் உன் அடக்கம் என் மனமோ உன்தஞ்சம்
அஞ்சுவது இயல்பன்று உனைநினைத்தால் வழியுண்டு
கெஞ்சுவது பேதை நெஞ்சம் தரவேண்டும் உன்கருணை
எஞ்சி நிற்கும் என்மனது உன்னிடமே அடைக்கலமாம்

1271. அரவுதன்னை புறத்தில் கொண்டாய்
மரபு தன்னை அகத்தில் வைத்தாய்
இரங்கும் நெஞ்சை மனத்துள் மறைத்தாய்
கரம் கொண்டாய் காப்பதற்கு

1272. புனல் உண்டு சடையினிலே மதி உண்டு முடியினிலே
அனல் உண்டு மயினிலே கனல்உண்டு கண்களிலே
மனம் உண்டு எளியவர்க்கு தாங்கி நிற்பாய் உள்ளமதில்
இனம் காண்பாய் அறிவதற்கு உரம் தருவாய் வாழ்வதற்கு

1273. அனல் உந்தன் கண்களிலே அருள் உந்தன் பார்வையிலே
கனல் உந்தன் விழிகளிலே கருணை உந்தன் காட்சியிலே
தனல் உந்தன் சுடரினிலே குளிர்உந்தன் ஒளியினிலே
மனமொப்ப வந்திடுவாய் கைகூப்பி வணங்கி நின்றாலே

1274. அருள் கடலாய் ஒளிர்ந்திடுவாய் அ ன்புமழை
பொழிந்திடுவாய்
தரு நிழலாய் காத்திடுவாய் ஊற்றுநீராய் பெருக்கெடுப்பாய்
மருள் நீக்கி வளர்த்திடுவாய் கரும்பெனவே இனித்திடுவாய்
பெருகிடுமே என் உள்ளம் உன் நாமம் நினைத்தாலே.

1275. பற்றி நிற்பேன் உன்மனதை ஏற்றிடுவாய் இரக்கத்தால்
பெற்ற தாயாய் உனைநினைப்பேன் என்துயரை எடுத்துரைப்பேன்

உற்றதுணை நீயென்று வலுவாக பற்றிடுவேன்
வேற்றுணை பாராத உன்பெருமை சாற்றுவேன்.

1276. பொறுமையுடன் பற்றவேண்டும் திருவடியை நாடவேண்டும்
பெறுவது மனிதகுணம் தருவது உனது மனம்
ஆறதலாய் உனைநினைத்து என்மனத்தே இருத்திடுவேன்
உறுதுணையே நீயன்றி வேறுதுணை யாருமுண்டோ.

1277. பாலுனக்கு தந்திடுவேன் முக்கனியை ஈந்திடுவேன்
கொலுவாக வீற்றிருப்பாய் என்மனது உந்தனுக்கே
வலிது உந்தன் உள்ளம் இரங்கவேண்டும் எனைக்கருதி
சலித்தமனமும் விழிப்படையும் உன்உணர்வை அறிந்தாலே

1278. பெண்ணின் மனது அறிந்துநீயும் பாதிஉடல் தந்துவிட்டாய்
மண்ணுயிரை பேணிடுவாய் மனம்மகிழ வாழ்த்திடுவாய்
புண்ணாகி நிற்கும் நெஞ்சை உன்அன்பால் நெகிழவைப்பாய்
கண்ணாக ஒளிதருவாய் வரும் துயரை தீர்ப்பாயே.

1279. பெற்றவனாய் துயர்துடைப்பாய் வருந்துயரை நீக்கிடுவாய்
உற்றவனாய் நீயிருந்து வேண்டுவோர்க்கு அருள்தருவாய்
கற்றவனாய் உடனிருந்து பிழையனைத்தும் பொறுத்திடுவாய்
மற்றவனாய் இல்லாது உடனிருந்து வருவாயே.

1280. செய்தபிழை பொறுத்திடுவாய் ஆருயிராய் அரவணைப்பாய்
ஆய்ந்தறிந்து உதவிடுவாய் பக்கதுணை நீயிருப்பாய்
மெய்யறிவை காட்டிடுவாய் குற்றம்தனை தவிர்க்கவைப்பாய்
உய்வதற்கு வழிவகுப்பாய் பற்றுக்கோடாய் வருவாயே.

1281. திசைதெரியாது அலைபவர்க்கு ஒளிவிளக்காய் வந்திடுவாய்
அசையாத உயிர்கூட உன் அசைவால் அசைய வைப்பாய்

இசைந்து வரும் அன்புக்கு ஆதரவை காட்டிடுவாய்
ஓசையின்றி ஒலிதருவாய் மகிழ்வோடு அருள்வாயே.

1282. உனையின்றி யாருமில்லை என்மனமோ உன்சொந்தம்
அனைத்துயிரும் உன்சொந்தம் நீயின்றி அண்டமில்லை
தேனைப்போல் இனிப்பவனே கரும்பாக வந்திடுவாய்
பனைபோன்ற துன்பம்கூட உனைநினைத்தால் குறுகிடுமே.

1283. தீவினைகள் நீங்கிவிடும் உன்னடியை சரணடைந்தால்
பூவிதழ்கள் விரிந்துவிடும் உன்பார்வை பட்டுவிட்டால்
குவிந்துநிற்கும் உள்ளமது விரிந்துவிடும் உன்கடைக்கண்ணை பார்த்துவிட்டால்
ஓவியமும் பேசிவிடும் உன்கரத்தை தொட்டாலே.

1284. காணநினைக்கும் உள்ளங்கள் தேடிநிற்கும் உன்பார்வைக்கு
பேணவேண்டும் என்மனதை உன்பெயரை நினைக்குரங்கால்
ஆணவத்தை ஒழித்துவிட்டால் உன்னருளால் நனைந்திடலாம்
இணக்கத்துடன் வந்திடுவாய் உனைநினைத்து தொழுதாலே.

1285. தவிக்கின்ற உள்ளமெல்லாம் உன்துணையை நாடிவரும்
தாவிஉன்கரம் பிடித்தால் உற்றதுணை பெருகிவரும்
கவி பாடி அழைத்திட்டால் உந்தன் உள்ளம் ஓடிவரும்
கூவி உன்னை அழைத்திட்டால் கருணைவெள்ளம் அலைபாயும்

1286. பேசி களைத்திட்டேன் உனைக்காண ஓடிவந்தேன்
கசிந்துருகி அழைத்திட்டால் பாகாக உருகிடுவாய்
காசியிலே விசுவநாதன் என்மனத்துள் மனைவிளக்கு
பாசிபோல படர்ந்திருக்கும் மனஇருளை நீக்கிடுவாய்

1287. சிவனே உனையன்றி வேறுதுணை யாருமில்லை
அவனியிலே வாழ்வதற்கு வழித்துணையாய் வந்திடுவாய்

ஆவதும் உன்னாலே வாழ்வதும் உன்னாலே

1292. மாசற்ற உள்ளமதை உன்னருளால் பெற்றிடுவேன்
நேசமுடன் அணுகி உன்னை உன்பதத்தை பற்றிடுவேன்
வாசமுள்ள நறுந்தேனே உனை எண்ணி மறுகுகின்றேன்
பூசநினைப்பது உள்திருநீற்றை பேசநினைப்பது உன்திருநாமம்.

1293. மந்திரத்தால் கட்டிடுவாய் நேசமதை காட்டிடுவாய்
தந்தையென பற்றிடுவாய் அன்னையென அரவணைப்பாய்
தந்திரத்தால் வழிசெய்வாய் என்னருகே வந்திடுவாய்
விந்தையெல்லாம் உன்செயலே வழிகாட்ட வரவேண்டும்

1294. தத்தளிக்கும் மனமனைத்தும் உன்பதத்தை பற்றவேண்டும்
வித்தைகளை கற்றவனே உன்மனத்தை தொடவேண்டும்
அத்தனையும் அறிந்தவனே உன்கரத்தை பிடிக்கவேண்டும்
பித்தனாக திரிபவனே உன்னருகே வரவேண்டும்

1295. தெரிந்திருந்தும் பிழைதன்னை செய்யும்மனம் திருத்தவேண்டும்
ஆரிருளை அகற்றிநீயும் என்மனத்தே வரவேண்டும்
பேரின்பம் தரும்உன்னை நாளும் வணங்கவேண்டும்
அரிய உன் திருவுருவம் என்மனத்தே ஒளிரவேண்டும்

1296. திருமூலர் என்மனத்தை தேர்ந்தெடுத்து வரவேண்டும்
அருமை உந்தன் பாக்களப்பா ஆண்டவனின் அருளப்பா
பெருமை உந்தன் சொற்களப்பா இறைவன் தந்தகொடையப்பா
கருணையுடன் வேண்டுகோளை நிறைவேற்ற உன்சிதத்தால்

1297. செயலாக்கி தருவதற்கு உன்ஆதரவை நாடுகின்றேன்
பயந்த வாழ்க்கை இனிதுடைப்பாய் உந்தனருள் கையாலே
அயர்ந்து இருக்கும் என்மனத்தை வசப்படுத்து உன்மனத்தாலே
தயவுகூர்ந்து வந்திடுவாய் உன் ஆதரவை காட்டிடுவாய்

1298. விலங்குமனம் மாறவேண்டும்
நலமதனை தரவேண்டும்
குலம்விளங்க வரவேண்டும்
நிலமீது உன்னருளை பரப்பவேண்டும்

1299. மனிதனாக பிறந்ததனால் குரங்கு மனம்மாறவில்லை
இனிக்கவைக்கும் உன்நினைவை மனதில் நிறுத்திவைக்கவேண்டும்
பனிபோன்று உருகும் குணம் என்னிடத்தில் வரவேண்டும்
கனிவாக உன்முகத்தை என்னிடமே காட்டவேண்டும்.

1300. இழிவாக கருதாமல் நலமோடு நயம் பயப்பாய்
ஊழி முதல் இன்றுவரை நாளும் உடன் இருப்பாய்
அழித்தல், காத்தல், படைத்தல் மூன்றும் செய்திடுவாய்
பழிக்காது வந்துவிடு மனம்திறந்து உரைத்துவிடு.

1301. சக்தியாய் நீயிருந்து ஆட்டிவைப்பாய் மனிதர்களை
உக்தியெல்லாம் உன்வசத்தில் உட்பட்டு இயங்கும்
அக்கறையை வந்துநீயும் என்மனத்தில் ஆட்கொண்டாய்
காக்கும் உந்தன் அருட்பெருமை அனைத்துயிரும் அறிந்திடுமே.

1302. வாடிய மனத்தை கண்டுவாடிய என்மனத்தை இறுக்குகின்றாய்
ஓடிவர உன்உள்ளம் விரைவாக இசைந்திடுமே
ஆடிநிற்கும் உன்அழகை கண்டுநிற்போர் மெய்சிலிர்க்கும்
தேடி உன்னை திரிகின்றேன் மனத்தாலே அலைகின்றேன்

1302. அல்லலுற்று அழுவோர்க்கு நல்வாழ்க்கை வகுத்திடுவாய்
இல்லல்களை நீக்கிடுவாய் அனுதினமும் காத்திடுவாய்
வல்லமையை தந்திடுவாய் வழிவகுத்து கொடுத்திடுவாய்
பல்லுலகை ஆட்டிவைப்பாய் உன்திறத்தால் கட்டிவைப்பாய்

1303. உன்தயவை நாடிநிற்கும் எளியவனை காணவேண்டும்
என்குறையை நீயன்றி, தீர்ப்பதற்கு யாருமில்லை
உன்நினைவே என்நினைவாய் நாளும் நினைத்திடுவேன் 1
உன்பதத்தை பற்றிநிற்பேன் தட்டாமல் வரவேண்டும்.

1304. இட்டதுயர் தீர்த்திடுவாய் மனம்குளிரச் செய்திடுவாய்
பட்டது இனிபோதுமென்று உன்னொளியை காட்டிடுவாய்
மட்டற்ற மகிழ்வுதனை உன்னருளால் பெற்றிடுவர்
ஆட்டிவைக்கும் வினைதன்னை உன்னருளால் மாற்றிடுவாய்

1305. அறிந்திருந்தும் அறியாததுபோல் நிற்கின்றாய் சிலையாக
அறியாது அறிந்ததுபோல் நடிக்கின்றார் உலகத்தார்
அறிந்தும் என்மனத்தை அறியாதவன் போல் இருக்கின்றாய்
அறியாமல் உன்மனத்தை அலைமோதி நிற்கின்றேன்.

1306. நாடிநிற்கும் மனம் தன்னை கண்டுநீயும் வந்திடுவாய்
ஓடி உன்னை தொழுபவரின் மனத்துக்குள் புகுந்திடுவாய்
பாடிநித்தம் அழைப்பவரை உவந்துநீயும் ஏற்றிடுவாய்
அடிஎடுத்து பார்க்கின்றேன் உன்மனத்தை அறிவதற்கு

1307. அலைபாயும் உள்ளத்தை காத்துநிற்பாய் உன்மனத்தால்
மலைமீது ஒளிகொடுத்து மக்கள்மனத்தை ஈர்த்திடுவர்
தலைமகனாய் நீயிருந்து மனித உள்ளம் பேணிடுவாய்
கலைஅனைத்தும் உன்கையில் என்மனது உன்னுள்ளே.

1308. இடம்கொடுப்பாய் உன்மனத்தில் வளம்தருவாய் வாழ்வினிலே
அடம்பிடிக்கும் குழந்தையென உன்மனத்தை மாற்றிடுவேன்
தலைமகனாய் நீயிருந்து மனிதஉள்ளம் பேணிடுவாய்
கலைஅனைத்தும் உன்கையில் என்மனது உன்னுள்ளே.

1309. நீ அறிவாய் வாழும் வாழ்வு என்னதென்று
நீ செய்யும் செயலனைத்தும் சூட்சமமாய் உள்ளதப்பா
நீ ஆட்டுகின்றாய் உலகனைத்தும் தூக்கிவைப்பாய் மனதிருந்தால்
நீ அறிந்து நான்பிறந்தேன் என்மனதை அறியவேண்டும்.

1340. முக்கண்ணை உடையவனே அண்டமெல்லாம் உன்கையில்
அக்கறையாய் வந்திடுவாய் உள்ளமதை புரிந்துகொள்வாய்
ஆக்கமதை தந்திடுவாய் ஏற்றமதை காட்டிடுவாய்
ஏக்கமுள்ள நெஞ்சமதை உன்மனத்தால் அறிந்திடுவாய்.

1341. நெஞ்சமெல்லாம் நிறைந்திடுவாய் நினைவாக நீயிருப்பாய்
தஞ்சமென வருவோர்க்கு அடைக்கலமாய் வந்திடுவாய்
வெஞ்சினத்தை நீக்கிடுவாய் நல்லொளியை காட்டிடுவாய்
சஞ்சலமாய் இருக்கும் உள்ளம் உன்நினைவால் நீங்கிடுமே.

1342. வேண்டி உன்னை கேட்டிடுவேன் எழுந்தருளி வரவேண்டும்
அண்டி உன்னை பார்த்திடுவேன் சாய்க்கவேண்டும் உன்செவியை
மாண்புடைய உன்உள்ளம் இரங்கிடுமே எளியவர்க்கு
கண்திறந்து பார்த்திடுவாய் உன்மனத்தை காட்டுவாயே.

1343. உனைத்தேடி அலைபவர்க்கு உற்றதுணை நீதருவாய்
உனைவேண்டி அழைப்பவரை கரம் நீட்டி காத்திடுவாய்
உனை நினைத்து வேண்டுவோரை ஏற்றிடுவாய் அன்புடனே
உனையன்றி உற்றதுணை யாருமில்லை எந்தனுக்கே.

1344. உனையன்றி வேறுதுணை யாருமில்லை பற்றுதற்கு
உனையின்றி பக்கதுணை வருவதற்கு யாருமில்லை
உனையே கதியென்று பற்றுகின்றேன் உன்பதத்தை
எனையும் ஏற்கவேண்டும் உன்கரத்தால் பற்றவேண்டும்.

1345. தருவதற்கு மனமின்றி யாதுமில்லை எந்தனிடம்
உருவமின்றி இருந்தாலும் உணர்வுடனே வரவேண்டும்
அருவமாக இருந்தாலும் உள்ளொளியை காட்டவேண்டும்
சேருமிடம் உந்தன் உள்ளம் காக்கவேண்டும் அண்டமெல்லாம்

1346. உன்நாமம் உச்சரித்தால் தேன்போல இனித்திடுவாய்
கன்னலென கரைந்திடுவாய் கற்கண்டாய் உருகிடுவாய்
மின்னலென ஒளிர்ந்திடுவாய் நற்கனியாய் சுவைத்திருப்பாய்
இன்முகத்தை காட்டிடுவாய் என்னுள்ளே நிறைந்திருப்பாய்

1347. கொழுகொம்பாய் வந்திடுவாய் ஊன்றுகோலாய் நின்றிடுவாய்
பழுத்த சுவையை உணர்த்திடுவாய் பாகாக கரைந்திடுவாய்
இழுத்திடுவாய் என்மனத்தை உன்அன்பாலே ஈர்த்திடுவாய்
நழுவாமல் வந்திடுவாய் என்மனத்தே புகுந்திடுவாய்.

1348. தேன்போல இனிமையப்பா தெள்ளுதமிழ் நீயப்பா
அன்னையென வாழ்த்திடுவாய் அரவணைப்பால் காத்திடுவாய்
அன்பாலே கட்டிடுவாய் என்னருகே நீ வருவாய்
இன்னல்களை தீர்த்திடுவாய் என்கரத்தை பற்றிடுவாய்.

1349. மறுக்காதே அழைக்கின்றேன் வரவேண்டும் என்மனத்துள்ளே
ஆறுதலை தந்துவிடு அடைக்கலத்தை ஈந்துவிடு
உறுதுணையாய் வந்துவிடு உற்றவனாய் காத்துவிடு
ஏறுமுகம் வந்துவிடும் உன்முகத்தை கண்டாலே.

1350. அருள்விளக்கு நீயப்பா
அருட்துணையும் நீயப்பா
வருகின்ற வாழ்வும் உன்னதப்பா
தருகின்றயாவும் உன்னாலப்பா.

1351. வேண்டுதலை அருள்பவனே தேடிவந்து காப்பவனே
தண்டனையை தாராது, தாங்கிநிற்கும் கோமகனே
அண்டிநிற்போர் அனைவருக்கும் உன்னருளை தருபவனே
கண்கண்ட தெய்வமப்பா காண்பவர்க்கு எளியனப்பா.

1352. மறுக்காமல் வந்திடுவாய் மனநிறைவை தந்திடுவாய்
ஆறுதலை கொடுத்திடுவாய் அன்புடனே அணைத்திடுவாய்
இறுமாப்பாய் அகற்றிடுவாய் உற்றதுணை கொடுத்திடுவாய்
பேறுகளை அளித்திடுவாய் மனமுழுதும் நிறைந்திடுவாய்

1353. கரும்பினிது என்பர் உன்சுவை அறியாதோர்
அருமை என்பர் உன்மனதை தெரிந்தவர்கள்
காரிருளை நீக்கி அன்புஒளி தந்திடுவாய்
மாரியென வந்துநீயும் அன்புவெள்ளம் காட்டிடுவாய்

1354. வேண்டிநித்தம் அலைந்தாலும் உந்தனருள் அறியவில்லை
தண்டித்து போதுமப்பா உன்அருளை காட்டிவிடு
அன்புநிற்கும் ஏழை என்னை வெறுக்காது வந்துவிடு
உண்டுஉந்தன் கருணை என்று காத்துநிற்பேன் நாள்தோறும்.

1355. சொல்லுவது உன்நாமம் வெல்லுவது உன்வார்த்தை
தொல்பொருளாய் வந்திடுவாய் ஒளிவிளக்கை ஏற்றிடுவாய்
அல்லல்தனை நீக்கிடுவாய் அருள்ஒளியை பரப்பிடுவாய்
ஆல்போல தழைத்திடுவாய் என்உள்ளே வளர்ந்திடுவாய்.

1356. காணும் பொருள் நீயப்பா கவலைதனை நீக்கப்பா
அணுகும் போது வந்திடுவாய் பக்கபலம் தந்திடுவாய்
பேணுவது உன்பொறுப்பு நலம்கேட்டல் என்விருப்பு
வேணும் பொழுது தோன்றிடுவாய் நல்வரத்தை அருளிடுவாய்.

1357. தாயாக நீயிருப்பாய் அரவணைத்து காத்திடுவாய்
சேயாக நானிருப்பேன் உந்தன்துணை தேடிடுவேன்
காயாக நினைத்ததெல்லாம் கனியாக மாற்றிடுவாய்
ஈயாமல் இருப்பதில்லை எனக்குதவி மறுப்பதில்லை.

1358. பட்டதுயர் மறையவேண்டும் உன்மனத்துள் இடம்வேண்டும்
இட்டதுயர் அத்தனையும் உன்னொளியால் அகலவேண்டும்
ஆட்டுவிக்கும் உன்கரத்தால் வாழ்வுதனை தரவேண்டும்
தட்டாமல் வந்துநின்று ஐம்புலனை மீட்டிவிடு.

1359. தந்தையென உனைநினைக்கும் ஒழையென்ன நோக்கிவிடு
வெந்தனலில் வீழ்ந்தஎன்னை உன்புனலால் மாற்றிவிடு
எந்நாவால் உனை அழைப்பேன் மறுக்காமல் வந்துவிடு
தந்ததுயர் நீக்கிவிடு என்மனதை அறிந்துவிடு.

1360. ஏங்கிஉனை அழைக்கின்றேன் கண்திறந்து பாரப்பா
தங்குமிடம் உந்தன்மனம் என்றுஎண்ணி உன்னை அழைக்கின்றேன்
எங்கும் நிறைந்திருக்கும் உந்தன்மனம் உருகாதோ
பாங்குடனே வந்துவிடு மனமிரங்கி இறங்கிவிடு.

1361. வல்வினையும் ஓடிவிடும் உன்நினைவாய் நானிருந்தால்
அல்லல்தனை நீக்கிவிடு உவந்துநீயும் வந்துவிடு
இல்லல்களை மாற்றிவிடு இன்பமதை காட்டிவிடு
எல்லாமாய் இருப்பவனே செவிசாய்த்து வரவேண்டும்.

1362. தள்ளாதே என்மனத்தை விருப்பமுடன் ஏற்றுவிடு
அளித்தரும் உந்தன்குணம் என்தனக்கும் காட்டிவிடு
உள்ளிருந்து அத்தனையும் ஆட்டிவைப்பாய் உன்கரத்தால்
எள்ளிநகையாடுபவர் முன் ஏற்றமதை தரவேண்டும்.

1363. அற்புதத்தை காட்டிடுவாய் உன்மனதில் இடமிருந்தால்
ஏற்றுவிடு என்மனத்தை மனதுருகி வேண்டுகின்றேன்
பற்றுவது உன்பதத்தை ஏற்கவேண்டும் உன்கரத்தால்
ஆற்றிடுவாய் உன்செயலை பார்புகழ காட்டிடுவாய்.

1364. தஞ்சமென வீழ்ந்துவிட்டேன் ஏற்றுகொள்ளமனம் வேண்டும்
அஞ்சல்இல்லை எனக்கூறி என்மனத்தை ஆற்றவேண்டும்
கெஞ்சிநிற்கும் அடியவரை அன்னையென காக்கவேண்டும்
சஞ்சலமாய் நிற்பவரை தெளிவாக்கித் தரவேண்டும்.

1365. தேவைதனை அறியவேண்டும் என்மனது புரியவேண்டும்
பாவையென காணவேண்டும் என்உணர்வை உணரவேண்டும்
சேவை செய்யும் பக்தர்களை அன்புடனே அரவணைப்பாய்
பாவையென ஆக்கிடாதே அருள்உணர்வை தந்துவிடு

1366. கருணை உந்தன் ஒளி வெள்ளம்
பெருமை உந்தன் நினைவோட்டம்
அருமை உந்தன் சிந்தனைகள்
ஆருயிராய் வந்து நிற்பாய்

1367. வந்துவிடு என்னருகே உன்னருமை காட்டிவிடு
தந்துவிடு என்வேண்டுகோளை கொடுத்துவிடு உன்னருளல்
ஈந்துவிடு உன்னொளியால் காட்டிவிடு உன்பெருமை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1368. சிந்தனையில் நிறைந்திருப்பாய் மனமுழுதும் நிறைத்திடுவாய்
வந்தனையால் மகிழ்ந்திடுவாய் வளமாக காத்திடுவாய்
ஈந்திடுவாய் அத்தனையும் மனநிறைவாய் அளித்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1369. பாட்டுடைத் தலைவனப்பா பட்டதுயர் நீக்கிடுவாய்
இட்டகுறை தவிர்த்திடுவாய் உற்றகுறை அறிந்திருப்பாய்
மீட்டிடுவாய் உணர்வுதனை அருளொளியை கொடுத்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1370. கொடைவள்ளல் உந்தன்குணம் மனமிறந்து வந்திடுவாய்
அடைகாக்கும் பறவையென மக்கள் மனம் அறிந்திடுவாய்
ஓடை எனும் என்மனத்தில் நிலைத்திருக்க வேண்டுமப்பா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1371. பிணியெல்லாம் நீக்கிடுவாய் பகலவனாய் வந்திடுவாய்
அணிகலனாய் அலங்கரிப்பாய் மனதினிலே வீற்றிருப்பாய்
தணித்திடுவாய் வெம்மைதனை குளிர் நிழலை தந்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1372. குற்றமதை கலைந்திடுவாய் குறுமுனியாய் வந்திடுவாய்
உற்றதுணை நானென்று பற்றதுணை காட்டிடுவாய்
கற்றதெல்லாம் உன்னிடத்தில் உன்நினைவு என்னிடத்தில்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1373. ஆண்டவனே உனையன்றி அன்புசெய யாருமில்லை
பெண் என்னை கண்டுநீயும் இரங்கவேண்டம் மனமிறங்கி
அண்மையிலே வரவேண்டும் நல்வாழ்க்கை தரவேண்டும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1374. பேதைமனம் அறிந்துகொள்வாய் தெளிந்துநீயும் வந்திடுவாய்
மேதையான உன்மனத்தை என்பக்கம் திருப்பிடுவாய்
பதைக்கின்ற மனம் அறிந்து தெளியவைக்க வரவேண்டம்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1375. ஆண்டம் மலர்ந்தது உந்தன்மனம் விரிந்தது
வண்டுமொய்க்கும் மலர் போல உன்மனத்தை சுற்றிடுவேன்
கண்ணாக காத்திடுவாய் கவலைஎல்லாம் ஓட்டிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1376. என்னருகில் வந்துவிட்டால் கவலையெல்லாம் பறந்தவிடும்
உன்னருமை அறிந்துவிட்டால் வாழ்வெல்லாம் மலர்ந்துவிடும்
அன்புடனே அரவணைப்பாய் ஆருயிரை காத்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1377. மென்உணர்வை தந்திடுவாய் உன்னருமை அறிந்துகொண்டால்
உன்னருளை நல்கிடுவாய் உன்பெருமை தேர்ந்துஎடுத்தால்
என்னருகே வந்திடுவாய் உன் நாமம் ஒலித்துவிட்டால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1378. தேவைதன்னை அறிந்திடுவாய் என்மனத்தை ஈர்த்திடுவாய்
சேவை செய்து காதிடுவாய் மனம்குளிர பார்த்திடுவாய்
பாவை என்னை அறிந்துகொள்வாய் உன்துணையை தந்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1379. தாய்போல அணைத்திடுவாய் ஆறுதலை அளித்திடுவாய்
ஆய்ந்தறிந்து உணர்த்திடுவாய் வெறுமைதனை நீக்கிடுவாய்
சேய் என நினைத்திருவாய் அன்புமொழி அருளிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1380. மனம் அறிந்து செயல்தருவாய்
இனம் அறிந்து சேர்த்திடுவாய்
தானமென கேட்டுவிட்டால் மனம்குளிர்ந்து தந்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1381. ஓம் என்ற சொல்லில் நிறைந்து நிற்பாய் என்றென்றும்
அம்மா என்ற சொல்லில் உலகமெங்கும் உயிர்கொடுப்பாய்
இம்மையிலே வந்திடுவாய் உன்னருளை காட்டிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1382. ஓங்கார நாயகனே வேதமெல்லாம் ஒலித்திடுவாய்
எங்கும் நிறைந்திருப்பாய் என் அகத்தே குடிபுகுவாய்
ஏங்கும் மனநிலையை மாற்றிடுவாய் உன்னொளியாலே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1383. உருகிவிடும் உன்மனமும் பாகாக இனித்துவிடும்
அருகினிலே இடம் கொடுப்பாய் உன்மனத்துள் இருந்திடுவாய்
ஆருயிரே நீயன்றோ என்மனத்தை அறிந்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1384. வெந்தனலில் வீழ்ந்தாலும் உன்னொளியால் குளிர்ந்திடுவர்
செந்நாவை உடையவனே உன்கண்அசைவால் உலகசையும்
எந்தையென எண்ணிநீயும் என்மனதை அறிந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1385. குளிர் தென்றல் உந்தன் குணம்
தளிர்போல வளர்த்திடுவாய்
அளித்திடுவாய் அத்தனையும் உன் செங்கரத்தால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1386. வேண்டிநிற்கும் மனமறிந்து உளம்கனிந்து அளித்திடுவாய்
அண்டிநிற்கும் அன்பனுக்கு மனம் திறந்து தந்திடுவாய
காண்பதற்கு எளியனப்பா உந்தன்மனம் வெண்மையப்பா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1387. கேட்டு நிற்கும் எளியவர்க்கு வஞ்சமின்றி தந்திடுவாய்
ஆட்டுவிக்கும் அண்டமெல்லாம் உன்விரல் நுனியில் இயங்கிடுமே
கட்டிவைப்பாய் உன் அன்பால் தேர்ந்தெடுப்பாய் பாசமதை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1388. சோதனையை மறுத்திடுவாய் விரும்பிடுவாய் என்மனதை
ஆதரவு தந்திடுவாய் மனமுருகி ஏற்றிடுவாய்
ஈதல் உந்தன் செயலப்பா, மனமிரங்கி வந்திடுப்பா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1389. தயவுடனே அழைத்திடுவேன் தயங்காமல் வந்துவிடு
அயராது வணங்கிடுவேன் வரவேண்டும் என்மனதில்
இயல்பாக அழைத்தாலும் மனம்விரும்பி வந்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1390. தெளியவைப்பாய் பாலகனை தேர்ந்தெடுப்பாய் உன்மனத்தில்
அளிக்கவேண்டும் உன்மனத்தால் உணர்வுதனை ஊட்டவேண்டும்
எளியவன் என்மனத்தை அறிந்திடுவாய் உன்மனத்தாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1391. அழைக்கும்முறை தெரியவில்லை உன்மனத்தை ஈர்க்கவில்லை
தழைக்கவேண்டும் என்குடும்பம் அருகில் வர ஏன்தயக்கம்
இழையோடும் என்துயரை காண்பதற்கு ஏன்மனதில்லை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1392. வரமனைத்தும் அளித்திடுவாய் ஏங்கிநிற்கும் முகம்பார்த்து
இரங்கிநீயும் வந்திடுவாய் ஏழைதுயர் கண்டுவிட்டால்
அரணாக காத்திடுவாய் அழும்நெஞ்சை பார்த்துவிட்டால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1393. விட்டுவிடுவேன் மனத்துயரை உள்எண்ணம் வந்துவிட்டால்
இட்டதுயர் நீங்கிவிடும் உன்ஒளியை பார்த்துவிட்டால்
ஈட்டவேண்டும் உன்மனத்தை உனைக்காணும் வரம்வேண்டும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1394. கரம்பிடித்து காத்திடுவாய் கருணைமுகம் காட்டிடுவாய்
இரக்கமுடன் நடந்திடுவாய் உன்வருகை காட்டிடுவாய்
ஈரமுள்ள உள்ளமப்பா உண்மைவழிகாட்டிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1395. வினாவை அளித்துவிட்டாய் விடைகொடுப்பது எந்நாளோ
தானாக வந்துவிடு உன்பதிலை கொடுத்துவிடு
கனாவாக இருப்பதெல்லாம் உன்னருளால் நினைவாகும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1396. உன்நினைவாய் இருப்பவரை மறுக்காமல் ஏற்றிடுவாய்
தன்னிகர் இல்லா அருட்செல்வம் உன்மனது
என்னிடமே வந்துவிடு என்னுயிராய் இருந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1397. தங்குமிடம் உன்மனது ஏங்குவது உன்னிடமே
எங்கும் நிறைந்தவனே என்னுயிரை ஆள்பவனே
அங்கமெல்லாம் தங்கமப்பா உந்தன்மனம் வெண்மையப்பா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1398. கண்களுக்குத் தெரியவில்லை மறைபொருளில் இருக்கின்றாய்
தண்ணொளியை தந்திடுவாய் அண்டமெல்லாம் ஆட்டிவைப்பாய்
காண்பதற்கு எளியவனே கனிஇன்பம் தருபவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1399. அறிவதற்கு உன்மனதை தெரியவில்லை எந்தனுக்கு
வறியவனாய் இருந்தாலும் பெருமையுடன் ஏற்றிடுவாய்
அறியாமல் செய்தபிழை உன்னொளியால் மறைந்துவிடும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1400. எட்டாத உயரத்தில் உயர்ந்து நிற்கும் இறையன்பே
ஆட்டுவிக்கும் உந்தன்செயல் புரியாத விந்தையப்பா
இட்டதுயர் மறைந்திடுமே உன்னருமை புரிந்துகொண்டால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1401. புன்னை கொன்றை சூடிடுவாய்
உன்புகழை உயர்த்திடுவாய்
என்மனத்தில் இடம்பிடிப்பாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1402. மாற்றம்ஏதும் அறியவில்லை மனம்தெளிந்து வரவில்லை
ஏற்றாத தந்திடுவாய் மனமிகழ்ச்சி நல்கிடுவாய்
தேற்றுவது உந்தன்செயல் நிறைவு செய்வாய் என்மனதை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1403. தரவேண்டும் அமைதிதனை பெறவேண்டும் உன்ஏற்பை
இரந்துநானும் கேட்கின்றேன் பொறுமைதனை தரவேண்டும்
கரம்கூப்பி வணங்கிடுவேன் நற்பண்பை தந்துவிட்டால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1404. பெண் என்றால் பேய்கூட இரங்கவிடும்
அண்ணலென வந்திடுவாய் என்துயரை தீர்த்திடுவாய்
உண்மைதனை உணர்த்திடுவாய் உவகையுடன் செய்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1405. ஓம் என்ற சொல்லை ஓங்காராமாய் ஒலித்திட்டாய்
இம்மையிலும் மறுமையிலம் உன்புகழை நாட்டிடுவாய்
அம்மையப்பன் நீயன்றோ கருணை ஊற்றும் நீயன்றோ
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1406. ஓதற்கு உரியவன் அண்டமெல்லாம் ஆள்பவன்
வேதம் அறிந்தவன் கலையனைத்தும் உணர்ந்தவன்
பேதமின்றி வாழ்பவன் அம்பலத்தில் ஆடுவான்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1407. கருத்திற்கு எளியவன் மாயையாய் தெரிபவன்
உருவில் சிறியவன் அளவிடற்கரியவன்
மருநீக்கி வாழ்பவன் மறைநான்கும் அறிந்தவன்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1408. அணுவைத் துளைப்பவன் அலைகடலில் நடப்பவன்
அணுகுதற்கு எளியவன் மலைமீது ஜோதியவன்
காணும்பொருள் அவனாவன், காண்பதற்கு எளியவன் அவன்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1409. பாட்டிற்கு நாதமாவான் நடனமாடி மகிழவைப்பான்
ஏட்டினிலே இடம்பிடிப்பான் மனத்தினிலே பதிந்திடுவான்
கேட்டிடுவான் குறையனைத்தும் காற்றினிலே கரைந்திருப்பான்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1410. சக்தி ஒருபாகம் கொண்டாய்
அக்கறையாய் பாதிவைத்தாய்
ஆக்கமெல்லாம் உன்னில் கொண்டாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1411. ஏன் இந்த சோதனையப்பா, புரியவில்லை என்தனக்கு
உன்புகழை பாடிநிற்கும் எளியமுகம் காணவேண்டும்
என்மனதை அறியவேண்டும் உன்புகழை கூட்டவேண்டும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1412. தாயாக பரிந்துரைப்பாய் தந்தையென காத்திடுவாய்
சேயாக மாற்றிடுவாய் பெற்றவனாய் அனைத்திடுவாய்
காயாக இருப்பதெல்லாம் கனியாக மாற்றிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1413. மொழியனைத்தும் உன் நாவில்
செழிப்பெல்லாம் உன்மனத்தில்
எழிலெல்லாம் உன் உருவில்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1414. பிறைசூடி வீற்றிருப்பாய் கற்றவரை ஏற்றிடுவாய்
அறைகூவி அழைத்திட்டால் அருகினிலே வந்திடுவாய்
மறையெல்லாம் உன்நாவில் பிறப்பெல்லாம் உன்கையில்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1415. பாலின்நிறம் உந்தன்மனம்
ஒலியின் ஓசை உன்நாவில்
ஒலிகடலும் உன் அசைவே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1416. பாகாக இனித்திடுவாய் இசையாக ஒலித்திடுவாய்
ஆகாத செயல்எல்லாம் உன்னசைவால் தொடங்கிவிடும்
சாகாத வரம் கூடபெற்றிடுவர் உன்னருளால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1417. வாய்திறந்து பேசவைப்பாய் தளிர்நடையை காட்டவைப்பாய்
மெய்யுணர்வை திறந்துவைப்பாய் உணர்வுதனை மீட்டிடுவாய்
பொய்முகத்தை நீக்கிடுவாய் பாலகனாய் தந்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1418. மீளாதுயரை துடைத்திடுவாய் கண்ணொளியை காட்டிடுவாய்
கேளாமல் இருந்திடாதே தடைஏதும் தந்திடாதே
மாளாத துயரம்கூட உன்னசைவால் உருகிவிடும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1419. பேரன்முகம் கண்டுவிடு அவன்குறையை தீர்த்துவிடு
அரவணைத்து காத்துவிடு உன்துணையை காட்டிவிடு
ஈரமுள்ள நெஞ்சோடு மருத்துவனாய் குறைமாற்று
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1420. குறையாத உன்அன்பால் உலகமெல்லாம் உய்வுபெறும்
பெய்கின்ற மழைகூட வாழவைக்கும் பயிர்தன்னை
மெய்யன்பு உள்ளநீயும் என்வாழ்வை மலர்ந்தருள்க
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1421. இறையன்பே அறியவில்லை எனமனத்தை
உழைகின்ற மனத்துள்ளே என்தாக்கம் அறிந்திடுவாய்
பாறைபோன்ற நெஞ்சம்கூட உனொளியால் உருகிவிடும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1422. சொல்வதற்கு வார்த்தையில்லை புரியவைக்க அறிவில்லை
அல்லல் எல்லாம் மாறிவிடும் அருட்செல்வம் நீயிருந்தால்
பல்லுயிரும் வாழ்ந்துவிடும் உன்னொளியை பெற்றுவிட்டால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1423. தீர்மானிக்கம் உன்னியல்பை அறியவில்லை என்மனது
ஈர்த்துவிடும் உன்செயலை அறிவதற்கு தெளிவில்லை
ஆர்வமுடன் அழைத்தாலும் உன்உணர்வை காட்டவில்லை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1424. அனுமானம் செய்வதற்கு ஓர்வழியை காட்டிவிடு
ஊனுடல்கள் அணைத்தினையும் ஆட்டிவைக்கும் வழிஅறிவாய்
தேனூறும் உன்நாவலே நல்விடையை அளித்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1425. உன்னிடம் தான் வரம்கேட்பேன் அன்புடனே தந்திடுவாய்
என்மனதை அறிந்திடுவாய் உன்பகழை உயர்த்திடுவாய்
கன்னல்பதில் தந்திடுவாய் இன்மொழியாய் இயம்பிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1426. தேன்போல இனிப்பவனே தென்றலென வருபவனே
இன்முகத்தை காட்டிடுவாய் இனியமொழி தந்திடுவாய்
வன்சொல்லை அகற்றிடுவாய் தாய்போல அணைத்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1427. கொன்றைமலர் அணிந்திடுவாய் அம்புலியை சூடிடுவாய்
தென்றலென வீசிடுவாய் மனித மனம் குளிரவைப்பாய்
ஆன்றோனாய் அருளிடுவாய் ஆசானாய் பயிற்றுவிட்டாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1428. நற்குணங்கள் தந்திடுவாய் வாழவைக்கும் மனமுடையாய்
சிற்றம்பலத்தில் ஆடிடுவாய் அண்ணாமலை ஜோதியாவாய்
கற்க வைப்பாய் மனநிறைவை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1429. இணையில்லா பரம்பொருளே வருவதற்கு ஏன்தயக்கம்
துணையாக வந்திடுவாய் வழிகாட்டும் விளக்காவாய்
அணைவாக காத்திடுவாய் அருள்குடமாய் நிறைத்திடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1430. பிச்சைபோட்டு நிரப்பிடுவாய் மனக்குறையை தீர்த்திடுவாய்
அச்சமதை போக்கிடுவாய் அன்பாலே வளர்த்திடுவாய்
இச்சமயம் வந்திடுக, உன்புகழை நாட்டிடுக
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1431. உறைகின்ற உன்கோவில் வாசலிலே நிற்கின்றேன்
இறையன்பே வந்திடுவாய் உன்பெருமை காட்டிடுவாய்
குறைதன்னை நீக்கிவிட்டு என்மனத்துள் புகுந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1432. உன்புகழை பாடுவதற்கு என்னிடத்தில் வார்த்தையில்லை
தன்உயர்வை நாட்டிடவே தரணியிலே வந்திடுவாய்
நின்பெருமை சாற்றுவதற்கு எந்தனிடம் மொழியில்லை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1433. செல்லமென வந்திடுவாய் அன்புமொழி பேசிடுவாய்
அல்லல் எல்லாம் களைத்திடுவாய் என்பிள்ளையென காட்டிடுவாய்
கல்போல நின்றாலும் உலகமெல்லாம் ஆட்டிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1444. பட்டுபோல உன்மனதை தொட்டுப்பார்க்க விழைகின்றேன்
எட்டி நின்று பார்த்தாலும் உன்னொளியை கண்டிடுவேன்
தட்டி சொல்ல விரும்பமாட்டாய் உன்புகழை பரப்பிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1445. சிவனாக வீற்றிருப்பாய் அருந்தெய்வம் நீயப்பா
அவனியிலே உந்தன்புகழ் நிலையாக நிலைத்துநிற்கும்
ஆவதும் உன்னாலே அறிந்துநிற்பாய் தன்னாலே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1446. வெட்டவெளி தன்னில் தனித்துநிற்பாய் யாரும் அறியாமல்
மட்டற்ற சக்தியெல்லாம் உன்னுள்ளே ஒளிந்திருக்கும்
தட்டாமல் காத்திடுவாய் தனித்துநின்று இயக்கிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1447. கரைந்துநிற்கும் உன்புகழெல்லாம் காற்றினிலே வந்துவிடும்
தரையிறங்கி வந்துவிடு என்மனதை ஏற்றுவிடு
இரையாக நினைக்காது இறையாக வந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1448. தடுமாற்றம் நீக்கிவிடு உன்உருவை காட்டிவிடு
படுகின்ற துயர்எல்லாம் உன்னருளால் மறைந்துவிடும்
தேடுகின்றேன் உன்மொழியை தெவிட்டாத தெள்ளமுதே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1449. வந்தனை செய்திடுவேன் உந்தனையே நினைத்திடுவேன்
சிந்தனையில் தேக்கிவைப்பேன் உன்மொழியை நாடிநிற்பேன்
ஈந்திடுவாய் உன்கருணை காட்டிடுவாய் உன்காட்சி
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1450. அடிமை எனை ஆட்கொண்டு உன்நினைவை அளித்துவிடு
தேடிநிற்கும் வினாதனக்கு விடையளிக்கு வந்துவிடு
கோடிபேர்கள் உனைக்காண உன்முன்னே நிற்கின்றார்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1451. எப்போதும் உன்நினைவாய் ஏங்கிநிற்கும் என்மனது
தப்பேதும் செய்திடினும் தயவாக மறந்தருள்வாய்
அப்பனாக, என்பொறுப்பை உன்மீது சுமத்துகின்றேன்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1452. இருள்நீக்கி ஒளிகொடுப்பாய் என்றெண்ணி வேண்டுகின்றேன்
மருள்நீக்கி எனும்பெயர் பெற்ற உன்புகழை பாடிடுவேன்
அருள்செல்வம் நீயென்று நாளுமு புகழ்ந்திடுவேன்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1453. நெஞ்சம் எல்லாம் நிரம்பிவிட்டாய்
தஞ்சமது தந்திடுவாய்
வஞ்சமில்லை உன்மனதில்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1454. ஓசையின்றி உன்புகழை நாளும் நினைத்திடுவேன்
அசையாது நிற்கும் உன்உருவம் எழுந்துவிடும்
விசையாக ஈர்க்கும் என்அன்பு ஒலியாலே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1455. தொழுது ஏற்றி உன்மனதை பெற்றிடுவேன்
இழுக்கமில்லாத உன்மனத்தை என்பக்கம் திருப்பிடுவேன்
ஆழமான உன்மனதை எனைநோக்கி மாற்றிடுவேன்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1456. பஞ்சுபோன்ற உன்மனத்தை எந்தனிடம் திருப்பிவிடு
கெஞ்சுகின்ற என்விழியை உன்னொளியால் பார்த்துவிடு
தஞ்சமென வந்துநிற்பேன் உன்வாசல் திறந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1457. மாதவம் செய்தால் உன்மனதை ஏற்றிடலாம்
மாஞாலம் உடையவரை உன்பார்வை கண்டிடுவர்
மாமதியே சிறிது இரங்கி எந்தனிடம் வந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1458. ஏற்புடைய பாடல் பாடும் வழி அறியவில்லை
வேற்றுமையாய் பாராது ஏற்கவேண்டும் என்பாட்டை
கற்கவேண்டும் எத்தனையோ உந்தன்மொழி கேட்பதற்கு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1459. மாசில்லா ஏவியமே ஒளிர்தென்றலென
காசினியில் நாளும் வீற்றிருப்பாய்
ஆசியினை தந்துநீயும் அடியவர்க்கு அருளிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1460. மதிசூடி மலைதோறும் ஜோதியென வந்திடுவாய்
ஆதியும் அந்தமுமில்லா அருட்கடலாய் தோன்றிடுவாய்
ஓதி உனை உணர்வோரை அன்புடனே ஏற்றிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1461. உறவுடனே அழைக்கின்றேன் உன்னதனாய் வந்துவிடு
திறவுகோலாய் நீயிருந்து உணர்வுகளை மீட்டிவிடு
மறவாமல் வந்துவிடு குழந்தை துயர்தீர்த்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1462. மறைய நின்று உணர்த்திடுவாய் உன்உருவை காட்டிடுவாய்
இறையருளை தந்திடுவாய் இட்டதுயர் கரைந்திடுவாய்
உறைகின்ற உன்மனத்தை மீட்டுஇங்கு வரவேண்டும்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1463. உணர்வுதனை மீட்டிவிடு ஊக்கமதை தந்துவிடு
பணயமாக வைத்திடாதே கண்பார்வை கொடுத்துவிடு
இணக்கமாக வந்துநீயும் தாயன்பை உணர்த்திவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1464. சென்னியப்பன் பேர் பெற்றாய் முதற்பொருளாய் நீயிருப்பாய்
அன்னியனாய் மாறாதே தளிர்நடையை தந்துவிடு
உன்னிடம்தான் உரைக்கின்றேன் செவிமடுத்து கேட்டிடுப்பா
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1465. நெடுங்காலம் உனைநினைத்து வாழும் பேதையப்பா
தொடுக்கின்றேன் என்வேண்டுதலை
அடுக்கடுக்காய் வரும்துயரை பனிபோல் நீக்கிவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1466. செம்மேனி உடையவனே வீசும் தென்றலும் நீதானே
அம்மையப்பன் நீயன்றோ உன்கருணை பெரியதன்றோ
இம்மையிலே வந்துநீயும் வேண்டுதலை தந்துவிடு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1467. ஆட்கொண்டு காத்தருளும் ஈசனே உனையன்றி
இட்டதுயர் நீக்கிவிட்டு உன்பெருமை பாடுகின்றேன்
பட்டதெல்லாம் போதுமென்று உன்நிழலை காணுகின்றேன்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1468. பொன்போன்ற மேனியனே அன்புருவம் கொண்டவனே
மான்போன்ற மருட்சிகொண்டு உலகாள்வாய் அன்புடனே
என்போன்ற ஏழையர்க்கு எளிமையுடன் வருபவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

1469. விடையருளி உன்அமுத மொழி காட்டிவந்து
தடைஏதும் சொல்லாது தானே உவந்தருளி
மடைதிறந்த வெள்ளம் போல்
சடைமுடித்து வருபவனே.

1470. எம்மானை என்மனைத் துயிலும் பெருமானை
அம்மானை எழில்கொஞ்சும் எம்பிரானை
பெம்மானை உள்ளுணர்வாய் மலரும் செம்மலரோனை
இம்மையிலே, காப்போனை கைகூப்பி வணங்கிடுவேன்.

1471. இன்புறும் நாளை காண்பதற்கு ஏங்கி
நான்தவம் கிடக்கும் துயரமதை கண்டும்
உன்பதிலை காட்டாது மறைந்திருந்து
கன்னல் மொழி பகராது இருப்பதேனோ.

1472. எண்ணமதில் குறையில்லை உன்பதிலைக் காணாது
வண்ணமுகில் இடையே அலைந்தாடும் உளைக்காணி
கண்நோக்கி காத்திருப்பேன்
விண்ணிறங்கி வரவேண்டும் மனக்குறையை தீர்க்கவேண்டும்.

1473. பேசும் விழியாலே என்மனத்தை ஆட்கொண்டாய்
மாசுஇல்லா பரம்பொருளே
பசுமையான உள்ளத்தால் நிறைந்திங்கு வந்திடுவாய்
வீசுகின்ற தென்றலென இன்பமதை காட்டிடுவாய்.

1474. கல்யாண மாலை சூடுகின்றாய் இன்று
ஆல்போல தழைத்து அன்புவெள்ளம் பெருக்கிடுவாய்
இல்லமதில் வந்து இடர்அனைத்தும் நீக்கி
உள்ளமதில் குடிகொண்ட மீனாட்சி சுந்தரர் போற்றி

1475. திருவுருவாய் உலகமெங்கும் அப்பனென குடிகொண்டாய்
உருவமின்றி இருந்தாலும் அருவமென வந்திடுவாய்
மருதீசர் பெயர்கொண்டு உலகமெல்லாம் உய்த்திடுவாய்
அருமையான உள்ளமதை உலகறிய செய்திடுவாய்.

1476. பேறு பெற்றேன் உனைப்பாட என்மனத்தால்
இறுமாப்பை தந்திடுவாய் என்னுள்ளே நீயிருந்தால்
வறுமை கொண்ட உள்ளமதை வாகாக அணைத்திடுவாய்
ஆறுகின்ற உள்ளமதை நாளும் நல்கிடுவாய்.

1477. கடமைதன்னை ஆற்றதற்கு காற்றாக விரைந்திடுவாய்
இடமறிந்து உதவிடுவாய் உள்ளமதில் இடம்தருவாய்
ஆடல் அரசனாக அம்பலத்தில் ஆடிடுவாய்
இடர்தீர்க்க நினைத்திடுவாய் உறுதுணையாய் வந்திடுவாய்

1478. தேவார பெருமையெல்லாம் உன்னருளால் வந்ததப்பா
பாவாலே அழைத்திடுவேன் மனக்குறையை தீர்த்திடப்பா
அவா கொண்டு அழைப்போரை ஆவலுடன் எதிர்கொள்வாய்
காவல் கொண்டு காத்திடுவாய் மனம் விரும்பி வந்திடுவாய்

1479. பலவண்ணம் ஏற்றிடுவாய் இசைவோடு வந்திடுவாய்
இலகுவாக வந்திடுவாய் ஈரமுள்ள மனதோடு
உலகமெல்லாம் உன்மொழியை உவகையுடன் ஒலித்திடுமே
காலமெல்லாம் உன்காலடியில் வீழ்ந்திடுக்கும் எளியனப்பா.

1480. மதுரையிலே திருமணத்தை அன்புடனே முடித்திட்டாய்
சூதுஎன்றும் இல்லையப்பா எந்தன் மனத்தினிலே
ஏதும் அறியா பாலகனை நட்டாற்றில் நிற்கவிட்டாய்
பதுமை போல நீயிருந்து காணாமல் விட்டுவிட்டாய்.

1481. சிவப்பழமாய் தோன்றுகின்றேன்
ஆவதெல்லாம் உன்கையாலே
ஈவதெல்லாம் உன்மனத்தாலே
தவமிருந்து பெறவேண்டும் உன் வரத்தை.

1482. உமையவளை பாகம் கொண்டு
இமையாக காத்துநிற்கும் உன்மனது
ஊமையென இருந்துவிட்ட காரணம்
அமைதியாக அறியவிரும்பும் எளியேன் எனைக்காண வேண்டும்

1483. பெரியமனது உந்தனிடம் தெரியவேண்டும் எந்தனுக்கு
காரிருளை நீக்குபவனே சேயேன் என்குறையை
உரிமையுடன் கேட்டுநீயும் வந்தருளி
கோருகின்ற பதிலை எந்தனுக்கு தரவேண்டும்.

1484. பஞ்சுபோல உன்மனது கனலாக மாறியதேன்
தஞ்சமென உன்நிழலை தேடிநிற்கும் எளியேன் நான்
வஞ்சமேதும் மனத்தில் இல்லை
கெஞ்சுகின்றகுரல் மனமுவந்து வந்திடப்பா.

1485. வாழ்க்கை வாழ்வதற்கு உன்கருணை வேண்டுகின்றேன்
ஆழ்மனதில் அடங்கிநிற்கும் என்மனதை அறியவேண்டும்
ஊழ்வினையை அகற்றிநீயும் எனமனத்தை கேட்டுவிடு
பாழ்மனதை அறிந்துநீயும் ஊழ்வினையை மாற்றிவிடு.

1486. ஐம்புலனை மீட்டிநீயும் வாழ்வுதனை அளித்துவிடு
இம்மையிலும் மறுமையிலும் நீயே என் தெய்வமப்பா
அம்மையப்பன் நீ என்று உன்காலில் வீழுகின்றேன்
உம்மையே துதிசெய்யும் ஏழை முகம் காணவேண்டும்.

1487. மந்திரங்கள் அறிந்தவனே மறைநான்கும் உணர்ந்தவனே
தந்திரமாய் பிஞ்சு உடலை வெதும்பிடச் செய்ததேனோ
அந்திரத்தில் அலைபாயும் பிள்ளைமுகம் கண்டுநீயும்
ஈந்திட வேண்டுமப்பா உணர்வு அனைத்தும் மீட்டுமப்பா.

1488. பந்தபாசம் தந்து விட்டாய்
பந்துபோல வீசிவிட்டாய்
தந்துநீயும் உதவவேண்டும்
மனக்கதவை திறக்கவேண்டும்.

1489. கெஞ்சுகின்றேன் உன்காலடியில் வேதனையை அறியவேண்டும்
அஞ்சல் எனச்சொல்ல வேண்டும்
எஞ்சி நிற்கும் உணர்வுகளை மீட்டவேண்டும் உடனடியில்
தஞ்சமென்று வந்தவரை தள்ளுவது முறையல்ல.

1490. காளைமேல் அமர்ந்தவனே மூவுலகும் அறிந்தவனே
இளைப்பாற உன்மனது தேற்றுவது உன் இயல்பு
களைப்பில்லா வாழ்வுதனை மறுக்காமல் தருபவனே
களையணைத்தும் எடுத்திடுவாய் நல்மனதை தந்திடுவாய்.

1491. தாயுமானவன் பெயர் பெற்றாய்
காயுமில்லை, கனியுமில்லை எல்லாமே நீயாவாய்
சாயும்உந்தன் மனம் பக்தர்துயர் தெரிந்துவிட்டால்
ஓயும் வரை உதவிடுவாய் ஓடோடி வந்திடுவாய்.

1492. நல்விதையை விதைத்திடுவாய் பயிர்தன்னை காத்திடுவாய்
இல்லமதில் விளங்கிடுவாய் ஓங்குபுகழ் தந்திடுவாய்
அல்லல்தனை களைந்திடுவாய் ஆக்கமதை ஊக்குவிப்பாய்
பல்லுலகம் அசைந்திடுவே உன் அசைவால் ஒளிகிடைக்கும்.

1493. காலத்தில் மூத்தவனே முடிவில்லா ஆண்டவனே
உலகெல்லாம் பிறப்பித்தாய் அண்டமெல்லாம் அணைத்திட்டாய்
கலமாக நீயிருந்து உடன்பிறப்பை காத்திடுவாய்
கோலமென ஒளிர்ந்திடுவாய் ஓல்குபுகழ் அடைத்திடுவாய்

1494. பார்புகழும் உன்னாற்றல் கண்டு
கார்முகிலால் உய்த்திடுவாய் உலகை எல்லாம்
ஆர்வமுடன் அழைப்பவரை அன்போடு அழைத்திடுவாய்
ஈர்த்திடுவாய் உயிரனைத்தும் உன்பெருமை அறிவதற்கு.

1495. புகழாரம் சூட்டுதற்கு எளியவனாய் உள்ளேன் நான்
அழகான உன்எழிலை காண்பதற்கு வழியில்லை
தோழனாக வந்துநீயும் தோள் கொடுப்பாய் பக்தனுக்கு
பழமாக தோன்றும் உன்னை காணும்நாள் எந்நாளோ.

1496. குலம் தழைக்கச் செய்திடுவாய் குற்றமதை மறந்திடுவாய்
உலகுதனை கொடுத்தவனே உய்யும்வகை அறிந்தானே
நிலமதில் உன்பெருமை சாற்றதற்கு வந்துவிடு
நலமான வாழ்வுதனை வளமாக தந்துவிடு.

1497. அடியார்க்கு அருளிடுவாய் மனநிறைவை நல்கிடுவாய்
தேடிஉனை அறிவோரை தேன்புகழால் காட்டிடுவாய்
ஓடிஉனை அணைவோரை அள்ளி அணைத்திடுவாய்
பாடி நித்தம் அழைப்போரை அருளோடு ஏற்றிடுவாய்.

1498. உன்மனதை திறப்பதற்கு நாளும் பாடிடுவேன்
என்மனதை காட்டுதற்கு நாளும் அழைத்திடுவேன்
அன்புடனே அழைத்திட்டால் தாயெனவே வந்திடுவாய்
ஆன்றோனாய், சான்றோனாய் உனை நித்தம் துதித்திடுவேன்.

1499. இடைவிடாது உன்னடியை நாளும் சரணடைவேன்
மடைதிறந்த உன்அன்பு மழையில் நாளும் நனைந்திடுவேன்
விடைதரும் உன்வாயமுதை நாளும் நோக்கிடுவேன்
தடைஏதும் இன்றி தயவாக வந்துவிடு.

1500. கொடை வள்ளல் நீயென்று தவறாது கேட்டிடுவேன்
படைத்திடுவேன் பாவால் உன்அன்பை பெறுவதற்கு
சடைமுடியாய் இருப்பவனே, உன்அமுத மொழிகாட்டிவிடு
நடைபயில வைத்துவிடு, நல்லமொழி கூறிவிடு.

1501. தெள்ளுதமிழ் பாட்டாலே உன்அன்பை பெற்றிடுவேன்
அள்ளவேண்டும் உன்அன்பை பருகவேண்டும் உன்எழிலை
தள்ளவேண்டாம் என் கூற்றை
வெள்ளமென உன்அன்பை மறவாது காட்டிவிடு.

1502. கெஞ்சும் மொழி கேட்டிடுவாய் வினை அனைத்தும் அறுத்திடுவாய்
கொஞ்சம் மொழி கேட்பதற்கு காத்திருக்கும் பேதைநான்
வஞ்சம் ஏதும் நினையாதே தஞ்சமதை தந்துவிடு
அஞ்சேல் எனச்சொல்லிவிடு அருளமுதை ஈந்துவிடு

1503. தட்டுகின்றனே் உன்மனதை மனமிரங்கி திறவாயோ
கொட்டுகின்றேன் என்மனக்குறையை தாளாது அரற்றுகின்றேன்
சிட்டாக பறக்கின்றாய் மனதிறங்கி வர மறுக்கின்றாய்
எட்டுதிசையும் உன்புகழை செலுத்துகின்றாய் நாள்தோறும்.

1504. வெண்முகிலே குடைபிடிக்கும் ஆடு அரவம் மணியாகும்
தண்ணொளியே ஒளிகொடுக்கும் இயற்கையன்னை முகம்பார்க்கும்
விண்கதிர்கள் ஒளிபரப்பும் அலைகடல்கள் கொந்தளிக்கும்
கண்போலக் காக்கும் உனை என்மனதில் இடம் கொடுப்பேன்.

1505. பட்டமரம் துளிர்த்துவிடும் காய்கூட கனிந்துவிடும்
இட்டபிணி நீங்கிவிடும் சுட்டவினை அணைத்துவிடும்
விட்டபுகழ் வந்தடையும் எழில் வாழ்க்கை சேர்ந்துவிடும்
தட்டாமல் தரையிறங்கி உன்புகழை உயர்த்திவிடு.

1506. உதவிகேட்டு வருவோரை இல்லை என்று சொல்லாது
ஆதரவு காட்டி, நாளும் காக்க வேண்டி,
இதமாக நல்உணர்வை காட்டி என்றும்
பதமாக வந்திடுவாய் பக்கதுணை கொடுத்திடுவாய்

1507. வேதனையை மாற்றி நீயும் கரம் நீட்டி
உதவி தந்து ஊரறிய உலகறிய
சோதனையை மாற்றி உந்தன் ஒளிதன்னை
பதமாக காட்டிவாய்.

1508. மீட்டவேண்டும் உணர்வுதன்னை உன் உணர்வை பெறவேண்டி
ஆட்கொண்டு பிள்ளைதனை பெருமை தன்னை சேர்க்கவேண்டும்
இட்டபிணி நீக்கவேண்டி, உன் அருளை தேடுகின்றேன்
வெட்டவெளி உன் இல்லம் தேடி உனை அலைகின்றேன்.

1509. அழகான உன் கண்கள் அன்பொளியை காட்டிவிடும்
அழகான உன்கழுத்து விடமதனை தாங்கி நிற்கும்
அழகான உன் சிரமதனில் கங்கைநதிபள்ளி கொள்ளும்
அழகான மதி முகத்தில் முக்கண்கள் நிறைந்திருக்கும்.

1510. விடையாதும் அறியாது பேதலித்து நிற்கும் உள்ளம்
கடைக்கண்ணை நோக்கி காத்திருக்கும் மனம்
அடைகாக்கும் பறவையென்ன எமைகாக்கும் ஈசனே
தடைஏதும் சொல்லாது தரையிறங்கி வாருமய்யா.

1511. கொந்தளிக்கும் உள்ளம்கூட உனைக்கண்டால் ஊமையாகும்
அந்தரத்தில் நிற்கின்ற மாந்தர்கூட உன்னொளியால் ஒளிபெறுவர்
விந்தையனைத்தும் உன்கையில் சிந்தை நிரப்ப வந்துவிடு
தந்தையென நான் நினைப்பேன் பரவசத்தை காட்டிவிடு.

1512. தத்தளிக்கும் பொருள்கூட காற்றசைவால் ஒதுங்கிவிடும்
வித்தையதை அறிந்தவனே தவம்கிடப்பேன் உன்முன்னே
அத்தனையும் உன்பிறப்பு உதவவேண்டும் உன்மனத்தால்
காத்துநிற்கும் உன்குணத்தை அவனியிலே காட்டவேண்டும்.

1513. ஏழ்மையான உள்ளத்தால் உன்னழகை பாடிடுவேன்
தாழ்மையுடன் வேண்டுகின்றேன் ஏற்கவேண்டும் என்உரையை
ஆழ்மனதை அறியவேண்டி தவமாய் தவம்கிடப்பேன்
ஊழ்வினையை அகற்றிடுவாய் எனை ஆளும் ஆண்டவனே.

1514. உன்னைவிட்டால் இவ்வுலகில் பற்றும் துணையார் உளரோ
அன்னையென விரைந்து வந்து இட்டதுயர் நீக்கிடுவாய்
சின்னப் பிள்ளைதனை சீர்தூக்கி வாழவைப்பாய்
கன்னல் மொழிபேசி கனியமுதை காணவைப்பாய்

1515. நற்குணத்தை நல்கிடுவாய் நலமெல்லாம் அருளிடுவாய்
வேற்றுமையை நினைக்காத பரந்த உள்ளம் தந்திடுக
ஒற்றுமையை நிரப்பிடுக ஓங்குபுகழ் நல்கிடுக
ஏற்றமதை தரவேண்டும்.

1516. நல்லவை நினைத்து நாளும் உனை துதிக்க வேண்டும்
அல்லவை மறந்து நாளும் உனைபோற்ற வேண்டும்
இல்லவை தவிர்த்து நாளும் அருள்புரிய வேண்டும்
ஏல்குபுகழ் அமையும் நிலை நீ அருள வேண்டும்.

1517. அருளான உந்தன் உளம் என்மனதில் நிற்கவேண்டும்
இருளான நினைவுகளை என்உளத்தில் நீக்கவேண்டும்
தருநிழலாய் மற்றவர்க்கு உதவும்குணம் தரவேண்டும்
வரும்துயரை நீக்கிநீயும் மனமகிழ்வை அருளவேண்டும்.

1518. உன்னடியார் போல் நானில்லை என்மனமும் அறியவேண்டும்
அன்பான உன்பதிலை ஆவலடன் காண வேண்டும்
என்புதோல் போர்த்தினாலும் மனமதனை அறியவேண்டும்
தன்னிகரில்லா பரம்பொருளே தயவுடனே வரவேண்டும்.

1519. உருவமின்றி இருந்தாலும் உயிர்பெற்று நிற்கின்றாய்
உருவமது இருந்தாலும் அருவமாக நிற்கின்றோம்
உருமாறி வந்திடுவாய் அணுவெல்லாம் நிறைந்திடுவாய்
உருவமற்ற பரம்பொருளாய் உணர்வுடனே கலந்திடுவாய்.

1520. கண்ணீர்மல்கி வேண்டிடுவேன் என்உணர்வை அறிந்திடுவாய்
காண்பதெல்லாம் உன்எழிலே தெரிவதெல்லாம் உன்உருவே
பண்ணோடு பாடவில்லை எழுதி உன்னை அழைக்கின்றேன்
விண்ணோடு கலந்தவனே மண்ணுலகை காணுமய்யா.

1521. தேடிநித்தம் அலைந்தாலும் உன் உணர்வை அறியவில்லை
பாடிநித்தம் அழைத்தாலும் உன்எழிலை உணரவில்லை
அடி எடுத்து பார்க்கின்றேன் அசைக்கும் வழி தெரியவில்லை
ஓடி ஒளியாது என்னருகே வந்துருப்பா.

1522. வேண்டியதை தந்துநீயும் மனமகிழ்ந்து நிறைவடைவாய்
தண்டிக்க மனமின்றி தயவனைத்தும் தந்திடுவாய்
கண்போல எந்தனையும் நாள்தோறும் காத்திடுவாய்
மண்போல மனம் சலனமில்லா மனம்தன்னை தரவேண்டும்.

1523. தோற்றம் எல்லாம் பிழைகள் அன்றோ, உன்உருவம் எளியதன்றோ
ஆற்றவேண்டும் உன்செயலால் பார்க்கவேண்டும் உன்அசைவால்
பெற்றபிள்ளை நிலைக்கவேண்டம் ஐம்புலனும் இயங்கவேண்டும்
ஆற்றாதுயர் தன்னை உன்அருளால் மாற்ற வேண்டும்.

1524. கற்கவேண்டும் நல்மனத்தை ஈர்க்கவேண்டும் எண்ணமதை
பற்றற்றநிலை வேண்டும் உன்உருவம் அறியவேண்டும்
ஏற்றமிகு நல்உள்ளம் நயமுடனே தரவேண்டும்
வேற்றுமையை தவிர்த்துநாளும் செயலாற்ற வேண்டுமப்பா.

1525. உன்உருவை என்மனத்தில் நாளும் பதித்துடுவேன்
என்மனதை அறிவதற்கு உன்மனதில் இடம்வேண்டும்
கன்னல் போல்உன்மனது நாளும் இனிக்க வேண்டும்
மின்னலென வந்துவிடு என்மனதை அறிந்துவிடு.

1526. பொறமை என்னும் ஓர்வார்த்தை என்மனத்துள் புகவேண்டாம்
ஆறாத வெறும் வார்த்தை என் மொழியில் வரவேண்டும்
தேறாத துர்குணங்கள் என்மனத்தே வரவேண்டும்
மாறாத அன்புதனை நாளும் தரவேண்டும்.

1527. பெற்றவனாய் வந்துநீயும் உற்றதுயர் நீக்கிடுவாய்
வற்றாத வள்ளல்குணம் உந்தனிடம் உள்ளதப்பா
கற்கவேண்டும் உந்தனிடம்
நிற்கவேண்டும் உன்முன்னே நாளும் எளியவனாய்.

1528. வார்த்தைகளால் விளங்கவைக்க முடியாத பராபரமே
பார்வையினால் காணமுடியாத ஆனந்த மானவனே
ஆர்வமுடன் அழைத்தாலும் அறியமுடியா ஆனந்தகூத்தனே
தேர்ந்தெடுக்க உன்மனதை அறியாத எளியவனே.

1529. புனல்சூடி அணிந்துநீயும் உருவமாக அருள்கின்றாய்
அனல்போன்ற முக்கண்ணால் உலகெல்லாம் ஆள்கின்றாய்
தனலாக தவிக்கின்ற உள்ளமதை மதிசூடி குளிர்விப்பாய்
மனம் என்னும் ஓடைதன்னிலன் வரும் நாளும் எந்நாளே.

1530. கொன்றை அணிந்த பெருமானே, மனம் நிறைந்த அருளாளா
தன்னிகரற்றவனே, எளியவனாய் ஓடிவரும் அப்பனே
உன்னிடத்தில் கைகூப்பி வருபவரை ஏற்றுநிற்கும் தகையோனே
என்மனத்தே குடிபுகுந்து அருளவேண்டும் தேனிசையே.

1531. இமைப்பொழுதும் மறவாத உன்எண்ணம் வந்திடுக
உமையவனை கொண்டுநீயும் உட்புகுவாய் என்மனத்தே
ஊமையென உறங்குகின்ற உள்ளமதில் புகுந்திடுவாய்
எமைகாக்கும் மருந்தாக எழுந்திடுவாய் என் அகத்தே.

1532. பெருவாழ்வை என்மனத்தே தந்துநீயும்
அருகாமை கொடுத்தருளி உன்னருளை
தருகின்ற பொற்குடமாய் என்மனத்தே
தென்றலென ஒருமையுடன் வரவேண்டும் என்மனத்துள்ளே.

1533. கோடிகொடுத்தும் உன்அருளை பெறுவதற்கு
தேடி நிற்கும் பக்தர் முன்னே
ஓடி வந்து உனைக் காட்ட
ஆடிநிற்கும் சிற்றம்பாத்து ஆண்டவனே.

1534. அன்புருவே அடைக்கலமாய் வந்த என்னை
உன்னருகே இடம்அளித்து மனமிரங்கி
என்மனதை ஆட்கொண்டு வழித்துணையாய்
கன்னலென என்னருகே வந்திடுவே.

1535. அருட்பெருந்துணையென மனமிரங்கி
தடு நிழலாய் இதமளித்து குளிர்தந்து
இருப்பதற்கு உன்மனதில் இடம்கொடுத்து
ஆருயிராய் வரவேண்டும் பரம்பொருளே.

1536. அருட்பார்வை கிடைப்பதற்கு ஏங்கி நிற்கும்
பெருமையில்லா சிறியேன் எனை நாளும்
அருமையுடன் எனைப் பேணி வண்ணமுடன்
இருப்பதற்கு வரவேண்டும் என்னமுதே.

1537. தேர்ந்தெடுத்து குழந்தை தன்னை உன்
பார்வை தன்னை காட்டி, சேயாக
ஆர்வமுடன் அவன் மீது அருள்காட்டி
சேர்ந்திடுவாய் அவனுடனே.

1538. அன்பே உருவமாக அவனியிலே வந்து
நின்று உன் எழிலை காட்டி
இன்முகத்தால் வழித்துணையாய் அன்பருக்கு
என்றும் தெரிபவனே.

1539. வருங்காலத் துணையாக என் மனத்துள்
பேருருவம் நீ எடுத்து எக்கணமும்
உருவமுடன் என்னுள்ளே நீ சென்று
அருளவமாக வரும் தேனே.

1540. உன்னுள்ளே அடங்கிடுசூவன் உணர்வோடு கலந்து
ஆன்றோனாய் உனை ஏற்று அன்புடனே
இன்சொல்லால் உனை துதித்து வணங்குவோர்க்கு
உனதன்பை காட்டுவாயே.

1541. வருந்தகின்றேன் உனை வணங்கும் நேரம் குறைவதனால்
தருகின்றேன் உள்ளமதை ஏற்க வேண்டும் மறுக்காமல்
அருமையான உன் உள்ளமதை சிந்தையிலே ஏற்றுநாளும்
ஆருயிராய் வரவேண்டும் என்மனத்துள்ளே.

1542. புனல்போல வந்துநீயும் என் உள்ளமதில் நிறைந்து
கனல்போல என்மனதில் நாளும் ஒளிப்பிழம்பாய்
மனமெல்லாம் குளிர்வித்து விண்மதியாய்
எனதருகே வரும் தேனே.

1543. உள்ளமதை தந்துவிட்டேன் உணர்வோடு வாழ்கின்றேன்
அள்ளித்தரும் உன்கைகள் அன்புதரும் உன்நெஞ்சம்
தள்ளாத உன் எண்ணம் ஆள்கின்ற அருட்பண்பு
கள்ளமில்லாது நிறைந்திடுமே.

1545. தயவுடனே அழைத்திடுவேன் மறுக்காமல் வந்துவிடு
அயராது உச்சரிப்பேன் உன்நாமம் ஒலித்திடுமே
தாயாக உனை நினைத்து நித்தம் உனை துதித்து
ஓயாது அழைப்பேனே.

1546. கூவி உனை அழைத்திடுவேன் உனை ஏற்றி பாடிடுவேன்
ஈவிரக்கம் காட்டவேண்டி உனைத்தேடி அலைகின்றேன்
கழைந்து நிற்கும் என்மனத்தை உன்கரத்தால் ஏந்தி
பாவி எனை காக்க வேண்டுகின்றேன்.

1547. முறையோடு கேட்கின்றேன் கரம் கொடுத்து
இறையாக என்முன்னே நீயும் வந்து நின்று
உறைவிடமாய் உன்மனதை எளியவன் என்தனக்கு
பறை சாற்றி தரும் நிழலே.

1548. அழகெல்லாம் உன் இருப்பிடமே ஆன்றறிந்த அறிவெல்லாம்
பழமான உன் உள்ளமதில் தோன்றல் தானே
ஆழமான உன் நினைவை அகற்றாது என் மனத்துள்ளே
உழல வேண்டுவனே.

1549. எட்டாத உச்சியிலே இருக்கும் உனை
மட்டற்ற அன்பினாலே அழைத்து நாளும்
ஊட்டிடுவேன் உன் உள்ளமதில் என் சொற்களாலே
ஆட்டுவிப்பேன் உன் எண்ணமதை அன்பினாலே.

1550. அருட்ஜோதி ஒளிப்பிழம்பாய் என் மனத்துள்ளே
வருவதேனோ உனையன்றி வேறு துணை
பெருமையுடன் சொல்வதற்கு யாருமில்லை
ஆருயிரே என் மனத்தேனே.

1551. முக்கண்ணை முகத்தில் கொண்டாய் உனை
எக்கணமும் மறவாத உள்ளம் தந்தாய்
ஊக்கமதை தந்து நாளும் உனைமறவா
பக்கபலம் தந்த பரம்பொருளே.

1553. வளம் காண விழைந்து உன்னை
அளவற்ற அன்பினாலே நாளும் என்
உளமதிலே கொலுவேற்றி மறவாது சிந்தனையை
தளமாக்கி ஏற்றுவேனே.

1554. படும்துயரை பனிபோல நீக்கி நீயும்
விடுபட வைத்திடுவாய் உன்புகழை
எடுத்துரைக்கும் ஏழை எந்தன் மனம்
ஆடுதே உன்முகம் காணவே.

1555. தவித்திருக்கும் மழலை மனம் அறியாயோ
ஈவிரக்கம் வேண்டி உன்முன்னே காத்திருப்பேன்
கவிழ்ந்திருக்கும் என்மனதை நிமிர்த்தி காட்ட மாட்டாயோ
பாவி என் வேண்டுகோளை செவிமடுக்க வேண்டுவனே.

1556. சிந்தனையை உன்முன்னே குவித்து நெஞ்சமெல்லாம்
தந்தையென உந்தனையே நினைந்து கரம்கூப்பி
அந்தமில்லா உன்புகழை பரப்பி என்றும்
வந்திடுவேன் நொடிப் பொழுதும் உன்னருகே.

1557. புனல்சூடி கன்னலென என் முன்னே
அனலான முக்கண்ணை தண்ணொளியாய் மாற்றி
இனமாக எனை எற்று உன்காலடியில்
உனதடிமையென ஏற்றிடுவே.

1558. பாட்டுடைத் தலைவனென என் முன்னே வந்திடுவாய்
கேட்டுன்னருளை மனங்குளிர பெற்றிடுவேன்
தட்டாமல் வந்துநின்று என்மனதை அறிந்துகொள்வாய்
மட்டற்ற இன்பமதை மறவாமல் ஈந்திடுவே.

1559. புரியாமல் தவிக்கின்றேன் உன்மனதை தெளியவைக்க
அரிதான உன்மனத்துள் இருக்கும் எண்ணம் புரியவில்லை
யாரிடம் நான் எடுத்துரைப்பேன் மனத்துயரை நீக்குதற்கு
உரிமையுடன் அழைத்திடுவேன் வரவேண்டும் என்முன்னே.

1560. காண்பதற்கு அரியவனே அரிதான பரம்பொருளே
எண்ணமதில் இடம்பிடிப்பாய் குறையாது நிறைந்திருப்பாய்
வண்ண நிறம் படைத்தவனே வளம் கொடுக்க வந்திடுவாய்
விண்ணுலகை விடுத்துநீயும் வரவேண்டும் என் மனத்துள்ளே.

1561. குற்றமது செய்திடினும் குறைதீர்ப்பாய் என்னமுதே
ஆற்றி நிற்பாய் உன்கருணை எடுத்துரைப்பாய் என்மனத்துள்
வேற்று துணை வேண்டாது உன்காலடியை ஏற்றிடுவேன்
பற்றும் கோல் நீதானே.

1562. பறவையென நானிருந்தால் சிறகென வந்துவிடு
அறமாக நீயிருந்தால் உரமாக நான் வருவேன்
மறக்காமல் உனை அழைத்தால் உடனே வந்துவிடு
தேறவேண்டும் என்மனது உன் கருணை மழையாலே.

1563. ஆண்டவனே உனையன்றி பற்றதுணை யாருமுண்டோ
வேண்டி உனை அழைத்திடுவேன் மறுக்காமல் வருவாயோ
தண்டிக்கும் மனதின்றி தீவினையை அகற்றிவிடு
கண்டு எனை ஆண்டருளும் மானே.

1564. பிஞ்சுமுகம் தெரியலையோ வஞ்சமதை நீக்கிவிடு
நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என்அன்பை அறியாயோ
வெஞ்சினத்தை அகற்றிவிடு என்மனதை அறிந்துவிடு
தஞ்சமென கரம்கூப்பி எனை காணோயோ.

1565. கரையாத கருங்கல்லும் உன்கடைக் கண்ணால் கரைந்துவிடும்
இரையாக மாற்றாது குழந்தை தன்னை வாழவிடு
தரையிறங்கி வாருமப்பா மழலைமுகம் காணுமப்பா
வரையோடு அழைத்தாலும் வரமறுப்பதேனோ.

1566. அருவியென அன்புதனை புனல்போல காட்டிடுவாய்
ஆருயிராய் என்னருகில் வந்து எனை அணைத்திடுவாய்
பெருமையுள்ள தந்தையென என் அன்பை அறிந்திடுவாய்
அருமையான உன்மனதை அறியும்நான் எந்நாளோ.

1567. வெண்முகிலாய் வான்மீது உலவுகின்ற ஈசா
அண்மையிலே வந்துநீயும் அன்புமழை காட்டிடுவாய்
தண்ணொளியை தருகின்ற பகலவனாய் வரும் நாதா
கண்போல காப்பாயோ.

1568. ஆனந்த நடராசா, அன்புகாட்டும் மருதீசா
கனல்போல இருக்கும் உள்ளம் தண்ணீராய் உருகுதப்பா
அனல் கக்கும் விழிகள் கூட தண்ணீரை சொரியதப்பா
எனதன்பை அறிவாயோ.

1569. விரிசடையை தலையில்வைத்து அன்புமலர் கண்ணில் கொண்டாய்
அரிது உந்தன் மனமறிதல் தேர்ந்தெடுப்பேன் உந்தன் உள்ளம்
உரிமை உண்டு எந்தனக்கு உந்தன்பெயர் அழைப்பதற்கு
காரிருளை நீக்கி வெளிச்சமதை தருவாயோ.

1570. ஆண்டவனே உன் அருட்பெருஞ் செயலை காணும் நாள் எந்நாளோ
அண்டிநிற்கும் எளியோரை தாங்கிநிற்கும் உன்கரங்கள்
வேண்டி நித்தம் வணங்குவோர்க்கு எளியவனாய் வந்திடுவாய்
விண்ணோடு உறவாடும் என்மனத்தேனே.

1572. மௌனமே மொழியாக்கி தியானத்தில் உறைபவனே
மௌமெனும் குணத்தாலே உலகெல்லாம் ஆள்பவனே
மௌனமாய் இருந்துநீயும் என்குறையை அறியாயோ
மௌனமாய் இருப்பதேனோ எம்பொருளே.

1573. வலியில்லா மனமதனை தரவேண்டும் என்னருளே
கலியுகத்தின் வேந்தனப்பா என்மனத்துள் அரசனப்பா
நலிவடைந்த என்மனத்தை சீர்தூக்கும் மன்னனப்பா
ஒலிக்க வேண்டும் உன்நாமம் என்மனத்தே.

1574. அருட்ஜோதியென உலகமெங்கும் ஒளிதருவாய்
பெருமையுடன் உன்னருளை காட்டி நிறைத்திடுவாய்
சேருமிடம் உன்காலடியில் வேண்டி நிற்பேன் உன்னருகில்
தருணமதை பார்த்திருந்து வரும் பூவே.

1575. நாவுக்கு அரசனாக நற்பெயரை பெற்றவனே
தயவுடனே அழைக்கின்றேன் தயங்காமல் வந்துவிடு
என்குறையை தீர்த்துநீயும் ஆதரவை தந்துவிடு
உன்கருணை உலகமெங்கும் தெரியும்வழி செய்துவிடு.

1576. உன்தயவை அடையும் வழி தெரியவில்லை எந்தனக்கு
என் உணர்வை அறிந்துநீயும் இயைபுடனே வந்துவிடு
மன்னிக்கும் குணமுடைய உன்காலடியை பற்றிடுவேன்
அன்னையென பரிவுகாட்டி பாசமுடன் வந்திடுவாய்.

1577. விரிசடையை தலையில்வைத்து மதிதன்னை ஒளிரவிட்டாய்
எரிகனலை கண்ணில் வைத்து குளிர்திங்கள் சடையில்வைத்தாய்
காரிருளை நீக்கிநீயும் பகலவனாய் ஒளிதருவாய்
உரிமையுடன் அழைப்பதற்கு உனையன்றி யார் உளரோ.

1578. அம்மா என அழைத்தும் செவிமடுக்க மறுப்பதேனோ
இம்மையிலே உனை துதிப்பேன் உன்காலடியை சரணடைவேன்
உம்மை வந்தடைந்தோரை வழிநடத்தல் நியாயமன்றோ
நம்பிவந்து நின்றோரை தாங்கிடுதல் வேண்டுமன்றோ.

1579. அடிகான முடியாத உன்னருளை பெறவேண்டும்
தேடி உனை கண்டுநானும் என் முறையை கூறவேண்டும்
பாடி நித்தம் அழைத்து உன்னை கண்டெடுக்க வேண்டும்
கூடி நிற்கும் கூட்டத்திலே எனைக் காணவேண்டும்.

1580. மதிசூடி மலரனிந்து நிற்கும் நடராசா
உதிக்கின்ற பகலவனும் உனைக்கண்டு ஒளியுமப்பா
துதிக்கின்றேன் நாளும் உனை மனமுருக வேண்டி
கதியென்று உன்காலடியை சரணடைவேன் நானே.

1581. சிந்தைனையை உந்தனிடம் செலுத்திவிட்டேன்
வந்தனம் கூறி வாய்நிறைய வாழ்த்திவிட்டேன்
ஈந்திடுவாய் உன்கருணை அருளிடுவாய் நல்லதொரு வார்த்தை
தந்தையென அழைப்பதற்கு என்னருகே வந்திடுவே.

1582. விதிதன்னை மாற்றிநீயும் உன்பெருமை காட்டிடுவாய்
ஆதியில்லா பரம்பொருளே அந்தமில்லா வாகீசா
உதிக்கின்ற பகலவனாய் மாறுகின்ற இயற்கையென
கதியென்று இருக்கின்ற அடியவர்க்கு தெரிபவனே.

1583. வாடுகின்ற உயிர்களுக்கு ஊற்றாக இருப்பவனே
தேடுகின்ற அன்புதனை தெவிட்டாது தருபவனே
பாடுபடும் பிஞ்சுதனை பாராமல் இருப்பதேனோ
ஆடுகின்ற நடராசா என்குறையை தீராயோ.

1584. துடிக்கின்ற புழுபோல தவிக்கின்ற மனதைப்பார்
அடிஇல்லா ஆண்டவனே முடிகாணா மூத்தவனே
தேடி உனை காண்பதற்கு பாட்டெழுதி அழைக்கின்றேன்
ஆடிநிற்கும் உன்னருளை பெறுவது எந்நாளோ.

1585. மலைமீது உறைபவனே உமையவனை அணைந்தவனே
அலைகடலாய் எழுபவனே அன்புருவம் கொண்டவனே
கலையனைத்தும் உன்வடிவில் ஆடலுக்கு தலைமகனே
விலையில்லா பெருந்தகையே.

1586. பித்தா, நாவுக்கு அரசே, பெருமானே வாகீசா
உத்தமன் உனை நாளும் வருந்தி அழைத்திடுவேன்
இத்தருணம் வந்துநீயும் உன்முகத்தை காட்டிவிடு
ஈத்துவக்கும் நாள் சொல்லாயோ.

1587. விட்டுவிடும் எண்ணமதை உன்மனத்தில் அகற்றிவிடு
ஆட்கொண்டு என்மனதை உன்னிடத்தில் இருத்திவிடு
பட்டதுயர் நீக்கிநீயும் நல்வாழ்வு தந்துவிடு
இட்டகுறை மறையும் நாள் எந்நாளோ.

1588. தொடருகின்ற துயர்அனைத்தும் உன்னொளியால் விலகிவிடும்
கடல்போன்ற உள்ளமதில் ஓர்துரும்பாய் ஏற்றுக்கொள்
இடர்வந்த போதினிலும் உன்கழலை தொழுது எழுவேன்
ஊடகமதை உன்மனத்தை நாளும் பற்றுவேனே.

1589. விடமதனை கழுத்தில் கொண்டாய்
படம் எடுக்கும் பாம்புதனை தலையில் கொண்டாய்
மடமான உள்ளமதை நெஞ்சில் வைத்தாய்
ஆடலரசாய் அம்பலத்தில் இருப்பதேனோ.

1590. குறையாத அன்புதனை வற்றாது காட்டிடுவேன்
மறைநான்கும் அறிந்த உன்னை மனதாலே வணங்கிடுவேன்
இறையன்பு நீயென்று மறவாது துதித்துடுவேன்
உறைவாயே என்மனத்தின் தேனே.

1591. சலியாது அழைத்தாலும் மறைந்து இருந்து பார்ப்பதேனோ
பலியாக குழந்தை தனை உனதாக்கி மகிழ்வதேனோ
கேலிசெய்யும் பொருளாக படைத்திருக்கும் காரணமேனோ
வலித்திருக்கம் என்மனதை நீயும் அறியாயோ.

1592. பசியோடு காத்திருப்பேன் உன்னருளை பெறுவதற்கு
கசியாதோ உந்தன்மனம் உருகாதோ உந்தன்உளம்
ஆசியை நல்கிநீயும் நலமான வாழ்வுதனை தாராயோ
பேசி உன்னை அழைப்பேனே.

1593. திருவாக்கு தரும் நாளை அறிவதற்கு காத்திருப்பேன்
அருவிருந்தாய் உன்வாக்கை தெரிவதற்கு விழித்திருப்பேன்
திருவிளக்காய் நீவந்து ஒளிவாழ்வை தரவேண்டி
அருமையான உள்ளமதால் துதித்திருப்பேனே.

1594. விளக்கொளி போல் ஒளிவீசும் நாள் எந்நாளோ
ஆளவந்த குலவிளக்கை மறைப்பதும் சரிதானோ
உளமுருகி அழைத்திடுவேன் உனைக்காண ஏங்கிடுவேன்
இளகி வரும் நாள் எந்நாளே.

1595. கனவு கண்டு காத்திருப்பேன்
இனம் கண்டு வந்திடுவாய்
ஈனம் என தள்ளாதே
தானமாக தரவேண்டும் நல்லுணர்வை எந்நாளும்.

1596. வனமெங்கும் திரிந்தாலும் வளமெங்கும் தந்திடுவாய்
மனமெங்கும் நிறைந்திருப்பாய் என்மொழியில் வளர்ந்திருப்பாய்
அனலாக ஒளிரிந்திருப்பாய் நீக்கமற வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1597. காதலாகி பற்றிடுவேன் மனமுருகி வேண்டிடுவேன்
வேதமெல்லாம் அறிந்தவனே என்மனதை அறியாயோ
பேதமில்லா உன்மனத்தை அன்பாலே பற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1598. கசிந்துருகி அழைப்போர்க்கு மனமிரங்கி அருள்பவனே
ஊசிமுனை நிற்பதுபோல் என்மனது கலங்குவதேன்
ஆசிதனை வழங்கிவிட்டால் வருந்தமுறும் மனமேது
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1599. விடமதனை அணிந்துநீயும் விண்ணுலகில்
இடம்கொடுத்து ஓங்குபுகழ் பெற்று
ஆடலரசாய் உலவி வரும் வன்னிநாதா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1600. கண்ணீர்மல்கி வேண்டுவோர்க்கு தமக்கு
எண்ணமெல்லாம் நிறைந்து நின்று
உண்மைதனை உணர வைக்கும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1601. மெய்யுணர்வு காட்டி உள்ளுணர்வு ஊட்டி
தாய் அன்பை புரியவைத்து உன்னன்பை உணர்த்துதற்கு
சேய்போல எனைக்காக்கும் என்னீசா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1602. தேனாகி, தெள்ளமுதாய் என்னுயிராய்
ஊனாகி, உள்ளன்பாய் கரும்பாகி
கனவாக நில்லாது, நினைவாகி வருகின்ற
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1603. நினைவெல்லாம் நிறைந்திருக்கும் குணக்குன்றே
அனைத்துமாய் நிற்கின்ற பெருங்கடலே
உனையன்றி பற்றதுணை யாருமில்லை ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1604. அருவமில்லா ஆண்டவனே உனை நினைத்து
ஆருயிராய் நாளும் வணங்கி நிற்கும்
ஈருடலாய் நிலைத்திருக்கும் உனதன்பை நாடிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1605. சுகமெல்லாம் பெற்றிடுவேன் உனதன்பை
அகமெல்லாம் நினைத்து ஏங்கி உன்னருளை
வேகமுடன் பற்றிடுவேன் மேகமாக செல்லாதே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1606. வான்முகிலும் நீயே ஓடுகின்ற நதியும் நீயே
மின்னுகின்ற சுடரும் நீயே வீசுகின்ற தென்றல் நீயே
அன்புடனே அரவணைக்கும் தாயும் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1607. பிள்ளைமொழி பேசும் பைந்தமிழும் நீயே
அள்ள அள்ள வரும் அன்புச் சுரபி நீயே
கள்ளமில்லா உன்சிரிப்பால் பிள்ளையண்டி கண்டேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1608. உதிக்கின்ற ஒளிக்கதிரே வீசுகின்ற தென்றல் நீயே
துதிக்கின்ற ஆண்டவனே தெரிகின்ற சுடர்விளக்கே
பாதியுடல் தந்தவனே என்மனதைக் கவர்ந்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1609. நிரப்புகின்றாய் என்மனத்தை உன்நினைவால்
இரக்கின்றேன் உன்னிடமே என்மனத்தால்
தரவேண்டும் மனமிறங்கி என் உளமறிந்து
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1610. பரப்புகின்ற மனமதனை என் மனத்துள்
கரம்பற்றி ஈர்த்திடுவாய் உன் மனத்துள்
அரவு சூடி வீற்றிருப்பாய் மலைமீது
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1611. மனத்தாமரையுள் வீற்றிருப்பாய் அன்னையென
இனமறிந்து பற்றிடுவாய் தந்தையென
மனமறிந்து தேர்ந்தெடுப்பாய் பெற்றவனாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1612. கற்றிடுவேன் உனதன்பை பெறுவதற்கு
பற்றிடுவேன் உன்பாதம் எழுவதற்கு
ஆற்றிடுவேன் தொண்டுனக்கு எனதன்பை காட்டுதற்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1613. பாசமுள்ள பெற்றவனாய் தெரிகின்றாய் என்தனக்கு
நேசமுள்ள பிள்ளையென உருகின்றாய் என்முன்னே
வாசமுடன் பரப்புகின்றாய் அன்புதனை என்மனத்துள்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1614. ஆதியும் அந்தமும் இல்லா ஆண்டவனே
பாதி பாசம் ஈந்துஉன்னை பெருமை தன்னை தந்தவனே
ஓதி உணர்வதற்கு உருவமில்லா பரம் பொருளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1615. நல்லகதி அடைவதற்கு உன்பதத்தை பற்றிநாளும்
அல்லல்தனை நீக்கி மக்கள்மனம் உணர்ந்து என்றும்
மல்லல்மா ஞாலத்தை அருளுகின்ற அருட்புதல்வா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1616. தொழுதிடுவேன் ஓய்வின்றி நினைத்திடுவேன் மனத்தாலே
ஒழுகிடுவேன் நற்பண்பை உயர்த்திடுவேன் உன்பெருமை
தழுவிடுவேன் உன்பதத்தை பற்றிடுவேன் உன்மனத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1617. ஓங்குபுகழ் பெற்றஉனை மனத்தாலே
அல்லலின்றி மாசற்றபுகழ் கொண்ட உன்தனையே
ஆல்போல நினைற்று உனைஏத்தி வணங்குகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1618. அருவமின்றி உருவமின்றி விரிந்திருக்கும்
திருவே உனைவேண்டி உருகி நிற்கும்
ஆருயிரே மாசற்ற மணிச்சுடரே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1619. நெக்குருகி வேண்டிநிற்கும் என்மனதை
இக்கணமே அறிந்துநீயும் என்தனக்கு
தக்கதுணை தந்துநீயும் உன்னருமை காட்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1620. கசிந்துருகும் என்மனத்தை நினைந்து நீயும்
ஆரிதனை தந்தருளி உன்பெருமை வெளிக்காட்டி
உசிதமான தருணமென்று நினைற்று நீயும் வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1621. ஆற்றொணா துயர்நீக்கி மனமிரங்கி
பெற்றவன் நீயென்று மனமிளகி
பற்றதுணை தருகின்ற மருதீசா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1622. செஞ்சுடரை தலையில் ஏந்தி
தஞ்சமென வருபவரை மனதில் ஏற்றி
கெஞ்சுகின்ற எந்தன்மொழி ஏற்பாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1623. புனல்போன்று அருந்துயரை துடைத்து
மனமிரங்கி வருந்துயரை நீக்கி
இனமிறந்து ஏற்கின்ற வாகீசா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1624. வெந்தனலில் வீற்றிருக்கும் சிவப்பழமே
இந்நிலையை மாற்றிடுவாய் எனநினைந்து
உந்தனையே சரணமென்று பற்றிடுவேன் உன்பதத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1625. தந்திரங்கள் செய்து அடியவரை காத்து
உந்தனையே நினைக்கும் வண்ணம்
எந்தையாக வந்துநிற்கும் ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1626. முக்கண்ணால் அறிந்து நீயும் உன்
ஆக்கமதை காட்டி எந்நாளும்
காக்கும் கரங்களென எனைநோக்கி வருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1627. வளம்தருகின்ற வண்ண முகிலே
அளவில்லா அன்பு தரும் விண்மீனே
தாளமென நீவருவாய் நான் ஆடும் போதினிலே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1628. பெறவேண்டி உன்னருளை நாளும் தவம்கிடப்பேன்
ஆறவேண்டி ஆற்றிடுவாய் உனதன்பால் மாற்றிடுவாய்
உறங்குகின்ற உன்மனதை துயில் எழுப்ப விழைகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1629. வற்றாத சுரபியென உனதன்பால் நிறைந்திடுவேன்
மாற்றிடுவாய் படும்துயரை தந்திடுவாய் உனதன்பை
பற்றிடுவேன் உன்மனத்தை என்பாட்டாலே நிரப்பிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1630. மூவுலகுக்கும் வேந்தன்நீயே அடி முதல் இல்லாதவனே
தாவுகின்ற என்மனத்தை தடுத்தாளும் வேந்தன்நீயே
நாவுக்கு அரசனப்பா உன்னசைவே உலகமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1631. மீனாட்சி பாகம் கொண்டு வன்னிமரம் நாடி
தேனாக, கரும்பாக இனிமைதனை மனத்தில் கொண்டு
மானாக, துள்ளிவிடும் கொன்றை வேந்தே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1632. நயமாக உனை அழைத்து மனத்திலே உனை இருத்தி
வயப்படுத்த விழைகின்ற என் உள்ளமதை ஏற்று
தயங்காது எனை ஏற்று உளமாற வருந்தேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1633. உனதன்பை பெறவேண்டி நெக்குருதி
இனமறிந்து தொழுதிடுவேன் உனைப் பற்றி
மனதறிந்து வந்துவிடு செயல்தன்னை காட்டிவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1634. கங்கைதனை பிறையில் சூடி
அங்கமெங்கும் நீறு பூசி
தங்கிடுவாய் அன்புடனே என்மனத்தில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1635. தாயாகி மனமுவந்து என்மனத்துள்
சேயாகி என்முன்னே வந்துநீயும்
காயாகி நிற்காது கனிந்துதவி தாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1636. விடமுண்ட கண்டனே உன்மனத்தில்
இடமெனுக்கு தாராயோ
இடபமதில் ஏறி உலவி வரும் சுந்தரேசா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1637. கண்டமதில் விடம் கொண்டு அஞ்சியோரின்
எண்ணமதில் இடம் கொண்டு
விண்மீது வீற்றிருக்கும் என்னப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1638. தோற்றமதை தந்தநீயும் ஏற்றமதை தாராயோ
தேற்றிடுவாய் என்மனத்தை காத்திடுவாய் பாலகனை
காற்றுப்போல் வந்துநீயும் என்மனத்தை அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1639. இட்டதுயர் நீங்கவேண்டும் பற்றும் துணையாக வரவேண்டும்
வெட்டவெளியில் வீற்றிருக்கும் என் ஈசா நீ வரவேண்டும்
கட்டுண்டு அன்பினிலே கருத்தாக வரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1640. உருகிநிற்பேன் உனைக்கண்டு
அருகில் வர ஏன் தயக்கம்
தருநிழலாய் குளிர்ச்சிதனை எனக்குவந்து தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1641. அருமருந்தே ஆனந்தத்தேனே
தருநிழலே பேரானந்தமே
ஆருயிரே எனையாளும் ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1642. மாணிக்கமே மரகதமே என்மனத்தே புகுந்தவனே
அணிகலனே திருவிளக்கே பேரனந்தமே
பிணியறுப்பவனே பெற்றவனே நற்றுணையே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1643. பிறவிதனை தந்தநீயும் சிறுமை படுத்துதல் முறையாமோ
ஆறவேண்டும் என்மனது பெறவேண்டும் உன்தயவு
தேறவேண்டும் மனக்குறைகள் தரவேண்டும் உன்கருணை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1644. தங்கவேண்டும் உன்மனத்துள் உன்னொளியை பெறவேண்டும்
எங்கும் நிறைந்திருக்கும் உனைக் காணும் மனம் வேண்டும்
ஓங்குபுகழ் உடையவனே உனைத்தொழுதேத்த வேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1645. பதத்திலே மனப்பற்றி மனத்துயரை மாற்றிடுவேன்
ஆதரவு காட்டுகின்ற உன்கரத்தை பற்றி வருந்துயரைநீக்கிடுவேன்
இதமாக பெற்றிடுவேன் உன்மனத்துள் இடம்பிடிப்பேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1646. தேன்நாடும் வண்டன்ன உன்மனத்தை தேடிடுவேன்
முன்னிய செயல்தேடி வருங்காலம் அமைப்பவனே
வான்முகிலாய் கலைந்திருக்கும் உனைநாடி வருவேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1647. மலைமீது வீற்றிருக்கும் அண்ணாமலையானே
தலைமீது மலர்கொண்டு விடமதனை கழுத்தில் கொண்டாய்
அலைபாயும் மனத்தினிலே உனக்கோரியும் தந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1648. அம்பலத்தை கூத்தாடும் உந்தனையே வேண்டிடுவேன்
அம்மையப்பனாய் வந்தெனக்கு உற்றதுயர் நீக்கிடுவாய்
சும்மா இருக்காது என்மனத்தை அறிந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1649. நெஞ்சுக்கு இனியவனே வேதங்கள் அறிந்தவனே
தஞ்சமென்று உன்கரத்தை பிடிக்குமெனை விலக்கலாமோ
அஞ்சேல் எனச்சொல்லி என்மனத்தை தேற்றுவாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1650. காலமெல்லாம் உனை நினைந்து ஏங்கிடுவேன் என்மனத்துள்ளே
உலகமெல்லாம் உணர்ந்த உன்னை நாளும் நினைக்கின்றேன்
கோலமயில் நீஎனவே, உனைநினைந்து தொழுகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1651. கலையாத மனமும் குறையாத அன்பும்
மலையாத குணமும் மறவாத பண்பும்
அலையாத உள்ளமும் வேண்டுகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1652. நட்டாற்றில் விழ்ந்தாலும் கரையேற்றும் பராபரமே
இட்டதுயர் எதுவெனினும் நீக்குகின்ற தாயன்பே
பட்டதுன்பம் அத்தனையும் உனைக்கண்டு விலகிடுமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1653. தவிக்கின்ற உள்ளமதில் சிலையாக நிற்பாயோ
குவிந்திருக்கும் மனத்தினிலே மலர்ச்சிதனை காட்டாயோ
காவியமாய் தோன்றிநீயும் உணர்ச்சிதனை மீட்டாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1654. ஒளியாகி, ஒலியாகி பஞ்சபூதமென இருப்பவனே
அளித்திடுவாய் அன்புதனை கொடுத்திடுவாய் உன்கருணை
கனியுவகை பெரும் வகையை எந்தனுக்கு தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1655. குமுதவாய் திறந்து நல்வார்த்தை அருளிவிடு
அமுதமான உன்வாய்மலர்ந்து உனதன்பை காட்டிவிடு
அமுதமொழி பேசி உன்மனத்தை திறந்தவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1656. உயிரான உனைநினைந்து நாளும் உருகிடுவேன்
பயிர்காணா மழையென்ன உனைக்காணா ஏங்குகின்றேன்
கோயிலிலே உறைபவனே என்மனத்துள் வருந்தேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1657. பிரகாச பெருவெள்ளத்தில் ஓர் துரும்பு நானப்பா
அரவுதனைவிடம் கொண்ட எனதன்னை ஈசனப்பா
இரந்து கேட்கும் எனதுள்ளம் அறிந்துநீயும் வாருமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1658. உருக்கிடுவேன் உன்மனத்தை எழுப்பிடுவேன் உன்இதயத்தை
அருகில்வர விளித்திடுவேன் உனதன்பை அறிந்திடுவேன்
பெருமைமிகு உன்னொளியை கண்டுநானும் மகிழ்ந்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1659. உனதன்பை அறியாது என்மனது உறங்காது
எனதன்பால் ஈர்த்திடுவேன் உனதன்பை பெற்றிடுவேன்
அனல்தாக்கும் உன்கண்கள் குளிரொளியை தந்துவிடும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1660. மனமெல்லாம் உனைநினைந்து இறைஞ்சுகின்றேன் உனைவேண்டி
புனல்நீரை தலையில்வைத்து குளிர்தன்னை மனதில்கொண்டாய்
அனல்போன்ற விழியாலே குளிர்தன்னை பொழிகின்றாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1661. கேட்கும் மொழி அறியவில்லை மனம்காண விழையவில்லை
தட்டி கேட்கும் உரிமையில்லை, தகைசான்ற பெரியவனே
ஆட்டிவைப்பாய் உன்மனம் போலே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1662. கருணை உண்டோ உன்மனத்துள் அறிவதற்கு விழைகின்றேன்
இருக்குமிடம் அறியவில்லை உன்மனத்தை எழுப்பவில்லை
ஆருயிரே உனைகேட்கும் வழிதன்னை அறியவில்லை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1663. மலரின் மனம் உன்தனக்கு கருணைக்கடல் எந்தனுக்கு
ஆலவாய் அழகனப்பா, ஆற்றல் பெற்ற இறைவனப்பா
உலகமெல்லாம் உன்னதப்பா நீ எனது உள்ளமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1664. பனிபோல உருகிடுவாய் பாற்கடலாய் நிறைந்திடுவாய்
இனிவரும் காலங்கள் உனதன்பால் மகிழ்ந்திடுமே
கனிபோல இனிப்பவனே சேயின் முகம் பாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1665. உனதன்பை பெறவேண்டி என்மனதை நாடுகின்றேன்
கனல்கக்கும் முக்கண்ணால் குளிர்மழையை தரவேண்டும்
காகைமாய் தோன்றுமிடம் உனதன்பால் மாறிவிடும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1666. அடியவர்க்கு அருளிடுவாய் பேதைமனம் அறிந்திடுவாய்
ஆடிவரும் தென்றலென என்மனத்தை வருடிடுவாய்
ஓடி வந்து பற்றிடுவேன் உன்மனத்தை உருக்கிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1667. பூட்டிவைத்த உன்மனக்கதவை திறக்கும் நாள் எந்நாளோ
ஆட்டிவைக்கும் ஆண்டவனே இரங்குவது எந்நாளோ
எட்டிநின்று காணாது பக்கம்வரும் நாள் எந்நாளோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1668. வெண்முத்து சிரிப்பாலே உலகமெல்லாம் அளந்திடுவாய்
உண்மைதனை உணர்ந்தவனே என்மனதை அறிந்திடுவாய்
எண்ணமெல்லாம் நிறைந்தவனே உனதன்பை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1669. பிச்சைகேட்டு நிற்கின்றேன் மனமிரங்கி பாராயோ
எச்சமாக தந்ததனை கண்திறந்து பாராயோ
மிச்சம் தர மறுப்பதேனோ மனமிளகி பாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1700. நல்லவளாய் நானிருக்க நாளும் விழைகின்றேன்
அல்லல்தனை நீக்கி எனைத்தாங்க வேண்டுகின்றேன்
மல்லல் ஞாலம் பெற்றவனே எனையறிய அழைக்கின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1701. ஓதற்கரியவனே பிறைநுதலை பெற்றவனே
பேதமில்லா பரம்பொருளே அண்டமெல்லாம் அறிந்தவனே
வேதங்கள் படைத்தவனே எளியமனம் அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1702. முன்னைக்கு மூத்தவனே அன்னையென அருள்பவனே
இன்னமும் இரங்கலையோ உன்மனது உருகலையோ
வன்மைதனை நீக்கிவிடு வளம்கொடுக்க வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1703. அமுதமதை தந்து நஞ்சுதனை கழுத்தினிலே அணிந்தவனே
குமுதமென குளிர்தந்து வான்புகழை அடைந்தவனே
அமுதமான வாய்திறந்து அருள்மழையை பொழிபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1704. அண்டமெல்லாம் அதிர்ந்துவிடும் உன்கண் அசைவு தெரிந்தாலே
கண்ணுதலான் எனப் பெயரெடுத்து மூவுலகும் ஆள்பவனே
மண்ணிலே பிறந்த பேதைமனம் அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1705. வன்னிமரக் காட்டினிலே வளமாக வாழ்பவனே
கொன்றை மலர் சூடி, முக்கண்ணை திறப்பவனே
ஈன்றவன் நீயப்பா என்மனத்தை அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1706. தியானமே ஓர் உருவாய் அமர்ந்திருக்கும் இறையன்பே
ஓயாது உன்நாமம் எந்நாளும் ஒலித்திடுவேன்
ஈயாது இருப்பதுதான் உன்தனக்கு அழகாமோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1707. அனுதினமும் உனை நினைக்கும் உள்ளமதை தரவேண்டும்
தேனுடனே சேர்ந்த தெவிட்டாத அருட்பழமே
ஊனுடலை தந்துநீயும் உனதன்பை தாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1708. எக்கணமும் உனைநினைக்கும் உள்ளமதை தரவேண்டும்
எக்கணமும் உனைமறவா எண்ணமதை தரவேண்டும்
எக்கணமும் உனைப்பற்றும் உணர்வுதனை தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1709. என்பிடியில் நழுவாதிருக்கும் வரமதனை தரவேண்டும்
உன்மடியில் வீழ்ந்திருக்கும் குழந்தைதனை ஏற்கவேண்டும்
அன்புதனை காட்டி ஆருயிராய் மாற்றவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1710. தொட்டுவிட்டாய் என்மனத்தை தொடரவேண்டும் உன்னருளால்
ஆட்டுவித்தாய் உன்சைவால் தெளியவேண்டும் உன்னருளால்
கேட்டுநிற்பேன் உன்முன்னே தரவேண்டும் உன்னருளால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1711. உன்னொலியால் எனை எழுப்பும் ஆண்டவனே
உன்னொளியை காணும் நான் எந்நாளோ
அன்புடனே அரவணைப்பும் என்னதிர்வை அறிந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1712. முடிவில்லா மூத்தவனே அடியில்லா ஆண்டவனே
கடிதுயரை நீக்கிடுவாய் இட்டபிணி துடைத்திடுவாய்
ஈடில்லா உனதன்பை அறியும் நாள் எந்நாளோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1713. ஆலயத்துள் உறைபவனே உயிர்த்துடிப்பில் நிறைந்தவனே
உலகமெல்லாம் நிறைந்தவனே என்மனத்துள் வளர்பவனே
காலமெல்லாம் நிலைப்பவனே என்துயரை துடைப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1714. ஓசைமணி ஒலி நீயே
ஆசை தரும் அருள் நீயே
இசைகொடுக்கும் இறை நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1715. பயனறியா மழையன்ன உன்கருணை பொழிகின்றாய்
பயனறியா பழமன்ன சுவைதன்னை தருகின்றாய்
பயனறியா கரும்பன்ன இனிமைதனை அளிக்கின்றாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1716. உய்யும் வழி அறியவில்லை உன்னருளை காணவில்லை
தாய்முகத்தை பார்க்கவில்லை அறியும்வழி தெரியவில்லை
சேய்முகத்தை காணாயோ உன்பெருமை காட்டாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1717. என்மனத்துடிப்பும் நீயே
என் மனக்கோயில் நீயே
என் மனத்துறைபவன் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1718. உள்முகத்துள் அறியவில்லை உன்னொளியை பெறவில்லை
அள்ளி அரவணைக்கும் உன்கையை உணரவில்லை
தள்ளி நின்று பாராமுகம் காட்டுவது ஏனப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1719. எங்கும் நிறைந்தவனே நீக்கமற ஒளிர்பவனே
தங்குமிடம் உன்நிழலே உறையுமிடம் உன்மனதே
ஏங்குகின்ற என்மனத்தை அறியும் நாள் எந்நாளோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1720. கண்டமதில் இடம் கொண்டாய்
அண்டமெல்லாம் நீ நிறைந்தாய்
எண்ணமதில் எனை அறிவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1721. ஓம் என்ற நாதத்தில் உனைக் கண்டாய்
ஓம் என்ற சொல்லால் உலகளந்தாய்
ஓம் என்ற பரம்பொருளேற உனதடிமை அழைக்கின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1722. ஓசையுடன் பாடவில்லை ஆசையுடன் பாடுகின்றேன்
இசையுடனே ஒலிக்கவில்லை அன்புடனே அழைக்கின்றேன்
அசையாது இருப்பதேனோ மனமுருக மறுப்பதேனோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1723. பனி மலையில் உறைபவனே
குனித்தபுருவம் உடையவனே
கனியும் நாள் எந்நாளோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1724. பாகாக இனிப்பவனே கரும்பினிமை கொண்டவனே
நோகாது உனைக்காண வழி ஒன்றை கூறாயோ
வேகாத மனத்துக்கு பக்குவத்தை தாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1725. விண்ணின் மதி நீயே
மண்ணின் உயிர் நீயே
கண்ணின் ஒளி நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

KOVILOOR ANDAVAR
A. No. 11938
LIBRARY, KOVILOOR

1726. தேனின் சுவை நீயே
ஊனின் உயிர் நீயே
அனிச்ச மலர் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1727. காணும் பொருள் நீயே
பேணும் உயிர் நீயே
அணுகும் சிவம் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1728. பிள்ளைதனை பெற்றவன் நீயே
தோள் கொடுத்து உதவுவது நீயே
உள்ளமதை தந்தவன் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1729. பாதத்தை பற்றுகின்றேன் மனமுருக வேண்டுகின்றேன்
வேதமதை உணர்ந்தவனே உன்மனத்தை அறியவில்லை
ஆதரவை தருபவனே உன்கரத்தை நீட்டுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1730. தேவைதனை அறிந்துநீயும் தெளிவுதனை தருபவனே
பாவை என் மனதறிந்து உய்யும்வகை செய்பவனே
எவை சொல்லி அழைக்க வேண்டும் உன்மனதை அறிவதற்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1731. உன்நினைவாய் நினைத்தேங்கும் எந்தன்மனம் பாருமப்பா
என்மனதே உன்கோவில் உன்மனதே என்னதப்பா
மன்னிக்கும் குணமறிந்து உந்தன்பதம் பற்றுகின்றேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1732. மனமடக்கும் வழிதன்னை உனைநினைந்து தெரிந்திடுவேன்
கனமான மனமதனை எளிதாக்கும் வகை சொல்வாய்
உனதடிமை என் உள்ளம் நீயறிய மாட்டாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1733. வான்புகழ் கொண்டவனே வையமெல்லாம் நிறைந்தவனே
இன்னல் வரும் நேரத்தில் துயர்துடைக்க வருபவனே
அன்புடை நெஞ்சமதை அடியேனுக்கு அருளாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1734. நேயமதை காட்டி நானும் உன்மனத்தள் இடம்பிடிப்பேன்
அயராது உன்பதத்தை மறவாது பற்றிடுவேன்
தயவுடனே வாருமப்பா உன்பெருமை காட்டுமப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1735. தேடவைக்கும் பரம்பொருளே காணவைக்கும் தாயன்பே
ஊடகமாய் இருப்பவனே பேண வைக்கும் இறையன்பே
இடமதனை தருபவனே உன்மனத்தை பெறவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1736. தென்றலென உன்உணர்வை உணர்த்துவது எந்நாளோ
அன்புடனே அரவணைக்க கன்னலென வாராயோ
உன்னியல்பை எனக்குணர்த்த வரும்நாளும் எந்நாளோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1737. வன்னிமரத்தடியில் வான்புகழ வீற்றிருப்பாய்
கொன்றைமலர் சூடி கொடும் பகையை மாற்றிடுவாய்
புன்னை மரத்தடியில் புலித்தோலில் அமர்ந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1738. லிங்கமாய் வீற்றிருக்கும் உன்உணர்வை அறியவில்லை
எங்கும் நிறைந்திருக்கும் உன்ஒளியை உணரவில்லை
தங்க இடம் தரவேண்டும் உன்மனத்துள் வரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1739. மலராய், மலையாய், அலையாய், அணைவாய்
சிலராய், பலராய், அருவாய், வருவாய்
விலங்காய், உருவாய், மருவாய், தெரிவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1740. பெற்றவனாய் காணாது அன்னியனாய் தெரிவதேனோ
அற்றவனாய் எனைநினைந்து பாராமல் செய்வதேனோ
கற்றவனே கருத்தறியும் காலம் வாராதோ என்நினைவால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1741. இனிமையென நிறைந்தவனே
கனிமொழியை காட்டாயோ
தனிப் பெருமை உடையவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1742. காலம் தான் கனியாதோ, கனிவாயை திறவாயோ
பாலம் போல் வாராயோ, பாதைதனை காட்டாயோ
ஆலம் போல் பற்றாயோ, என்மனதை அறியாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1743. ஒளிவிளக்கே வழித்துணையே
அனல்விழியே விழிச்சுடரே
புனல் பிறையே எழில் உருவே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1744. செய்தபிழை மறந்து விடு
உய்யும் வகை செய்துவிடு
மெய்யுணர்வை தந்து விடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1745. உணர்வு தந்து விடு
இணக்கமுடன் வந்து விடு
பிணக்கமெல்லாம் தீர்த்து விடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1746. உட்பொருளை உணர்த்திவிடு
இட்டதுயர் தீர்த்துவிடு
விட்டகுறை அறிந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1747. அர்த்தமெல்லாம் அறிந்தவனே
ஈர்க்கும் விதம் புரிந்தவனே
சேர்க்கும் இடம் உணர்ந்தவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1748. ஏந்திழையின் உணர்வுதனை அறிந்துகொள்ள மனமில்லை
உந்தனையே ஏற்றிருக்கும் என்உள்ளமதை அறியவில்லை
சிந்தனையே நீ என்று உன்பதத்தை பற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1749. சிவனாக தோன்றிவிடும் அரணாக காத்திடுவாய்
ஆவதும் உன்னாலே அசைவதும் உன்னாலே
புவனமே உன்கையில் வரவேண்டும் என்கையில்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1750. ஒப்பில்லா மாமணியே அழிவில்லா ஆனந்தமே
செப்பிடுவேன் உன்நாமம் தொழுதெழுவேன் உன்பதமே
எப்பொழுதும் உனைமறவா மனமதனை தரவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1751. பரிந்து எனை அழைத்திடுவாய், ஆருயிராய் அணைத்திடுவாய்
உரிமையுடன் ஏற்றிடுவாய் உமையாளும் ஆண்டவனே
காரிருளை நீக்கிடுவாய் எனதுயிரே பெருமானே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1752. பெருக்கிடுவேன் உனதன்பை வளர்த்திடுவேன் உன்பெருமை
ஆருயிரே எனதன்பே உணர்த்திடுவேன் என்மனதை
உருவே, அருவே, பெற்றிடுவேன் உன் அன்பை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1753. கற்கவில்லை உன்மனதறிய
ஏற்கவில்லை என்மனதை
ஆற்றவில்லை என்கடமை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1754. ஆளவந்தாய் என்மனத்தை
உளமதனை ஏற்றுக்கொண்டாய்
அளவில்லா அருட்பொருளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1755. ஒளிப்பிழம்பே பரம்பொருளே
அளித்திடுவாய் அன்புதனை
கனித்திடுவாய் உள்ளத்தால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1756. கொடியிடியாள் பாகம்கொண்டு இருளகற்றும் அருளாளா
ஆடி அணைத்திடுவாய் உலகமெல்லாம் உய்வதற்கு
தேடிநிற்கும் என்மனத்தை அறியாயோ என்னிறைவா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1757. குடும்பமது சிறந்தோங்க உடனிருக்க வேண்டுமப்பா
இடுக்கண் வரும்பொழுது என்னுடனே உறைபவனே
கொடுத்துவிடு இன்பமதை தவிர்த்துவிடு துன்பமதை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1758. விடமுண்ட நீலகண்டா, உனைத்துதிப்பேன் எந்நாளும்
ஆடவரசே, இன்னமுதே உனைத்தொழுவேன் எப்பொழுதும்
இடரில்லா வாழ்வுதனை மனமுவந்து தருபவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1759. ஓதுகின்றேன் உன்நாமம், உணர்கின்றேன் உன்உணர்வை
ஏதுமில்லா எந்தனிடம் அனைத்துமாய் இருப்பவனே
தீது அறியா மனமதனை உன்னிடமே அறிந்திட்டேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1760. காண்பரிய பேரொளியே, அறியவொண்ணா உட்பொருளே
வண்ணங்கள் வாழ்வுதனில் நாளும் காட்டிடுவாய்
எண்ணமெல்லாம் நிறைந்திடுவாய் ஈடில்லா வடிவரசே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1761. பரப்புகின்ற உன்மனத்தால் உய்திடுமே இவ்வுலகம்
இரக்கமென்னும் உண்குணத்தால் செழித்திடுமே இவ்வுலகம்
ஈரமுள்ள உன்மனத்தால் வளர்த்திடுமே இவ்வுலகம்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1762. மனமதனை ஈர்க்கின்ற விந்தை தனை அறியவில்லை
உனதன்பால் தந்திடுவாய் உன்மனத்தை அறிவதற்கு
எனதன்பால் ஈர்த்திடுவேன் உன்மனத்தை பெறுவதற்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1763. தள்ளவேண்டாம் என்மனத்தை
உள்ளமதை தந்துவிட்டேன்
எள்ளளவும் உனை மறவா, என் எண்ணமதை அறியவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1764. நன்னெறியை நவிலுகின்ற நாதப் பரம்பொருளே
உன் உணர்வை காட்டுகின்ற வேதத்தின் பெரும்பொருளே
கன்னல் இனிதை தனை ஊட்டுகின்ற ஒளிப்பிழம்பே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1765. ஏழையென்னை உணர்ந்திடுவாய் அன்பாலே உனக்கடிமை
பிழை இருந்தால் திருத்திடுவாய் மனத்தாலே உன்பிள்ளை
அழைக்கின்றேன் வந்திடுவாய் பண்பாலே உனதடிமை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1766. வருங்காலம் வளமாக்க வரமருளும் அருளாளா
தருநிழலாய் நீஇருந்து எமைகாக்க வரவேண்டும்
பெருமைதனை தந்தருளை உன்கருணை காட்டவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1767. வற்றாத தேனூற்றே, என்மனதை அறிந்தவனே
வேற்றுமுகம் அறியாது, உந்தனையே துணை என்பேன்
ஆற்றிடுவாய் என்மனத்தை அறிந்திடுவாய் என்துயரை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1768. மூவுலகை ஆள்பவனே மூத்தவனே முதல்வனே
தாவுகின்ற என்மனத்தை தேற்றிடுவாய் உன்மனத்தால்
கூவும் என்குரலை செவிமடுக்க மாட்டாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1769. வினைதீர்க்கும் ஆண்டவனே உனையன்றி யாருமில்லை
வினைதீர்ப்பாய் எனஎண்ணி உனைநாளும் தொழுதிடுவேன்
எனை உணர்த்தும் விதமதனை அறியவில்லை ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1770. எங்கும் நிறைந்திருக்கும் நீக்கமில்லா பரம்பொருளே
ஏங்கிடுவேன் உன்னருளை பெறுவதற்கு எந்நாளும்
தங்கிடுவாய் என்மனத்துள் உன்னருளை பெற்றிடவே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1771. இதயமதை அறிந்தவனே
உதயமதை காட்டுவாயோ
ஆதரவை தருவாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1772. வில்வமரத்தடியில் ஒளியாக வீற்றிருப்பாய்
இல்லாத இடமில்லை எங்குமாய் நிறைந்திருப்பாய்
பல்லுயிரும் காப்பவனே, அடியில்லா ஆண்டவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1773. அயராது அழைத்திடுவேன் உனதன்பால் உருகிடுவேன்
மாயமாய் மறைந்தாலும் குரலெழுப்பி அழைத்திடுவேன்
உயரத்தில் சென்றாலும் மெழுகெனவே உருக்கிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1774. தந்தையென உன்மடியில் சேயாக தவழ்ந்திடுவேன்
உந்தனையே அன்னையென மகவாக வந்திடுவேன்
காந்தன் மலரென்ன உன்கரத்தை பற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1775. கோவிலிலே அன்னையென உயிராக கலந்திருப்பாய்
காவியமாய் அடியவரின் மனத்தினிலே வாழ்ந்திடுவாய்
ஓவியமாய் என்மனத்துள் அழியாது வளர்ந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1776. கற்கண்டாய் இனித்திடுவாய்
காற்றிலே கரைந்திடுவாய்
உற்றதுணையாய் வந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1777. தெவிட்டாத தீஞ்சுவையே
நவில்கின்ற இன்னமுதே
நாவில் உரையும் என்னுயிரே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1778. பிறைசூடி உலகமெங்கும் ஒளிர்ந்திடுவாய்
அறைகூவி அழைத்திட்டால் ஓடிவரும் என் இறைவா
மறை நான்கும் அறிந்திட்ட மறையோனே வாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1779. கவியாலே அழைத்திடுவேன் காவியமாய் வருவதற்கு
ஓவியமாய் என்னுள்ளே நாளும் ஒளிர்ந்திடுவாய்
தாவி வந்து உனை பிடிப்பேன் நழுவாமல் வந்துவிடு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1780. பேசாமல் மௌனித்து என்மனதை அறிந்திடுவாய்
பேசாமல் உன்அசைவால் என் உள்ளமதை ஈர்த்திடுவாய்
பேசாமல் உன்நினைவை அலைபோன்றே செலுத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1781. ஓசையின்றி என் உள்ளமதில் குடிகொண்டாய் ஆண்டவனே
அசையாது என்மனத்துள் வீற்றிருக்கும் இறையோனே
இசைவுடனே என் அகத்தே உறைந்திருக்கும் அருளாளா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1782. கருணைக் கண் திறந்து ஒளிவிளக்கை ஏற்றிடுவாய்
அருமைத் தாயெனவே தயவோடு வந்திடுவாய்
பெருமைதனை காட்டிநீயும் ஏற்றமதை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1783. கடல்போல விரிந்திருப்பாய் எனதன்பில் திளைத்திருப்பாய்
கூடல் நகரினிலே தனிப்பெருமை காட்டிடுவாய்
ஆடலரசாக அம்பலத்தில் முத்திரையை பதித்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1784. வீற்றிருந்து என்மனத்துள் நீங்காது இடம்பிடிப்பாய்
ஏற்றமதை என்வாழ்வில் குறையாது தந்திடுவாய்
உற்றவனாய் என் உள்ளத்துள் மறையாது தங்கிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1785. ஏடு எடுப்பாய் வைத்தியனாய் குணமதனை தந்திடுவாய்
தேடுகின்ற உள்ளமதில் விடை கொடுக்க வந்திடுவாய்
பாடுகின்ற என்மனத்துள் சிவமாக ஒளிர்ந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1786. அதிசயத்தை காட்டிடுவாய்
விதி தன்னை மாற்றிடுவாய்
மதியாலே வென்றிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1787. ஓங்கி உலகளந்தாய்
எங்கிருந்தோ காத்திடுவாய்
தாங்கிடுவாய் எண்ணத்தை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1788. வந்ததெல்லாம் உன்னருளால் பெற்றதெல்லாம் உன்சிறப்பால்
தந்ததெல்லாம் உன்கரத்தால் கற்றதெல்லாம் உன்னறிவால்
எந்தவினை வந்தபோதும் மாறிவிடும் உன்நாவால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1789. விழியின் கண்மணியே எனைகாக்கும் குளிர்நிழலே
ஊழினையும் வென்றவனே எனைத்தாங்கும் ஒளிவிளக்கே
எழில்முகத்தை பெற்றவனே எனைஉணரும் அமுதானாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1790. வேற்றுமுகம் அறிந்ததில்லை உனையின்றி துணையுமில்லை
ஏற்றிடுவாய் என்வழக்கை தீர்த்திடுவாய் என்குறையை
பெற்றவனாய் மனமிரங்கி நல்வாழ்வுதனை தந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1792. சூலமதை கையில்கொண்டு அன்புதனை மனத்தில்கொண்டாய்
ஆலமதை கழுத்தில்கொண்டு அமுதமதை வெளிக்கொணர்ந்தாய்
காலமதை உன்னில் கொண்டு உலகமதை படைத்திட்டாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1793. கற்றவித்தை உன்முன்னே காணாமல் போனதய்யா
உற்றதெல்லாம் உன்முன்னே இல்லாது ஒளிந்ததய்யா
ஏற்றவனாய் எனைநினைத்து உன்கருணை காட்டுமய்யா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1794. தடை தன்னை மாற்றி மனமிரங்கி வந்திடுவாய்
விடைதன்னை காட்டி மனமுருக செய்திடுவாய்
கடையனையும் மாற்றிடுவாய் கரையேற உதவிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1795. பாட்டுடைத் தலைவனே மனமிரங்கி வாராயோ
பிட்டுக்கு மண்சுமந்து வந்ததினை மீட்டாயோ
எட்டிநின்று பாராது என்னருகில் வாராயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1796. விழியாக நீயிருந்து என்கண்மணியுள் புகுந்தாய்
அழியா ஓவியமாய் என் மனக்கண்ணுள் வந்தாய்
வழித்துணையாய் வந்துநீயும் என்னுள்ளே இடம்பிடித்தாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1797. பெற்றவனாய் இருந்தாலும் குழந்தையென இடம்பிடித்தாய்
உற்றவனாய் இருந்தாலும் பிள்ளையென மனம்பிடித்தாய்
கற்றவனாய் இருந்தாலும் மழலையென உளம்கலர்ந்தாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1798. பெற்றவனே நீயப்பா
உற்றவனாய் வந்திடுப்பா
சாற்றிடுவாய் உன்னருளை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1799. கவரவேண்டும் உன் மனத்தை
தவழவேண்டும் உன்கரத்தில்
தவமிருக்க வேண்டும் உன்மனத்தை அறிவதற்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1800. பெற்றிடுவேன் உன்மனத்தை
கற்றிடுவேன் உன்குணத்தை
ஏற்றிடுவேன் உன் உள்ளமதை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1801. அமுதமழை பொழிந்திடுவாய் அருள்விளக்காய் ஒளிர்ந்திடுவாய்
அமுதகானம் தந்திடுவாய் வரும் வினையை நீக்கிடுவாய்
அமுதமொழி சொல்லிடுவாய் அன்புருகச் செய்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1802. சிக்கெனவே பற்றிடுவேன் வேறுதுணை யாருமில்லை
எக்கணமும் உனைமறவேன் உன்துணையை வேண்டிநிற்பேன்
முக்கண்ணால் காத்திடுவாய் அருள்முகத்தை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1803. சங்கடங்கள் தீர்த்திடுவாய்
எங்கும் நிறைந்திடுவாய்
ஏங்கும் மனமறிவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1804. நல்லவழி காட்டுவாய் நற்கதியை தந்திடுவாய்
அல்லல்தனை போக்கிடுவாய் வளம்பெருக செய்திடுவாய்
வில்வத்தை ஏற்றவனே உனைத்தொழுது ஏத்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1805. கள்ளமில்லா அன்பாலே அழைத்திடுவேன் எந்நாளும்
உள்ளமதில் குடிகொண்ட உனை ஏற்றிதொழுதிடுவேன்
கேள்விக்குபதில் தருவாய் குற்றமதை பொறுத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1806. நஞ்சுண்ட நாயகனே வேதத்தின் முதற்பொருளே
தஞ்சமென்று அழைப்பவர்க்கு கரம்நீட்டும் பரம்பொருளே
கெஞ்சி உனை துதிப்பவர்க்கு வரமருளும் கருப்பொருளே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1807. வில்வமரத்தடியில் வீற்றிருக்கும் வித்தகனே
அல்லல்தனை நீக்கவேண்டி காத்திருக்கும் ஆண்டவனே
இல்லாமை போக்கவேண்டி வரமருளும் சுந்தரனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1808. திருப்பாதம் வணங்குவோர்க்கு உன்பெருமை காட்டிடுவாய்
அருட்கடலே உன்பொற்பாதம் நாளும் வணங்கிடுவேன்
ஆருயிரே பெருங்கடலே உனைத்தொழுது ஏற்றிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1809. வணங்கிடுவேன் உன்பொற்பாதம்
வணங்கிடுவேன் நின்மலரடியை
வணங்கிடுவேன் உன்கண் அசைவால்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1810. பெற்றிடும் நலமனைத்தும் உன்னருளாலே
கற்றிடும் அறிவனைத்தும் உன் ஒளியாலே
சாற்றிடும் புகழனைத்தும் உன் பெருமையாலே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1811. இயற்கைதனில் ஒளிந்திருப்பாய்
உயர்ந்திருந்து காத்திடுவாய்
அயராது படைத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1812. தேயாது நிலைத்திருப்பாய்
தாயாக வலம் வருவாய்
சேயாக எனை ஏற்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1813. மாறாது உன்புகழே
தேயாது உன் அருளே
அயராது உன்படைப்பே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1814. குறையாது உன்னருளே
மறையாது உன்புகழே
இறையாக வரும் தேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1815. வேலியில்லா உன்குணமே
சலியாத உன்னருளே
வலியாத உன்மனமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1816. அழைத்திட்டால் வருவாயே
ஊழையும் வெல்வாயே
தழைதன்னை எடுப்பாயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1817. விரும்பி உனை அழைக்கின்றேன்
தரும் விருந்தாய் வருவாயோ
கரும்பினிமை காட்டுவாயோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1818. பிரமிப்பை தந்திடுவாய்
இரக்கமதை கொண்டிடுவாய்
வரமதனை கொடுத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1819. ஆசையுடன் வந்திடுவாய்
அசைவில்லா மனத்தாலே
ஓசைதனை காட்டிடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1820. பூவின் வாசம் நீ
நாளன் பேச்சும் நீ
கவியின் நயமும் நீ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1821. வாசமுள்ள மலர் நீயே
நேசமுள்ள மனம் நீயே
வசந்தமான உளம் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1822. ஆலயத்தின் மணி நீயே
உலகத்தின் உயிர் நீயே
கலமாக வரும் தேனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1823. கண்ணின் மணி நீயே
மண்ணின் உயிர் நீயே
விண்ணின் ஒளி நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1824. சங்கீதத்தின் சத்தம் நீயே
பந்தத்தின் பாசம் நீயே
காந்தத்தின் ஈர்ப்பு நீயே (எந்தன் துணை நீயே)
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1825. எல்லாமும் நீயே
எல்லாமும் உன்னருளே
எல்லாமும் உன்செயலலே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

1826. சுடர்விளக்காய் ஒளிர்கின்றாய்
இடர் களைய உதிக்கின்றாய்
படர் கொடியாய் இருக்கின்றாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1827. இட்டதுயர் அத்தனையும் நீக்கிடுவாய் அருளாளே
வெட்டவெளி அத்தனையும் உன்னடக்கம் அன்பாலே
மட்டற்ற அன்புதனை காட்டிடுவாய் உனதியல்பால்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1828. மலை மேலே உறைபவனே
அலை போல ஒலிப்பவனே
கலை போலே நிலைப்பவனே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1829. உள்ளமதில் நிலைத்தவனே
கள்ளமில்லா மனத்தோனே
தள்ளாதே உன்கரத்தால்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1830. வசந்தத்தைத் தருபவனே
பாசமதை கொடுப்பவனே
வாசமுடன் திகழ்பவனே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1831. உறைவிடமாய் கோவில் கொண்டாய்
இறைவனாக அருள் தந்தாய்
மறைவிடமே உனக்கு இல்லை
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1832. பெற்றஇடர் அத்தனையும் உனக்கெனவே தந்துவிட்டேன்
பெற்றவனாய் நீயிருந்து உற்றதயர் நீக்கிடுவாய்
ஆற்றிடுவாய் இட்டதுயர் பெற்றிடுவேன் பேரன்பை
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1833. ஆலயமே உன் வீடு
உலகனைத்தும் உன் வாசல்
காலமெல்லாம் உன் வருகை
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1834. தேனாக இனிப்பவனே தெள்ளமுதே இன்னிசையே
ஊனாக உயிராக தோற்றமெல்லாம் நிறைந்தவனே
வானாகி உலகாகி அண்டமெல்லாம் ஒளிர்பவனே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1835. வெட்டவெளி உந்தன் இடம்
ஆட்டிவைப்பாய் உலகமதை
ஊட்டிடுவாய் உன் உணர்வை
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1836. பரம் பொருளாய் திகழ்பவனே
சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்
கரம் கூப்பி பற்றிடுவேன்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1837. இரங்குவது உன்மனது பெறப்போவது என்மனது
வரமருள்வது உன் இயல்பு பெறவிழைவது என் உணர்வு
கரம்கூப்புவது என் விழைவு தரப்போவது உன் மரபே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1838. மதி தன்னை சூடிக் கொண்டாய்
பாதி உடல் ஈந்துவிட்டாய்
விதி தன்னை மாற்றிடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1839. பொன்னம்பல நடராசா மனக்கதவை திறவாயோ
அன்னையென உனதன்பை வெளிப்படுத்த வாராயோ
உன் அன்பை பெறவேண்டி விழைகின்றேன் எந்நாளும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1840. இன்னிசையால் மகிழ்பவனே
என்னிசையை கேளாயோ
உன்னசைவை காட்டாயோ
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1841. பிறைசூடி, மலர்சூடி, விடம்சூடி இருப்பவனே
மறைபொருளின் உட்பொருளே என்மனத்து ஆண்டவனே
இறையாக வாராயோ உன்னருளை காட்டாயோ
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1842. நினைக்கின்றேன் என்மனத்துள் உறைகின்றாய் என்னகத்தே
உனைநினைந்து தொழுகின்றேன் எந்நாளும் மறவாது
மனை புகுந்து வாராயோ உன்புகழை நாட்டாயோ
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1843. கருப்பொருளாய் என்மனத்துள் உருப்பெற்றாய் எந்நாளும்
தருநிழலாய் என்மனத்துள் குளிர்விக்க வாராயோ
உருவின்றி இருப்பவனே குறைதன்னை மறைப்பாயோ
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1844. சிலையாக உன்னருளை ஆலயத்துள் வைத்தாலும்
மலையாக என்மனத்துள் சுடர் விளக்காய்
அலைபோல ஒலித்திடுவாய் குறையாது எந்நாளும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1845. கங்கைதனை தலையில் வைத்தாய் என்மனத்துள் இடம்பிடித்தாய்
எங்கும் நிறைந்திருக்கும் உன்னொளியை அறியவைத்தாய்
தங்குமிடம் உன்மனதாய் என்மனத்துள் புரியவைத்தாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1846. அறியாமை எனும்இருளை நீக்கிவீர் எந்நாளும்
வறியவர் மனமறிந்து தரவேண்டும் உன்னருளை
அறிந்தேன் என்மனதை பெறவேண்டும் மனமுவந்து
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1847. துணையாக வரவேண்டும் வன்னிமலர் நாயகனே
அணையாத உன்பெருமை அறியவேண்டும் என்மனது
இணையில்லா ஆண்டவனே தரவேண்டும் மனமிளகி
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1848. அணையாத புகழ்கொண்ட ஆனந்த மலைக்கொழுந்தே
இணையில்லா ஈசனே வானுயர்ந்த சிவப்பழமே
பிள்ளையின்றி வருவாயே எந்தனுயிர் சிவத்தேனே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1849. லிங்கமாக உருத்தோன்றி அங்கமெல்லாம் நிறைந்திருப்பாய்
பங்காக இடம்கொடுத்து உமையவளை இடம்கொண்டாய்
எங்கும் நிறைந்திருப்பாய் நீக்கமற வீற்றிருப்பாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1850. அன்னையென மனதறிந்து வாழும்வழி காட்டிடுவாய்
அன்னையென கரம்நீட்டி எந்நாளும் காத்திடுவாய்
அன்னையென அணைத்துநீயும் நல்வழியை தந்திடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1851. குற்றமில்லா உள்ளத்தால் உனைஏற்றி தொழுதிடுவேன்
உற்றதுயர் அத்தனையும் உனைநினைந்தால் ஓடிவிடும்
பெற்றவனாய் நீயிருந்து உன்துணையை காட்டிடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1852. வில்வமரம் நாடி வீற்றிருக்கும் எந்தையே
அல்லலுற்று வரும்கால் தேற்றிடுவாய் அன்னையாக
ஓங்குபுகழ் கொண்டவனே உயர்ந்திடுவாய் உன்புகழால்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1853. அடைக்கலமாய் வந்தஎன்னை மறுக்காதே உன்மனத்தால்
கடைக்கண்ணால் திறந்துபார்த்துகாட்டவேண்டும் உன்னொளியை
தடையின்றி வரவேண்டும் உன்னருளை தரவேண்டும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1854. கோடையிலே இளைப்பாறும் தருநிழலாய் வாராயோ
தடையின்றி வரும் அன்புதனைக் காட்டாயோ
மடைதிறந்த வெள்ளம்போல் உனதருளைத் தாராயோ
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1855. பெற்றுவிட்டேன் உனதருளை
கற்கின்றேன் உன்பெருமை
பற்றி நிற்பேன் என்றென்றும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1856. வற்றாத நீருற்று வளம் சுரக்கும் தேனூற்று
வற்றாத அருட்பொய்கை மாறாத அமுதூற்று
வற்றாத கடலே, வணங்கிடுவேன் எந்நாளும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1857. தருநிழலை நீ தந்தாய்
உருமாறி நி வந்தாய்
பெருமைதனை எனக்களித்தாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1858. மாறாத வசந்தமப்பா
உறங்காத உன் நினைவாலே
தேற வேண்டும் என்மனதப்பா
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1859. தியானமொழி பேசிடுவாய்
ஓயாது ஒலித்திடுப்பாய்
யோது ஒளிர்ந்திடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1860. செவி மடுத்தாய் தந்தையென
ஏவி விட்டாய் உன்கருத்தை
ஓவியமாய் மாற்றிவிட்டாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1861. வித்தைகளை காட்டிடுவாய்
அத்தனையும் அறிந்திடுவாய்
காத்திடுவாய் அனைவரையும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1862. விண்மதியாய் ஒளிர்ந்திடுவாய்
எண்ணமதில் நிறைந்திடுவாய்
தண்ணொளியை தந்திடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1863. கன்னலென இனித்திடுவாய்
இன்முகத்தை காட்டிடுவாய்
என்றென்றும் நிலைத்திருப்பாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1864. அனல்போன்ற உன்விழிகள் நிழல் தருமே எந்நாளும்
புனல்கொண்ட உன்கூந்தல் நீர் தருமே எந்நாளும்
கனல்போன்ற உன்கைகள் வளம் தருமே எந்நாளும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1865. சிந்தையிலே குடியிருப்பாய்
தந்தையென நிலைத்திருப்பாய்
பந்தமதை காட்டிடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1866. பற்றுதலை உணர்த்திடுவாய்
பெற்றவனாய் துணையிருப்பாய்
உற்றவனாய் வந்திடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1867. ஆசிதனை அருளிடுவாய்
மாசில்லா பரம்பொருளே
கசிந்திடுவேன் உனைநினைந்து
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1868. கனியினும் இனிமை உன் மனதப்பா
பனியிலும் குளுமை உன் உள்ளமப்பா
தேனினும் சுவை உன் எண்ணமப்பா
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1869. தவறுதலை பொறுத்திடுவாய் தாயெனவே
உறுதுணையை தந்திடுவாய் தந்தையென
ஊறுகளை தவிர்த்திடுவாய் தெய்வமென
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1870. தவிக்கின்ற உள்ளமதை வருடிடுவாய் அன்பாலே
கோவிலினுள் உறைந்தாலும் தோன்றிடுவாய் மனத்துள்ளே
கவிதையென எந்நாவில் எக்கணமும் நிறைந்திடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1871. குருவே, ஒளிவடிவே எனதருளே
அருவே, உருவே எனதன்பே
தருவே, கருவே எனதுளமே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1872. நினைத்தாலே இனிப்பவனே
உனை நானும் மறவேனே
எனை என்றும் காப்பவனே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1873. உருவில்லா அருவே
மருவில்லா குருவே
இருளில்லா ஒளிச்சுடரே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1874. வஞ்சமில்லா உள்ளம் வேண்டும்
நெஞ்சமெல்லாம் அன்பு வேண்டும்
கஞ்சமில்லா உனதருள் வேண்டும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1875. மலரடி நினைக்க வேண்டும்
நலமோடு வாழ வேண்டும்
நிலமதனில் காண வேண்டும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1876. அமுத மொழி கேட்க வேண்டும்
அருள் வார்த்தை அறிய வேண்டும்
அருமை தெரிந்து உணரவேண்டும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1877. மலரடியை நினைக்க வேண்டும்
காலமெல்லாம் உணர வேண்டும்
தலங்களிலே காண வேண்டும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1878. அடி காணா முடியரசே
ஆடி வரும் மலைத்தேனே
ஈடில்லா அருட் பொருளே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1879. ஒப்பற்ற மாமணியே
எப்பற்றும் இலாதவனே
காப்பாற்றும் மரகதமே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1880. திங்கள்தனை முடியில் கொண்டாய்
எங்கள் உளம் மனதில் கொண்டாய்
தங்குமிடமாய் கோயில் கொண்டாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1881. வெம்மையிலே இளைப்பாற தருநிழலாய் வரவேண்டும்
அம்மையும் அப்பனுமாய் குடை நிழலைத்தரவேண்டும்
இம்மையிலே வந்துநீயும் இன்னருளை உணரவேண்டும்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1882. குருவே உன்னடியை தொழுதேத்திடுவேன்
குருவே உன்பெருமை பாடி ஏத்திடுவேன்
குருவே உன்னருளை அறிந்த பணிந்திடுவேன்
குருவே உன்கருணை பருகி உருகிடுவேன்
குருவே உன்பலத்தைப்பாடி அழைத்திடுவேன்
குருவே சிவமே எனதறிந்து ஏற்றிடுவேன்
குருவே அறிவே எனத்தெளிந்து போற்றிடுவேன்
குருவே எனதருளே எனபாடி தெளிந்திடுவேனே.

1883. வற்றாத நறுந்தேனே வாடாத பூமலரே
மாற்றமில்லா சுனைநீரே தெவிட்டாத தீங்கனியே
பற்றுதலை தரும் பழமே உற்றவனாய் வரும் சுடரே
ஆற்றுகின்றாய் என்மனத்தை பெற்றிடுவேன் உன்நிழலே.

1884. விண்மதியே விழிச்சுடரே பேரின்பமே
கண்ணொளியே கனியமுதே ஒளிவிளக்கே
உண்மையின் கருப்பொருளே அலைகடலே
தண்மை தரும் வெண்நிலவே அருட்கடலே.

1885. ஆற்றிடுவாய் என்மனத்தை
கற்றிடுவேன் அன்பொளியை
பெற்றிடுவேன் ஆறுதலை
உற்றதுணையாய் வந்திடுவே.

1886. சிந்தனையை தெளிய வைத்தாய்
விந்தைதனை காட்டி விட்டாய்
தந்தையென அன்பளித்தாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1887. அன்புதனை ஊட்டுகின்றாய்
அன்னையென ஈன்றளித்தாய்
அன்பாக எடுத்துரைத்தாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1888. காற்றைப் போல் பரவிடுவாய்
உற்றவனாய் உவந்தளிப்பாய்
பற்றுதலை காட்டிடுவாய்
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1889. அணுவிற்கு அணுவே அணுகவொண ஆருயிரே
காணுமுகம் கண்டறிந்து உனதன்பை தருபவனே
பேணுமனம் தேர்ந்தெடுத்து, உன்கருணை அளிப்பவனே
நலம் பெறவேண்டும் நமச்சிவாயவே.

1890. மலை முகிலாய் நீயமர்ந்து
அலைகடலாய் உயர்ந்தோங்கி
கலை அமுதாய் சிறந்தோங்கி
நிலைத்திருக்கும் எனதன்பே.

1891. பாசமதை உனக்கீந்து
நேசமதை கைக்கொண்டு
வாசமதை அறிந்து நானும்
பேசவேண்டும் உன்னுடனே.

1892. அன்பாலே உனையாண்டு
அன்னையென எனதாக்கி
ஆன்றோனாய் உனைக்காண
இன்முகத்தால் அறிவேனே.

1893. ஐம்புலனை அடக்கி ஆண்டு ஐம்பூதமாய் இருப்பவனே
அம்மாவென அழைப்பதற்கு ஏற்றவனாய் இருப்பவனே
அம்பலத்தில் ஆடுகின்ற சிற்றம்பலமாய் இருப்பவனே
இம்மையிலே உனைக்காண விழைகின்றேனே.

1894. அடியவரை தடுத்தாளும் அன்புமனம் கொண்டவனே
ஆடிவரும் தேனே தேடிவரும் கற்கண்டே
ஓடிவரும் அருள்மழையே பாடிவரும் மணிக்குயிலே
ஈடில்லா பரம்பொருளே.

1895. தக்கதுணை நீயென்று பற்றிடுவேன் உன்கரத்தை
பக்கபலம் நீயென்று தொழுதிடுவேன் உன் பதத்தை
ஆக்கமுடன் வருவாய் என அழைத்திடுவேன் உன் நாமம்
ஊக்கமதை எந்நாளும் தந்திடுவாய் ஆண்டவனே.

1896. ஒருமையுடன் நின்று பதம் தொழுதிடுவே
அருமையுடன் உனதுகரம் பற்றிடவே
பெருமையுடன் உனது விழி கண்டிடவே
ஆருயிராய் என்னருகே வரும் பூவே.

1897. உனது கழல் பணிந்தெழுவேன்
உனது கரம் பற்றிடுவேன்
உனது நாமம் உச்சரிப்பேன்
உனதெழிலை நாளும் பருகிடுவேன்.

1898. தடையேதும் சொல்லாத உனதன்பு வேண்டும்
கடைத்தேற வழியதனை மறவாது காட்டவேண்டும்
அடைக்கலமாய் வந்த என்னை மறுக்காது ஏற்கவேண்டும்
விடைதன்னை அறிவதற்கு உனை வணங்கவேண்டும்.

1899. காயாது, கனியாது உனதருளைப் பெற்றிடுவேன்
தேயாது, தெளியாது உனதன்பை கற்றிடுவேன்
ஈயாது, கேட்காது உன்கருணை பருகிடுவேன்
ஓயாது, மறவாது உன்னொழிலை நினைந்திடுவேன்.

1900. ஆருத்ரனே ஆண்டவனே பிறைசூடி வாராயோ
உருவமில்லா அரியவனே மதிசூடி வாராயோ
அருவமில்லா பெருமானே திங்கள் சூடி வாராயோ
பெருமையுள்ளம் கொண்டவனே மலர் சூடி வாராயோ.

1901. ஓதற்கரியவனே உண்மைதனை உணர்ந்தவனே
ஈதற்கு உரியவனே எளிமைதனை அறிந்தவனே
உதவுகின்ற உடுப்பொருளே அன்புதனை காண்பவனே
ஆதரவு அளிப்பவனே கருணை உளம் கொண்டவனே.

1902. ஒப்பில்லா பரம்பொருளே
அப்பனென வரும் அருளே
தப்பாது தரும் தேனே
எப்போதும் உனைத் தொழுவேனே.

1903. அற்புதத்தில் திளைத்து ஆனந்தம் கொண்டேனே
சிற்சபையின் நடனத்தில் மெய்சிலிர்த்து நின்றேனே
பொற்சபையின் ஆண்டவர் கருணையுள்ளம் அறிந்தேனே
ஏற்றமிகு உன்பாதம் நாளும் தொழுவேனே.

1904. கூத்தாடும் உன்கோலம் மாறாத காட்சியப்பா
கூத்தாடும் உன்எழிலோ குறையாத தேனப்பா
கூத்தாடும் உன்உருவோ மறையாத தோற்றமப்பா
கூத்தாடும் உன்வடிவோ தேயாத எழிலப்பா.

1905. பூமாலை உனக்குசூட்டி உவந்துநிற்கும் ஏழையப்பா
பாமாலை உனக்களித்து மகிழ்ந்திருக்கும் எளியனப்பா
தாமாக உவந்துவந்து காட்சிதரும் ஈசனப்பா
ஏமாற்றம் தாராது என்முன்னே வரும் எந்தையப்பா

1906. பருகிவிட்டேன் உன்னெழிலை
உருகி நின்றேன் உனைக்கண்டு
ஆருயிராய் உனை நினைப்பேன்
அருளமுதைத் தருவாயே

1907. அடக்கியாளும் குணமதனை அருளோடு தருவாயே
இடமீது உமை தொண்டவனே உன்கருணை பொழிவாயே
விடமதனை அணிந்தவனே உன்பெருமை கூறாயோ
இடபமீது அமர்ந்தவனே உனதன்பை பருகேனோ.

1908. கரும்பினிமை உனதன்பு கற்றறிதழ் எனதன்பு
இருந்தறிதல் உன்பண்பு தெரிந்தறிதல் என்னறிவு
அருவமே உன்உருவு தேர்ந்தறிதல் என்இயல்பு
கருப்பொருளே உனதியல்பு உணர்ந்தறிதல் இயைறயன்பே.

1909. சடைமுடியாய் அரவுசூடி மகிழ்ந்திருப்பாய்
தடைஇல்லா அன்பு செய்து நினைத்திடுவாய்
கோடையிலே தருநிழலாய் நின்றிடுவாய்
நடை பயிலும் மகவுக்கு பெற்றோனாய் வருவாயே.

1910. உந்தன் சுவை அறிந்துவிட்டால் பறவைகள் வேண்டாவே
உந்தன்மொழி தெரிந்துவிட்டால் கற்றறிவு வேண்டாவே
உந்தன் வழி கண்டுவிட்டால் வெளிச்சமது வேண்டாவே
உந்தன் அருள் கிடைத்துவிட்டால் வேறமுதம் வேண்டாவே.

1911. தாயாக இருப்பதாலே பிணைப்பதிலே இருக்கின்றேன்
சேயாக எனைநினைத்து என்நிலையை அறிவாயே
தேயாத எனதன்பை உனதுள்ளம் அறியாதோ
ஓயாது அழைத்திடுவேன் என்னருகே வருவாயே.

1912. எங்கும் நிறைந்தவனே எனதன்பை புரிந்தவனே
ஏங்கும் என்மனத்தை உனதன்பால் அறிந்தவனே
தங்குமிடம் உந்தன்உளம் எனநினைத்து அழைப்பேனே
தாங்க வேண்டும் எந்நாளும் எனதன்பே.

1913. உருகிடுதே என்மனது வாடும் மனம் கண்டாலே
பெருகிடுதே துயரம்தான் வாடும் உள்ளம் பார்த்தாலே
அருமையான உயிரனைத்தும் உன்னாலே துளிர்த்துவிடும்
ஆருயிராய் நிற்பாயே மனத்துயரை கண்டாலே.

1914. கண்ணீர் மல்கி அழைத்திடுவேன்
எண்ணமெல்லாம் நிறைந்தவனே
காண்பதற்கு எளியவனே
வண்ணுலகை ஆள்பவனே.

1915. இனிமை உந்தன் உள்ளமப்பா
தனிமை மாற்றும் உன்நினைவப்பா
ஊன்னும் இனிமை உன்கருணையப்பா
கனிபோல சுவை உந்தன் அன்பப்பா

1916. தளர்வறியா மனமதனை நாளும் தருபவனே
உளமதிலே கோவில் கொண்டாய் மறவாமலே
இளகிடுமே உந்தன்மனம் உனை உருகி அழைத்திட்டால்
களமிறங்கி மறவாது வரும் தேனே.

1917. சித்தனே என் உள்ளம் கவர் கள்வனே
அத்தனே என்னாருயிர் மன்னனே
பித்தனே ஆண்டருளும் ஈசனே
வித்தனே எனையாளும் ஆண்டவனே.

1918. நீறுமெய்பூசி உறுதுயரை நீக்கி
ஆறுதலைதந்து மாறுதலை மாற்றி
ஊறுதனை களைந்து இறுமாப்பை அகற்றி
பேறு தனைத் தருபவனே.

1919. எழுகின்ற மாயைமாற்றி வருகின்ற பிணிநீக்கி
அழுகின்ற மனம்மாற்றி மகிழ்வுதனை ஈந்து
செழுமை மனம் தந்து நலவாழ்வு கொடுத்து
எழுச்சி தனை தருபவனே.

1920. உனைவாழ்த்தும் மனம் வேண்டும்
உனை நினைக்கும் உளம் வேண்டும்
உனை பாடும் குரல் வேண்டும்
உனை எழுதும் திறன் வேண்டுவனே.

1921. உன்மனத்தில் இடம் வேண்டி
என் மனத்தே உனை இருத்தி
இன் முகத்தால் உனைத்தேடி
என்றென்றும் வாழ்த்துவனே.

1922. அற்புதங்கள் தரும் தேனே
உற்றதுணை யாய் வரும் மானே
பெற்றவனாய் வரும் தாயே
வீற்றிருப்பாய் என் மனத்தே

1923. படைப்பேன் விந்தை அறியவில்லை
அடையும் பயன் தெரியவில்லை
கடைத்தேறும் வழி பெறவில்லை
விடை தெரியும் உன்னாலே.

1924. இதயமதில் பூட்டி வைத்து
உதயமதை பார்க்கவேண்டி
ஆதரவை தேடி என்றும்
பாதமதை தொழுவேனே.

1925. ஆடிநிற்கும் உனதழகை காணவேண்டி
தேடி ஏங்கும் பேதை எனக்கு
ஓடிவந்து காட்சி தந்த உந்தனக்கு
பாடி நிற்பேன் ஆண்டவனே.

1926. உருகிடுவேன் உனைநினைந்து அறியாது
பெருகிடுமே என் உள்ளமதில் அன்பு ஊற்று
மருகிடுதே உனை எண்ணி என் உள்ளமெல்லாம்
தருவிருந்தாய் வரவேண்டும் எனதன்பே.

1927. வள்ளலாய் நீயிருந்து உலகெல்லாம் காத்திடுவாய்
அள்ள அள்ள குறையாது கருணைவெள்ளம் அளித்திடுவாய்
தள்ளாது, அனைவருக்கும் அன்புமழை அருளிடுவாய்
உள்ளமெல்லாம் உனைநினைந்தால் கரும்பாக இனித்திடுமே.

1928. உனைநினைந்து ஏத்துவோரை தடடாது காத்திடுவாய்
உனைஎண்ணி மகிழ்வோர்க்கு மறவாது வாக்களிப்பாய்
உனை வணங்கி தொழுவோர்க்கு மறுக்காது உதவிடுவாய்
உனை கூப்பி வருவோரை மகிழ்வுடனே காப்பவனே.

1929. தெவிட்டாது உன் உருவம் ஓவியமாய் வரைவோர்க்கு
கவிதையிலே வடித்தாலும் தெரியாது உன் அருவம்
காவியமாய் புனைந்தாலும் அறியாது உந்தன் மனம்
தவிக்கின்ற உள்ளமது அறிந்திடுமே உன் உருவம்.

1930. பிட்டுக்கு மண்சுமந்து மன்னன் மனம் அறிந்திடுவாய்
ஏட்டிலே இடம்பிடிப்பாய் பக்தர்மனம் ஈர்த்திடுவாய்
பாட்டிலே இடம் பெறுவாய் ஏழை உளம் புரிந்திடுவாய்
ஊட்டாயோ உனது புகழ் எந்தனுயிர் ஈசனே.

1931. இன்பமே உனைநினைக்கும் கணமெல்லாம்
இன்பமே உனைஎண்ணும் பொழுதெல்லாம்
இன்பமே உனை சிந்திக்கும் காலமெல்லாம்
இன்பமே உனைக் காணும் நாளே.

1932. வாடும் உயிரினத்தை என் மனத்தால் பார்ப்பதில்லை
வாடும் மனத்தை என்னுள்ளே நினைப்பதில்லை
வாடும் முகமதனை என்சிந்தனையில் நிறுத்தவில்லை
வாடாமல் இருந்துவாயே என் முழுமதியே.

1933. மனக்கதவை திறந்து வைப்பேன்
மனதிரங்கி வாராயோ
மனத்தாலே வாடிடுவேன்
மனமுருகி வருவாயே.

1934. முழுமதியோ, என் விழியோ
உழுநிலமோ என் உளமோ
எழுகடலோ, என் மனமோ
பழுமரமோ என் உயிரே.

1935. நடனந்தான் உன் அசைவு
ஆடல் தான் உன் இயைபு
பாடல்தான் உன் இயல்பு
தேடல் தான் என் மனதே.

1936. வேதங்கள் தெரிந்தவனே விதி தன்னை அறிந்தவனே
ஆதரவு தருபவனே ஏற்றதுணை அளிப்பவனே
ஆதவனாய் வருபவனே ஒளிவிளக்கை தருபவனே
உதவும் உளம் கொண்டவனே.

1937. பேதலித்து நிற்கும மனம் உன்னாலே தெளிந்துவிடும்
ஓதற்கரியவனே உலகெல்லாம் அறிந்தவனே
இதமாக எடுத்துரைப்பாய் நல்வழியை உணர்த்திடுவாய்
பதமாக நினைத்து விருந்தாக வருவாயே.

1938. விரிசடையோனே, நிலைத்திருக்கும் பெரியோனே
உரிமையுடன் அழைப்பவனே உலகமெங்கும் ஒளிர்பவனே
எரிசுடரை கொண்டவனே எழில் வழியால் அழைப்பவனே
காரிருளை நீக்குபவனே பகலவனாய் வருபவனே.

1939. விண்சுடராய் ஒளிர்பவனே
அண்டமெல்லாம் நிறைந்தவனே
ஆண்டவனாய் எழுபவனே
கண்ணாக வருபவனே.

1940. கொன்றைமலர் அணிந்தவனே
அன்புமழை பொழிபவனே
கன்னல்மொழி தருபவனே
ஆன்றோனாய் நிறைந்தவனே.

1941. முக்கண்ணின் முதற்பொருளே
எக்கணமும் வரும் தேனே
அக்கறையை தரும் மானே
ஆக்கமதை அருள்பவனே.

1942. வற்றாத அடுஞ்சுனையே
மாற்றமில்லா அருங்கணமே
தோற்றமில்லா அருங்கலையே
ஏற்றம் தரும் எனதன்பே.

KOVILOOR ANDAVAR
A. No. 11938
LIBRARY, KOVILOOR

1943. தில்லை யாடும் நடராசா
அல்லல் நீக்கும் வாகீசா
இல்லமதில் மருதீசா
எல்லாமாய் வரும் இறையே.

1944. உதித்திடுவாய் செங்கதிராய்
பதித்திடுவாய் உன்பெயரை
மதித்திடுவாய் பக்தமனம்
ஓதி உணரும் பெருமானே.

1945. அன்பே உன் வடிவு
அன்பே உன் உருவு
அன்பே உன் அருவு
அன்பே உன்னடிமை நானே.

1946. ஏழிலிருவம் காட்டிடுவாய்
ஏழிசையும் மீட்டிடுவாய்
கழியுவகை தந்திடுவாய்
அழியாத என் சிவம் பழமே.

1947. மீட்டிடுவாய் உயிரனைத்தும்
ஆட்டிவைப்பாய் உலகனைத்தும்
ஊட்டிடுவாய் அன்பனைத்தும்
காட்டிடுவாய் உன் கருணையாலே.

1948. வற்றாத குணக் கடலே
பற்றாக வரும் தேனே
வெற்றிதனை தரும் ஈசா
கற்றிடுவேன் உனதன்பே.

1949. கழுத்தினிலே விடம்கொண்டாய் மனத்திலே அன்புகொண்டாய்
எழுத்தினிலே உனைக்கண்டாய் இடத்தினிலே உமைகொண்டாய்
பழுத்தபழமாய் நீநின்றாய் நெற்றியிலே பிறைகொண்டாய்
வழுவாது எனைக் காண்பாயே.

1950. இசையினிலே மயங்கி நிற்பாய்
அசைபோட்டு மகிழ்ந்திருப்பாய்
ஆசையதில் திளைத்திடுவாய்
ஓசையதில் நிலைத்திருப்பாயே.

1951. வருங்காலம் நலமாக வாழ்த்துக்கள் தருவாயே
இருக்கின்ற சந்ததிகள் வளம்காண வருவாயே
தருகின்ற கரத்தால் வாழ்வுதனை கொடுப்பாயே
அருமையான உன்மனத்தால் நல்வார்த்தை அருள்வாயே.

1952. எல்லாமும் அறிந்தவனே உன்மனத்தை அறிவேனே
எல்லாமும் தெரிந்தவனே உன்னருளைப் பெறுவேனே
எல்லாமும் உணர்ந்தவனே உன்கரத்தைப் பிடிப்பேனே
எல்லாமும் கற்றவனே உன்னுள்ளே இருப்பேனே.

1953. அஞ்சுதலை தவிர்ப்பேனே
கெஞ்சி உன்முன் நிற்பேனே
தஞ்சமென வருவேனே
அஞ்சாதே எனவரும் தேனே.

1954. என் உளமே திருக்கோயில்
என்மனதே உன்னாலயம்
என் அன்பே உன்உருவம்
என் சிவமே என்னுயிரே.

1955. மெய்ப்பொருளை அறிவதற்கு ஞானம் வேண்டி நிற்பேன்
பொய்புனையும் உலகினிலே அன்புதனை கேட்டுநிற்பேன்
ஆய்ந்தறியும் தன்மைதனை அறிவதற்கு விழைகின்றேன்
உய்யும்வகை அறியேனே உனைநானும் காணேனே.

1956. மாற்றவேண்டும் என்மனத்தை
போற்றவேண்டும் உன்குணத்தை
ஏற்றவேண்டும் உன்கருணை
கற்கவேண்டும் உன்மனமே.

1957. அர்த்தமுள்ள வாழ்க்கைதனை எமக்கருளும் ஆண்டவனே
ஈர்த்திடுவாய் உனதருளால் எந்நாளும் என்மனத்தை
பார்த்திடுவாய் எளியவனை எந்நாளும் உனதன்பால்
சேர்த்திடுவாய் எனதன்பை மறவாது உன்னருகே.

1958. செம்மைமொழி பேசி உன்மனத்தை ஈர்த்திடுவேன்
அம்மையப்பா எனப்போற்றி எக்கணமும் வாழ்த்திடுவேன்
அம்மாஎன அழைத்து அன்புடனே அழைத்திடுவேன்
எம்மனத்தை அறிந்திடுவாய் உனதன்பாலே.

1959. உருகிடுவாய் உனை அழைத்தால்
மருகிடுவாய் உனை நினைந்தால்
பெருக்கிடுவாய் உனை அறிந்தால்
ஆருயிராய் வந்துநிற்கும் என்பொருளே.

1960. நல்லாசி தரவேண்டும்
வல்லமையை பெறவேண்டும்
இல்லாமை நீங்கவேண்டும்
ஒல்குபுகழ்தர வேண்டுவனே.

1961. வசந்தகாலம் வர வேண்டும்
ஈசன்அருள் பெறவேண்டும்
வாசமதை தரவேண்டும்
நேசமுடன் வரும் விளக்கே.

1962. திருவருளே எனதுருவே
அரும்பொருளே எனதன்பே
பெரும்மரபே எனதுயிரே
கருப்பொருளே எனதன்பே

1963. ஆய்வு செய்யும் உனதியல்பு
தாய்போல வரும் தகைமை
சேய் எனவே எனை அணைத்து
உய்யும் வழிதரும் விழியே.

1964. உணர்த்திடுவாய் உனதன்பால்
இணங்கிடுவாய் எனதன்பால்
காண வைப்பாய் உன்பெருமை
மணம் பரப்பும் மாமலரே.

1965. கொன்றைமலர் நீ அனிவாய்
அன்னையென எனை அணைவாய்
ஆன்றோனாய் நீ மலர்வாய்
அன்பனாய் வரும் பூவே.

1966. பந்தமதை தந்து விடுவித்தாய் அதிலிருந்து
சொந்தமதை தந்துவிலக்கிவிட்டாய் அதிலிருந்து
தந்துவிட்ட சொந்தமதை எடுத்துவிட்டாய் அதிலிருந்து
பாந்தமென தந்துவிட்டாய் மறவாது உனதன்பே.

1967. சுடரே, ஒளியே, ஒலியே என் ஓவியமே
படரும் கொடியே, பனித்துளியின் குளிரே
ஆடவரசே, என் மனத்து விண்மதியே
நடராசே, என் விழியே.

1968. மனத்துயரை இறக்கிவைத்தேன் உன் மனத்துள்ளே
மனக்கோவில் கட்டிவைத்தேன் என்மனத்துள்ளே
மனக்கண்ணே இருத்திவைத்தேன் உன்உருவை
மனமிரங்கி வருகின்ற என்சுடரே.

1969. திருவுருவம் காட்டி அருவமாக நின்றிடுவாய்
திருவுருவம் காட்டி மகிழ்ந்திடுவாய் எந்நாளும்
திருவுருவம் வெளிப்படுத்தி நிறைந்திருப்பாய் என்மனத்தில்
திருவுருவே என்மனக்கதவே வருவாயே எந்நாளுமே.

1970. விண்முகிலை அணிந்தவனே
மண்ணுலகை ஆள்பவனே
கண்ணொளியை தருபவனே
பண்ணாக வருவாயே.

1971. வேதியுணர்ந்தவனே மூவுலகும் ஆள்பவனே
ஆதியாய் வருந்தேனே என்மனத்தை உணர்பவனே
உதிக்கின்றசெங்கதிரே அனைத்துலகும் அளந்தவனே
துதித்திடுவேன் என் சுடரே.

1972. உருகிடுவாய் என்உணர்வை அறிந்திடுவாய்
பெருக்கிடுவாய் உள்ளுணர்வை காட்டிடுவாய்
பருகிடுவாய் உள்மனத்தை ஈர்த்திடுவாய்
மருகிடுவாய் எனதன்பை அறிந்திடவே.

1973. புரிந்துகொள்வாய் என்மனத்தை
காரிருளை நீக்கிடுவாய்
மாரியென வந்திடுவாய்
அரிதாக மலர்வாயே.

1974. இருளகற்றும் கதிரவனே
அருளமதை தரும் தேனே
தருநிழலாய் வரும் அமுதே
அருமையென பெறும் பூவே.

1975. வாசமுள்ள மலர் மணமே
நேசமுள்ள மனத்தேனே
பாசமுடன் வரும் உயிரே
ஈசனென உணர்வேனே.

1976. உணர்வுதனை அறிபவனே
இணக்கமுடன் தெரிபவனே
கணங்களுக்கு அதிபதியே
வணங்கிடுவேன் மனத்தாலே.

1977. ஆண்டவனே ஆருயிரே
அண்டமெல்லாம் உனதுயிரே
எண்ணத்துள் நிறைந்தவனே
உண்மையுடன் வேண்டுவனே.

1978. கற்கண்டு உன் சொல்லமுதம்
கற்கண்டு உன் இனியமுகம்
கற்கண்டு உன் பொற்பாதம்
கற்கண்டு உன் மலர்க்கரமே.

1979. உந்தன் முகம் சொர்ணமுகம்
உந்தன் விழி காந்தவிழி
உந்தன் கரம் காக்கும் கரம்
உந்தன் பதம் என்வழியே .

1980. காக்கின்ற கரத்தாலே அணைத்திடுவாய் அன்பாலே
ஆக்கும் உந்தன் கரத்தாலே உதவிடுவாய் பண்பாலே
ஊக்குவிக்கும் மனத்தாலே வளர்ந்திடுவாய் வாழ்வுதனை
எக்கணமும் தோற்றுவிப்பாய் பிறப்புதனை மாற்றாதே.

1981. பாதமதை பணிந்திடுவேன்
வேதமதை உணர்ந்திடுவேன்
ஆதரவை நாடிடுவேன்
பதமாக பற்றுவனே.

1982. உள்ளொளியை காட்டிடுவாய்
தெள்ளமுதாய் இனித்திடுவாய்
உள்ளலென அளித்திடுவாய்
உள்ளமதில் நிறைவாயே.

1983. திருந்தவேண்டும் என்மனது
அருந்தவேண்டும் உனதன்பு
பெருகவேண்டும் உன்கருணை
மருகி நிற்பேன் அறிவதற்கே.

1984. அருளே என் அம்மையப்பா
ஆருயிரே என் அன்னையப்பா
உருவே என் அப்பனப்பா
அருவே நீ என் சிவப்பழமே.

1985. விழிச்சுடரே என் கண்மணியே
அழியாத என் மனக்கதவே
பழியில்லா என் அருளமுதே
கழி உவகை தரும் தேனே.

1986. பற்றில்லா பரம்பொருளே
உற்றவனாய் தரும் தெளிவே
கற்றவனாய் வரம் அறிவே
பெற்றவனாய் வருவாயே.

1987. மாற்றமில்லா சிவப்பழமே
ஆற்றிடுவாய் உனதருளை
பெற்றிடுவாய் எனதன்பே
ஊற்றுநீராய் வரும் மணமே.

1988. அறியவொண்ணா ரகசியமே
அறியவொண்ணா வான்முகிலே
அறியவொண்ணா அலைகடலே
அறியவைப்பாய் உனதன்பாலே.

1989. இதய வீணை மீட்டிடுவாய்
உதய வானம் காட்டிடுவாய்
ஆதரிக்க கரம் நீட்டிடுவாய்
உதவும் மனம் தருவாயே.

1990. கலை அனைத்தும் உந்தன் சொந்தமப்பா
மலை அனைத்தும் உந்தன் இல்லமப்பா
அலை அனைத்தும் உந்தன் ஓசையப்பா
விலையில்லா மரகதமே வணங்குவேன் தலைகுனிந்தே.

1991. வாழ்வு காட்டும் பரம்பொருளே
ஊழ்வினையை நீக்கும் சுடர்விழியே
ஆழ் மனதை அறியும் பொருளமுதே
ஏழ் உலகும் அறிவாயே.

1992. ஒப்பில்லா மரகதமே
தப்பில்லா ஒளிவிளக்கே
எப்படியும் உனைபிடிப்பேன்
அப்பனென வருவாயே.

1993. இல்லாமை சொல்லி வரும் அமுதே
நில்லாமை சொல்லி வரும் தேனே
கல்லாமை நீக்க வரும் மானே
பல்லுயிரும் ஆண்டவனின் படைப்புத் தானே.

1994. அஞ்சுதலை தவிர்ப்பவனே
கெஞ்சுதலை கேட்பவனே
தஞ்சமதை தருபவனே
அஞ்சலென வருபவனே.

1995. அனைத்துயிரும் உன்னுயிரே
எனையாளும் ஆண்டவனே
வினைநீக்கும் அருளாளா
உனைவேண்டி வணங்குவனே.

1996. உமைகொண்டாய் ஓர்பாகம்
எமை ஆண்டாய் எந்நாளும்
தமை தந்தாய் எக்கணமும்
இமைபோல காப்பாயே.

1997. காலமில்லா அருட்கடலே
உலகில்லா அலைகடலே
அலகில்லா ஆழ்கடலே
கலமாக வருவாயே.

1998. ஆடவரசே அம்பலமே
பாடலுக்கு அதிபதியே
தேடலுக்கு அருவமே
ஊடகமாய் வரும் நிலையே.

1999. அறவொளியை காட்டிடுவாய்
புறவொளியை மறைத்திடுவாய்
தேடி வைப்பாய் அன்புமனம்
ஊறவைப்பாய் உன்மனதே.

2000. ஓங்கார நாதமென உலகல்லாம் விளங்கிடுவாய்
ஆங்காரம் தனை தகர்த்திடுவாய் உன்னருளால்
பாங்காக உணர்த்திடுவாய் பக்குவமாய் உனதன்பால்
ஏங்குமனம் அறிந்திடுவாய் உனதருமை மனத்தாலே.

2001. கருவறையை உறைந்திருப்பாய்
தருநிழலாய் உணர்த்திடுவாய்
ஒருமனதாய் நினைத்திடுவாய்
உருவமதை காட்டுவாயே.

2002. பாதமலர் பற்றிடுவேன்
ஆதவனாய் ஏற்றிடுவேன்
இதமாக அழைத்திடுவேன்
ஈதலைத் தருவாயே.

2003. துணைகாட்டும் அருளாளா
அணைபோடும் பண்பாளா
கணை தொடுக்கும் தாளாளா
ஆணை செய்யும் எனதரசே.

2004. மெய்யன்பு உனதன்பே
ஆய்ந்தறிவது உனதருளே
பாய்ந்துவருவது உன்பண்பே
உய்யும்வழி உன்பற்றே.

2005. கேட்டுப் பெறுவது உனதன்பு
ஆட்டிவைப்பது உன்பண்பு
ஊட்டிவிடுவது உன்மரபு
காட்டித்தருவது உனதருளே.

2006. நெஞ்சமதில் வஞ்சமில்லை
தஞ்சமதில் மிச்சமில்லை
கெஞ்சுவதில் பற்றுமில்லை
கொஞ்சுவதில் அன்னைநீயே.

2007. கற்கும் முறை அறியவில்லை
கற்ற வித்தை தெரியவில்லை
பற்றும் மனம் புரியவில்லை
பெற்றிடுவேனே உன் கருணையாலே.

2008. அளவில்லா பெருங்கடலே
ஆளவந்தாய் பெருந்துணையாய்
உளமதனை வெளிக் கொணர்ந்தாய்
தோள் கொடுக்க வருவாயே.

2009. மெய்யுணர்வை அறியவேண்டி உன்னடியை
ஆய்வதற்கு அருளவேண்டும் எனதன்பே
பொய்யுலகை அறியவைத்து உனதுணர்வை
தாய் எனவே அறிய வைப்பாயே.

2010. மெய்யன்பன் நீயென்று உனதுகழல் பற்றி
உய்யும்வகை அறியவேண்டி
எய்திடுவேன் என்மனத்தை
ஓய்வில்லாது தெரிவதற்கே.

2011. தாய் எனவே அகப்பையில் தாங்கி
சேய் எனவே கருப்பையில் ஏற்று
காய் எனவே உன்மனத்தில் பெற்று
கனி எனவே ஆக்கிடுவாய் எனதன்பே.

2012. இரவுபகல் இல்லாத எனதன்பே
அரவு பயம் இல்லாத எனதுயிரே
மரபு மாறா நிறைந்திருக்கும் இறையன்பே
வரம் வேண்டி தொழுவேனே.

2013. ஒளி, ஒலியாய் விளங்கிடுவாய்
ஒளிப்பிழம்பை காட்டிடுவாய்
ஒளி விளக்கை ஏற்றிடுவாய்
அளித்திடுவாய் அன்புதனை மறவாதே.

2014. பற்றற்றவன் மனத்தை பற்றிடுவேன்
பற்றுள்ள என்மனத்தே இடம் கொடுப்பேன்
பற்றறவன் பாதம் பணிந்தெழுவேன்
பற்றிடுவேன் அவன்மனத்தை என்னுள்ளே.

2015. பாதமலர் பற்றிடுவேன்
ஆதவனாய் உனைத்தொழுவேன்
பேதமில்லா பரம்பொருளே
பதமாக பற்றுவேனே.

2016. ஆற்றிடுவாய் உனதன்பை எந்நாளும்
ஆற்றிடுவாய் உனதருளை எப்பொழுதும்
ஆற்றிடுவாய் உன்கருணை எக்கணமும்
ஆற்றிடுவாய் உன்பற்றை மறவாமலே.

2017. காற்றாக வரும் பொருளே
மாற்றமில்லா உனதுருவே
தோற்றமில்லா ஆண்டவனே
ஏற்றிடுவேன் மனத்தாலே.

2018. லிங்கமாய் காட்சி தந்தாய்
அங்கமாய் இடம் பெற்றாய்
பங்கமில்லா மனம் படைத்தாய்
சங்கமிப்பாய் என் மனத்தே.

2019. உயிரோடு கலந்தவனே
உயிரோடு இயைந்தவனே
உயிரோடு அணைந்தவனே
உயிராக இருப்பாயே.

2020. கூடிநிற்பாய் உள்ளுணர்வாய்
தேடிநிற்பாய் சேயெனவே
ஓடிநிற்பாய் தாயெனவே
பாடிநிற்பேன் என்னமுதே.

2021. காற்றோடு கலந்தவனே
ஊற்றாக இனிப்பவனே
கற்றவனாய் வரும்தேனே
பெற்றவனாய் வரும் அமுதே.

2022. நற்குணத்தை தாராயோ
உற்றவனாய் காட்டாயோ
பெற்றவனாய் நினையாயோ
ஏற்றமிகும் என் கவியே.

2023. காந்தம் உந்தன் கண்களப்பா
பாந்தம் உந்தன் மனதப்பா
பந்தம் உந்தன் உள்ளமப்பா
சொந்தமென வரும் தாயே.

2024. குழந்தையென உன்முகம் பார்ப்பேன்
ஆழமான உன்மனம் அறிவேன்
உழவனாக உன்கரம் நினைப்பேன்
இழந்திடுவேன் என் உள்ளமதே.

2025. ஆடுகின்ற பதம் பார்ப்பேன்
தேடுகின்ற உளம் நினைப்பேன்
ஈடுள்ள மனம் அறிவேன்
நடுவனாக உனை நினைப்பேனே.

2026. திருவடியை நான் தொழுவேன்
உருவமதை நான் அறியேன்
ஆருயிராய் நான் அறிவேன்
ஈருருவாய் உனை தெளிவேனே.

2027. அலைகடலின் ஓசை நீ
கலைநயத்தின் அழகும் நீ
மாலை நேரத்து மதியும் நீ
சோலையென வரும் மனமே.

2028. மறைந்திருக்கும் பொருளும் நீ
உறைந்திருக்கும் தெய்வம் நீ
கறைபடியா மனமும் நீ
அறைகூவி உனை அழைப்பேனே.

2029. வல்வினைகள் நீக்கிடுவாய்
அல்லல்தனை தீர்த்திடுவாய்
பல்லுயிரை வளர்த்திடுவாய்
இல்லாமை தவிர்ப்பவனே.

2030. மனச்சுமையை குறைத்திடுவாய்
மனமறிந்து காத்திடுவாய்
மனத்துயரை அறிந்திடுவாய்
மனத்துள்ளே நிறைபவனே.

2031. அங்கமெல்லாம் கருணை ஊற்று
உங்கள் முகம் அருள் ஊற்று
தங்கள் விழி தேனமுது
எங்கள் மன இனியமுதே.

2032. என்மனத்து இனியவனே
உன்மனது கரும்பினிமை
அன்புவிழி உனதருமை
இன்சொல்தான் உன் பொருளே.

2033. கண்டுவிட்டேன் உனதிரக்கம்
காண்பதெல்லாம் உனதுமுகம்
உண்பதெல்லாம் உனது பொருள்
கண்விழியால் காண்பேனே.

2034. மனதறிவால் உன் திறத்தால்
கனமறிவாய் உன் மனத்தால்
இனமறிவாய் உன் விழியால்
கானமதில் உறைவாயே.

2035. மலையினிலே ஒளி வடிவம்
அலையினிலே ஒலி வடிவம்
கலையினிலே இசை வடிவம்
தலை வணங்கி நிற்பேன்.

2036. ஈர்த்துவிட்டாய் காந்தமென
அர்த்தமதை புரிந்து கொண்டாய்
பார்வையாலே அறிந்துணர்ந்தாய்
கார்முகிலாய் வரும் அறிவே.

2037. புனல்போல சினம் தனிப்பாய்
மனம்போல அருள் தருவாய்
கானமென இசை அளிப்பாய்
உனதன்பால் எனை ஈர்ப்பாயே.

2038. உனதன்பால் என்மனம் அறிவாய்
உனதன்பால் என்இருள் குறைப்பாய்
உனதன்பால் எனை உணர்வாய்
உனதன்பால் உனை அறிவேனே.

2039. குறை தன்னை நீக்கிடுவாய்
மறை தன்னை உணர்த்திடுவாய்
இறை தன்னை காட்டிடுவாய்
உறைவாயே என் மனத்துள்ளே.

2040. சிவமே எனதன்பே எனை நீயும் அறியாயோ
சிவமே எனதருளே எனைநீயும் உணராயோ
சிவமே என்னுயிரே எனைநீயும் காணாயோ
சிவமே என்மனத்தை அறியாது போவாயோ.

2041. காணும் விழி நீ எனக்கு
அணுகும் அன்பு நீ எனக்கு
பேணும் மனம் நீ எனக்கு
வணங்குவது முறை தானே.

2042. பேசும் வழி நீ எனக்கு
மாசு இல்லா பரம்பொருள் நீ
கூசுகின்ற ஒளிச்சுடர் நீ
வசுமதியாய் வருவாயே.

2043. தெளிகின்ற மனமருள்வாய்
களிக்கின்ற மனம் தருவாய்
அளிக்கின்ற மனம் கொடுப்பாய்
ஒளிர்கின்ற என் பொருளே.

2044. லிங்கமென எழுந்தருள்வாய்
அங்கமெல்லாம் நிறைந்திருப்பாய்
தங்கமென ஒளிர்ந்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2045. தள்ளாத மனத்தாலே அழைத்திடுவேன் அன்பாலே
உள்ளமெல்லாம் நிறைந்ததாலே அன்பாலே அரவணைப்பேன்
கள்ளமில்லா அன்பாலே உண்மைதனை உணர்த்திடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2046. பிஞ்சுமுகம் உந்தன் முகம்
கெஞ்சும் முகம் எந்தன் முகம்
தஞ்சம் புகும் உன்னிடமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2047. நடனமாடும் சிதம்பரமே
உடன்கொண்டாய் உமையவளை
இடம்தந்தாய் அன்பினாலே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2048. லிங்கம் எந்தன் அருட்கடலே
அங்கமெல்லாம் தீஞ்சுவையே
எங்கும் நிறைந்திருக்கும் பெருஞ்சுடரே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2049. நிம்மதியை தரவேண்டும்
அம்மையிலே உணரவேண்டும்
நம்பும் மனம் அறியவேண்டும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2050. தவறுசெய்தல் இயல்பன்றோ பொறுத்தருளல் மரபன்றோ
தவமாக நினைக்கின்றேன் பெருங்கருணை தரவேண்டும்
ஈவது உன் செயலன்றோ தனிக்கருணை பண்பன்றோ
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2051. இட்டதுயர் தெரியவில்லை
விட்டுவிடுஉன் அருளாலே
ஈட்டிடுவேன் உனதன்பை
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2052. அன்னையென உனை அணைப்பேன்
அன்னையென உனை அழைப்பேன்
அன்னையென உனை அணைவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2053. பிள்ளையென ஏற்றிடுவாய்
பிள்ளையென அணைத்திடுவாய்
பிள்ளையென வாழவைப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2054. செய்தபாவம் அறியவில்லை
சேய் எனவே ஏற்றிடுவாய்
உய்யும் வழி உரைத்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2055. சுனை நீராய் இனித்திடுவாய்
வினை தன்னை நீக்கிடுவாய்
மனை தன்னை உயர்த்திடுவாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2056. வரமாக உனை நினைந்தேன்
வரமாக உனை அழைத்தேன்
வரமாக உனை உணர்ந்தேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2057. மன்றமதில் ஆடிடுவாய்
தென்றலென வீசிடுவாய்
அன்னையென மகிழ்விப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2058. காலடியே தஞ்சமென கழித்திடுவேன் காலமெல்லாம்
காலடியே அடைக்கலமாய் கழித்திடுவேன் பொழுதெல்லாம்
காலடியே யாவுமாய் கழித்திடுவேன் எப்பொழுதும்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2059. ஒளியின் ஒளிப் பிழம்பே
அளவில்லா பெரும் பொருளே
தளமில்லா அருட் பழமே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2060. உணர்வுதனை நீட்டிவிட்டாய்
காணவழி வகுத்துவிட்டாய்
வணங்கும் முறை அறியவைத்தாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2061. தேடி நிற்பேன் உனைக் காண
ஓடி வருவேன் உனை அழைக்க
பாடி அழைப்பேன் உனைப் பார்க்க
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2062. அழகு உந்தன் உருவமப்பா
பழம் போல சுவையப்பா
ஆழம் உன் மனதப்பா
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2063. பலமே என் சிவமே
உலகே உன் அசைவே
கலமே உன் மனமே
நலமே உன் மனதே

2064. மனக்குறையை தீர்த்திடுவாய்
அனல் போல எரித்திடுவாய்
உனதன்பை பொழிந்திடுவாய்
எனதன்பை அறிவாயே.

2065. திருவடியை காண வேண்டும்
அருள்விழியை அறிய வேண்டும்
இருள் நீக்கி வரவேண்டும்
உரு தெரிய வேண்டுவனே.

2066. பிறை சூடும் பெரியவனே
இறை என்னும் பெருந்தேனே
மறையாவும் உணர்ந்தவனே
உறைவாயே என் மனத்துள்ளே.

2067. நாகமதை தலையில் கொண்டாய்
தேகமதில் உமையை கொண்டாய்
பாகமதில் பெண்ணை கொண்டாய்
அகமதிலே புகுவாயே.

2068. பிள்ளையென ஏற்றிடுவாய்
உள்ளமதில் இடம் தருவாய்
கள்ளமில்லா மனம் அருள்வாய்.
தள்ளாத நிலை தருவாயே.

2069. சிவமே என் மனமே
சிவமே என் அன்பே
சிவமே என் கனியே
சிவமே என் உயிரே.

2070. கசிந்துருகி அழைத்திடுவேன்
காசியிலே இருப்பவனே
பேசி உனை ஏற்றிடுவேன்
ஆசி கூற உருவாயே.

2071. அளவில்லா ஆண்டவனே
உளம்நிறைந்து இருப்பவனே
களமிறங்கி அருள்பவனே
தளம் போட வருவாயே.

2072. என்உயிரினும் மேலாவாய்
என் மனதினும் உயர்வாவாய்
என் அன்பினில் உயிராவாய்
என் மனத்துள் ஊறும் அமுதே.

2073. இன்பமதை நல்கவேண்டும்
துன்பமதை தீர்க்கவேண்டும்
வான் உயர்ந்த கற்பகமே
என் மனத்து உயிர்த்தேனே.

2074. மனக்குறையை பகிர்ந்திடுவேன்
அனல்போல நீக்கிடுவாய்
தானமாக கேட்டிடுவேன்
மனமதனை அறிவாயே.

2075. உன்னையே சரணடைந்தேன்
என்மனத்தை அறிவாயே
இன்முகத்தை காட்டாயோ
இன்னல்தனை தவிர்ப்பாயே.

2076. அன்னையென பற்றிடுவேன்
அன்புமொழி பகராயோ
கன்னல் விழி காட்டாயோ
மின்னலென வருவாயே.

2077. பெற்றவனாய் உனை அடைந்தேன்
ஏற்றிடுவாய் என் மனக்குறையை
தேற்றிடுவாய் என் மனத்தை
உற்றவனாய் வரும் மலரே.

2078. நழுவாது பற்றிடுவேன்
வழுவாது வழிபடுவேன்
வழுவாது தொழுதிடுவேன்
நழுவாது வரும் தேனே.

2079. மன்னித்திடு என் பிழையை
உன்னருளால் நீக்கிவிடு
அன்னையென மறந்துவிடு
தன்னொளியை தரும் குலமே.

2080. வேற்றுமுகம் அறியவில்லை
பெற்றமுகம் நீயப்பா
உற்றபலம் உனதப்பா
ஏற்றவேண்டும் உன்னாலே.

2081. முழுநிலவே மூலவனே
பழுமரமே பகலவனே
உழுநிலமே மூத்தவனே
எழும் இறையே என்மனக்குடிலே.

2082. பாடிநிற்பேன் பாங்குடனே
ஓடி வருவேன் உனைக்காண
தேடி நிற்பேன் உனையறிய
ஆடிநிற்கும் அம்பலமே.

2083. ஓய்விலாது உனை நினைப்பேன்
ஆய்விலாது உனை உணர்வேன்
தேய்விலாது உனை மறவேன்
காய் இலாத என் கனியே.

2084. முடிவில்லா மூத்தவனே
அடியில்லா ஆண்டவனே
ஈடில்லா மூலவனே
பாடிநிற்பேன் உனை நினைத்தே

2085. ஆல்போல வளர்ந்திடுவாய்
பால்போல நிறமுடையாய்
இல்லத்தில் நிறைந்திடுவாய்
ஓங்கும் முறை அறிவாயே.

2086. வெண்சுடரே தேனமுதே
தண்ணொளியே விண்ணமுதே
கண் விழியே கதிர்விளக்கே
காண்பதற்கு ஒளியவனே.

2087. பற்றுதலை காட்டிடுவாய்
ஆற்றிடுவாய் அன்புதனை
உற்றவனாய் உணர்த்திடுவாய்
ஏற்றமிகும் மலைத்தேனே.

2088. தயவுதனை காண்பேனே
அயராது அழைப்பேனே
இயல்புடனே விளிப்பேனே
மாயமாக மறைவதேனோ.

2089. வீசும் தென்றல் நீ எனக்கு
பேசும் விழி நீ எனக்கு
மாசு இல்லா உயிர்த்தேனே
பசுமடியின் பால் நீயே.

2090. குற்றமில்லா இறைவனப்பா
தேற்றுகின்ற மனமப்பா
பற்றகின்ற பொருளப்பா
போற்றிடுவேன் உனைதானே.

2091. முதற்பொருளே முடிவில்லா என்னுயிரே
ஆதவனாய் வரும் ஒளியே என்னமுதே
பதமாக வரும் அமுதே என் பொருளே
இதமாக வருவாயே.

2092. உருகாதோ உன்மனது
பெருகாதோ உனதன்பு
வருவாயோ என்னருகில்
தருவாயோ உன்அமுதே.

2093. சக்தி தனை தாராயோ
உக்தி ஒன்று கூறாயோ
ஆக்கமதை காட்டாயோ
பக்தியாலே அழைப்பேனே.

2094. பரம்பொருளாய் உறைகின்றாய்
கரம் கூப்பும் பொருளாவாய்
சிரம் தாழ்த்தும் உயிர்வாவாய்
ஈரமுள்ள என்தாயே.

2095. அழைத்திடுவேன் எனதன்பால்
தழைத்திடுவாய் உனதன்பால்
மழைநீராய் பொழிந்திடுவாய்
அழைப்பேனே தந்தைபோலே.

2096. தேனருவி உந்தன்மொழி
மனஅமுது உந்தன் செயல்
உனதன்பு எந்தன் வரம்
எனது மனம் அறிவாயே.

2097. மர் போல உனது மென்மை
உலகெல்லாம் உனது மொழி
கலம்போல உனது உள்ளம்
காலமறிந்து வருவாயே.

2098. அமுதே என் சிவமே
அமுதே உன் உளமே
அமுதே உன் முகமே
அமுதே உன் உருவே.

2099. ஆடும் சிதம்பரமே எனதன்பே
பாடும் பாவலனே எனதருளே
தேடும் காவலனே என் அமுதே
ஈடுஇல்லா எனதுயிரே.

2100. செல்வமே சிதம்பரமே உனதருளை காட்டாயோ
இல்லையென்று சொல்லாத எளியவனே வாராயோ
எல்லையில்லா ஆண்டவனே ஈடில்லா இறையவனே
ஓங்கு புகழ் உடையவனே எனதன்பை அறியாயோ.

2101. காட்சிக்கு எளியவனே
ஆட்சிக்கு உரியவனே
மாட்சிமை உடையவனே
பாட்டுக்கு இசைபவனே.

2102. மனதுக்கு இனியவனே இனமறிந்து வருபவனே
மனதுக்குள் உறைபவனே பற்றுதலை தருபவனே
மனதுக்கு ஏற்றவனே பற்றதுணை அளிப்பவனே
மனதுக்குள் வீழ்ந்தவனே எனதுள்ளம் அறிவாயே.

2103. மலரடியை தொழுதிடுவேன்
இலகுவாக பற்றிடுவேன்
உலகமெலாம் உணர்ந்தவனே
கலமாக ஏற்பாயே.

2104. கரும்பினிமை உனது மனம்
அரும்புமலர் உனது உளம்
வரும் விருந்து உனது உரு
தரும் தேனாய் இனிப்பாயே.

2105. அருள்விளக்காய் ஒளிர்பவனே
மருள்நீக்க வருபவனே
இருள் அகற்றும் பெருமானே
ஆருயிரே நீதானே.

2106. எண்ணமதில் குடிகொண்டாய்
உண்மைதனை அறியவைத்தாய்
அண்மையிலே இருக்கின்றாய்
கண்ணெதிரே வருவாயே.

2107. குலம் தழைக்க உதவிடுவாய்
நிலமதனில் வாழவைப்பாய்
பலமாக உரம் தருவாய்
நலம் தரவே வருவாயே.

2108. திருவடியை ஏற்றிடுவேன்
பெருமையுடன் தொழுதிடுவேன்
அருமறையாய் உணர்ந்திடுவேன்
திருவிளக்காய் ஏற்றவேனே.

2109. பயிர் வாடா மழை நீயே
உயிர் வாடா உருநீயே
வெயில் காணா நிழல் நீயே
உயிர்த்தேனாய் இனிப்பவனே.

2110. குறையாத மனம் நீயே
உறையாத உளம் நீயே
மறைநூலின் பொருள் நீயே
இறையாக இனிப்பவனே.

2111. உளம் நிறைந்த உட்பொருளே
களமனைத்தும் உன்னருளை
அளவில்லா ஒளிப்பொருளே
இளரும் உளம் உன்மனதே.

2112. மனம் நிறைந்து இருப்பவனே
இனம் தெரிந்து வருபவனே
கனங்களுக்கு அதிபதியே
காணமென வருவாயே.

2113. தெளிவான உள்ளமதை நாளும் தரவேண்டும்
அளிக்கவேண்டும் உனதன்பை மறவாது எந்நாளும்
கனிக்கவேண்டும் மனமெல்லாம் மறவாது
நலம் பெற வேண்டும் நமச்சிவாயவே.

2114. கலையனைத்தும் உன்சொந்தம்
மலையனைத்தும் உன்வாசம்
அலையனைத்தும் உன்பந்தம்
விலையில்லா பொருள் நீயே.

2115. குறையாத ஒளி நீயே
இறைபொருளாய் வருபவனே
மறை நான்கும் உணர்ந்தவனே
உறைகின்றாய் மனத்துள்ளே.

2116. நட்புள்ள குணம் நீயே
உட்பொருளின் அருள் நீயே
ஆட்கொள்ளும் மனம் நீயே
ஈட்டிடுவேன் உனதன்பே.

2117. வளமையுள்ள உளம் நீயே
இளமையுள்ள உரு நீயே
உளம் நிறைந்த இறை நீயே
களமிறங்கி வருவாயே.

2118. ஓசையில்லா அசைவினிலே உட்கருவாய் இருப்பவனே
ஓசையில்லா ஒளியினிலே உள்ளொளியாய் திகழ்பவனே
ஓசையில்லா மலையினிலே ஓங்காரமாய் ஒளிர்பவனே
ஓசையில்லா உயிரினிலே, உடலாக இருப்பவனே.

2119. வசந்தமுள்ள மலர் நீயே
வாசமுள்ள மனம் நீயே
நேசமுள்ள உளம் நீயே
ஈசனாக வரும் உருவே.

2120. பந்தங்கள் தருபவனே
உந்துதலை அளிப்பவனே
சிந்தனையில் இருப்பவனே
விந்தைதனை செய்பவனே.

2121. மாறாத மனம் நீயே
மாறாத அருள் நீயே
மாறாத பொருள் நீயே
மாறாத இறை நீயே

2122. தளர்விலா மனமே
அளவிலா கருவே
இளகிடும் உணர்வே
உளமறிந்து வருவாயே.

2123. பெற்றவனாய் உளமதனை அறிந்தவனே
ஏற்றவனாய் மனதிரங்கி வருபவனே
கற்றவனாய் உணர்ந்தறிந்து ஏற்பவனே
உற்றவனாய் எந்நாளும் வருவாயே.

2124. விடம் உண்ட மெய்ப்பொருளே
இடம் கொண்ட பெருமானே
வடம் கொண்டாய் நஞ்சுதனை
படர்கொடியாய் வருவாயே.

2125. சிவமே என்னருளே
தவமே உன்னுருவே
ஆவலுடன் அழைக்கின்றேன்
ஈவது உன் செயலே.

2126. அண்டமெல்லாம் உனதங்கம்
ஆண்டிடுவாய் எனதுள்ளம்
கண்டிடுவாய் எனதுருவை
காண்பேனே உனதன்பை.

2127. இயங்குவது உனதன்பால்
தயங்காது வருவாயே
வியந்திடுவேன் உனதசைவை
மயங்கிடுவேன் உனதன்பாலே.

2128. பொன்னம்பல நடராசா
உன் எழிலை காட்டாயோ
என்மனதை அறிவாயோ
அன்பாலே வருவாயே.

2129. அன்பினில் விளைந்த என்னுயிரே
இன்முகத்தால் அழைக்கும் என்னமுதே
உன்னெழிலால் ஈர்க்கின்ற என்தேனே
என் அம்மையாய் வரும் என் உணர்வே.

2130. வினை தன்னை அறுப்பவனே
உனை நினைந்து வாழ்த்திடுவேன்
மனையதனின் நிறைந்தவனே
நனைவாயே எனதன்பாலே.

2131. விளை நிலமாய் விரிந்தவனே
இளைப்பாறும் நிழல் நீயே
களைப் பகற்றும் வரம்நீயே
சளைக்காது வருவாயே.

2132. தவறாத சந்தானம் மனமிரங்கி தருவாயே
தவம் கலைந்து வருவாயே மனமிரங்கி அருள்வாயே
அவனியிலே உனதன்பை மறவாது அளிப்பாயே
ஈவது உனதியல்பே எனதறிந்து பார்ப்பாயே.

2133. முத்தான உந்தன்முகம் என்மனத்தில் சொந்தமப்பா
வித்தான உந்தன்மனம் என்னுடலின் உயிரப்பா
ஈத்துவிக்கும் உந்தன்குணம் அண்டமெல்லாம் அறியுமப்பா
ஒத்துழைக்கும் உந்தன் செயல் உயிர்களுக்கு வேண்டுவனே.

2134. முக்கனியின் சுவை நீயே
முக்கண்ணன் பெயர் நீயே
ஊக்குவிக்கும் உயிர் நீயே
எக்கணமும் வருவாயே.

2135. பெயர்சொல்ல ஓர்குழந்தை என் இல்லம் வரவேண்டும்
உயர்வான உன்மனத்தால் ஓர்குழந்தை தரவேண்டும்
அயராது அழைத்திடுவேன் உனதன்பை பெறவேண்டி
தயவாக அழைத்தால் தட்டாமல் வருவாயே.

2136. கருவிலே உருவாகி நலமதனை தரவேண்டும்
உருவிலே உனைஎண்ணி வளமதனை பெறவேண்டும்
அருவமான உனைநினைந்து வாழ்வுதனை பெறவேண்டும்
திருவாக உனை நினைந்து கைகூப்பி தொழுவேனே.

2137. மாசில்லா பரம் பொருளே
ஆசிதனை தரவேண்டும்
நேசிக்கும் உன்மனத்தை
கசிந்துருக செய்வேனே.

2138. பெற்ற உள்ளம் அறியாயோ
பெற்றவனே நீயன்றோ
உற்றவனாய் வாராயோ
பற்றும் தளிர் தருவாயே.

2139. புதிர் போன்ற உன்மனத்தை அறிவதற்கு வழியுமில்லை
அதிசயத்தை அளிக்கின்ற உன் உளமும் புரியவில்லை
உதிக்கின்ற இயற்கையென உன்உருவம் அறியவில்லை
மதிக்கின்ற உன்பதத்தை பற்றிடுவேன் மறவாதே.

2140. சேய்மனத்தை அறிகின்ற தாயுள்ளம் உந்தனக்கு
உய்யும்வகை காட்டுகின்ற அன்னையுள்ளம் உந்தனுக்கு
தாய் போன்று அரவணைக்க கருணையுள்ளம் உந்தனுக்கு
நோய் இல்லா வாழ்வுதனை எந்நாளும் வேண்டுவனே.

2141. விளைந்திடுவாய் என் உள்ளமதில்
அளைந்திடுவாய் என் எண்ணமதில்
இளைத்திடுவாய் என கருத்தினிலே
களைத்திரும்பாய் என் அன்பாலே.

2142. மழலை மொழி கேட்க வேண்டும்
குழந்தை நடை காணவேண்டும்
மழலை விழி பார்க்கவேண்டும்
குழந்தை முகம் காண்பேனே.

2143. வாடாமலராக மனதினிலே அரும்பிவிட்டாய்
தேடாத தென்றலென உள்ளமதில் புகுந்துவிட்டாய்
ஆடாத உள்ளமென எண்ணத்துள் நுழைந்துவிட்டாய்
ஓடாத மனமாக உயிர் மூச்சில் குடியிருப்பாய்

2144. வண்டு மொய்க்கும் மலரே
பண்பாடும் இசையே
தண்ணொளியின் கதிரே
விண்மதியே வாராயே.

2145. குமுதமென குளிர் தருவாய்
அமுதமென அருள் தருவாய்
குமுதமென ஒளி தருவாய்
அமுதமென இனி வருவாயே.

2146. வண்டாடும் பொய்கையிலே வண்ணமலர் நீதானே
பண்பாடும் ஒலியினிலே இன்னிசையும் நீதானே
விண்பாடும் ஒளியினிலே குமுதமுகம் நீதானே
கண்காட்டும் பார்வையிலே விழிக்கதிரும் நீதானே.

2147. ஆடிடுவாய் என் மனத்துள்ளே
தேடிடுவாய் என் உள்ளமதை
பாடிடுவேன் உன் மனமுருக
ஓடிடுவேன் உனைக் காணவே.

2148. முக்கனியாய் இனிப்பவனே
முக்கண்ணை உடையவனே
எக்கணமும் உனை நினைப்பேன்
இக்கணமே வருவாயே.

2149. செம்மை உந்தன் உளமே
அம்மையப்பன் நீதானே
இம்மையிலே அருள்வாயே
உம்மை என்றும் தொழுவேனே.

2150. வசந்தத்தின் பைந்துளிரே
பாசத்தில் தாய் நீயே
வாசமுள்ள மலர் தானே
ஈசனாக வரும் தேனே.

2151. பிரணவப் பொருளின் பொருள் நீயே
அரவணைப்பில் தாய் நீயே
இரக்கத்தில் அன்னை நீயே
ஈரமுள்ள மனத்தோனே.

2152. அண்டமெல்லாம் உந்தன் விந்தை
விண்ணுலகே உன் வாசம்
மண்ணுலகு உன் தலமே
ஆண்டவனாய் வருவாயே.

2153. குறைவில்லா வாழ்வுதனை எந்நாளும் தருபவனே
குறைவில்லா அறமதனை என்றென்றும் அருள்பவனே
குறைவில்லா கருணைதனை மறவாது அளிப்பவனே
குறைவில்லா அன்புதனை அன்னையென கொடுப்பவனே.

2154. குறை களைய வருபவனே
மறை நான்கும் உணர்ந்தவனே
இறையருளே வாராயோ
உறைகின்ற உனதன்பை பறைசாற்றி காட்டாயோ.

2155. ஒளிகாட்டும் மணி விளக்கே
அறிந்திடுவாய் அருளமுதை
கனித்திடுவேன் மகவுகண்டு
தெளிந்திடுவேன் அதை உணர்ந்தே.

2156. ஒளிகொடுப்பாய் இருளகற்ற
ஒளிதருவாய் பகல்காண
ஒளி அளிப்பாய் மலைமேலே
ஒளிர்ந்திடுவாய் அகலாமலே.

2157. வரம் தருவாய் மனமிறங்கி
கரம் அளிப்பாய் சிறந்தோங்க
சிரம் தாழ்த்தி வணங்கிடுவேன்
இரக்கமதை பெறுவதற்கே.

2158. எங்கும் நிறைந்திருப்பாய்
தங்குமிடம் அறியாது
அங்கெங்கும் நிலையாது
ஓங்கி நிற்பாய் மனத்துள்ளே.

2159. வினை தன்னை நீக்கிவிடு
உனைவேண்டி தொழுதிடுவேன்
எனை நினைந்து அருளிவிடு
மனையிறங்கி வாராயோ.

2160. வண்ணமலரில் மணம் தருவாய்
விண்ணுலகில் வீற்றிருப்பாய்
மண்ணுலகில் மறைந்திருப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2161. கண்ணின் ஒளி நீயே
விண்ணின் மதி நீயே
மண்ணின் உயிர் நீயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2162. காற்றில் கரைந்திருப்பாய்
ஊற்றில் நிறைந்திருப்பாய்
பற்றில் மகிழ்ந்திருப்பாய்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2163. எங்கும் நிறைந்தவனே
எங்கும் உறைபவனே
எங்கும் இருப்பவனே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2164. தேடிவந்த செல்வமே
ஓடி உனை அழைத்திடுவேன்
அடி பணிந்து வணங்கிடுவேன்
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2165. காணும் பொருள் நீ எனக்கு
பேணும் அருள் எந்தனுக்கு
வேணும் உந்தன் சொல் எனக்கு
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2166. சக்திதனை இடம் கொண்டாய்
ஆக்கமதை கையில் கொண்டாய்
ஊக்கமதை உடலில் கொண்டாய்
அக்கறையை மனதில் கொண்டாய்

2167. இரக்கமதை மனத்தில் தந்தாய்
உரமதனை தர மறந்தாய்
ஈரமுள்ள உள்ளம் தந்தாய்
கரமதனை பற்றுவேனே.

2168. உலகமது மாயை தானோ
காலமது மாறும் தானோ
பாலமது உன் உள்ளம் தானோ
பலமதனைத் தருவாயே.

2169. உள்ளமதில் குடிகொள்வாய்
தள்ளாது வீற்றிருப்பாய்
அள்ள அள்ள நிறைந்திருப்பாய்
கள்ளமில்லா மனம் தானே.

2170. நிலைத்திருக்கும் உந்தன் ஒலி
மலைத்திருக்கும் எந்தன் மனம்
அலைந்திருக்கும் உந்தன் மனம்
விலையில்லா பரம்பொருளே.

2171. எண்ணமதில் நிலைத்திருப்பாய்
விண்ணுலகில் கரைந்திருப்பாய்
மண்ணுலகில் விரிந்திருப்பாய்
கண்ணுக்குள் ஒளி நீயே

2172. நலம்தருவாய் உன் நாவாலே
பலம் தருவாய் உன்கையாலே
குலம்தருவாய் உன் அருளாலே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2173. பாவை மனம் அறியாயோ
தேவை தனை அறிவாயோ
பூவை உளம் புரியாதோ
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2174. பகிர்ந்து கொள்வனே் உன்னிடமே
மகிழ்த்துரைப்பேன் என்மனத்தை
மகிழந்திடுவேன் உனை நினைந்த
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2175. குறைகூறா மனம் தருவாய்
மறை நான்கும் அறிந்தவனே
இறை விளக்காய் ஒளிப்பவனே
உறைவிடமோ என்மனமே.

2176. மலரின் மணம் நீயே
மலரின் நிறம் நீயே
மலரின் பொருள் நீயே
மலர் போல வருவாயே.

2177. பனியின் குளிர்நீயே
இனிக்கும் சுவைநீயே
அனிச்சை மலர் நீயே
இனி என் மனம் நீயே

2178. மதிப்பில்லா பொருள் நீயே
உதிக்கின்ற ஒளி நீயே
ஆதியில்லா உரு நீயே
மதியாக குளிர்வாயே.

2179. மரகத மணி விளக்கே
கரம் கூப்பி தொழுதிடுவேன்
பரம் பொருளே உனை நினைப்பேன்
இரவு பகல் அற்றவனே

2180. அழகே உன் எழிலே
அழகே உன் ஒளியே
அழகே உன் உருவே
அழகே உன் மனதே.

2181. மணி ஓசை உந்தன் மொழி
அணிகலனே உந்தன் விழி
பிணிநீக்கம் உந்தன் உரு
மணிக்கதவே உன் உளமே.

2182. அசைகின்ற அரவு கொண்டாய்
ஓசையில்லா மனம் கொண்டாய்
இசையுடைய மொழி கொண்டாய்
ஆசையுடன் அழைப்பேனே.

2183. சந்திரனின் குளிர் நீயே
விந்தை தனை தருவாயே
மந்திரத்தால் வருவாயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2184. சொல்லின் பொருள் நீயே
இல்லின் ஒளி நீயே
அல்லல் தவிர்ப்பாயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2185. பொருள் தரும் சுடர் நீயே
அருள் தரும் தேன் நீயே
இருள் நீக்கும் ஒளிநீயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2186. வளமான உன் மனமே
ஆளவைக்கும் உன் குணமே
இளகிடுவாய் உன் மனத்தால்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2187. கடல்போல விரிந்தவனே
இடறில்லா குணத்தோனே
ஊடகமாய் இருப்பவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2188. எண்ணில்லா மனத்தோனே
வண்ணமுடன் திகழ்பவனே
உண்மையுடன் வருபவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2189. வெண்மை மனத்தோனே
பண்பெல்லாம் நிறைந்தவனே
காண்பதெல்லாம் உன்முகமே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2190. மலைபோல உயர்ந்தவனே
அலையாத மனத்தோனே
கலையாக நிற்பவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2191. குற்றமில்லா மனத்தோனே
உற்றவனாய் வரும் தாயே
பெற்றவனே நீயன்றோ
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2192. உறவு சொல்லும் ஆண்டவனே
அறமெல்லாம் உன் சொந்தம்
இறங்குவது உந்தன் மனம்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2193. கவர்ந்திடுவாய் உனதன்பால்
உவந்தளிப்பாய் உனதருளால்
தவமிருப்பாய் ஆண்டவனாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2194. நிறைந்திருப்பாய் அன்பாலே
உறைந்திருப்பாய் அருளாலே
மறைதருவாய் உன்புகழாலே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2195. தெரியாத பொருளில்லை
புரியாத உணர்வில்லை
அரிதான உறவில்லை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2196. உணர்வில்லா மனதில்லை
குணமில்லா உளமில்லை
இரக்கமில்லா பண்பில்லை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2197. தெளிவான உரை உண்டு
அளிப்பதற்கு வரம் உண்டு
எளிமையான உளம் உண்டு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2198. கள்ளமில்லா அன்புண்டு
உள்ளமெல்லாம் நிறைவுண்டு
ஆள்கின்ற குணமுண்டு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2199. இடர்தீர்க்க வருபவனே
விடமதனை கொண்டவனே
ஓடமாக உதவிடுவாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2200. மூடிடுமோ உன்மனது
ஈடில்லா இறைப்பொருளே
அடியில்லா அருட்கடலே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2201. அழகான அருட்கடலே
ஆழமான மனம் உனதே
வாழவைப்பாய் இனிதாக
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2202. நிலவின் குளிர்நீயே
உலவும் உயிர் நீயே
பலமான துணை நீயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2203. சொல்லமுதம் தரும் தேனே
அல்லலில்லா உயிர் நீயே
ஆல்போலும் துணை நீயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2204. கோவிலின் உயிர் நீயே
ஓவியத்தின் உணர்வு நீயே
காவியத்தின் கதை நீயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2205. எங்கும் நிறைந்தவனே
தங்குமிடம் அறிந்தவனே
ஓங்குப் புகழ் உடையவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2206. ஏற்றிடுவாய் என்மனத்தை
பெற்றிடுவேன் உனதன்பை
காற்றினிலே கலைந்தவனே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2207. கொடுத்திடுவாய் உனதருளை
எடுத்திடுவேன் உனதன்பை
விடுத்திடுவாய் உன்கருணை
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2208. இயற்கை அன்னை உன்பிறப்பு
உயரவைப்பது உன் இயல்பு
தயங்கமறுப்பது உன் மரபு
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2209. கலந்திருப்பாய் உயிருடனே
உலகளப்பாய் உன்கரத்தால்
திலகமென உயர்ந்திருப்பாய்
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2210. விரிசடையில் நதி கொண்டாய்
அரிதான அன்பு ஈந்தாய்
உரிமையுடன் உளம் தந்தாய்
தெரிய வைத்தாய் உன்மனதே.

2211. பொன்மனது உன்மனது
அன்புடனே அறிய வைப்பாய்
இன்னல்தனை தவிர்த்திடுவாய்
கன்னல் மொழி அறிவாயே.

2212. தொழும் அடியார் கரம் பிடிப்பாய்
அழும் மனதை தேற்றிடுவாய்
விழும் பாரம் தாங்கிடுவாய்
பழுமரமாய் வருவாயே.

2213. இதம் தன்னை தந்திடுவாய்
பதம் தன்னை காட்டிடுவாய்
விதவிதமாய் தோன்றிடுவாய்
அதர்மத்தை தவிர்ப்பாயே.

2214. உருகி நிற்பேன் உன் முன்னே
மருகிடுவேன் உனதன்பு வேண்டி
பருகிடுவேன் உனதன்பை
அருகாமை தருவாயே.

2215. மனம் என்னும் தோணியிலே அமர்ந்திருப்பாய் அழகாக
இனம் என்னும் குடியினிலே விளைந்திடுவாய் அன்பாக
உனதன்பு என்னும் கடலினிலே மூழ்கிடுவேன் துணையாக
தானம் என்னும் உனதன்பை மறவாது அருள்வாயே.

2216. அடிமை உந்தன் அன்பாலே
அடிமை உந்தன் பண்பாலே
அடிமை உந்தன் அருளாலே
அடிமையாக இருப்பேனே.

2217. நாலமெல்லாம் உன் உருவே
காலமெல்லாம் உன் வரவே
உலகெல்லாம் உன் செயலே
தலமெல்லாம் உன் எழிலே.

2218. உள்உணர்வின் கருப்பொருளே
ஆள்கின்ற மன உணர்வே
தள்ளாது உன் நினைவே
கள்ளமில்லாது வரும் தேனே.

2219. காற்றினில் மறைந்தவனே
ஊற்றான உருப்பொருளே
ஏற்றிடுவேன் உந்தனையே
கற்றிடுவேன் உன்மனதே.

2220. பொங்குகின்ற கடல் அலையே
எங்கும் நிலைத்தவனே
ஏங்கும் மனமறிவாய்
தங்கிடுவாய் என் மனத்தே.

2221. தள்ளாதமனம் அறிவாய்
உள்ளமதில் குடிபுகுவாய்
அள்ளுகின்ற மனதறிவாய்
ஆள்கின்ற என்தேனே.

2222. கடல்போல ஒலிப்பவனே
உடல்தன்னை ஈந்தவனே
தேடலதன்னை அறிந்தவனே
பாடம்தரும்பரம்பொருளே.

2223. இயற்கையை ஈன்றவனே
உயர்ந்திடுவாய் உனதன்பால்
பெயர் எடுப்பாய் உனதருளால்
அயராது வரும் மலரே.

2224. பலம்கொண்ட பரம்பொருளே
உலகு அறிந்த உயர்பொருளே
நலம் கொடுக்கும் அருட்சுடரே
வலம் வருவாய் என்மனத்தே.

2225. முக்காலமும் உணர்ந்தவனே
எக்காலமும் வருபவனே
ஆக்கமதை அறிந்தவனே
முக்கண்ணை உடையவனே.

2226. சுடரின் ஒளி போற்றி
படரும் கொடி போற்றி
சிவனே உனதடி போற்றி
பவமே உன்தாள் போற்றி

2227. அம்மையப்பன் அடிபோற்றி
இம்மையருள் தருபவன் போற்றி
செம்மைமொழி பகரும் நேசனடி போற்றி
வெம்மைமொழி நீக்கும் தேனே போற்றி.

2228. அருட்பொருளே போற்றி
தருநிழலே போற்றி
ஆருயிரே போற்றி
இருள் துடைப்பாய் போற்றி

2229. ஆனந்த சுடர் நீயே
இனமில்லா பொருள் நீயே
கானத்தின் குரல் நீயே
தானத்தின் மனம் நீயே

2230. குமுதத்தின் குளிர் நீயே
அமுதத்தின் சுவை நீயே
திங்களின் ஒளி நீயே
எங்கும் நிறைந்தவனே.

2231. மனக்கதவே உன் கோவில்
அனல் தருமே உன் கண்கள்
இனம் தருமே உனதன்பால்
உனதன்பை அறிவேனே.

2232. தேன்போல இனிப்பவனே
கன்னல் மொழி அருள்பவனே
இன்னல்தனை தவிர்ப்பவனே
என்மனத்தில் அமுதே.

2233. பிறப்பிற்கு மூத்தவனே
அறத்திற்கு மூலவனே
உறங்காது உன்மனதே
மறவாத மனத்தோனே.

2234. சங்கடங்கள் தீர்ப்பவனே
எங்கள்மனம் அறிந்தவனே
ஏங்கும் மனம் ஏற்பவனே
தங்குமிடம் உன் மனதே.

2235. குலம் விளங்க வருபவனே
உலகனைத்தும் அறிந்தவனே
காலமெல்லாம் துணையிருந்தும்
சலனமின்றி இருப்பாயே.

2236. அசைவின்றி ஆட்டிவைப்பாய்
ஓசையின்றி வாழவைப்பாய்
இசையின்றி ஒலி கொடுப்பாய்
விசையாலே ஈர்ப்பவனே

2237. செயல்கொண்டு பலன் தருவாய்
அயராது பொருள் தருவாய்
உயரமதில் ஏற்றிடுவாய்
தயவோடு வரும் பூவே.

2238. வாழ்வின் உயிர் நீயே
தாழ்வின் வினை நானே
ஆழ் உணர்வை அறிவாயே
நலம்பெறும் நாமம் நமச்சிவாயவே.

2239. இமைப்பொழுதும் உணர்வாயே
உமையவளின் பதி நீயே
அமைதியின் பொருள்நீயே
எமையாளும் ஆண்டவனே.

2240. நாதமென வீற்றிருப்பாய்
கீதமென இனித்திடுவாய்
பாதமதை தொழுதிடுவேன்
பதமதனை பற்றுவேனே.

2241. வாழ்வுக்கு பொருள் நீயே
தாழ்வில்லா பரம்பொருளே
வீழ்வில்லா மழைபொருளே
ஊழ்தன்னை அறிபவனே

2242. அறியால் பொருள் நீஎனக்கு
அறியும் வரை தொழுதிடுவேன்
தேறிடுவேன் உனை அறிந்தால்
ஆறிடுமே என்மனதே.

2243. பெருமானே உனதருளை அறிந்திடுவேன்
அருமையான உன்மனதை உணர்ந்திடுவேன்
ஆருயிராய் உன்னருளை ஏற்றிடுவேன்
இருள்நீக்கும் பகலவனே.

2244. கருமை நீக்கும் கதிரவனே
பெருமை தரும் ஆண்டவனே
அருமை உந்தன் உள்ளமப்பா
ஆருயிராய் ஏற்பேனே.

2245. செந்தழலில் வீற்றிருப்பாய்
விந்தைகளை செய்திடுவாய்
மந்திரங்க்ள அருளிடுவாய்
பந்தமதை தருவாயே.

2246. மணம் உள்ள மலர் நீயே
குணம் உள்ள பெற்றவனே
காண முடியா பெருந்தேவே
இணக்கமுடன் வருவாயே.

2247. இனிமையுள்ள கனி நீயே
பனியின் குளிர் நீயே
தனிமைக் குணம் உடையவனே
அனிச்சை மலர் மணம் நீயே

2248. ஓயாது அழைப்பேன்
தேயாது இருப்பவனே
தாயாக வருபவனே
ஈயாது இருப்பாயோ

2249. சாந்தமுள்ள ஆண்டவனே
சொந்தமென நினைப்பவனே
பந்தமதை தருபவனே
வந்தனைகள் செய்வேனே.

2250. தாங்குமிடம் உந்தன் மனம்
தங்குமிடம் உந்தன் உளம்
எங்கெங்கும் நிறைந்தவனே
உந்தனையே நினைப்பேனே.

2251. முக்கனியின் சுவை நீயே
எக்கணமும் வருபவனே
முக்கண்ணால் அளப்பவனே
ஆக்கத்தை தருவாயே.

2252. புனிதத்தின் பொருள் நீயே
கனியின் சுவை நீயே
இனிமையுள்ள இசை நீயே
பனியின் குளிர் நீயே

2253. பகலவனின் ஒளி நீயே
அகமதிலே பொருள் நீயே
ஆகமத்தின் வழி நீயே
இகமதிலே வருவாயே.

2254. மன்றத்தில் ஆடிடுவாய் அசைவுதனை நிறுத்திடுவாய்
குன்றத்தில் ஒளிர்ந்திடுவாய் வருபவர்க்கு வாழ்வளிப்பாய்
அன்புடனே அரவணைப்பாய் வந்தவரை தேற்றிடுவாய்
இன்னல்தனை தவிர்ப்பாயே.

2255. உனதருளில் உருகிடுவேன்
கானமதில் மயங்கிடுவேன்
தானமதில் வாழ்ந்திடுவேன்
உனதன்பால் திளைப்பேனே.

2256. தாள் வணங்கி போற்றிடுசூவன் துணை எனவே ஏற்றிடுவேன்
உள்ளுணர்வால் வணங்கிடுவேன் கரம்கூப்பி தொழுதிடுவேன்
உள்ளமதால் உணர்ந்திடுவேன் கருணை முகம் அறிந்திடுவேன்
தெள்ளமுதாய் வருவாயே.

2257. வாசகத்திற்கு உருகிடுவாய்
நேசமதை காட்டிடுவாய்
பாசமுடன் அணைத்திடுவாய்
வாசமுள்ள நறுமலரே.

2258. செயல்காட்டி விளக்கிடுவாய்
அயராது துணைகாட்டி வென்றிடுவாய்
உயரும் வழி காட்டிடுவாய்
மயங்கும் மனம் அறிவாயே.

2259. அருள் என்னும் சொல்லாலே ஆண்டிடுவாய் மனமதனை
பெருமை என்னும் மனத்தாலே ஈர்த்திடுவாய் யாவரையும்
ஆருயிராய் எமை நினைந்து ஏற்றிடுவாய் அன்பாலே
இருள் நீக்கும் பகலவனாய் வரும் பூவே.

2260. அறியாத என்மனத்துள் அம்மையென புகுந்துவிட்டாய்
அறியாத என்உடலுள் தந்தையென நுழைந்துவிட்டாய்
அறியாத என் உயிருள் ஆண்டவனாய் வளர்ந்துவிட்டாய்
அறியாத என்மனதை அறிவாயே.

2261. சங்கடங்கள் தீர்த்திடுவாய் நன்மைதனை தந்திடுவாய்
எங்கும் நிறைந்திருப்பாய் ஈன்றவனாய் வந்திடுவாய்
பொங்கும் அன்பாலே புகட்டிடுவாய் அன்புதனை
ஏங்கும் மனமறிந்து ஓடிவரும் என் தேனே.

2262. மனத்தியல்பை அறிந்திடுவாய்
இளமதனை ஈர்த்திடுவாய்
அனல்நீக்கி குளிர்தருவாய்
மனமறிந்து வரும் தேனே.

2263. நாணல்போல் வளைபவனே உனதன்பால் இளைப்பவனே
மணம்தரும் பூ என்மலரே உனதருளால் ஈர்ப்பவனே
வணங்கிநிற்கும் அடியவரை ஆர்வமுடன் அணைப்பவனே
குணமுடைய பாற்கடலே.

2264. சொந்தமென வந்திடுவாய் உன்கரத்தை நீட்டிடுவாய்
பந்தமென காட்டிடுவாய் உன்பதத்தை தந்திடுவாய்
ஈந்திடுவாய் உனதன்பால் பற்றிடுவேன் எனதன்பால்
வந்திடுவாய் உனதருளாலே.

2265. நாதத்தில் குடியிருப்பாய்
வேத்தின் உயிராவாய்
ஈதலை உணர்த்திடுவாய்
ஆதரவாய் வரும் அமுதே.

2266. உயிர்துடிப்பின் முதல் நீயே
தாயின் மடி நீயே
சேயின் உயிர் நீயே
மயில்போல வருவாயே.

2267. அகிலம் உன் சொந்தம்
முகில்கண் உன் இல்லம்
மகிழும் உந்தன் மனம்
பகிர்வது உன் இயல்பே.

2268. ஏற்பது உன் இயல்பு
தோற்பது என் மனது
கற்பது உன் நினைவு
காற்றாக வருவாயே.

2269. சிவம் எந்தன் உயிரே
தவம் உந்தன் தொழிலே
ஈவது உன் இயல்பே
உவப்போடு நினைப்பேனே.

2270. நலமனைத்தும் தந்தருள்வாய் தயவுடனே கேட்கின்றேன்
உலகனைத்தும் ஆள்பவனே உற்றதுணை தருபவனே
பலமாக வருபவனே பெற்றதுணை அருள்பவனே
காலத்தின் துணையாலே அழியாது காப்பவனே.

2271. சுவையனைத்தும் உன் சொந்தம்
பாவையென மனத்தின்பம்
பூவையென அன்புருவம்
தேவைதனை அறிபவனே.

2272. லிங்கமென அங்கமெப்பா
தங்கமென உள்ளமப்பா
அங்கமெல்லாம் கருணையப்பா
எங்கும் நிறைந்தவனே.

2273. ஆசிகள் வேண்டி நிற்பேன்
பேசி உனை அழைத்திடுவேன்
கசிந்துருகி ஈர்த்திடுவேன்
நேசிக்க உருவாயே.

2274. பாட்டெழுதி அழைத்திடுவேன்
விட்டிடுமோ உந்தன்மனம்
இட்டிடுவாய் உந்தனருள்
காட்டிடுவாய் உன்னமுதே.

2275. வழித்துணையாய் வருவாய் நீ
அழிவில்லா ஆருயிரே
வாழியவே எனதன்பே
எழில் கோலம் பூண்டவனே.

2276. உருவமில்லா உயிர் பிறப்பே
அருவமில்லா உடல்கொண்டாய்
பெருமையின் முதற்பிறப்பே
அருமையுள்ள எனதுயிரே.

2277. வானிற்கும் உயர்ந்தவனே
தேனிருக்கும் அருளாளா
கனியிருக்கும் தருநிழலே
அணிச்சைமலர் மனத்தோனே.

2278. தேடும் மனதே தெவிட்டாதா தெள்ளமுதே
ஓடும் உன்மனதே தேடாத இன்னமுதே
பாடும் உன்விழியே மாறாத பூ மனமே
ஆடும் உன்பதமே வருவாயே என்னருகே.

2279. ஆனந்தம் தந்திடுவாய் உனதன்பிலே
இனம்தன்னை காத்திடுவாய் உனதருளாலே
மனம் தன்னை அறிந்திடுவாய் உனதுணர்வாலே
வானமதில் துயில்பவனே.

2280. கருணை உந்தன் அங்கமப்பா
பெருமை உந்தன் உருவப்பா
அருமை உந்தன் உள்ளமப்பா
ஆருயிராய் வரும் மானே.

2281. செயல்காட்டி விளக்கிடுவாய்
பெயர் காட்டி தேர்ந்தெடுப்பாய்
உயர்வு காட்டி ஏற்றிடுவாய்
காயமதை அறிவாயே.

2282. சோதியெனும் பெயர் கொண்டாய்
பாதி பாகம் நீ கொடுத்தாய்
ஆதியில்லா உரு எடுத்தாய்
அதிசயத்தை காட்டுவாயே.

2283. இசை வடிவம் கொண்டவனே
ஓசையில்லா அருட்பொருளே
அசைவில்லா அருள் விளக்கே
ஆசையுடன் அழைப்பேனே.

2284. பெற்றவனே ஆற்றிடுவாய் உனதன்பை
கற்றவனே காட்டிடுவாய் உனதருளை
உற்றவனே ஊட்டிடுவாய் உன்கருணை
ஏற்றமிகு எழில் விளக்கே.

2285. மாணிக்க புன்னகையோ தேன்சிந்தும் பூ மணமோ
அணியணிந்த அருள்விளக்கே புன்னகையின் அழகொளியோ
மணிஒலிக்கும் பூச்சரமோ வாசமுள்ள நறுமலரோ
பேணி உனை இருத்திடுவேன் வாராமல் போவாயோ.

2286. கனிசிந்தும் தரு மரமோ
இனிமைதரும் பழச்சுவையோ
அணிச்சை மலர் உன்மனமோ
தனிச்சுடரே என்மன விளக்கே.

2287. கரும்பினிது உந்தன் மொழி
அருமை தரும் உன் அன்பு விழி
பெருமை சொல்லும் உந்தன் வழி
ஆருயிரே வருவாயே.

2288. விரிசடையோ உந்தன் முடி
அரிதல்லவோ உந்தன் உரு
பெரிதல்லவோ உன் கருணை
காரிருளை மறைப்பாயே.

2289. சுட்டும் விழி உந்தனருள்
பட்டுத்தெறிக்கும் உன் கருணை
எட்டுத்திக்கறியும் உந்தன் புகழ்
ஆட்டிடுவாய் உலகமதே.

2290. பாட்டுக்கு இசை தருவாய்
ஆட்டுவிக்கும் மொழி சொல்வாய்
ஊட்டிடுவாய் உந்தனருள்
ஏட்டிலே உறைபவனே.

2291. பாலுக்கு வெண்மை தந்தாய்
ஆலுக்கு விழுது தந்தாய்
வேலுக்கு கூர்மை தந்தாய்
வலுவுடனே இருப்பவனே.

2292. மரகதச் சிலையோ அழகின் திருவுருவோ
அரவணைக்கும் தாயன்போ அன்பின் பெருவிளக்கோ
ஈரமுள்ள பெற்றவனோ கருணையின் பெருமனமோ
உரமுள்ள தென்னவனோ.

2293. ஆதரிக்கும் பெற்றவனே
ஆதவனாய் வருவாயே
பேதமில்லா பெருந்தகையே
வேதமுற்றும் அறிந்தவனே.

2294. சொல்லுக்கு பொருள் நீயே
கல்லுக்குள் ஈரம் நீயே
இல்லின் ஒளி நீயே
அல்லல்தனை நீக்குவாயே.

2295. கொவ்வை வாயருளி அமுதத்தை தருபவனே
எவ்வகையம் அறியாத என்மனத்துள் புகுந்தவனே
எவ்வகையும் அறிந்த அம்பலத்து நடராசா
இவ்வகையை காட்டி என்மனத்தை ஆண்டவனே.

2296. தங்கம் உந்தன் உள்ளமப்பா
சங்கம் எந்தன் சொந்தமப்பா
எங்கள் மன சொர்க்கமப்பா
உங்களிடம் தஞ்சமப்பா

2297. பெற்றவனாய் அணைத்திடுவேன்
உற்றவனாய் புகழ்ந்திடுவேன்
ஏற்றவனாய் ஏற்றிடுவேன்
வேற்றுமை இல்ா அருட்பொருளே.

2298. ஆனந்தமே என் சிற்றம்பலத்தரசே
கானமே உந்தன் அசைவினிலே
உனதென்று உள்ளமதில் இல்லாதவனே
எனதென்று உன்மனதில் இடம் தருவாயே.

2299. கருமேகம் உந்தன் குழல்
கருவிழிகள் உந்தன் எழில்
மருநீக்கம் உந்தன் விரல்
அருமருந்தாய் வரும் தேனே.

2300. முக்தி தரும் அருளாளா
பக்தி தரும் நமச்சிவாயா
உக்தி சொல்லும் வாகீசா
ஊக்கமதை தருவாயே.

2301. வாசகத்தின் உட்பொருளே எண்ணத்து அருட்பொருளே
யாசகமாய் வருவோர்க்கு கொடுத்துதவும் மரபாளா
ஊசலாடும் மனத்துக்குள் உறைகின்ற அமுதே
பேசவேண்டும் வருவாயோ என்மனத்துள்ளே.

2302. வழியறியோம் உன் மனதறியோம்
விழியறியோம் உன் உளமறியோம்
கழிவிரக்கம் கொள்வாயோ மனதிறங்கி வாராயோ
அழிவில்லா அருள்விளக்கே.

2303. பலமான பாலமதை உள்ளத்துள் தருபவனே
கலமான உன்உள்ளத்துள் இடமளிக்கும் இறையன்பே
காலமது அறிந்து உதவும் கரம் தருபவனே
உலகமதை ஆள்பவனே உள்ளமதில் உறைவாயே.

2304. கற்கண்டு உன் விழிகள்
சொற்சுவையே உன் மொழிகள்
பாற்சுவையே உன் கரங்கள்
ஏற்றிடுவாய் உனதன்பாலே.

2305. கரும்பினிது உனது எண்ணம்
அருமை உந்தன் அறக்கரங்கள்
பெருமை உந்தன் மனக்கதவு
தருவாயே மனந்திறந்த அன்பாலே.

2306. வற்றாது உனதன்பு பெற்றவனாய் வரும்போது
ஆற்றிடுவாய் உனதருளை உற்றவனாய் வரும்காலம்
கற்றிடுவாய் எனதன்பை என்மகவாய் உணர்வறிந்து
பெற்றிடுவேன் மறவாது எந்நாளுமே.

2307. குவளை மலர் உன் கண்கள்
ஈவது அன்பு நிறை செங்கரங்கள்
உவப்பது கருணை உள்ள உன் மனது
தவப்பயனாய் வருவாயே உன் மனத்தாலே.

2308. அணிச்சைமலர் உன் மனது
இனிக்கும் சுவை உனதன்பு
பனிக்குளுமை உந்தனருள்
கனியமுது உன் உளமே.

2309. ஏற்கும் குணம் உனதியல்பு
ஆற்றும் மனம் உன்மாண்பு
தேற்றும் உளம் உன்மனது
மாற்றமில்லா பரம்பொருளே.

2310. சேர்க்கும் மனம் உன் கருணை
பார்க்கும் விழி உன் உளமே
ஈர்க்கும் முகம் உன்னிடமே
தேர்வு செய்வாய் உன் மனத்தாலே.

2311. வைரம் உந்தன் அன்புவிழி
அரவம் உந்தன் கழுத்தினிலே
ஈரமுள்ள உன்மனத்தால்
பேரன்பைத் தருவாயே.

2312. அன்புமழை பொழிய வேண்டும்
உன் அன்பை பெறவேண்டும்
கன்னல் மொழி தரவேண்டும்
இன்னல்தனை தவிர்ப்பாயே.

2313. கொவ்வை வாய் திறந்து அமுதமொழி கூறிடுவாய்
கொவ்வை அமுதமென அன்புமொழி அருளிடுவாய்
கொவ்வை தேன்எனவே அறவழியை காட்டிடுவாய்
கொவ்வை இனியமுதாய் எக்கணமும் வருவாயே.

2314. ஆழ்மனதை அறியவொண்ணா அருட்சுடரே
ஆழந்தகன்ற மனம் கொண்ட அருளாளா
ஏழ்கடலை அறிந்துணர்ந்த பண்பாளா
வாழ்கின்ற வழியனைத்தும் தருகின்ற கொடையாளா.

2315. தேனருவி உந்தன் மொழி
வானருவி உந்தன் உளம்
ஊனருவி உந்தன் செயல்
மனமருவி உந்தனெழிலே.

2316. பாலூறும் உன்வாயலே தெள்ளமுதல் தாராயோ
வேலுறும் விழியாலே கருணைதனை காட்டாயோ
மாலூறும் உருவாலே கனியமுதை உரைப்பாயோ
தோலூறும் உடலாலே உன்னெழிலை காட்டாயோ.

2317. தெளிந்து என்மனது விழித்தது உன் உணர்வு
கனிக்கின்ற என் உளமே உனதன்பை அறியாதோ
அளிக்கின்ற மனத்தாலே என்மனது நிறைந்திடுமே
விளித்திடுவாய் மறவாது உனதன்பாலே.

2318. பெற்றிடுவேன் உனதன்பை கருணையுள்ள உன்குணத்தால்
ஆற்றிடுவேன் எனதன்பை உன்மனத்தை அறிவதற்கே
கற்றிடுவேன் உன்மொழியை உன்உணர்வை தெரிவதற்கே
வேற்றமை இலா எனதுயிரே.

2319. ஒலித்திடுவாய் அன்பாலே பெற்றிடுவாய் என்மனத்தை
வேலியில்லா அருட்கடலே வரையில்லா அருட்பண்பே
நலிவில்லா உயிர்ப்பொருளே ஓய்வில்லா மனக்கடலே
வலியில்லா உடற்கூறே என்மனத்துள்ளே புகுவாயே.

2320. இன்பமதை தருபவனே அணுவுக்குள் நுழைபவனே
துன்பமதை நீக்கிடுவாய் சலனமில்லா ஆண்டவனே
கன்னல்மொழி இயம்பிடுவாய் கேட்கும்வரம் தருபவனே
மின்னலென தருபவனே ஒளிப்பிழம்பாய் திகழ்வாயே.

2321. மல்லிகையின் மணம் நீயே
அல்லி மலர் நிறம் நீயே
இல்லாமை பொருள் நீயே
அல்லல் துயர் தீர்ப்பாயே.

2322. உயிர்துடிப்பை அறிவாயே உலகனைத்தும் உணர்வாயே
தாயின் அன்புருவே குழந்தைமனம் அறிவாயே
சேயின் மனத்தன்பே எந்தன்மனம் ஈர்ப்பாயே
பயிரின் விளைநிலமே என் மனத்துள் புகுவாயே.

2323. அன்பு காட்டும் உன் விழிகள்
இன்னல் நீக்கும் உன் மனமே
கன்னல் தரும் உன்மொழீயே
என் மனத்தின் இன்னுயிரே.

2324. முக்காலமும் அறிந்தவனே பெயரில்லா பரம்பொருளே
எக்கணமும் தெளிந்தவனே உருவமில்லா அருட்கடலே
ஆக்கமதை உணர்ந்தவனே உணர்வுள்ள அருள்மழையே
ஊக்கமதை கொண்டவனே அறிவாயே என் மனமே.

2325. குறையாத தேன்குடமே காலமெல்லாம் துணைஇருப்பாய்
மறையாத மாணிக்கமே உள்ளமெல்லாம் நிறைந்திருப்பாய்
நிறைவான மரகதமே உயிருள்ளே ஒளிந்திடுவாய்
மறையுணர்ந்த என் ஒளிப்பிழம்பே.

2326. இடர்களைய வந்தவனே இன்பமெல்லாம் தருபவனே
படர்கொடியாய் இருப்பவனே வெளிப்பரப்பில் விரிபவனே
சுடர்விளக்காய் ஒளிர்பவனே மனம்குளிரச்செய்பவனே
விடமதனை கொண்டவனே வாழ்த்திடுவேன் எந்நாளுமே.

2327. கொன்றைமலர் சூடிநீயும் மாமலையில் ஆடிடுவாய்
வன்னிமரம் நாடிநீயும் மாண்புடனே வரம்தருவாய்
அன்புமனம் தேடி நீயும் பாங்குடனே நீ வருவாய்
என்அன்பே உனைநினைப்பேன் எக்கணமே.

2328. மனக்கதவை திறந்துநீயும் ஒளிக்கதிரை காட்டிவிட்டாய்
அனல்நீக்கி என்றும் குளிர்தன்னை தந்துவிட்டாய்
உனதன்பை காட்டி எனதன்பை பெற்றுவிட்டாய்
தினம் உனை நினைந்து வாழ்த்துபவனே.

2329. இருளகற்றி ஒளி தருவாய்
ஆருயிராய் நீ வருவாய்
பெருமை தன்னை காட்டிடுவாய்
அருமையென வரும்மானே.

2340. அழகே அருள்வடிவே என்மனம் புகுந்த கருணாளா
ஆழமான உன்மனதறிய அடியேன் நான் அறியவில்லை
உழவேண்டும் என்மனத்தை உன்மனது அறிவதற்கு
பழம்போன்று இனிப்பவனே இன்னுயிரே வானமுதே.

2341. குவளை மலர்உன் கண்கள் ஆழ்ந்தகன்றது உன் விழிகள்
பவள வாய் உன் இதழ்கள் செப்புமொழி உன் சொற்கள்
தவம் செய்யும் உன்கால்கள் மனமிரங்கும் உன் இதயம்
ஆவலினால் விளிக்கின்றேன் என்மனத்தே அறிவாயே.

2342. பிறைபோன்ற நுதலினிலே அகக்கண்ணை கொண்டவனே
மறை உணர்ந்த மனத்தாலே புறக்கண்ணை திறப்பவனே
அறைகூவி அழைத்திட்டால் தப்பாமல் வரும் தேனே
குறையில்லா அருட்பொருளே உள்ளமதை கவர்ந்தவனே

2343. நீர்வீழ்ச்சி போல் உன் விரிசடைதான்
கார் மேகம் போல் உன் உள்ளம் தான்
பார் புகழும் உன் அன்புவெள்ளம்
அர்த்தமுள்ள ஐந்தெழுத்துத் தானே.

2344. கயல் விழியால் காத்திடுவாய்
அயராது எமை ஈர்த்திடுவாய்
செயலாலே மனமதனை கவர்ந்திடுவாய்
தயவோடு எனை நீயும் காப்பாயே.

2345. மலர் அணிந்த மார்புடையாய்
உலகு தந்த அன்புடையாய்
காலம் அறிந்து வந்திடுவாய்
ஞாலம் உள்ள என் தேனே.

2346. கசிந்துருகி கரம் பிடிப்பேன்
ஆசியருளி மனம் மகிழ்வாய்
காசினியில் வலம் வருவாய்
வாசிப்பேன் உனதன்பே.

2347. மல்கிடும் கண்ணீர் உனை நினைக்கும்
பல்கிடும் நினைவுக்ள உனை எண்ணும்
கல்லான உளம் உனை நினைந்து உருகும்
அல்லல்துயர் தீர்ப்பவனே மனம் நிறைந்து வருவாயே.

2348. அன்பினில் விளைந்த மரகதமே
இன்னிசை நிறைந்த தேனமுதே
ஆன்றோனாய் வரும் நிலவே
கன்னல்மொழி அளிப்பாயே.

2349. என்மனத்துள் இடம்பிடித்தாய் நகராது நின்றிருப்பாய்
உன்மனத்தால் கரம்பிடிப்பாய் காத்தருள்வாய் அன்பாக
அன்னையென மகிழ்ந்திடுவாய் அன்புடனே வருடிடுவாய்
ஈன்றவனாய் இருப்பாயே.

2350. பாசமுள்ள என்னுயிரே ஆசையுடன் அழைத்திடுவேன்
நேசமுள்ள என்தேனே ஓசையின்றி வரும் மனமே
வாசமுள்ள நறுமலரே விசையோடு வரும் உயிரே
வசந்தமதை தருவாயே.

2351. காந்தமென உன் விழிகள்
பந்தமுள்ள உன் கரங்கள்
வந்தனைக்கு உன் பதங்கள்
அந்தமில்லா அருட் கடலே.

2352. மரகதமோ உன் வதனம்
அரவமதோ உன் சின்னம்
பரந்திருக்கும் உன் நெஞ்சம்
வரம் தருமே உன் உளமே.

2353. மறவாது உனை நினைப்பேன்
இறங்கிடுமே உன் மனமே
கிங்கிடுமே என் மனது
அறம் வளரும் உனை நினைந்தாலே.

2354. அலைபோல ஆடிடுவாய்
மலைபோல உயர்ந்திடுவாய்
கலை போல உயிர்த்திடுவாய்
இலை மறைவாய் உணர்த்துவாயே.

2355. சந்தமென ஒலித்திடுவாய் ; என்மனத்துள் புகுந்திடுவாய்
பந்தமென ஈர்த்திடுவாய் ; என் உளத்துள் உறைந்திடுவாய்
சிந்தனையை நிரப்பிடுவாய் ; என் குணத்தை அறிந்திடுவாய்
வந்தனையில் இருப்பவனே.

2356. பலமாக என் மனத்துள் வீற்றிருப்பாய்
குலமாக என் இல்லமதில் புகுந்திடுவாய்
வலமாக உன் உளத்தை சுற்றிடுவாய்
தலமாக உன் மனத்தை அமைப்பாயே.

2357. தொடக்கமதை காட்டிடுவாய்
விடமதனை சூடிடுவாய்
படமெடுக்கும் பாம்பணிவாய்
ஆடவரசாய் திகழ்வாயே.

2358. என் கண்ணின் பார்வையன்றோ
என் இதயத்து துடிப்பன்றோ
என் உடலின் உதிரமன்றோ
என் உயிரும் நீயன்றோ.

2359. உள்ளத்தின் நாதமன்றோ என் இதயத்தின் ஓசையன்றோ
அள்ளிப்பருகும் தேனன்றோ என்மனத்து உணர்வன்றோ
உள்ளுணர்வின் குரலன்றோ என்உளத்து கடவுளன்றோ
கள்ளமில்லா குணமன்றோ என் உணர்வின் பாசமன்றோ.

2360. புரியாதவன் போல் இருந்து நடிக்கின்றாய்
தெரியாத மழலையென பாவங்க்ள காட்டுகின்றாய்
அரிதான உள்ளமதை எளிதாக தேர்ந்தெடுப்பாய்
காரிருளை நீக்குகின்ற பகலவனே நீதானோ.

2361. கள்ளமில்லா உனதன்பை ஏழைநான் உணர்ந்திடுவேன்
உள்ளமதில் கருணைகாட்டி அடியேனை ஏற்றிடுவாய்
வெள்ளை மனத்தாலே என்மனத்துள் இடம்பிடிப்பாய்
அள்ளிடுவேன் உன்மனத்தை ஏற்றிடுவாய் உனதன்பாலே.

2362. துடிப்புவரை நிறைந்திருப்பாய் என்மனத்துள் இடம்பிடிப்பாய்
கடிதுயரை நீக்கிடுவாய் காரிருளை போக்கிடுவாய்
படியிறங்கி வந்திடுவாய் பாசமுள்ள மனதறிவாய்
ஆடிவரும் உன்பதத்தால் என்கரத்தை பிடிப்பாயே.

2363. கலைக்கோயில் உன் சொந்தம்
மலை உச்சி உன் வாசம்
அலைகடலில் உன் ஆட்டம்
விலையில்லா உயிரே உன் தொடக்கம்.

2364. மாசில்லா அருட்சுவையே
கசிந்துருகும் என் மனமே
பசிநீக்கும் அருட்சுடரே
பாசியென படர்ந்திருக்கும் எனதருளே.

2365. ஞானமதை புகட்டி அன்புநெறி காட்டிடுவாய்
வானமதில் ஓங்கிநின்று உன்னருளை உணர்த்திடுவாய்
தேனருவி வழிநின்று தென்றலென வந்திடுவாய்
காணமென என்காதில் எந்நாளும் ஒலிப்பாயே.

2366. தாள் வணங்கி ஏற்றிடுவேன்
தள்ளாது உனை போற்றிடுவேன்
கள்ளமில்லா உனை பணிந்திடுவேன்
எள்ளளவும் மறவேனே.

2367. ஒப்பில்லா மாமணியே உவப்புடனே வரும் தாயே
அப்பனென வரும்சுடரே ஆண்டவனாய் வரும் தேனே
எப்பொழுதும் வரும்துணையே அன்புடனே வரும்விளக்கே
காப்பாற்ற வரும் ஒளியே.

2368. இயற்கையின் எழில் ரூபம்
உயர்ந்திருக்கும் உன் உருவம்
காயமில்லா செயல் வடிவம்
தயவுள்ள தாய் மனதே.

2369. கண்ணின் காட்சியே மறைந்திருக்கும் ஒளிப்பிழம்பே
விண்ணின் மாட்சியே திறந்திருக்கும் மனக்கதவே
மண்ணின் மரகதமே பரந்திருக்கும் நீள்விசும்பே
தண்ணொளியை பவனே என்மனத்தின் தாய் விளக்கே.

2370. தாயாகி உயிர் தந்தாய்
சேயாக்கி உடல் தந்தாய்
தயாந்தியென நீ வந்தாய்
தேயாத மனம் கொடுப்பாயே.

2371. மனமிரங்கி வரம் தருபவனே
மனதுருகி வளம் கொடுப்பவனே
மனமிளகி இனம் சேர்ப்பவனே
மனமுருகி வருவாயே.

2372. விடை இல்லா ஆண்டவனே
தடைஇல்லா பரம்பொருளே
கொடை அளிக்கும் அருட்பழமே
கடைத்தேறும் வழி சொல்வாயே.

2373. சிந்தனையில் உயர்ந்தவனே அன்புள்ளம் கொண்டவனே
அந்தமில்லா ஆண்டவனே கருணைமனம் படைத்தவனே
பந்தம்தரும் பரம்பொருளே நெஞ்சமதை தந்தவனே
பாந்தமுள்ள குருநாதா அன்புமனம் அறிவாயே.

2374. ஈர்க்கும் உளம் அறியவில்லை
பார்க்கும் மனம் கிட்டவில்லை
கார் முகிலை காணவில்லை
சோர்வு நீக்கும் உன்மனமே.

2375. பூப்போன்ற உன்மனதை நான்வருடி பார்ப்பேனோ
தப்பேதும் புரியாது உன்மனத்தை அறிவேனோ
அப்பனென உனை நினைந்து உன்கரத்தை பிடிப்பேனோ
எப்பொழுது உனை மறவா மனம் எனக்கு தருவாயே.

2376. மலர்போலும் மெல்லிய உன்மனத்தை உணர்வேனே
காலமெல்லாம் உனைப்புகழும் எண்ணமதை பெறுவேனே
பலமான சிவமதனை சிரம்தாழ்த்தி அறிவேனே
வலம்வரும் உன்பலத்தை அறிவதற்கு வருவாயே.

2377. தேனூறும் உன்மனத்தாலே உய்யும்வழி சொல்வாயே
ஊனூறும் உள்ளத்தால் காணும் வழி தருவாயே
மீனூடும் விழியாலே காட்சிதனை அருள்வாயே
நலம் பெறும் நாமம் நமச்சிவாயவே.

2378. ஆதியில்லா அருட்கடலே முடிவில்லா மூத்தவனே
வாதிட முடியா மூவுலகே பேசவொண்ணா மூலவனே
விதியில்லா ஆண்டவனே முக்காலமும் அறிந்தவனே
பாதி உடல் கொடுத்தவனே என்மனத்தை அறிவாயே.

2379. ஓதற்கரியவனே ஒப்பில்லா தூமணியே
வேதம் படைத்தவனே அகன்ற மாமணியே
நாதத்திற்கு அதிபதியே நுண்ணிய பேபெராளியை
பாதத்தை தொழுதிடுவேன் ஏற்றிடுவாய் அன்பாலே.

2380. மரகத மாமணியே போற்றி
இரக்கமுள்ள ஈசனே போற்றி
ஈரமுள்ள மனத்தோனே போற்றி
உரமருளும் வேந்தே போற்றி
பரம்பொருளாய் வருபவனே போற்றி
வரமளிக்கும் அன்பா போற்றி
பாரத்தை சுமர்ப்பவனே போற்றி
வீரமுள்ள மன்னா போற்றி

2381. நுண்ணர்வாய் விரிந்தெங்கும் உருமாறி தெரிபவனே
எண்ணமதில் வீற்றிருந்து அருவமென திகழ்பவனே
உண்மையுள்ள உள்ளமதில் ஆழ்ந்தகன்று ஒளிர்பவனே
விண்மீதில் உலவுகின்ற என்னுயிரே ஆரமுதே.

2382. இனிமையான உள்ளத்தால் திகட்டாது வரும் தேனே
பனிபோன்ற மனத்தாலே உருகின்ற என்மனத்தமுதே
கனியென்னும் சுவையாலே மனமுழுதும் இனிப்பவனே
கனிப்பெரும் தெய்வமென திகழ்கின்ற மனக்குயிலே.

2383. முக்காலமும் அறிந்த என் உள்ளத்து ஒளி விளக்கே
எகாலமும் பயின்றுவரம் நிலைத்துநிற்கும் ஆண்டவனே
பக்கதுணை எக்கணமும் தந்தருளும் அருட்பொருளே
தக்கபலம் நியன்று பற்றிடுவேன் உன்கரமே.

2384. கண்ணளித்தாய் கண்ணப்பனுக்கு விண்ணளித்தாய் அன்பர்களுக்கு
உண்மைதனை அறியவைத்து அனுபத்துமூவரென பெயர் கொடுத்தாய்
வெண்மை மனம் நீபடைத்தாய் பிறர் அறியா மனம் படைத்தாய்
அண்மையிலே நீவருவாய் வெண்மை மனம் படைத்தாலே.

2385. அமுதும் தேனும் நானறியேன்
அமுதும் பாலும் நானிறயேன்
அமுதும் சுவையும் நானறியேன்
அமுதாக உனை அறிவேனே

2386. மாசறு அமுதே மனம் கர்வந்த தெள்ளமுதே
நேசமுள்ள மனதே உள்ளம்நிறை இன்னிசையே
வாசம் தரும் நறுமலரே ஈர்க்கின்ற என்னிறையே
வசந்தமென வரும் காற்றே உள்ளமதை நிறைப்பாயே.

2387. அன்பாலே உனைநினைந்தேன் ஆசையுடன் உனைபார்த்தேன்
இன்னிசையாய் உனைகேட்டேன் பாசமுடன் உனைநினைந்தேன்
கன்னல்இனிமை அறிந்திட்டேன் குழந்தையென உனைப்பிடித்தேன்
வன்மை நிறைதோளுடையாய் என்பிஞ்சுமனம் அறிவாயே.

2388. காலங்கள் மாறினாலும் என்மனத்தில் நிலைத்திருப்பாய்
உலகமது மறைத்தாலும் என்னுள்ளே இடம்பிடிப்பாய்
பலமான உன்கரத்தை எந்நாளும் பற்றிடுவேன்
குலம் சிறக்க வருவாயே அடிமையென ஏற்பாயே.

2389. உறவு சொல்லி உனை அழைத்தேன்
திறவு கோலாய் நீ இருந்தாய்
மறவாது என்மனத்துள் எக்கணமும் நீ புகுந்தாய்
பிறவாத வரம் தருவாயே.

2390. குலம் வாழ வாழ்த்திடுவாய்
நலம் தரவே வந்திடுவாய்
பலம் கொடுக்க வீற்றிருப்பாய்
வலம் சிறக்க வருவாயே.

2391. துயரனைத்தும் ஆட்கொள்வாய்
உயரவைக்க இடம்பிடிப்பாய்
மையல்கொண்டு வந்திடுவாய்
தையல் எனை பார்ப்பாமே.

2392.கூடி என்னும் பெயராசலே பாடிடுவேன் எந்நாளும்
கொடி பேனாற உள்ளமதால் சார்ந்திடுவேன் உனைநாளும்
பாடி உன் எண்ணமதில் எக்கணமும் இடம் பிடிப்பேன்
ஆடிவரும் மயிலே என்மனக்கதவை திறவாயே.

2393. அன்பினில் திளைக்கும் ஆரமுததே
கனியமுதாய் எனை நினைப்பாயே
ஆன்றோனாய் வரும் தேனே
பிள்ளை மனம் அறிவாயே
கன்னல் மொழி தருவாயே
மெலிந்த உள்ளம் உணர்வாயே
ஈன்றெடுத்தாய் அன்னையென
கண்டெடுத்தேன் உனை பெற்றவனாய்

2394. ஆழந்தகன்ற மனம் உடையாய்
எளிய மனம் நீ அறிவாய்
ஏழ் உலகம் நீ ஆள்கின்றாய்
பிறை சூடி வீற்றிருப்பாய்
ஊழ்வினையை தகர்த்திடுவாய்
அன்பாலே அரவணைப்பாய்
வாழ்வளிக்கும் பெருந்தகையே
பொறுமைதனை தருவாயே.

2395. தொடர்ந்துனை அன்பாலே நாளும் பற்றிடுவேன்
இடையறாது உன்துணையை நாளும் நாடிடுவேன்
படர்கொடியாய் உன்னருளை எக்கணமும் கேட்டிடுவேன்
தடை இல்லா அன்பாலே உன்கரத்தை நான்பிடிப்பேன்
இடர் இல்லா பக்திதனை உன்னிடமே வினவிடுவேன்
கடை ஏறும் வழி தன்னை உன்னிடமே வினவிடுவேன்
ஓடமென உனை நினைந்து உன்துணையால் பயணிப்பேன்
அன்பான என்சிவமே உன்பாதம் பிடிப்பேனே.

2396. கசிந்துருகி அழைத்திடுவேன் உன்மனத்தை பற்றிடுவேன்
கருணையுள்ள மனத்தாலே வழிதன்னை கேட்டிடுவேன்
பசித்திருக்கும் மனத்திற்கு என் அன்பாலே புகட்டிடுவேன்
அருவமான என் சிவமே மனத்துக்குள் இடம் பிடிப்பேன்
வசித்திருக்கும் என்மனத்துள்ளே வந்தனைகள் செய்திடுவேன்
கங்கைகொண்ட ஆண்டவனே சிக்கெனவே பற்றிடுவேன்
நசிந்திருக்கும் என்மனத்தை நயமாக மாற்றிடுவாய்
உயர்ந்திருக்கும் உன் பண்பால் என்குணத்தை அறிவாயே.

2397. ஐம்புலனை அடக்கும் ஒழுக்கமதை தாரும்
உன்னருளை அடையும் அடக்கமதை தாரும்
அம்மாவென உனை வேண்டும் எண்ணமதை தாரும்
அம்மையப்பா உனையறியும் மனமதனை தாரும்
இம்மையிலே உனைக்காணும் பண்புதனை தாரும்
பெற்றவனாய் உன் அரவணைப்பை எந்நாளும் தாரும்
உம்மையறியும் ஒருமைப்பாட்டை மறவாது தாரும்
போற்றுகின்ற உள்ளமதை எக்கணமும் தாரும்.

2398. உள்ளமதை அள்ளிக்கொண்ட என் சிவமே
பல்லுயிடும் உன் அசைவால் காணவைக்கும் என்பலமே
கள்ளமில்லா அன்புகாட்டும் என் உருவே
கருணைஉள்ளம் கொண்டு காக்கின்ற என் உயிரே
ஆள்கின்ற மனத்தாலே அரவணைக்கும் என்குருசூவ
அருமையான உள்ளத்தால் கட்டுகின்ற என் அருவே
எள்ளளவும் பிரியாது மனத்துள்ளே இடம்பிடிக்கும் என்னருளே
பெற்றவனாய் மறவாது உனை நினைப்பேன் எந்நாளுமே.

2399. புலர்கின்ற கதிரவனே தடையில்லா ஒளிக்கதிரே
அழகுதரும் ஓவியமே அருவியென வரும் இன்னிசையே
மலர்கின்ற பூ இதழே தருகின்ற தேனமுதே
தென்றலென வரும் குளிர் காற்றே
இலகுவாக வரும் மனமே கருணை உள்ள மணிவிளக்கே
நிறைந்து நிற்கும் நறுங்காற்றே
பலமதனை தரும் என் சிவமே ஓடுகின்ற உணர்வே
கண்ணின் ஒளிநீயே கருத்தின் பொருள் நீயே.

2400. பரிதிமுன் பனிபோல என்மனமும் உருகிடுமே
அரிது உன் மனதறிய அறிந்திடுவேன் உன்மனம் போலே
காரிருளை நீக்கும் பகலவனே உனை அறிவேனே
உரிமையுடன் அழைப்பேனே அன்னையென உனைத்தானே.

2401. தெவிட்டாத தெள்ளமுதே முழுநிலவின் அழகொளியே
கவிபாடும் இன்னிசையே திகட்டாத பழச்சுவையே
நவில்கின்ற தீஞ்சுடரே இனிக்கின்ற கரும்பே
ஓவியத்தின் உயிர்த்துடிப்பே வருவாயே என்மனத்துள்ளே.

2402. பகலவனின் ஒளிப்பிழம்பே இருளகற்றும் மணிவிளக்கே
சகலமும் அறிந்தவனே மூவுலகும் ஆள்பவனே
நாகத்தை அணிந்தவனே உயிர்த்துடிப்பை அறிந்தவனே
அகல்விளக்காய் வருபவனே வெளிச்சமதை தருவாயே.

2403. உடலின் உயிர்நீயே உண்மையின் பொருள் நீயே
ஊடகத்தின் ஒளிநீயே உள்ளுணர்வின் கருநீயே
ஆடலுக்கு அசைவுநீயே அதிர்வுகளின் உணர்வுநீயே
பாடலுக்கு பொருள்நீயே என்மனத்தின் சுடர்நீயே.

2404. உயிரின் அசைவறியாய் மனத்தின் உணர்வறியாய்
உயிரின் உருவறியாய் உன்னதத்தின் பொருளாவாய்
உயிரின் அதிர்வறியாய் வாழ்வின் கருத்தறிவாய்
உயிரின் கருவறியாய் வளர்க்கும் முறையறிவாயே.

2405. இயற்கையின் எழில்ரூபம் இரக்கத்திற்கோ ஓர்உருவம்
மையல் கொள்ளும் பேருருவம் மன்னிப்பது உன் சுபாவம்
மயங்கச் செய்யும் அன்புருவம் தெவிட்டாத தேனமுதம்
தயங்காது வரும் உள்ளம் சிறுமனத்தை காணாதோ.

2405. முழுமதிமதியின் முகத் தோற்றம்
விண்கதிரே உன் மனக்கோலம்
பாடும்குயில் உன் கூட்டம்
ஆடும் மயில் உன் அழகே.

2406. பூக்குவியில் உன் வனத்தோட்டம் வற்றாத தேன் கிண்ணம்
அக்கறையாய் வரும் எண்ணம் மாறாத குணமன்றோ
ஈக்கள் மொய்க்கும் நறுந்தேனே உனைச்சுற்றும் என்மனமே
எக்கணமும் மறவேனே உறுதுணையாய் பிடிப்பேனே.

2407. கார்ளமுகிலின் மழைத்தேனே
ஆர்வமுடன் வரும் மானே
ஈர்த்திடும் என் அமுதே
பார்த்திடுவேன் உன் மனத்தியல்பே.

2408. பரதத்தின் முதற் படைப்பே
இரக்கத்தின் முதல் பிறப்பே
சாரலின் முதல் மழையே
ஈரமுள்ள முழுப் பொருளே.

2409. பல்லுயிரைக் காப்பவனே பல்லுலகை ஆள்பவனே
ஓங்குபுகழ் கொண்டவனே உலகமெல்லாம் அளந்தவனே
இல்லையென அறியாதவனே ஈன்றெடுத்த பெற்றவனே
நல்லுலகம் அறிந்தவனே பெற்றவனாய் வருவாயே.

2410. கருணையின் திருவுருவே காட்சிக்கு அரும் பொருளே
உருவமில்லா அருஞ்சுனையே கோடைக்கு குளிர்நிழலே
அருவமான ஒளிச்சுடரே வாழ்க்கைக்கு தனிவிளக்கே
பெருமையுள்ள என்னமுதே இனியமனம் தாராயோ.

2411. திருவிளக்கின் ஒளிச்சுடரே ஓங்காரமாய் நிற்பவனே
ஆருயிரின் உயித்துடிப்பே பேரின்ப பெருஞ்சுடரே
இருளகற்றும் பெருவிளக்கே பகலவனாய் வரும்தேனே
மருவில்லா வான்சுடரே வழிதருவாய் எனக்குள்ளே.

2412. கல்லாத மனதறிவாய் உனதன்பை காட்டிடுவாய்
அல்லல்தனை மறைத்திடுவாய் உள்ளமதை திறந்திடுவாய்
இல்லல்தனை நீக்கிடுவாய் உனதன்பை பெருக்கிடுவாய்
பல்லுயிரை காத்துவாய் அன்பாலே ஈர்ப்பாயே.

2413. தித்திக்கும் தேனே இனிக்கின்ற பழச்சுவையே
பூத்திருக்கும் நறுமலரே படர்ந்திருக்கும் குளிர்பனியே
பத்திரமாய் உனை வைப்பேன மறவாது மனத்துள்ளே
காத்திருப்பேன் உனதருளை எக்கணமும் பெறுவதற்கே.

2414. உணர்வறியும் கலைக்கடலே மனதறியும் மலை விளக்கே
இணங்கிவரும் என்தேவே உருகிவரும் ஒளிச்சுடரே
காணமுடியா அருட்பொருளே தேடிவரும் அருந்தேனே
மணம் வீசும் என் மலரே.

2415. கொன்றை சூடி வீற்றிருப்பாய் ஒளிப்பிழம்பை திகழ்ந்திடுவாய்
சான்றோனாய் நிலைத்திருப்பாய் அருட்கருணை அளித்திடுவாய்
கன்னலென இனித்திடுவாய் கவலையெல்லாம் தீர்த்திடுவாய்
அன்னையே உனைத் தொழுவேன் அன்புமழை தருவாயே.

2416. அணையில்லா என்கடலே அருள்கொடுக்கும் பெருவிளக்கே
இணையில்லா என்பலமே கருணைதரும் தவமலரே
வீணை மீட்டும் உன்விரலே மனதறியும் உன்மனமே
துணை வருவாய் என் பூவே.

2417. வீணை மீட்டும் உன் விரல்கள் மனமதனை அறியாதோ
அணைத்து நிற்கும் உன்கரங்கள் என்மனதை வருடாதோ
இணைந்துநிற்கும் உன் பலங்கள் பனிமலராய் வாராதோ
துணை இருப்பாய் எனை நினைந்து மறவாதே.

2418. கற்சிலையாய் இருந்தாலும் உணர்வுள்ள என் கொடிய
பொற்சிலையாய் இருந்தாலும் உள்ளமுள்ள என் உயிரே
ஆற்றிடுவாய் உன்துணையை வேண்டிநிற்கும் எளியவனுக்கு
பற்றிடுவேன் உன்மனத்தை மறவாது எந்நாளுமே.

2419. அங்கமெல்லாம் உனைநினைநது உருகி வேண்டுவனே
எங்கும் நிறைந்தவனே உனை எண்ணி ஏங்குவனே
கங்கு பகல் இன்றி நிறைந்திருக்கும் ஆண்டவனே
சங்கமிப்பேன் உன்னுள்ளே என்றும் திலைப்பவனே.

2420. தவங்கள் பல செய்யவில்லை கசிந்துருகி வேண்டுகின்றேன்
பாவங்கள் அறியவில்லை கரம்பிடித்து வேண்டிடுவேன்
ஆவலுடன் அறிந்திடுவேன் உன்பொருளை தெரிந்திடுவேன்
ஈவது உன்செயலே நினைப்பது என்மனமே.

2421. அன்புருகி நின்று உனை வணங்கி ஏற்ற
தன்னியல்பை மாற்றி உன்மனத்துள் புகுவதற்கு
உன் அன்பை பெறுவதற்கே ஏங்கி நிற்கும்
என்மனதை அறிவாயே.

2422. பெருமையுடன் உனது திருவடி ஏற்றி வணங்கிடுவேன்
அருமையுள்ள உன் பெருமை பாடி மகிழ்ந்திடுவேன்
ஆருயிரே உன் பதத்தைப் பற்றி உருகிடுவேன்
இருள் விலக்கும் உன்ஒளியை கண்டு மகிழ்வேனே.

2423. வருடி நிற்கும் உன் மனது எனதன்பை
அருகில் வந்து நினைந்து உணர்ந்து
பெருமையுடன் வரும் மானே
சேருமிடம் உன் மனதே.

2424. பிரணவத்தின் உயிர்பொருளே
அரவணைக்கும் உட்கருவே
இரக்கம் கொள்ளும் தேனமுதே
கரம்கூப்பி வழிபடுவேனே.

2425. காப்பாய், வளர்ப்பாய், எனை அணைப்பாய்
அப்பா என வருவாய் என்மனத்தை ஈர்ப்பாய்
தப்பேது, நான் செயினும் தடுத்து எனை மீட்பாய்
எப்போதும் இருப்பாய் நீங்காது என் மனத்துள்ளே.

2426. பார்ப்பேன் உனை எந்நாளும் மறவாது
சேர்ப்பேன் என்மனத்துள்ளே
ஆர்வமுடன் நினைப்பேன் அன்னையென
ஈர்ப்புடனே வந்திடுவாய் என் அன்பாலே.

2427. பூப்போன்ற உள்ளமதை பற்றிடுவேன் அன்பாலே
எப்பொழுதும் உனதன்பை கற்றிடுவான் மனத்துள்ளே
அப்பனென உனதுள்ளம் பெற்றிடுவேன் கனிவாலே
தப்பாது என்மனத்தை அறிவாயே உனதன்பாலே.

2428. உலகை ஆள்பவனே உயிர்ப்பிறப்பை அறிந்தவனே
இலகுவாக ஈர்ப்பவனே அண்டமெல்லாம் படைத்தவனே
பலமனைத்தும் பெற்றவனே ஈசனாகத் திகழ்பவனே
காலமறிந்து உதவுவாயே நற்பண்பைத் தருவாயே.

2429. ஆண்டவனாய் அருள் தருவாய்
காண்பதெல்லாம் நீ அறிவாய்
வேண்டுவதை தந்திடுவாய்
கண் போலக் காப்பாயே.

2430. விமலனென பெயர் பெற்றாய்
நிமலனென எங்கும் நிறைந்திருப்பாய்
சமயமெல்லாம் உன் பிறப்பே
சேமமுற வருவாயே.

2431. அடியேனை ஏற்றிடுவாய் உன்புகழை பெற்றிடுவாய்
ஆடிஎனை மகிழவைப்பாய் உன்னருளை தந்திடுவாய்
தேடி வந்து நிறைவிப்பாய் உன்னருளால் ஈர்த்திடுவாய்
பாடி தினம் பணிவேனே என்மனத்து ஆண்டவனே.

2432. செங்கண் முதல்வனே நான்மறையின் நாயகனே
செங்கனியின் தீஞ்சுவையே வான்வெளியின் எழில் வடிவே
செங்கதிரின் தீச்சுடரே செம்பவள எம்பிரானே
உங்களிடம் சரணடைந்தேன் என்மனத்தை ஏற்பாயே.

2433. மெய்யன்பின் உறைவிடமே முக்கண்ணன் மூலவனே
உய்யும் வழிஉரைத்திடுவாய் இயம்பிநீயும் ஏற்றிடுவாய்
ஓய்வின்றி உழைத்திடுவாய் அண்டமெல்லாம் வளர்த்திடுவாய்
சாய்ந்திடுவாய் எனைவிரும்பி அன்புதனை காட்டுவாயே.

2434.ஆதரித்து ஏற்றிடுவாய் தவறுதனை திருத்திடுவாய்
ஆதவனாய் ஒளிதருவாய் இடர்களைய வந்திடுவாய்
உதவும் கரம் நீட்டிடுவாய் பண்புதனை தந்திடுவாய்
பதமாக மாற்றிடுவாய் பிள்ளையென அருள்வாயே.

2435. சித்தனாக அருள்புரிவாய்
பித்தனாக அலைந்திடுவாய்
ஈத்துவிக்க விரும்பிடுவாய்
அத்தனென அருள்வாயே.

2436. மலைமீது வீற்றிருப்பாய் கலையனைத்தும் அறிந்திடுவாய்
அலைபோல ஆர்ப்பரிப்பாய் விலையில்லா அருட்பொருளே
தலை மீது நதிகொண்டாய் சடை மீது பிறை கொண்டாய்
காலைப் பகலவனே என்மனத்து ஆண்டவனே.

2437. பொருள் தந்தாய் வாழ்வுக்கு
அருள் தந்தாய் மனதுக்கு
இருள் தந்தாய் விடியலுக்கு
மருள் தந்தாய் என்மனத்துள்ளே.

2438. தாங்கும் உள்ளம் உந்தனுக்கு தடையில்லை எந்தனுக்கு
பொங்கும் மனம் உந்தனுக்கு விடையில்லை எந்தனுக்கு
தங்கும் உடல் உந்தனுக்கு படையில்லை எந்தனுக்கு
எங்கும் நிறைந்தவனே பெற்றிடுவேன் உன்மனதே.

2439. பிட்டுக்கு மண் சுமந்தாய்
ஆட்டுவித்தாய் மண் வேந்தனையும்
தட்டாது வந்திடுவாய் அன்புடனே அழைத்துவிட்டால்
எட்டுகின்ற பழமே அன்புடனே அருள்வாயே.

2440. பாட்டிசைத்து உனை மலரவைப்பேன்
கட்டிவைப்பேன் உனை எனதன்பாலே
ஆட்டிடுவேன் உனை உனதருளாலே
ஈட்டிடுவேன் உனை எந்நாளுமே.

2441. பூப்போன்ற உன்மனத்தை என்மனத்தால் கவர்ந்திடுவேன்
எப்பொழுதும் உனைப்பாடும் உன்மனத்தை ஈர்த்திடுவேன்
தப்பேது செய்திடினும் தடுத்தென்னை ஆள்வாயே
அப்பனென உனை என்னை சிரம் தாழ்த்தி வணங்குவேனே.

2442. உந்தன் திருமணத்தை கண்குளிர கண்டேனே
எந்தையென என்மனத்தை உந்தனிடம் தந்தேனே
செந்தாமரையாய் உன்மேனி மிளிரடவும் கண்டேனே
உந்தன்துணை உமையவளை கண்டுநானும் மகிழ்ந்தேனே.

2443. அன்பான வாழ்த்துக்கள் உந்தனுக்கு தந்தேனே
உன்னை எண்ணி மனமுருகி நீர்மல்கி நின்றேனே
கன்னலென உன்சிரிப்பு திகழ்ந்திடவே கண்டேனே
அன்னையவள் உமையவளை இடப்பாகம் கொண்டாயே.

2444. கடம்பவன நகரினிலே கன்னல்மொழி பேரி நின்றீரே
உடம்பில் பாதி உமையவளுக்கு ஈந்துநீயும் உவந்தீரே
படம் எடுக்கும் பாம்பு தனை மாலையாக ஏற்றீரே
விடம்தன்னை கழுத்தில் ஏந்தி ஆண்டவனாய் வந்தீரே.

2445. மனமுருக வேண்டி நிற்பேன் வரம் கொடுக்க வாராயோ
இனமறிந்து ஏற்பாயே இன்னல்தனை மறுப்பாயே
அனல்தன்னை மறுத்துநீயும் குளிர்தன்னை தருவாயே
உனதன்பை தந்துநீயும் எனதன்பை ஏற்பாயே.

2446. அற்புதத்தின் திருவுருவே காண்பவரின் பேரொளியை
ஏற்புடைய அணிகலனே மனம் கவர்ந்த தீச்சுடரே
ஆற்றல்கொண்ட அருள்நாதா பெற்றவனாய் உளம் குளிரும்
கற்றவனே உனதன்பைத் தருவாயே.

2447. கொவ்வைப் பழச் சிவப்போ மல்லிகையின் வெண்நிறமோ
கொச்வைக் கனியமுதோ தேனின் தீஞ்சுவையோ
கொவ்வை மனதியல்பே மாறாத செங்கமலா
கொவ்வைவாய் திறந்து அமுதமழை தருவாயே.

2448. அருள் நிறைந்த பெருங்கடலே வற்றாத நீருற்றே
தருநிழலைத் தரும் விளக்கே மாறாத செங்கனியே
உருமாறும் என் தேவே தெரியாது நிறைந்தவனே
பெரும் ஒளியைத் தரும் சிவனே.

2449. வதனமதில் மெய்கொண்டு மாறாத
ஆதரவால் நிறைவுதந்து அன்புதரும்
பாதமதில் தொழுதுநித்தம் உனதன்பை
பதம் பணிந்து பெறுவேனே.

2450. பூங்கழல்கள் தொழுது மனமுவந்து ஏற்றி
செங்கமல முகம் வணங்கி அன்புடனே உனை அழைத்து
எங்கள் அப்பனென உனைப் போற்றி
பூங்கொடியை ஏற்றவனே உனை நினைத்து ஏற்பேனே.

2451. மங்கலத்தை தருகின்ற உந்தன்மொழி செப்பி
தங்கள் அன்பைப் பெறவேண்டி தொழுது ஏத்தி
செங்கழல்கள் பற்றி என்றும் குழந்தையென
இங்குவந்து எனை ஏற்பாயே.

2452. திருவாரூர் ஈசனே கசிந்துருகி வேண்டி
உருவமான உனைநினைத்து மருகி என்றும்
அருவமான உனைக்காண பிஞ்சுமனம்
திருவுருவாம் செல்வமணி உனை வேண்டுவனே.

2453. கண்ணுக்கு இனியவனே பெண்ணுக்கு உரியவனே
அண்மைக்கு வேண்டுவனே இன்னமுதை தருபவனே
உண்மைக்கு உருபொருளே உரித்தான என்னமுதே
ஊண் உண்ட நாயகனே கண்மணியே அருள்வாயே.

2454. நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்று
வஞ்சமதை தீர்த்து நீயும்
கஞ்சமில்லா அன்புதனை நிறைவாக தந்து
தஞ்சமதைத் தருபவனே.

2455. கள்ளமில்லா அன்பாலே, குழந்தையென வருவாயே
உள்ளமதை தருவாயே, உயர்ப்பண்பை அருள்வாயே
தள்ளாத மனத்தாலே, தயவுதனை செய்வாயே
எள்ளளவும் மறவேனே, பூஞ்கழலைப் பிடிப்பேனே.

2456. ஒப்பில்லா மாமணியே உயர்ந்த குடிப்பிறப்பே
தப்பேது செய்திடினும் தடுத்தென்னை ஆள்வாயே
அப்பனென அருள்வாயே குழந்தையென ஏற்பாயே
எப்பொழுதும் குடியிருக்கும் திருவாரூர் தியாகராசா.

2457. சிதம்பரத்தில் ஆடி இமயத்தில் வரம் கொடுத்து
உதவிடுவாய் அன்னைக்குப் பிள்ளையென
ஆதரவு காட்டி அன்புதனை ஊட்டி
ஈதலினால் தந்திடுவாய் உன் கரமே.

2458. சிற்சபையில் நடனமாடும் என்னுயிரே
பொற்சபையில் ஆடுகின்ற பெருமானே
ஏற்பது உன் பொறுப்பு மறுக்காது
உற்றவனாய் வந்து கருணைதனைத் தருவாயே.

2459. நல்லோர் மனத்திலே எக்கணமும் புலம் பெயர்ந்து
அல்லல் உறுவோரின் மனத்திற்கு மருந்து தந்து
இல்லை எனாது இருப்பதை நிறைவு செய்யும்
மல்லல் மாஞாலம் உடையவனே உனை ஏத்துவேனே.

2460. அன்பு செய்யும் மனமதனால் உன்னை
என்னுயிராய் நினைத்து என்றும் மறவாது
கன்னலென உன் நாமம் உச்சரித்து
தென்றலென வரும் உன்னை மறவேனே.

2461. தயா நரோக்கி ஓடும் கன்றினைப்போல்
அய்யனென உனை நினைத்து உருவி வரும்
சேய் என்னை அன்னையென பரிந்து நீயும்
உய்யும் வழி மனம் திறந்து கூறுவாயே.

2462. தவறாத சந்தானம் மறவாது தந்து
உவகை கொள்ளும் மனதனை
தவமிருக்கும் உன் உள்ளத்தால் ஈந்து
சிமெனவே தருவாயே.

2463. ஊட்டிடுவேன் எனதன்பை ஏழையென
தட்டாது ஏற்பாயே உவந்து என்றும்
கேட்டதெல்லாம் அறிவாயே மனம் திறந்து
பட்டொளியாய் வருவாயே எனதமுதே.

2464. கசிந்துருகி வேண்டி நிற்பேன்
பசிந்திருந்து உனை நினைப்பேன்
ஆசியுடன் உனை அழைப்பேன்
ஆசிதனை பெறுவதற்கே.

2465. பாவை மனம் அறிந்து
சேவை செய்ய எனை அழைத்து
அவை தன்னில் ஏற்று தந்து
இவை என்று இல்லாஅன்பு தன்னைத் தருவாயே.

2466. அம்பலத்து ஆண்டவனே இம்மனையில் குடிபுகுவாய்
அம்மாவென உனை அழைப்பேன் தாயன்பைக் காட்டிடுவாய்
இம்மைப் பிறப்புத்தந்த ஆண்டவனே உனைத் தொழுவேன்
எம்மையிலும் உனை வணங்கும் மனமதனை தருவாயே.

2467. கடலில் பாய்ச்சிலும் காத்திடுவாய் உனதன்பால்
மடலில் எழுதிடினும் ஏற்றிடுவாய் உனதன்பால்
இடம்பிடிக்கும் ஆசையுடன் உன்மனதை அறிந்திடுவேன்
விடம் உண்டநாதனே புகுவாயே என் மனத்தே.

2468. தப்பேது எழுதிடிலும் மன்னிப்பாய் உனதருளால்
அப்பனென நினைத்துன்னை வணங்கிடுவேன் எக்கணமும்
இப்பதத்தை பணிந்து வாழ்ந்திடுவேன் எந்நாளும்
காப்பது உன் கடமையப்பா மறவாது செய்வாயே.

2469. கற்றது உனதன்பை
பெற்றது உனதருளை
வற்றாது உன்கருணை
பெற்றவனே நீயன்றோ.

2470. தடையேதும் இல்லாது விளங்குகின்ற ஒளிப்பிழம்பே
கடையேறி வருவதற்கு வழித்துணையாய் வரும் விளக்கே
மடை திறந்த வெள்ளம்போல் பாய்ந்துவிடும் அன்பொளியே
கோடையிலே வரும் குளிர் நிழலே.

•

2471. பிள்ளையென உன்மடியில் நாளும் தவழ்ந்திடுவேன்
தள்ளாது உனதன்பை பொழிவாயே மறவாது
அள்ள அள்ள வரும் உனதன்பால் நனைந்து என்றும்
எள்ளளவும் குறையாத உன்கருணை அறிவேனே.

2472. அரியபொருளே ஆனந்த வெள்ளமே
அரிதான பரம்பொருளே அழகான அருள்விளக்கே
உரிமையுள்ள உயிர்ப்பொருளே இனிப்பான உயிர்த்தேனே
காரிருளை நீக்கி மனத்துக்குள் வருவாயே.

2473. இணையட்டும் என்மனமே உன்னோடு
துணையிருப்பாய் பலமகா என்னோடு
அணைத்திடுவாய் அன்னையென அன்போடு
துணையிருப்பாய் எந்நாளும் என் மனத்துள்ளே.

2474. விரிசடையில் மதி ஏற்று
அரிதான பொருள் தாங்கி
ஆரிருளை தான் விரட்டி
பேரின்பம் தருபவனே என் சிவனே

2475. ஐம்பூதம் உனதடக்கம் என்மனதோ எனதடக்கம்
ஐம்புலனும் உனதடக்கம் மூவுலகும் உனதாக்கும்
விம்மி அழும் அடியவர்க்கு உனதன்பே எழும் தாக்கம்
அம்மையென வருபவனே அடியவனுக்கு அருள்வாயே.

2476. அணுவைத் துளைப்பாய் ஆருயிரைக் காப்பாய்
பேணுவாய் என்மனத்தை பேரன்பைக் காட்டிடுவாய்
காணுவாய் என்னுள்ளம் விரைந்தோடி வந்திடுவாய்
வேணுமென கேட்பேன் உனதன்பே.

2477. அறமெல்லாம் ஓங்கிடவே உனது புகழ்
கூறவே உலகெங்கும் நிலைக்கவே
உறங்காத உனதன்பால் அருளன்பு
மறவாது என்றும் நிறையுமே.

2478. கனியமுதே என் இனிய ஆண்டவனே
பனிக்குளிரே இதமான எனதன்பே
இனிக்கும் என்தேனே மறவாது
தனித்து நின்று உனதன்பைத் தருவாயே.

2479. கரம்கூப்பி வணங்கி என்றும்
சிரம் தாழ்த்தி தொழுது உன்னை
இரங்கி ஏன் சிந்தை நெகிழ்ந்து
வரமதனை மனமகிழ்ந்து அருள்வாயே.

2480. நெகிழ்ந்து உனை அழைத்து
பகிர்ந்து கொள்ளும் அன்புதனை
மகிழ்ந்து என்றும் பெற்று
சகித்து நீயும் வருவாயே.

2481. பிள்ளையென எனை முகர்ந்து
அன்னையென எனை அணைத்து
உள்ளமதை எனக்கு ஈந்து
ஆண்டவனாய் வருவாயே.

2482. பாசத்தின் பெருமைதனை எனக்களித்த ஆண்டவனே
அறிந்து கொள்ளும் மனமறியாத எனதன்பை அறிவாயே
நேசத்தின் உணர்வுதனை உணர்ந்தறிந்த அம்மையப்பா
இறையன்பாய் நீ இருந்து எனதன்பை அறிவாயே.

2483. தோற்றத்தின் முதற் பொருளே
ஏற்றத்தின் முதல் அறிவே
ஆற்றலின் முதல் கருவே
வேற்றுமையை அறிவாயே.

2484. மல்லிகையின் மணம் நிறைந்து
அல்லி மலர் அழகு பெற்று
இல்லாமை நினைவில் கொண்டு
பல்லுயிரும் ஆள்பவனே.

2485. ஆனந்தக் கூத்தாடி அன்புமழை காட்டி
இனம்காட்டும் வழியாகி, தாயாகி , சேயாகி
கனமான மனம் தன்னை கரைந்துருகிச் செய்து
தினம் என்னைக் காப்பாயே.

2486. தேன் இனிமை உந்தன் மொழி
கன்னலென உன் அமுதமழை
அன்னையென உன் பாசம்
அன்பொழுகத் தருவாயே.

2487. பாடும் உன் அமுத நாடி
தேடும் உன் காந்தன் விழி
ஆடும் உன் பாதமலர்
விடுபடும் உன் வாய் மொழியே.

2488. குயிலின் குரலினிமை
மயிலின் அழகுருவம்
உயிரின் உனதழகு
பயிரின் சுவையே.

2489. சோலையிலே வலம் வந்து
மலையினிலே ஒளி தந்து
அலையினிலே ஒலி காத்து
தலைகாக்கும் எனதுருவே.

2490. அதிசயத்தின் ஓர் உருவம்
பாதி உடல் தந்த மனம்
ஆதியிலே வந்த உடல்
இதிகாசத்தின் முதற் பொருளே.

2491. பிரியமுள்ள என் வாகீசா
அரிதான என் ஆண்டவனே
உரிமையுள்ள என் அம்மையப்பா
தெரியவைப்பாய் உனதன்பே.

2492. பாசமதை அறியவைத்து அன்புதனை
நேசமுடன் அரவணைத்து ஆர்வமுடன்
வாசமுள்ள வாழ்வுதனை அடியவர்க்கு
ஈசனாகத் தருவாயே.

2493. தடையில்லா பாசமப்பா
மடைதிறந்த வெள்ளமப்பா
அடையாளம் காட்டுமப்பா
கோடைநிழலாய் வரும் தென்றலன்றோ.

2494. காற்றிலே மிதந்திடுவாய் அன்பிலே மூழ்கிடுவாய்
தேற்றிடுவாய் மெலிந்தவரை பண்பாலே திளைத்திடுவாய்
ஆற்றிடுவாய் பேரருளை அருளாலே காத்திடுவாய்
ஏற்றிடுவாய் எனதன்பே.

2495. செந்தாமரை மனம் பெற்று
உந்தன் அன்பை வெளிக்காட்டி ஏற்று
வந்தனையை நீ ஏற்று
ஏந்திடுவாய் என் மனதே.

2496. அழைத்திடுவேன் எனதன்பால்
பிழையிருந்தால் பொறுத்தருள்வாய்
இழைந்தோடும் பாசத்தால்
மழைபோல வருவாயே.

2497. அதிசயங்கள் காட்டிடுவாய் உன்னெழிலை தந்திடுவாய்
ஆதியில்லா பரம்பொருளே அந்தமில்லா அருட்செயலே
பாதிஉடல் ஈந்திட்டாய் உமையவளாய் தந்தாயே
உதிரமாய் கலந்தாயே.

2498. மலரின் மென்மையும் பூவின் வாசமும்
இலகுவாக வரும் மனமும் அன்புடைய உன் குணமும்
காலத்தின் பருவமும் எல்லாம் உனதாக
உலகமெல்லாம் வளர்ப்பாயே.

2499. கனவெல்லாம் உன் நினைவாக
மனமெல்லாம் நிறைவாக
இனமெல்லாம் உன் தோற்றம்மாக
மனதெங்கும் நிறைவாயே.

2500. காட்சியின் ஒளிப்பிழம்பாய்
ஆட்சியின் முதல் கூறாய்
மாட்சியின் அருள் ஒளியாய்
சாட்சியாய் வருவாயே.

2501. மந்திரத்தால் அறியவில்லை
தந்திரத்தால் வழியுமில்லை
விந்தையினால் பொருளுமில்லை
தந்தையென அறிவத்றகே.

2502. சக்திதனை பெற்றவனே
உக்திதனை சொல்வாயே
முக்தி தனை அருள்பவனே
பக்திதனை தருவாயே.

2503. முகில்கூட்டம் நடுவினிலே சுற்றிவரும் பகலவனே
அகில்வாசம் இடையினிலே மனம் பெற்று வருபவனே
தகிக்கின்ற வெயிலூட குளிர் நீராய் தெரிபவனே
பகிர்ந்திடுவேன் எனதன்பை உன்கருணைப் பெறுவதற்கே.

2504. சந்தனத்தின் வாசம் நீ
அந்தரத்தில் வானம் நீ
காந்தனின் மென்மை நீ
எந்தையென வருவாயே

2505. வெண்மையான மனம் கொண்டு இரக்கமுள்ள
உளம்காண்டு எளியவர்க்கு அருள் செய்து
அண்மையிலே நின்று என்றும் அன்பு
மழைத் தருவாயே.

2506. தலமனைத்தும் அன்னையென வீற்றிருந்து
நீலமதை கழுத்தில் கொண்டு அப்பனென
ஆலம்போல் விழுது தந்து பற்றுவதற்கு உதவி நீட்டி
இலகுவாக வரும்தேனே.

2507. பலமனைத்தும் தந்தாய் ஓர் மந்திரத்தால்
கலமாக வந்தாய் உன் உருவத்தால்
காலமதை கருதி உதவி செய்து
உலகமெல்லாம் காப்பாய் உனதன்பாலே.

2508. விளக்காக ஒளிதந்து அன்பாலே
இளக்கி உனதருளால் வழிகாட்டி
விளக்கமாக உன்புராணம் செய்து
களமிறங்கி வரும் மானே.

2509. தீபத்தின் ஒளி நீயே, வற்றாத அருள் நீயே
சுபிட்சத்தை அருள்பவனே ஆற்றுகின்ற அருமருந்தே
அடிநயத்தின் நடராசா சிற்றம்பல மணிவாசா
என்மனத்து வாகீசா.

2510. ராகத்தின் இனிமையானாய்
பாகத்தில் உமையானாய்
அகத்திலே வாழ்வுமானாய்
சுகத்திலே அன்னைதானே.

2511. கரம்பிடிப்பேன் அன்பினாலே பதம்
பிடிப்பேன் பாசத்தாலே அமுதமென உனதன்பால்
அடியில்லா உருவு காண எப்பொழுதும்
ஓடி உனைத் தொழுவேனே.

2512. காற்றினிலே விரிந்திருப்பாய்
ஊற்றாக புலம்பெயர்வாய்
தேற்றிடுவாய் உன் வாயமுதால்
வற்றாத தேனூற்றே.

2513. வானத்தின் ஒளிப்பிழம்பே
இனம்காக்கும் உயிர்த்துடிப்பே
கனங்களுக்கு அதிபதியே
மனமெல்லாம் நிறைவாயே.

2514. பகலவனின் ஒளிக்கதிராய்
ஆகமத்தின் விதிப்பயனாய்
தேகத்தின் உயிர்த்துடிப்பாய்
அகமதிலே வருவாயே.

2516. கடலின் அலைபோலே
உடலின் உயிர் போலே
இடத்தின் பொருள் போலே
தடமாக வருவாயே.

2517. இதமான வார்த்தை தந்து
பதமான வாழ்வு ஈந்து
ஆதரவை நாளும் தரும்
ஈதல் செய்யும் ஆண்டவனை பணிவேனே.

2518. இசையின் நாதம் தரும்
ஓசையின்றி வாழ்வு தரும்
அசைவின்றி அசைவு அளிக்கும்
ஆசையுடன் வரும்தேனே.

2519. நாதமெனும் ஒலி அசைவினிலே
ஆதரவு எனும் அன்பு தந்து
ஈதலின் விளக்கம் தரும்
பாதமலர் வணங்குவேனே.

2520. குழல் இனிமை உந்தன் குரல்
மழலை விரும்பும் உந்தன் மனம்
பழத்தினிமை உந்தன் சுவை
அழகானது உன் எழிலே.

2521. தோணி என வழி காட்டி
அணிகலனாய் உடல் நிரப்பு
மணி ஓசையாய் ஒலி எழுப்பி
பணிவுடன் வணங்குவோர்க்கு நிறைவாக இருப்பாயே.

2522. வான்வெளியே உந்தன் இல்லம்
உன் வழியே எந்தன் மனம்
அன்னையென வரும் உளமே
என்னிடத்தில் வருவாயே.

2523. காற்று வெளியே உன் வாசம்
தேற்றுவது உன் சுபாவம்
மாற்றுவது உன் இயல்பு
ஆற்றுவது உன் உளமே.

2524. நிலமும், நீரும் உனதடிமை
மலரும், வானும் உனதருமை
உலகும், உயிரும் உன்கருணை
கலமும், காலமும் உனதுருவே

2525. நீரின்றி அமையாத உலகில்
அரிதான அன்புடைய சிவமே
பெரிதான உன்மனத்திலிருக்க
உரித்தான என் உளத்தை அறிவாயே.

2526. நெருப்பைக் கையில்கொண்டு கங்கையை தலையில்கொண்டு
உருவமாய் சிலையில் கொண்டு அருவமாய் மனத்தில் கொண்டு
அருமையாய் மனத்தில்வைத்து பெருமையை உருவில்கொண்டு
ஆருயிராய் வரும்தேனே.

2527. திருவருளை பெற வேண்டி
அருகில் உனை காண வேண்டி
பெருமைகளை தெரிய வேண்டி
உருவமதை காண வேண்டுவனே.

2528. அன்புக்கு அடிமையாகி சிறியவனின்
அன்புக்கு பெருமை தந்து
அன்புக்கு தடை இன்றி
அன்பாலே எனை ஆளும் ஈசனே.

2529. இனிமை தரும் உன்தேனமுதை
கனிகள் தரும் என் தெள்ளமுதை
அனிச்சைமலராய் வரும் உன் மனதை
தனிமை தரும் உனதன்பைக் காண்வேனே.

2530. உடலுக்குள் உயிர் நீயே
கடலுக்குள் மலை நீயே
மடலுக்குள் பொருள் நீயே
ஆடலுக்கு பெயர் நீயே

2531. குழந்தையென என் உள்ளம்
அழகான பிள்ளை மனம்
மழலை கூறும் வாயமுதம்
அழகதனைக் காண்பாயே.

2532. மேகத்தில் உலவி வந்து
பாகத்தில் இடம் தந்து
அகமதிலே குடி கொண்டு
உகந்து நீ அளிப்பாயே.

2533. பாசத்தினை துணைகொண்டு உலகமதை
நேசத்தின் வழிகொண்டு உள்ளமதை
பேசவைக்கும் திறம் அறிந்து
வாசமுடன் வரும்தேனே.

2534. அழைக்கின்ற குரலுக்கு பதிலுரைத்து
உறவு கொள்ளும் அம்மையப்பா
விழைந்து அழைக்கும் மனத்துள்ளே
பாசமுடன் வருவாயே.

2535. வண்ணங்கள் பலகூடி உன்மனத்துள் குடியிருந்து
எண்ணமதில் வீற்றிருந்து அன்புடனே வரவழைத்து
பண்போடு அமர்ந்திருக்கும் எல்லையில்லா உன்புகழை
மாண்போடு ஏத்துவனே.

2536. ஏத்துகின்ற உள்ளமதில் மறவாது
காத்திருந்து வரவேற்கும் உனதன்பை
ஈத்துவக்கும் உனதுளத்தால் ஏற்கவேண்டும்
வித்தகனாம் என் ஆண்டவனே.

2537. மனைமீது வந்திறங்கி இரங்குகின்ற உன்மனத்தால்
வினை அனைத்தும் நீ தாங்கி சலியாது
அனைத்து நிற்கும் உனதன்பால் மனம் நெகிழ்ந்தது
உனை நினைத்து உருகுவனே.

2538. நம்பிக்கை மனதில் வைத்து
அம்மையென உனை நினைத்து
இம்மையிலே உருகி ஏங்கும்
விம்மி அழும் எனை அறிவாயே.

2539. கசிந்துருகி வேண்டுவோர்க்கு
வசியம் தரும் உன் முகத்தால்
ஆசிதனை மகிழ்ந்து தரும்
பசித்திருந்து அழைப்பேனே.

2540. அன்பெனும் தோணியிலே அழகாக
இன்சொல்லாம் பழச்சுவையில் இனிமையாக
கன்னல்தரும் இனிமையிலே ஆண்டவனாய்
மின்னலென ஒளியாக வருவாயே.

2541. கண்ணீர் மல்கி கசிந்துருகி
தண்ணீராய் தான் உருகி
உண்மையென உனை நினைத்து
எண்ணமதில் நிறுத்துவேனே.

2542. எழுந்து நிற்கும் உனதன்பால்
விழுந்து வணங்கும் எனதன்பால்
பழுதில்லா உன் மனத்தால்
இழுத்திடுவாய் உன்னகத்தே.

2543. பேசுவது உன் விழியால்
மாசு இல்லா உன்குணத்தால்
வீசுகின்ற உன் மணத்தால்
சிசுவாக வருவாயே.

2544. பூஞ்சிட்டு உன் உள்ளம் இனிக்கின்ற தேன் கிண்ணம்
வாஞ்சையுடன் வரும்மனது தெவிட்டாத தெள்ளமுது
தீஞ்சுவையாய் வரும் எண்ணம் வற்றாத மலர்ப்பொய்கை
நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் என்னமுதே.

2545. வஞ்சமில்லா உன் மனத்தால்
நெஞ்சமெல்லாம் நிறைந்திருப்பாய்
கஞ்சமில்லா உன் குணத்தால்
தஞ்சமதைத் தருவாயே.

2546. வாழ்க்கை எனும் பட்கினிலே ஒளி என்னும்
வாழ்வுதந்து மறவாத பண்பாலே
தாழ்வில்லா உயர்வளித்து அரவணைக்கும் அன்பாலே
ஊழவினையை மறைப்பாயே.

2547. உனையண்டி பிழைப்பவர்க்கு மனதாலே
பனையளவு பயன் அளிக்கும்
வினை நீக்கும் அறிவாளா
எனை அணைத்து வழித்துணையாய் வருவாயே.

2548. பயன்கொடுத்து வினையறுக்கும்
உயர்ந்தவனே, அன்பாலே அரவணைத்து
தயவாக உனை அழைக்கும் அடியவர்க்கு
அயராது வழித்துணையாய் வருபவனே.

2549. இயல், இசை, நாடகத்தின் மூலவனாய் நீயிருந்து
தயவு, கருணை, அன்புக்கு முதல்வனாய்
உயர்வு, பெருமை, வளர்ச்சிக்கு ஆருயிராய்
அயராது உடனிருந்து உதவிடுவாய் என் அன்பே.

2550. பக்கதுணையாய் உனதன்பர்க்கு
ஊக்கமதை உணர்ந்தளித்து
ஆக்கமதை தந்தருளி
அக்கறையாய் வரும் மானே.

2551. கண்ணுக்கு காட்சி தந்து
மண்ணுக்கு வாழ்வு ஈத்து
விண்ணுக்கு ஒளி ஊட்டி
அண்ணலாக வரும் அமுதே.

2552. உடலுக்கு மருந்தா வாய்
ஆடலுக்கு விருந்தா வாய்
பாடலுக்கு உணர்வா வாய்
கடலுக்கு அலை நீயே.

2553. மடி மீது நான் அமர்ந்து கொஞ்சிடுவேன் பிள்ளையென
அடி எடுத்து வைத்திடுவனே் உன்மனத்துள்ளே மகவாக
குடி கொள்வேன் உன் உள்ளமதில் பாசமுள்ள குழந்தையென
ஈடில்லா உனைநினைத்து அன்னையென ஏற்பேனே.

2554. வசந்தத்தின் எழில் வடிவம்
வாசத்தின் மலர் உருவம்
நேசத்தின் இனிமை மனம்
வசப்படுவாய் என் மனத்துள்ளே.

2555. குருவாக உனை ஏற்று மலராக
உருமாறும் மென்மையான மனம் நினைந்து
கருவிலே வீற்றிருந்து அருவமாக நீயிருந்து
உருவமாக வரும் தேனே.

2556. அறியாது செய்த பிழை
அறிந்து செய்த பிழை
அறியாது செய்த மனம்
அறிவாயே அனைத்தையுமே.

2557. மெய்யன்பை நினைந்து என்னும்
உய்யும்வகை தெரிந்து என்னும்
பொய்யில்லா வாழ்வறிந்து
தேய்வில்லா உனையறியும் வழி சொல்வாயே.

2558. கண்ணீர் ததும்பி கசிந்துருகி
மாண்புள்ள உனை நினைந்து
உண்மையை உணர்ந்து என்னும்
எண்ணமதில் வீற்றிருக்கும் என்னமுதே.

2559. சலனமில்லா உள்ளமதில் உனை ஏற்று
உலகமெல்லாம் நினைந்திருக்கும் உனை நினைந்து
காலமெல்லாம் நிலைத்திருக்கும் உனை எண்ணி
ஆலத்தின் விழுதுபோல உனைப்பற்றுவேனே.

2560. வெள்ளம் போல் பெருகி வரும் உனதன்பை
உள்ளத்தால் நான் ஏற்று
அள்ள அள்ள வரும் உனதருளை
கள்ளமில்லா மனத்தாலே நான் ஏற்பேனே.

2561. மணிவாசகத்தின் வாசமதைத் தரவில்லை
அணிகலனாய் தருவதற்கு வார்த்தையில்லை
மணிஓசை எழுப்பதற்கு ராகமில்லை
அணிந்திடுவேன் என்மனத்துள்ளே உன்மனமே.

2552. அமுதமாம் உன் திருவடியை மறப்பேனோ
சமுத்திரமாம் உனதன்பில் திளைக்காமல் இருப்பேனோ
கோமுகிப் பொய்கையின் அட்சயப் பாத்திரமே
என்னையருளும் ஈசப் பெருமானே .

2553. பேசுகின்ற விழியாலே
மாசு இல்லா உளத்தாலே
வீசுகின்ற ம னத்தாலே
இறையாக வரும் தாயே.

2554. பொன் மலரே மாணிக்க வாசகனே
அன்பான அருட்கடலே
இன் சொல்லால் திளைப்பவனே
கன்னல் மொழி பேசும் என்னுயிரே.

2555. அகம், புறம் இல்லா ஆனந்தக் கடலே
இகம். சுகம் இல்லா அருட் பெருஞ்சுடரே
முகம், உடல் இல்லா ஒளிப்பிழம்பே
ஆகமத்தை அறிந்த ஆனந்தக்கடலே.

2556. அடியேனை ஆட்டிவைக்கும்
ஆடிவரும் தேனே
தேடி உனை அழைப்பவர்க்கு
ஓடிவரும் மானே.

2557. அரும்பை மலராக்கி
கரும்பை இனிதாக்கி
ஆருயிரை எளிதாக்கி
உருகிடுவாய் என்தேனே.

2558. நம்புகின்ற உளமதற்கு
இம்மையிலே வரம் கொடுத்து
அம்மையென வளர்த்தெடுத்து
உம்மை உணரவைப்பாயே.

2559. கருவறையின் உயிர்த்துடிப்பே
உருவத்தின் உள்ளுணர்வே
அருவத்தின் நுண்ணறிவே
ஈருயிரின் ஓர் உருவே.

2560. அன்புவழியில் ஆட் கொண்டு
அன்பு வழியில் உணர்ந்தறிந்து
அன்பு வழியில் உளம் கனிந்து
அன்பாலே ஏற்றவனே.

2561. அறவழியில் ஆட்கொண்டு
புறவழியில் வழிகாட்டி
திறமதனை எடுத்தோதி
மறவாது வரும் தேனே.

2562. கருத்துணர்ந்து முகம் காட்டி
உருவத்தால் உனைக்காட்டி
அருவத்தால் உணர்வூட்டி
பெருமையுடன் வரும் எழிலே.

2563. பதித்திடுவாய் உன் உணர்வை
துதித்திடுவேன் உன் புகழை
ஆதியில்லா அருள்விளக்கே
உதிக்கின்ற செங்கதிரே.

2564. மெய்ஞ்ஞானம் தந்தருளும்
உய்யும் வழி செய்தருளும்
ஆய்ந்தறிந்து அறிந்துணரும்
பொய்மையில்லா மெய் உணர்வே.

2565. கடலின் அமுதே
உடலின் உயிரே
மடலின் கருத்தே
ஆடலின் அரசே.

2566. வாசகத்தின் உயிர்த்துடிப்பே
நேசத்தின் அரவணைப்பே
பாசத்தின் மனமிகழ்வே
பேசவொண்ணா ஒளிவிளக்கே.

2567. மனச்சுமையை இறக்கி வைக்கும்
சுமைதாங்கி நீ என்று
அனல்கக்கும் முக்கண்ணால் குளிர்நிலவை
தருவாய் என மனதுருகி உன்னை நாடுகிறேன்.

2568. சோதி என உன்னருகில் வந்ததுவோ
பேசாத உனையும் பேசவைக்க வந்ததுவோ
பாசமுள்ள உன் மனத்தால் ஏங்கவைத்தது எதனாலோ
நேசமுள்ள என் இறைவா பதில்தன்னை அறியேனே.

2569. பைங்கிளியே செப்மொழியை பகராயோ
செங்கதிரே அன்புரையைக் கூறாயோ
செங்கனியே இனிய செயல் தாரோயோ
பாங்குடனே புலம் பெயர்ந்து என்மனத்துள் வாரயோ.

2570. பைந்தமிழால் எடுத்துரைப்பேன்
உந்தனையே நான் துதிப்பேன்
செந்நாவால் உனை அழைப்பேன்
வந்திடுவாய் அன்புடனே.

2571. செயலின் சூட்சமத்தை அறியவில்லை
உயர்ந்து நிற்கும் உன்பெருமை உணரவில்லை
தயங்காது வரும் பண்பை ஏற்கவில்லை
தாயன்பை அறிந்த உன்பாதம் தொழுவேனே.

2572. நினைந்துருகி வேண்டினாலும்
உனை அறியும் வகையின்றி
மனை தன்னில் வேண்டிநிற்பேன்
வினை மாற்றும் ஆண்டவனே.

2573. நலஞ் செய்த தன்மையினால்
காலம் அறிந்து உதவுவதால்
பலம் தந்து அருளுவதால்
குலவிளக்காய் ஏத்துவேனே.

2574. திருத்தலத்தில் எழில்கண்டு
உருவத்தில் அருள் கண்டு
அருவத்தில் இறை அறிந்து
பெருமையோடு வாழ்த்துவனே.

2575. தாயன்பாய் உனை அறிந்து
உயர்ந்திருக்கும் உனைத்தேர்ந்து
அயராத மனம் உணர்ந்து
தயவோடு அழைப்பேனே.

2576. பொங்கபி பெருகும் உனதன்பால்
எங்கும் நிறையும் உன்னொளியால்
தாங்கும் மனம் கொண்ட உன்னருளால்
ஏங்கிடுவேன் உன் மனம் காணவே.

2577. முழு முதலே அருட் பொருளே
விழுப்பொருளே அருட்கடலே
உழுகின்ற மனக்குயிலே
தழுதழுக்க அழைப்பேனே.

2578. ஆதியும் நீயே, அரனும் நீயே
பாதியும் நீயே, மீதியும் நீயே
அதிசயம் நீயே, ஆனந்தம் நீயே
உதிக்கின்ற பகலவனே உறைந்திருக்கும் இன்னமுதே.

2579. பரம்பொருளே அருட்கடலே
இரக்கமுள்ள இன்னமுதே
ஈரமுள்ள உணர்வூற்றே
கரம்பிடிப்பேன் உன்னருளை பெறுவதற்கே.

2580. பணிந்து என்றும் வணங்கிடவே
தணிந்து உனை ஏற்றிடவே
அணி உரையாய் தந்திடவே
பேணி உனை அழைப்பேனே.

2581. வணங்கிடுவேன் என்றென்றம்
இணங்கிடுவேன் உனதருள்வேண்டி
சுணங்காது வரும் தேனே
பேண வேண்டும் என் மனதே.

2582. இன்பமதை தரும் தேனே
அன்பதனை தரும் மலரே
இன்னல் தனை களைவாயே
ஈன்றவனாய் அணைப்பாயே.

2583. நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும்
வஞ்சமில்லா உனதருளை
கஞ்சமின்றி பெறவேண்டி
தஞ்சமென வருவேனே.

2584. வித்தாக உருவானாய்
அத்தனாக உருவெடுத்தாய்
பித்தனாக அலைகின்றாய்
எத்தனாக வரும் மானே.

2585. வைரம் உந்தன் கண்கள்
பாரமுள்ள உன் கைகள்
பரமபதம் உன் கால்கள்
பரம்பொருளாய் எனைக் காக்குமே.

2586. வாசத்திற்கு உன் நாமம்
நேசத்திற்கு உன் மனம்
நன்மைக்கு உன் அருள்
என் வாழ்விற்கு உன் பதமே.

2587. நலம் பெற வாழ்த்திடுவாய்
குலம் விளங்க உயர்த்திடுவாய்
பலம் பெறுக அருளிடுவாய்
உலகு உய்ய எழுவாயே.

2588. கண்ணின் மணி நீயே
விண்ணின் ஒளி நீயே
மண்ணின் உயிர் நீயே
எண்ணமதில் உயர்வாயே.

2589. பாடி அழைத்தால் அன்புடனே அருள் தந்து
ஓடி அழைத்தால் ஆர்வமுடன் அரவணைத்து
தேடித் திரிந்தால் ஆசியுடன் அருள்சுவர்ந்து
ஆடி வரும் என் தேனே.

2590. கரையில்லா அலை கடலே
உரையில்லா உயிர்த்தேனே
கூரையில்லா உயிர்ப்பொருளே
விரைவாக அருள்வாயே.

2591. சிறப்பிக்க நடரசா
இறப்பில்லா ஒளிப் பிழம்பே
பிறப்பில்லா ஒளி விளக்கே
அறமதனை வளர்ப்பவனே.

2592. அழகி உமையவளை இடப்பாகம் கொண்டு
ஆடிமுள்ள மனத்தாலே செங்கருணை காட்டி
வேழமுகத்தானை அன்பாலே நீ அளித்து
உழன்றிடுவாய் மறவாது என் மனத்துள்ளே.

2593. மன்னவனே, என்னவனே, இனியவனே
இன்னுயிரே தேனுமுதே கனிச்சுவையே
கன்னல் இனிமையே மாசில்லா மணியே
ஆன்றோனாய் என்மனத்தை அறிபவனே.

2594. மயில்போல விரிந்தாடும் ஆண்டவனே
உயிர் உள்ள அழியாத ஓவியமே
பயிராய் கனிந்து உயிரை வளர்ப்பவனே
காயில்லா கனிச்சுவையே.

2595. அருமருந்தே ஆருயிரே அருயிரே அனிச்சமலரே
பெருங்கடலே, பேரருளே, வற்றாத அறுஞ்சுனையே
இருள்நீக்கும் ஒளிச்சுடரே மருள்நீக்கும் மாமணியே
தருகின்ற செங்கதிரே.

2596. மூன்று கண்கள் உன் சொந்தம்
உன் மொழியே என் பந்தம்
ஈன்று புறந்தருதல் உன் பாந்தம்
ஆன்றோனாய் வருவது உன் புகழே.

2597. சீர்பாடி உனைத்தொழுது மலர்தூவி
கார்காலத்து மழையே, உனை வேண்டி
ஆர்வமுடன் உனைநினைந்து வணங்குமெனை
ஈர்த்திடுவாய் உனதன்பாலே.

2598. ஆழ்ந்தகன்ற ஆண்டவனே, ஏங்கவைக்கும் இறையன்பே
ஊழ்வினையை அகற்றிநீயும் உயர்வுதனை தருவாயே
தாழ்வில்லா உயர்பிறப்பே மாசில்லா மரகதமே
வீழ்ச்சிதனை நீக்குவாயே.

2599. நறுமணமே அகல் விளக்கே எனதுயிரே
ஆறுதலை தருபவனே ஆக்கமதை கொடுப்பவனே
குறுமுனியின் திருவுருவே குறைவில்லா ஒளிவிளக்கே
பேறுகளை எந்நாளும் மறவாது தருபவனே

2600. உரையில்லா பொருள் விளக்கே
இரையில்லா இறை அன்பே
கரையில்லா அலை கடலே
வரையில்லா ஒளிப்பிழம்பே.

2601. வணங்குகின்றேன் உன் தாளடியை
இணங்குகின்றேன் உன்மொழி பயின்று
காணவைக்கும் அருள் விளக்கே
பேணவைக்கும் ஒளிச்சுடரே.

2602. தில்லையிலே அம்பலமாம்
முல்லையிலே வாசனையாம்
எல்லையிலே ஒளிக்திராம்
இல்லையெனா இறையன்பே.

2603. மெய்யன்பே ஒளிப்பிழம்பே
தாய் அன்பே தனிச்சுடரே
உய்யும்வழி காட்டிடுவாய்
பொய்மைதனை நீக்குவாயே.

2604. திருவே, உருவே, மருவே, வருவாயே
அருவே, ஒளியே, ஒளியே, நிலைப்பாயே
கருவே, கனியே, கதிரே, அருள்வாயே
தருவே, நிழலே, அன்பே வருவாயே.

2605. அன்புடன் அழைத்திட்டால் ஆர்வமுடன் வருவாயே
இன்னல்தனை நீக்கி இனியமுதை அருள்வாயே
கன்னல் மொழி பேசும் மழலைதனை தருவாயே
இன்னமுதே ஆருயிரே வழிகாட்டி அருள்வாயே.

2606. தவறுகள் செய்திடினும் தாயெனவே அணைப்பாயே
பாவங்கள் செய்தடினும் தந்தையென பொறுப்பாயே
ஆவலுடன் அழைத்திட்டால் மறவாது வருவாயே
ஈவது உன் செயலே பெறுவது என் இயல்பே.

2607. தெரியாது செய்தபிழை மறவாது பொறுப்பாயே
புரியாது செய்த செயல் நினையாது அருள்வாயே
அரிதாக செய்யும்உளம் நினைந்து நீயும் தருவாயே
உரிமையுடன் அழைத்தாலே அன்புடனே வருவாயே.

2608. குயிலே, மயிலே, என் உள்ளத்து தாமரையே
வெயிலே, மழையே, மனம் கனிந்த மரகதமே
உயிரே, உடலே, உளம்கவர்ந்த தாயன்பே
பயிரே, விளைவே பரந்திருக்கும் வானமுதே.

2609. பாயும் ஒளி நீயே
ஈயும் மனம் நீயே
தாயும் நீயே கனிந்துருகும்
சேயும் நீயே.

2610. நாடி உனை அழைத்திட்டால்
ஓடி வந்து அருளிடுவாய்
கூடி உனை அரவணைத்தால்
தேடிவரும் என் தாயே.

2611. காட்சியின் ஒளிப்பிழம்பே
ஆட்சியின் குலவிளக்கே
மாட்சிமையின் அருட்கடலே
சாட்சிக்கு வருவாயே.

2612. அருள் கொடுக்கும் கனியே
ஆருயிரின் மணி விளக்கே
இருள் அகற்றும் பகலவனே
பெருமையுடன் வரும் தேனே.

2613. அடியவர்க்கு காட்சிதந்து
தேடியவர்க்கு அருள் தந்து
ஓடிவரும் அருட்கடலே
ஆடிவரும் என்மனத்தேனே.

2614. தாமரையின் முகமன்றோ
கமகமக்கும் மணமன்றோ
சேமமுற நினைப்பதுண்டோ
எமதுள்ள செங்கனியே.

2615. ஆழ்ந்தகன்ற குடிப்பிறப்பால்
ஊழ்வினையை மாற்றி என்றும்
மனமதனின்னநிறைந்ததனால்
உனதன்பைப் பெறுவேனே.

2616. ஆனந்தத்தின் விளை நிலமாய்
கனங்களுக்கு உயிர்த் துணையாய்
இனங்களுக்கு தோள் கொடுத்து
மனம் நிறைய வருபவனே.

2617. பொன்மனத்து செங்கரும்பே
என் உடலின் உயிர்த்தேனே
இன்னல்களையும் இறையன்பே
கன்னல்மொழி தருவாயே.

2618. போற்றிடுவேன் என்மனதார
பற்றிடுவேன் எனதன்பாலே
கற்றிடுவேன் உனதருளாலே
பெற்றிடுவேன் உனதன்பை.

2619. அண்ணாமலை அருள் விளக்கே
எண்ணமெல்லாம் நிறைந்தவனே
விண்ணுலகை ஆள்பவனே
மண்ணுலகை படைப்பவனே.

2620. ஆண்டருளும் என்மனக்குன்றே
கண்ணின் கரு நீயே
தண்ணொளியின் ஒளிப்பிழம்பே
எண்ணமெல்லாம் நிறைவாயே.

2621. மகிழ்ந்து உனை வணங்கி
பகிர்ந்து எனதன்பை வழங்கி
சகித்து மன்னவனே உனைத்துதிப்பேன்
என்னவனே வருவாயே.

2622. அல்லிமலர் உனதழகை
வெல்லுகின்ற உனதருளை
அல்லல்களையும் உன் ஒளியை
இல்லல்களையத் தருவாயே.

2623. இணையில்லா மலையரசே
துணையில்லா பரம்பொருளே
மணையில்லா அருட்கடலே
அணைத்திடுவாய் உனதன்பாலே.

2624. செழுங்கதிராய் இருளகற்றி
எழுமதியாய் ஒளிபரப்பி
இழுக்கின்ற உனதன்பால்
உழுதிடுவாய் என்மனத்தை

2625. மலரின் மென்மையாலே
உவகை அளந்து என்றும்
பலரை வாழவைக்கும்
இலகுவான இறையன்பே.

2626. சமலாலய திருவருளே
அமலனாய் வரும் நிலவே
விமலனாய் தரும் கதிரே
எமதன்பை அறிவாயே.

2627. சிவனே எனதன்பே எனதாருயிரே
பவமே என்தேனே எனதருளே
உவப்போடு உனை அழைப்பேன்
தவப்பொருளே வருவாயே.

2628. பிட்டுக்கு மண் சுமந்தாய்
இட்டிடுவாய் உனதருளை
ஈட்டிடுவேன் உனதன்பை
காட்டிடுவாய் உனதடியே.

2629. கலங்குகின்ற மனம் அறிவாய்
இலங்குகின்றாய் உலகமெங்கும்
பலத்தாலே ஆள்கின்றாய்
தலமதிலே வீற்றிருப்பாயே.

2630. வினையறுத்து வரையறுக்கும் முன்ஈசா
எனைஅறிந்து உளம் கொடுக்கும் என் குருவே
அனைத்துமாய் நீவந்து அருள்செய்யும் என் அழகே
உனைவேண்டி வாழ்த்துவேனே.

2631. தேனின் இனிமை நீயே
மானின் மருள் நீயே
கனியின் சுவை நீயே
பனியின் குளிர் நீயே.

2632. மயக்கும் விழியாலே மயக்கிடுவாய் என்மனத்தை
மயங்கதை மனம் கூட மயங்கிடுமே உனதருளால்
அயராத உன்னருளால் தெளிவு பெறும் என்மனதே
உயரத்தில் இருந்து கொண்டு எனையறிய வேண்டுவனே.

2633. கருதறிய சிதம்பரத்தில் அம்பலமாய் ஆடுவதேன்
உருதெரியா உருவத்தில் அருவமாய் இருப்பதேன்
மருவில்லா குணத்தாலே அன்புதனைத் தருவதேன்
தருநிழலே தேன்குடமே உனதருளைப் பெறுவேனே.

2634. குற்றமில்லா உனதன்பால் குறையேதும் சொல்லாதே
உற்றதுணை நீயிருந்து ஊமையாய் இருக்காதே
கற்பதற்கு உனையறிந்தும் எனைக்காண மறுக்காதே
பற்றுதற்கு கொடிகொம்பாய் வருவதற்கு மறவாதே.

2635. மூலவனே, முதல்வனே என்மனத்தின் உயிர்த்துடிப்பே
உலகாளும் இறையோனே என்உணர்வின் உளத்துடிப்பே
காலமதை அறிந்தவனே என்உயிரின் மனத்துடிப்பே
இலகுவாக வரும்தேனே எனதன்பை அறிவாயே.

2636. குவளை மலர் உன் கண்கள்
ஆவலுடன் தரும் கரங்கள்
தவமிருக்கும் உன் பதங்கள்
அவனிதனைக் காத்திடுமே.

2637. பகலவனின் கதிர் நீயே
ஆகமத்தின் பொருள் நீயே
வேகத்தில் ஒளி நீயே
உகந்துநீயும் வருவாயே.

2638. உணர்வின் பொருளறிந்து
உணர்வாக வரமளித்து
உணர்வே நீயென்று
உணர்வாக வருவாயே.

2639. சிலையாக உருமாறி
அலையாக மனதறிந்து
கலையாக உயிர்பெற்று
மலைப்பாக அருள்வாயே.

2640. இயற்கையின் ஒளிப்பிழம்பாய்
உயர்வின் ஒலி உணர்வாய்
இயல்பில் உயிர்த்துணையாய்
செயலாய் வரும்மானே.

2641. மனத்தின் உயிர்த்துடிப்பே
இனத்தின் முதல் மலரே
ஆனந்தத்தில் வரும் உயிரே
உனதன்பைத் தருவாயே.

2642. கலைபிறந்தது எதனாலே
மலை உயர்ந்தது எதனாலே
அலை பாய்வது எதனாலே
விலையில்லா உன்னாலே.

2643. வண்டமரும் மலர்த்தேனே
ஆண்டருளும் இறைமலரே
கண்கவரும் என்னமுதே
விண்ணுலகின் இறையன்பே.

2644. இனிக்கும் உன்மனத்தால்
கனிபோன்ற உன் உலைித்தால்
பனிபோன்ற குளிராலே
தனித்திருப்பாய் உன் புகழாலே

2645. மயங்கிடுவேன் உனை நினைத்து
உயர்ந்திடுவேன் உனை ஏற்று
வியந்திடுவேன் உனை எண்ணி
அயராது தொழுவேனே.

2646. எண்ணமதில் நிறைந்து என்றும்
கண்ணெதிரில் நிலைந்து நின்று
விண்ணுலகை ஆட்சி செய்து
மண்ணுலகை படைத்தவனே.

2647. நிலையில்லாது நிலைத்து நின்று
விலையில்லாது விலை கொடுத்து
கலையெல்லாம் தோன்று வித்து
மலை போல வருபவனே.

2648. சேயிடம் உற்ற பாசம் தந்து
தாயினும் அன்பு கொண்டு
சேயெனை ஏற்று நின்று
வருவாயே என் சிவமே.

2649. அன்பென்னும் நீர்ஊற்றி பாசமெனும் பயிர் வளர்த்து
கன்னலென இனிமை தந்து தாயன்ன பரிவு காட்டி
அன்னையென உயிர்ஈந்து பகலவனாய் ஒளிகொடுத்து
இன்னல்தீர்க்க வருபவனே, என் சிவமே.

2650. விடமதனை ஏற்று அன்புதனை ஈந்து
இடபாகமளித்து இன்சொல்லை ஊட்டி
படம் எடுக்கும் பாம்புசூடி, குளிர்கொடுக்கும் கங்கைகொண்டு
ஆடவரசாய் வருவாயே உன்துணையை தருவாயே.

2651. அன்பிற்கு தாழ் உண்டோ உன்னருளுக்கு ஈடுண்டோ
அன்னைக்கு விலைஉண்டோ உன்கருணைக்கு மாற்றுண்டோ
கன்னல்மொழி கூறும் உன்பெருமைக்கு குறைவுண்டோ
முன்னவனே மூத்தவனே உனக்கு பிறப்புண்டோ.

2652. பரம்பொருளே அறியவொணா அருட்பழமே
இரக்கத்தின் உயிர்பிறப்பே கருதற்கரிய பழம்பொருளே
ஈரமுள்ள இறையன்பே மனதறியும் ஒளிவிளக்கே
கரமதனைப் பிடிப்பவனே.

2653. காட்சியும் நீயே, கருணையும் நீயே
ஆட்சியும் நீயே, அருளும் நீயே
மாட்சிமைப் பொருளே, வரமருளும் சிவப்பழமே
சாட்சியில்லா உணர்வே.

2654. மனமறிந்த மலர்க்கொடியே
இனமறிந்த படர்கொடியே
கனங்களுக்கு அதிபதியே
கானத்தின் ஒலி மழையே

2655. உனை நினைந்தால் துயரேது
மலையறிந்து நீ வருங்கால்
வினை மாற்றும் எனதன்பே
எனையறியும் இறையருளே.

2656. தெள்ளமுதே தெளிந்த மழைத்துளியே
உள்ளத்தின் உயிர்க்கூறே
கள்ளமில்லா கனியமுதே
தள்ளாது வரும் தேனே.

2657. பழுத்த பழச்சுவையே
எழுகின்ற உள்ளுணர்வே
உழுகின்ற மனத்தேனே
தழுதழுக்க அழைப்பேனே.

2658. மாணிக்கச்சுடரே, மரகதமாமணியே
அணிக்கு அணிகலனே, துயரில்லா தூமணியே
பிணிக்கு உயிர்த்தேனே ஒப்பில்லா மணிச்சுடரே
தணித்திடுவாய் மனச்சுமையே.

2659. தடையில்லா திருமணமும் சுமையில்லா பிள்கைளும்
விடைதேடித் தருவாயே உவப்புடனே வருவாயே
மடை திறந்த வெள்ளம்போல் அன்பு மழைப் பொழிவாயே
கடைத்தேற வழியொன்று சொல்வாயே எனதுயிரே.

2660. பயிரின் விளைநிலமே உயிரின் உயிர்த்துடிப்பே
இயற்கையின் பிறப்பிடமே ஈன்றெடுத்த தாயன்பே
தாயின் மடியமுதே இன்னமுதை தந்தருளும் தேனே
அயராது வருவாயே.

2661. ஆடும் நடராசா, ஆட்டிவைக்கும் அருளாளா
தேடும் வாகீசா திகட்டாத பழம்பொருளே
நாடும் பெருமானே தித்திக்கும் பழச்சுவையே
விடுகதையாய் இருப்பதேனோ.

2662. மாசில்லா தாயுணர்வை மறவாது
கசிந்துருகி தட்டாது தந்துதவி
பசித்திருக்கும் மனதறிந்து மனமிகழ்ந்து
வாசித்தறியும் எனதன்பே.

2663. உணர்வின் உள்ளொயியாய் அன்பில்
குணக்குன்றாய் ஆதரவில்
இணங்கிநின்ற இன்சொல்லால்
காணவரும் எனதுயிரே.

2664. நினைவிலன் நிலைத்து நின்று
உனை நான் வாழ்த்தி என்றும்
வினை தன்னை மாற்றவேண்டி
மனை வேண்டி வரவேற்பேனே.

2665. இரங்குகின்ற உன் மனத்தாலே
வரம் தந்து எனக்குதவி
அருள் கொடுத்து மனமுவந்து
இருள்நீக்க வரும்மானே.

2666. ஈன்ற அன்னையென மனமுவந்து
உன்கரத்தை நீட்டி என்றும்
என்மனத்தை அணைத்து நாளும்
கன்னலென வரும் தேனே.

2667. முழுநிலவாய் ஒளிதந்து
பழுமரமாய் சுவை தந்து
தழுவுகின்ற தோள்தந்து
எழுகின்ற கதிரவனே.

2668. நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்று
வஞ்சமில்லா மனத்தாலே
தஞ்சமென நீ ஏற்று
செஞ்சுடராய் வருவாயே.

2669. பழமுதிர்ச் சோலையென சுவைதன்னை ஈந்து
ஆழமுள்ள மனத்தாலே மனமுருகி வந்து
அழகான விழியாலே காந்தமென எனை ஈர்த்து
எழவேண்டும் என் மனத்தள்ளே.

2670. ஆடுகின்ற உன்கால்கள் ஆட்டுவிக்கும் உலகத்தை
பாடுகின்ற உன்பாக்கள் இசையவைக்கும் உலகத்தை
தேடுகின்ற உன்விழிகள் ஈர்த்துவிடும் உலகத்தை
கொடுக்கின்ற செங்கரங்கள் வாழ்த்திடுமே மனத்துள்ளே.

2671. பதித்திடுவேன் உன்முகத்தை என்மனத்துள்ளே
வித்திடுவாய் நல்வினையை வழித்தோன்றலுக்கு
ஆதியென வரும்பொருளே அன்னைக்குப்
பாதி உடல் அளித்தவனே.

2672. அறியா பிழைதன்னை மனமுவந்து மன்னித்து
வறியவன் என்மனத்தை உணர்ந்து என்றும்
தேறிடச் செய்து அன்புடனே
வரும் பொருளே

2673. தெரியாததை உணர்த்தி என்றும்
தெரிந்ததை தெளிவு படுத்தி
அரிதான பொருள் அனைத்தும்
தெரிவுக்கும் எனதன்பே.

2674. பொருள் இல்லா பழம் பொருளே
அருள் அளிக்கும் பரம்பொருளே
பெருமையுள்ள சிவனருளே
சேருமிடம் உன்மனதே.

2675. நிறைத்திடுவாய் உனதருளாலே
பிறைசூடி வளர்த்திடுவாய்
அறைகூவி அழைத்திட்டால்
இறையருளாய் வருவாயே.

2676. ஆலயத்துக்குள் ஆழ்ந்திருந்து
ஆலயத்தின் அமர்ந்திருந்து
ஆலயத்துள் பரவிநின்று
ஆலயத்தின் ஆண்டவனே அருள்வாயே.

2677. முறைபாடி வாழ்த்தும்
அடியவரின் மனமறிந்து
ஓடிவரும் எனதன்பே
ஆடிவரும் எனதருளே.

2678. உருகின்ற பக்தர் துயர் நீயறிந்து
பெருகி வரும் உனதன்பால்
அருகில் வரும் உனதருளால்
கோருகின்றேன் உனைவேண்டி

2679. உணர்வுதனை அறிந்து அடியனின் மனம் படித்து
இணங்கிடுவாய் உனதன்பைத் தருவதற்கே
வணங்கிடுவேன் உனதருளைக் காண்பதற்கே
காணவருவாயே, உன்கருணை பொழிவாயே.

2680. நிலையில்லா உலகினிலே உனதன்பை நிலைத்தென்று
அலைபாயும் மனத்தை உன்னிடத்தே செலுத்தி
கலையனைத்தும் அறிந்து அறியாதவன் போலிருக்கும்
மலையரசே வணங்குவேனே மறவாதே.

2681. பேரருளே பெருந்தகையே எனையாளும் ஆண்டவனே
வரமருளும் பரம்பொருளே உலகாட்டும் மூத்தவனே
இரக்கமதைத் தருபவனே உயிர்த்தேனாய் இனிப்பவனே
கரம்பிடிப்பேன் தந்தருள்வாய் உன்னருளே.

2682. ஈனப்பிறவி எனை அனைத்து
உனதருளைக் காட்டி கரம்பிடித்து
எனதன்பாய் உருகாட்டி
உனதருளைப் பொழிவாயே.

2683. அன்பினில் விளைந்த கருவே
அன்னையென வளர்ந்த உருவே
கன்னலென முகிழ்ந்த உறவே
இன்னதென அறியா உணர்வே.

2684. புறமறிந்த நின்தனக்கு அகமறியும் மனம் வேண்டும்
திறமறிந்த ஆருயிரே மனதிறங்கி வரவேண்டும்
அறம்செழிக்க வருபவரே குணமறிந்து தரவேண்டும்
இறங்கிவரும் மனத்தாலே உனதன்பைப் பெறவேண்டும்.

2685. வழிகாட்டும் ஆண்டவனே திறக்க வேண்டும் உன்மனதை
அழிவில்லா ஆருயிரே பெறவேண்டும் உன்னருளே
விழித்திருக்கும் தேனமுதே கூறவேண்டும் உன்னிடமே
கழிவிரக்கம் கொள்வாயே என்மனத்தை அறிவாயே.

2686. அடைக்கலமாய் எனை ஏற்பாய் ஆனந்தபரம்பொருளே
விடையறியா எந்தனக்கு கரமளிப்பாய் அருட்பொருளே
தடையில்லா உன்னருகே இடம்தருவாய் அருளாளா
கடையினேன் எந்தனக்கு விடையளிப்பாய் ஆண்டவனே.

2687. பூத்திருக்கும் உன்விழிகள் பார்த்திருக்கும் என்மனதை
காத்திருக்கும் என்கண்கள் கவர்ந்திழுக்கும் உன்மனதை
ஈத்துவக்கும் உன்கரங்கள் தேர்ந்தெடுக்கும் என்மனதை
வித்திடுவாய் உன்னருளை மறவாது என்மனத்தே.

2688. உருவமில்லா உன்சோதி என்னுள்ளே புகுந்திடுமே
அருவமில்லா உன்னொளிதான் மனத்துள்ளே ஈர்த்திடுமே
பெருமையுள்ள உன்நாமம் கருத்துள்ளே தோன்றிடுமே
கருணையுள்ள ஆண்டவனே என்மனத்துள் வருவாயே.

2689. அரவணைப்பாய் அன்புடனே ஆதரிப்பாய் தாயெனவே
இரங்கிடுவாய் மனமிறங்கி வரம்தருவாய் வளமுடனே
கரம்தருவாய் அன்னையென வளர்த்திடுவாய் மனதாற
பரம்பொருளாய் வரும்தேனே அம்மையப்பன் நீயன்றோ.

2690. நெகிழ்ந்திடுவேன் உனை நினைந்து
மகிழ்ந்திடுவேன் உனைத்தொழுது
பகிர்ந்திடுவேன் என் உணர்வை
முகிழ்ந்திடுவேன் எனை நினைந்தே

2691. மலர்ந்திடுவேன் உனை நினைந்து
கலந்திடுவேன் உன் மனத்துள்ளே
வலம்வருவேன் உன்னகத்தே
பலம்தருவாய் என்னுள்ளே.

2692. சிலம்பரசே, சிற்றம்பல நடராசா
உலகளந்த பெருமானே எனதுயிரே
காலமதை அறிந்தவனே எனதன்பே
பாலமென வரும் துணையே.

2693. திருவும் நீ, மலரும் நீ, மனமும் நீ
உருவும் நீ, உலகும் நீ, உணர்வும் நீ
அருவம் நீ, அழகும் நீ, அன்பும் நீ
கருவும் நீ, காட்சியும் நீயே.

2694. கலைக்கோயில் உன்பரதம்
மலைக்க வைக்கும் உன் பாவம்
விலையில்லா உன் நாதம்
அலைபோல ஓங்கிடுமே.

2695. மணியின் ஒலியே, அன்பின் அமுதே
அணியின் அழகே, கனியின் சுவையே
பணிவின் உயிரே, பனியின் குளிரே
பேணிடும் எனதன்பே, தெவிட்டாத தெள்ளமுதே.

2696. வஞ்சமில்லா உன்மனத்துள் தஞ்சமென புகுந்திடுவேன்
பஞ்சமில்லா உனதன்பில் அஞ்சலின்றி வளர்ந்திடுவேன்
கஞ்சமில்லா உனதருளால் ஊஞ்சலென ஆடிடுவேன்
வாஞ்சையுள்ள உனதன்பால் உருகிடுவேன் பனியெனவே.

2670. சிலையான என்மனது மலையளவு நினைந்து நிற்கும்
விலையில்லா உனதன்பை மறவாத கருதி ஏற்கும்
காலையின் விடியலிலே உனதன்பை எண்ணி ஏங்கும்
நிலையான உனதருளில் உருகி நிற்கும் என்மனதே.

2671. காரிருளை நீக்கி கடுந்துயரை தடுத்தவனே
வாரி அன்பை அளித்து படுந்துன்பம் தீர்ப்பவனே
உரிமையுடன் கருணைகாட்டி வரும்துயரை தவிர்ப்பவனே
கோரிடுவேன் உனதன்பை மறவாது தருவாயே.

2672. தாயாகி என்மனத்துள் தவமாக குடியிருப்பாய்
சேயாகி உன்மடியில் எக்கணமும் தவழ்ந்திடுவேன்
காயான என் வாழ்வை கனிந்திருக்க செய்திடுவாய்
வாயார உனைப்பாடி என்மனத்துள் ஏற்பேனே.

2673. அல்லல்தனை நீக்கி என்மனத்துள் குடியிருப்பாய்
இல்லல்தனை தவிர்த்து என்உளத்துள் புகுந்திடுவாய்
ஆல்போல வினை வளர்த்து உன்வசத்துள் வைத்திடுவாய்
இல்லாமை இல்லாத உனை நினைக்க வைப்பாயே.

2674. பால்போன்ற உன்மனத்தால் என்மனதை ஈர்த்திடுவாய்
எல்லாமாய் நீயிருந்து என்மனத்துள் புகுந்திடுவாய்
கல்லாமை இருளில் எனைநீக்கி வளர்த்திடுவாய்
நல்லவற்றை ஈந்து நவில்வுடனே ஏற்பாயே.

2675. மணம் பரப்பும் உனதன்பை அறிந்திடுவேன் அன்பாலே
குணம்நிறைந்த உன்உள்ளமதை தேர்ந்தெடுப்பேன் அருளாலே
இணங்குகின்ற மனத்தாலே உணர்ந்திடுவேன் உன் இசைவாலே
உணர்ந்திடுவேன் தாயெனவே மறவாத உன்தயவாலே.

2676. வீற்றிருப்பாய் அன்னையென மறவாது என்மனத்துள்
ஆற்றிடுவாய் உன்கருணை எந்நாளும் என்மனத்துள்
பெற்றிடுவேன் அப்பனென உனதன்பை என்மனத்துள்
கற்றிடுவேன் அன்புதனை பெற்றவனாய் உன்னிடமே.

2677. விரிந்திரிக்கும் சடையினிலே பிறைதன்னை அணிந்தவனே
பரிந்தளிக்கும் அன்பினிலே அன்னையென வந்தவனே
அரிதான உன்மனத்துள் சேயெனவே ஏற்றவனே
உரிமையுடன் அழைத்திடுவேன் அம்மா என அன்பாலே.

2678. தாயென அழைத்தால் அன்புடனே ஆதரிப்பாய்
சேயெனவே எனை அணைக்கும் அன்னையென வந்திடுவாய்
காயெனவே இருந்திட்டால் கனியாக்கி மகிழ்ந்திடுவாய்
வாயெடுத்து அழைத்திட்டால் அன்புடனே வருவாயே.

2679. நறுமலரின் மணம் நீயே
குறுமுனியின் துணைநீயே
உறுதுணையின் இடம் நீயே
ஆறுதலை அளிப்பாயே.

2680. பெருமை தரும் பெருமானே
அருமை கூறும் அன்னையே
ஆருயிராய் வரும் தந்தையே
வருவாயே என் மனத்துள்ளே

2681. கரிய மேகத்துள் கதிரவனே
உரிய அன்பில் பெற்றவனே
அரிதான உணர்வில் ஆழ்ந்தவனே
தெரிவிப்பாய் உனதன்பே.

2682. கண்மணியே கண்ணின் ஒளி நீயே
எண்ணமதில் நிறைந்தவனே ஈடில்லா பெருந்தகையே
அண்மையிலே இருப்பவனே நீக்கமற விரிந்தவனே
உண்மையின் ஒளிச்சுடரே மனத்துக்குள் புகுவாயே.

2683. விழிச்சுடரே இதயத்தின் ஒலித்துடிப்பே
அழியாத ஓவியமே, மறையாத மாணிக்கமே
கழிவிரக்கம் கொள்வாயே, என்மனத்தை அறிவாயே
வழிகாட்ட வருவாயே உன்மனத்தைத் தருவாயே.

2684. பார்வையின் ஒளியாவாய் காட்சியின் புலனாவாய்
ஆர்வத்தின் பொருளாவாய் அன்பில் தாயாவாய்
ஈர்ப்பதிலே அன்பாவாய், அணைப்பதிலே தந்தையாவாய்
சார்வதிலே தெளிவாவாய் என்மனத்து அன்பாவாயே.

2685. சூட்சமதை அறிந்தவனே என்மனதைப் புரிந்தவனே
உட்கருத்தை சொல்பவனே உலகமதை உணர்ந்தவனே
காட்சிதனை அளிப்பவனே கருப்பொருளை அளந்தவனே
மாட்சிமை கொண்டானே எனக்கருணைத் தருவாயே.

2686. தாழ்இல்லா உன்மனத்துள் தயவோடு புகுந்திடுவேன்
வாழ்வளிக்கும் உன்மனத்தால் அன்புடனே இடம் பெறுவேன்
ஊழ்இல்லா உன்னகத்துள் உரிமையுடன் வந்திடுவேன்
ஆழ்ந்தகர்ந்த உன்னிடத்தே கருணை வரம் கேட்பேனே.

2687. பால்போல வெண்மை உள்ளம் பரந்திருக்கும் உந்தன்மனம்
ஆல்போல வளர்ந்திருக்கும் மாறாத உந்தன் உள்ளம்
இல்லல்தனை களைந்துவிடும் மாறாத உந்தன் நேசம்
பல்லுலகை ஆளும் அன்பான உன்கரமே.

2688. விரும்பி உந்தன் தாள் பணிவேன்
கருவியென உன்கரம்பிடிப்பேன்
மருவில்லா உனை நினைப்பேன்
தருகின்ற உன்கழல் வணங்குவேனே.

2689. உள்ளமதில் குடிகொண்டாய் என்னமதில் வீற்றிருந்தாய்
கள்ளமில்லா மனத்தாலே ஏற்றமிகு வாழ்வு தந்தாய்
தள்ளாத அன்பாலே அன்புடனே எனை ஏற்றாய்
ஆள்கின்ற மனத்தாலே எனை ஈர்த்து வைத்தாயே.

2690. மனம் நிறைந்த மலரே, அன்புநிறைகனியே
குணம்நிறைந்த அன்பே கருணை நிறைதேனே
அணங்கு கொண்ட சிவமே பண்புநிறை தாயே
வீணன் எனை ஏற்று அன்புகொண்ட தேவே.

2691. பாதமதை பற்றிடுவேன் பாராது போவாயோ
ஆதரவை தேடிடுவேன் காணாது செல்வாயோ
வேதமதை அறிந்தவனே அன்புதனைத் தாராயோ
ஈதலை உணர்ந்தவனே கருணைதனை பொழிவாயே.

2692. காய் கனிந்து கனியாகும்
தாய் கனிந்து கருவாகும்
சேய் கனிந்து உறவாகும்
சிலம் கனிந்து எனதன்பாகும்.

2693. இனியவனே என்மனதை ஈர்த்தவனே
கனிபோல இனிப்பவனே கரும்பினிமை கொண்டவனே
குனித்தபுருவம் உடையவனே அன்புமழை பொழிபவனே
பனிபோல உருவாயே எனதன்பை அறிந்தாலே.

2694. அளக்கவொண்ணா அறியவனே
தளமிறங்கி வாராயோ எனதன்பை அறிவாயோ
தாளகதி அறிவாயே தயக்கமின்றி வருவாயே
ஏளனமாய் எனைநினைந்து வாராது இருக்காதே.

2695. தொல்லைகளை அகற்றிடுவாய் வான்புகழை தந்திடுவாய்
அல்லல்களை நீக்கிடுவாய் அன்புதனை காட்டிடுவாய்
இல்லல்களை தவிர்த்திடுவாய் ஈன்றவனாய் அணைத்திடுவாய்
கல்லாத என்மனத்தை அறிவாயே எந்நாளுமே.

2696. விரும்பி உனைத் தொழுபவர்க்கு
அரும்பிலிருந்து மலர்ந்து உனதன்பை காட்டி
வரும் விருத்தாய் வந்து எனைவிரும்பி ஏற்று
அருமையென வரும் எனதன்பே.

2697. சலனமில்லா உன் மனத்துள்
கலகலவென நான் ஓடி
அலகில்லா உனதன்பை
இலகுவாக பெறுவேனே.

2698. பந்தமில்லா ஒதற்கரிய உன் உளத்தள்
பாந்தமுள்ள எனதன்பால் உன்மனத்துள்
காந்தமென ஈர்த்து உனை என்றென்றும்
வந்திடுவேன் மறவாது என்மனத்துள்ளே.

2699. பனிபோல உருகிடுவேன் உனதன்பைப் பெறவேண்டி
இனிக்கின்ற என்தேனே உனை எண்ணி மகிழ்ந்திடுவேன்
கனிபோல இனிப்பவனே உனைநினைந்து வாழ்ந்திடுவேன்
குனித்த புருவமுள்ள என்சிவனே உளம் கரைந்து அழைப்பேனே.

2700. முகம் பார்த்து மகிழ்ந்திடுவேன் உனைநினைந்து உருகிடுவேன்
அகம் பார்த்து உணர்ந்திடுவேன் சிரம் தாழ்த்தி வணங்கிடுவேன்
மேகமென கலையாது உறைந்திடுவாய் என் மனத்துள்
வேகமாக வரும் தேனே என்மனத்துள் புகுவாயே.

2701. வன்னிமரத்தடியில் வளர்ந்திடுவாய் பேருருவாய்
கன்னல் போல் இனித்திடுவாய் அடியவர் உளம் அறிந்திடுவாய்
இன்னல்களை தவிர்த்திடுவாய் மேகம்போல் கலைத்திடுவாய்
வன்சொல்லை மறைந்திடுவாய் இன்முகமாய் வருவாயே.

2702. மின்சுடரே, வெண்மதியே, அருட்பிழம்பே
வான்மதியே, ஒளிவிளக்கே, இன்னமுதே
கன்னல்தரும் தேனே, ஒளிச்சுடரே
இன்னல்களையும் அருமருந்தே.

2703. கரும்பினிது என்பர் உன் இனிமை அறியாதோர்
உருவமில்லை என்பர் உன்துடிப்பு அறியாதோர்
அருவமில்லை என்பர் உன்உணர்வை அறியாதோர்
ஆருயிரே என்பர் உனதன்பை அறிந்தவரே.

2704. தெளிதேனின் நறுஞ்சுவையே
கனிஉவகை தரும்மானே
அளித்து சிவக்கும் ஈரமுள்ள கரமே
எளியோனை உன்கரத்தால் பற்றுவாயே.

2705. அண்டமெல்லாம் பரந்து ஏழ் உவகை ஆண்டு
ஆண்டவனாய் நிறைந்து மூவுலகும் கண்டு
காண்பதெல்லாம் படைத்து அழைப்பவரை உணர்ந்து
கண்ணாக நிறைந்து ஒளிகொடுக்கும் விளக்கே.

2706. அருட்சோதியே, ஒளி கொடுக்கும் விளக்கே
கருணைகொண்ட அம்மா, அரவணைக்கும் தாயே
கருவாக ஏற்று, உயிர்த்துடிப்பை ஈந்து
உருவமாக தந்த எனதுயிரே.

2707. ஆழ்ந்த மனதை யார் அறிவார்
ஊழ் வினையை நீ அறிவாய்
ஏழ் பிறப்பும் நீ தருவாய்
வாழ்வளிக்கும் வகை அருள்வாயே.

2708. நாகமதை ஆடி வன்னிமரம் நாடிடுவாய்
ஆகமத்தை அறிந்து வாழ்வளிக்க வந்திடுவாய்
இகமதிலே வந்து உய்யும் வழி கூறிடுவாய்
உகந்து ஒன்று சொல்லிடுவாய் உனதன்பைப் பெறுவதற்கே.

2709. நாதனடி பணிந்து நாளும் தொழுதிடுவேன்
பாதமதை உணர்ந்து நாளும் வணங்கிடுவேன்
பதமான உனைநினைந்து நாளும் உருகிடுவேன்
ஈதலை நீயறிந்து உனதன்பைத் தருவாயே.

2710. தந்தையென்று அழைத்தாலே உன்கரத்தை காட்டிடுவாய்
எந்தையென்று அழைத்தாலே உனதன்பைப் பொழிந்திடுவாய்
விந்தையென்று விளித்தாலே மாயமதைச் செய்திடுவாய்
ஈந்திடுவாய் எனக்கேட்டால் உனதன்பைப் பெறலாமே.

2711. அலையில் தோன்றிய ஓசை நீ
கலையில் தோன்றிய காவியம் நீ
மாலையில் உதித்த பகலவன் நீ
சிலையில் உதித்த சிவமும் நீயே.

2712. சலனமில்லா உள்ளம் கொண்டு
கலக்கமுள்ள மனதும் பெற்று
இலக்கமில்லா எண்ணம் அடைந்து
உலகமெனும் இனமும் படைத்தவனே.

2713. உண்மையான எண்ணம் கொண்டு உள்ளமதில் நீயும் நின்று
எண்ணமதில் குடியும் பெற்று நெஞ்சமதில் நிறைந்து நின்று
அண்மையிலே வந்துநின்று வஞ்சமில்லா மனமும் கொண்டு
காண்பதற்கு அருகில்வரும் என் தேனே.

2714. சோதியென ஒளிர்பவனே
ஆதியென திகழ்பவனே
பாதியென கொடுத்தவனே
ஓதி உனைத் தொழுவேனே.

2715. காட்சிக்கு ஒளியவனே கண்ணுக்குள் ஒளிர்பவனே
ஆட்சிக்கு வந்தமென அண்டமெல்லாம் ஆள்பவனே
சாட்சிக்கு வருபவனே எளியவரை அறிந்தவனே
மாட்சிமைக்கு உரியவனே வரமருள்வாய் என்னவனே.

2716. அன்பென்னும் ஆருயிரே சொல்எல்லாம் நிறைந்தவனே
இன்பம்தரும் என்னமுதே ஏற்றவரம் தரும் அருளே
ஈன்றுபுறம் தந்து வாழ்வளிக்கும் பரம் பொருளே
கன்றெனவே வந்திடுவேன் அன்னையென காப்பாயே.

2717. தளர்வறியா உடல்தந்து
உளமெல்லாம் நிறைந்து நின்று
இளகிடும் மனம் கொடுத்து
வளமான வாழ்வரும்வாயே.

2718. எத்திக்கும் நிறைந்தவனே இத்திக்காய் வருவாயே
அத்திக்கில் இருந்தாலும் மனமகிழ நிலைப்பாயே
பத்திரமாய் என்மனத்துள் உனை வைத்து பூசித்து
காத்தருள வேண்டுமென வணங்கிடுவேன் மறவாதே.

2719. காதலால் உனை அழைப்பேன் கசிந்துருகி வந்துவிடு
வேதத்தின் நாயகனே எனதன்பால் அழைத்திடுவேன்
நாதத்தின் ஒலிநீயே உனைமீட்டி ஈர்த்திடுவேன்
ஆதரவு தந்துநீயும் உனதன்பைப் காட்டுவாயே.

2720. வானுலகின் ஒளியாகி மண்ணுலகின் உயிர்துடிப்பில்
ஈனுகின்ற தாயாகி வளர்க்கின்ற பெற்றவனாய்
தேனும் பாலுமாய் உவந்தளித்து உயிர்களுக்கு
ஊனுமாய் வருகின்ற என்னமிழ்தே.

2721. பாகாகி, பாலாகி, தேனாகி, உயிராகி
கரும்பாகி, கனியாகி, அமுதாகி, உணர்வாகி
அரும்பாகி, மலராகி, மணமாகி, கருவாகி
தாயாகி, எங்கும் நிறைந்திருக்கும் எனதுளமே.

2722. சிந்தையிலே புகுந்து அன்புதனை ஈந்து
விந்தைகளை செய்து மனமுருக வந்து
எந்தனையும் நினைந்து கருணையுடன் உவந்து
வந்திடுவாய் என் மனத்துள்ளே.

2723. கலைகின்ற என்மனது சிலையாக நிற்பதேனோ
மலைபோன்ற உன்நினைவை மறந்து நானும் இருப்பதேனோ
விலையில்லா உன்உணர்வை நினைக்காது மறப்பதேனோ
அலைகின்ற என்உளத்தை நிறுத்தவும் மறுப்பதேனோ.

2724. உள்ளமெனும் கோவிலிலே என்றும் நிலைத்து நின்று
அள்ள அள்ள குறையாத உன்உணர்வில் மலைத்து நின்று
தள்ளவொண்ணா உனதன்பால் சிலையாக உருகி நின்று
கள்ளமில்லா என் உளத்தால் உனைவேண்டி நிற்பேனே.

2725. இனியவனே எனதன்பே என்னுயிரே சிலம்பரசே
பனியின் குளிரே கரும்பின் சுவையே
குனித்த இதழே, கனியின் ருசியே
தனித்து நிற்கும் தாயன்பே அன்புடனே வருவாயே.

2726. நமசிவாயவென பாடுங்கால்
உமதன்பில் திளைத்து தேனாகி, ஊனாகி
எமதன்பை வெளிக்காட்டி அன்புருவே
உமதழகை காண்பேனே.

2727. அன்பே, ஆனந்த கடலே இனிய பழச்சுவையே
கன்னல் மொழி கூறும் ஆனந்தத் தேனே
இன்னமுதே இனியநிலவே ஒளிகொடுக்கும் ஆதவனே
என்மனத்தை அறிவாயே.

2728. மந்திரம் அறிந்து அரியநெறி தெரிந்து
தந்திரங்கள் புரிந்து ஆருயிரை காத்து
விந்தைகளை காட்டி, அன்புமழை பொழிந்து
தந்தையென வரும் உயிரே.

2729. நல்லவனாய் உற்றவனாய் அன்னையாய் நீயிருந்து
கல்லாத எந்தன்மனம் அன்பினாலே உனைச் சார்ந்து
இல்லையென்று சொல்லாத உனதருளால் எனைஈர்த்து
அல்லல்படும் என்மனதை மாற்றவரும் எனதன்பே.

2730. ஆடிநிற்கும் பாதத்தால் உலகமதை அளந்து
தேடிநிற்கும் உள்ளத்தை பார்வையாலே தேர்ந்து
பாடிநிற்கும் மனமதனை அன்பாலே ஈர்த்து
ஓடிவரும் எனதருளே.

2731. சித்தமதில் குடிகொண்டு மனமுகட்டில் குடிபெயர்ந்து
அத்தனாக அருள்செய்து வித்தகனாய் எனை ஆண்டு
ஈத்துவக்கும் குணம் அறிந்து உள்ளமதில் குடிகொண்டு
எத்துணையும் இன்பமுற ஊற்றாக வரும் சுனையே.

2732. இடர்களைய வருவாயே எனதன்பைப் பெறுவாயே
உடலில் ஓர்பாகம் கொடுத்தாயே இன்னுயிரை தந்தாயே
விடமதனை ஏற்றாயே, எழில் ரூபம் கொண்டாயே
ஆடவரசே உனதன்பைப் பெறுவேனே.

2733. நற்றமிழ் தந்து மனமதனில் புகுந்து
கற்றுவித்தாய் அன்புதனை
ஏற்றிவைத்தாய் என்மனத்துள்ளே
ஆற்றிடுவாய் உனதன்பே.

2734. புனல்சூடி குளிர்வைத்து
கனல்காக்கும் முக்கண்ணாலே
அனல்தாங்கி தொழுகின்ற அடியவரை
இனம் கொள்ளும் சுந்தரேசா.

2735. மலர்சூடி மனமனித்து அன்புமிகும் அடியவர்க்கு
இலகுவாக வந்தருளி மனமிரங்கி வேண்டுவோர்க்கு
காலத்தில் பதில்கொடுத்து கசிந்துருகும் தொண்டருக்கு
கலமாக வருவாயே.

2736. புகழ் அனைத்தும் பெற்றவனே அளவில்லா ஆண்டவனே
அகல்விளக்காய் ஒளிகொடுத்து வேதத்தின் பொருளதனை
ஆகமத்தில் எடுத்துக்காட்டி முடிவில்லா உன்னருளை
உகந்துநீயும் அருள்வாயே.

2737. அம்மையே அன்பே என்மனத்திற்கினியவனே
உம்மையே எண்ணி என்மனத்தே குடிவைத்தேன்
இம்மையே உனைவேண்டி என்னுள்ளே வணங்கி நின்றேன்
எம்மகவும் நீயன்றோ.

2738. வஞ்சனைகள் தாராது, அன்புதனை நிறைத்து
தஞ்சமென வந்தவர்க்கு உதவும்கரம் நீட்டி
அஞ்சவேண்டாம் எனச்சொல்லி கருணைமழை பொழித்து
நெஞ்சமதில் ஏற்று எனதன்பை அறிவாயே.

2739. பேணி எமை காத்து அருளமுதை தந்து
அணிகலனை பூண்டு அமுதஒளி கொடுத்து
தணித்திடுவாய் அல்லல்தனை பகலவனாய் வந்திடுவாய்
பிணியனைத்தும் நீக்கிடுவாய் என்தாயே.

2740. மதிமுகத்தை காட்டி, விடவுமேல் வீற்றிருந்து
ஆதியாய் எழுந்தருளி உமை ஓர்பாகம் தந்து
வேதிப்பொருளாய் வந்தமர்ந்து அருள்முகத்தை காட்டும்
ஓதியறியா விழும் பொருளே.

2741. கண்மலரே, பனித்துளியே சொல்லமுதே கரும்பே
விண்மதியே விழிச்சுடரே அன்பொளியே அருள்விளக்கே
தண்ணொளியே பகலவனே ஆரமுதே என்னுயிரே
ஆண்டவனே என்னொளி விளக்கே வருவாயே.

2742. பாலினை ஊட்டி தாயுரு காட்டி
அமுதினை அளித்து அன்புரு தந்து
இன்சொல் ஈந்து உயிரினை கொடுத்து
உடல் கொடுத்த பரம்பொருளே.

2743. சிவந்த கண்கொண்டு மூவுலகை ஆண்டு
சிவன் என்ற பெயர் கொண்டு உயிரனைத்தும் பெற்று
ஆவதெல்லாம் காட்டி, அழிவதெல்லாம் உணர்த்தி
பாவமதை நீக்கும் என்பொருளே.

2744. முத்தன்ன குளிர்ச்சி பெற்று அன்பென்னும் மணம் பரப்பி
அத்தனென மனமுவந்து ஆசையெனும் நிழல் அளித்து
அத்தனையும் உவந்தளித்து பாசமெனும் அன்பீந்து
வித்தைகளை வெளிக்காட்டி கருணையுடம் வரும் தேனே.

2745. இனியவனே எனதன்பே பாசமுடன் வரும்தேனே
கனியமுதே, கடல்போல விரிந்தவனே
குனிந்தபுருவம் உடையவனே அன்புமழை பொழிபவனே
தனித்து நிற்கும் ஒளி விளக்கே.

2746. எழில்வடிவே அருள்கொடுக்கும் வழித்துணையே
அழியாத உள்ளொளியே ஒளிக்கதிராய் வரும் விளக்கே
ஆழியிலே வந்தவனே இன்னுயிரை ஈந்தவனே
வழிகாட்டும் அருட்சுடரே.

2747. மௌனத்தின் முதற்பொருளே ஈன்றெடுத்த கருப்பொருளே
அளவில்லா ஒளிச்சுடரே, தாயாக வரும் உயிரே
இளகுகின்ற பனித்துளியே உணர்வூட்டும் அருட்கடலே
களங்கமில்லா பாசப்பிணைப்பே.

2748. காற்றாக பரவிநின்று ஒளிக்கதிராய் விரிந்தவனே
ஆற்றலாக விரிந்துநின்று சக்திதனை அளிப்பவனே
மாற்றமில்லா உனதன்பால் கடுந்துயரை தீர்ப்பவனே
பற்றிடுவேன் உன்மனத்தை பெற்றிடுவேன் உனதன்பே.

2749. இயற்கையின் தோற்றமென உருமாறி வந்த தேனோ
அயர்ந்து நிற்கும் வேளையிலே, இன்பமதை தரும் மானோ
உயர்ந்து தோன்றும் ஒளிப்பிழம்போ, அணையாத ஒளிச்சுடரோ
வியந்து உனை வாழ்த்துவனே.

2750. விடையில்லா வினா நீயே
கடையில்லா முதல் நீயே
தடையில்லா அருள் நீயே
கோடையிலே வரும் நிழலே.

2751. அலைகடலில் ஆழ்ந்திருப்பாய் என்மனத்துள் குடியிருப்பாய்
மலைக்குள்ளே ஒளிந்திருப்பாய் என்னுளத்துள் மறைந்திருப்பாய்
விலையில்லா மரகதமே, என்னிடத்தே வந்திடுவாய்
கலையனைத்தும் அறிந்தவனே, வரவேண்டும் என்மனத்தள்ளே.

2752. பிடிக்குள்ளே உனைவைத்து என்னுயிராய் மாற்றிடுவேன்
முடிவில்லா உனை எண்ணி மனம் குளிர மகிழ்ந்திடுவேன்
அடியில்லா உனை நினைந்து அன்பாலே திளைத்திடுவேன்
விடிவெள்ளி எனநினைந்து உனை ஏற்றி தொழுவேனே.

2753. மின்னொளியாய் விண்மீனாய் அலைகடலாய்
இன்னல்நீக்கும் அருட்சுடராய் இருளகற்றும் பகலவனாய்
வண்மீகநாதராய் வாகீசராய் திருத்தொண்டராய்
அன்புதனை தரும் கரும்பே.

2754. குருவே, அருவே, மலரே, மணியே
திருவே, கருவே, தேனே, அமிழ்தே,
உருவே, அருளே, ஒளியே, ஒலியே
இருளகற்றும் மணிவிளக்கே வருவாயே.

2755. அருள் வழங்கும் திருவுருவே வினை
தீரும் உன் விழிபட்டே மனை
வாரும் ஒளிப்பிழம்பே எனை
பாரும் அருட்கடலே.

2756. அன்பெனும் பிடிக்குள்ளே அகப்பட்டு
அன்னையெனும் சொல்லுக்கு பொருள்தந்து
ஆன்றோனாய் என்மனத்துள் வழிவகுத்து
என்மனத்தே புகுந்த எனதன்பே.

2757. கசிந்துருகி வேண்டிநிற்கும் அடியவர்க்கு
ஆசிதனை அன்பாலே தந்தெனக்கு
நசிந்திருக்கும் உளமறிந்து குணம்தந்து
நேசிக்கும் மனமறிந்து அருள்வாயே.

2758. தாயாகி உன்மனத்துள் எனை வைத்து
சேயாகி எனை என்னும் அன்புகாட்டி
உயர்வாக்கி என்மீது அருள்பொழிந்து
தாயாகி உயிராக்கி உணர்வாக்கினாயே.

2759. ஒளிச்சுடராய் விளக்கேற்றி சோதியென
ஒளிப்பிழம்பாய் எழுந்தருளி அன்புஎனும்
ஒளிக்குள்ளே எனை ஈர்த்து அன்னையென
ஒளிர்ந்து மகவாக்கிப் பார்ப்பாயே.

2760. வணங்கி நின்று பாதம் தொழுபவர்க்கு
இணங்கி வந்து பரிந்துரைத்து மனம்
சுணங்கி வருந்துவோர்க்கு இளகி என்றும்
காணவரும் எனதன்பே.

2761. பயிர்காணும் மழைபோலே
உயிர்காணும் உனதன்பாலே
சேயின் உடல்ஈனும் தாய் போலே
தாயின் முகம் காண்பேனே.

2762. சமயத்தின் உயிர்பிறப்பே
எமதுள்ள குடிப்பிறப்பே
உமதன்பு என்மனத்துடிப்பே
இமயத்தின் உறைவிடமே.

2763. ஈடில்லா பரம்பொருளே
ஆடிவரும் மலைத்தேனே
தேடி உனை அழைத்திட்டால்
பாடிவரும் என்மனத்துடிப்பே.

2764. சிவமே வருங்கால சந்ததியர் வளமோடு இருக்கவேண்டும்
தவமாக உனைநினைந்து வணங்கும் எனை ஈர்க்கவேண்டும்
பாவமில்லா வாழ்வுதனை அன்போடு வளர்க்கவேண்டும்
சிவமே என்தாயே உனைவணங்கித் தொழுவேனே.

2765. அன்பென்னும் பிடிக்குள்ளே அகப்பட்டுக் கிடக்கும் உன்னை
அன்பென்னும் பாவாலே நிறுத்தி என்றும்
அன்பென்னும் சொல்லுக்குள் புகுத்தி நித்தம்
அன்பென்னும் உணர்வுக்குப் பணிவாயே.

2766. வானில் முழு மதியாய்
அனிச்சைப்பூ மலராய்
இனிக்கும் நறுந்தேனாய்
ஊனில் புகுந்திடுவாய் என் சிவமே.

2767. மலரென மென்மையுள்ளம் தாயென பெண்மையுள்ளம்
ஆலமென பற்றும் எண்ணம், பெற்றவனாய் சுரக்கும்எண்ணம்
இலகுவாக உருகும் மனம் கறைபடியா உந்தன் மனம்
உலகமெல்லாம் அறிந்ததுவே.

2768. நன்றறிவாய் தீதறிவாய்
அன்பறிவாய் உலகறிவாய்
கன்னல் தரும் தேனே
உன்மனதை அறியேனே.

2769. கருப்பையில் எமை ஏற்றாய்
கருவாக்கி எமை வளர்த்தாய்
உருவமென எமை படைத்தாய்
அருவமாக நீ இருக்கின்றாயே.

2770. வித்தாக என்மனத்துள் வேரூன்றி நின்று
பித்தாக என்மனத்துள் அன்புடனே நுழைந்து
பித்தனென என்மனத்துள் கருணையுடன் வந்து
சித்தனாக சிறந்திருக்கும் என்சிவமே.

2771. பூங்குவளை உன் கண்கள்
செங்கமலம் உன் விழிகள்
தங்குமிடம் உன் உறைவிடங்கள்
எங்கும் நிறைந்திருக்கும் உன் உருவே.

2772. வாழ்வளித்து வளம்தந்து
ஆழ்மனதில் இடம்பிடித்து
ஊழ்வினையை இடமாற்றி
தாழ்வில்லா வாழ்வளிப்பாயே.

2773. பொன்னார் மேனியிலே அன்பென்னும் மணம் பூண்டு
கன்னல் மொழியாலே கருணையெனும் உளம் அணிந்து
அன்னமென உள்ளமதில் மனத்துயரை நீ துடைத்து
இன்னல் நீக்க வருவாயே.

2774. அடிவருடி வணங்கி என்றும்
கூடிவந்து துதித்து நாளும்
பாடி உனை ஏற்றி என்றும்
ஓடி வரும் என் மனமே.

2775. பதித்திடுவேன் எனதன்பை உன் மனத்துள்ளே
ஆதியென உனைநினைந்து என்மனத்துள்ளே
பாதிஉடல் அளித்த உனதன்பை போற்றி
ஓதி உனை வேண்டுவனே.

2776. குரல்கொடுத்து கூலி உனை
அரனாக நின்ற உனை
ஈரமுள்ள உனதன்பை
ஊரறிய செய்வேனே.

2777. உறவு சொல்லி உனை அழைத்து
அறம் தழைக்க உனை வேண்டி
பிறப்பில்லா உனை நினை நினைந்து
இறங்கி நின்று உனை வேண்டுவனே.

2778. புனிதமான உனதன்பால் கவர்ந்திருந்து
கனிவான உனதன்பால் ஈர்த்து என்ன
மனிதனான என்மனத்தை ஓரசைவால் பார்த்து
பனிபோல உருக்கிடுவாய் உனதன்பாலே.

2779. நெறிப்படுத்தி வாழவைக்கும் உனதன்பால்
அறியாது செய்தபிழை அனைத்தும் மாற்றி
தேறி வாழ வழிசெய்யும் எனதாண்டவனே
அறிந்திடுவேன் அன்பாலே உனதன்பே.

2780. தந்தையே பெற்றவனே எனதாருயிரே
விந்தையே அன்னையே என்கருத்துடிப்பே
எந்நிலையும் அறிந்தவனே என்மனத்துக்கினியவனே
எந்தையுமாய், தாயுமாய், யாவுமாய் இருப்பவனே.

2781. கண்ணுக்கு இனியவனே உலகத்தார் மனத்திற்குள்
விண்ணுலகு ஆண்டவனே அன்புசெயும் மனத்திற்குள்
மண்ணுக்கு அதிபதியே கருணையுள்ள மனத்திற்குள்
தண்ணொளியைத் தருபவனே.

2782. உருகுகின்ற உள்ளமதில் வெள்ளமென குடிபுகுந்து
பெருகின்ற அன்பினிலே கடலெனவே விரிந்து நின்று
தருகின்ற பிணைப்பினிலே மலையெனவே உயந்து ஓங்கி
வருகின்ற எனதுயிரே என்மனத்துள் நிறைவாயே.

2783. மறவாது உன்நினைவு நாளும் என்மனத்தினிலே
இறவாது இருக்கின்ற உனதன்பில் நான் நனைந்து
அறமான உன்மனத்துள் மழையெவே நான் குளிர்ந்து
திறமான உன்னருகே நினைக்குங்கால் வருவேனே.

2784. உறவுசொல்லி அழைக்கும் அன்புதனைக் காணய்யா
அறம் வளர்க்கும் கையாலே பிணைப்புதனைத் தாரய்யா
உறவே நீயென்று காணும் எனைப் பாருமப்பா
பிறப்புதந்து எனை வளர்க்கும் தாயே, நீ வாருமய்யா.

2785. வளமான வாழ்த்துக்களை உன்னிடமே பெறவேண்டி
அளவில்லா அன்பாலே உன்னிடமே அதைவேண்டி
இளகுகின்ற மனமறிந்து உன்னிடமே தரவேண்டி
உளம் கனிந்து வேண்டுவனே.

2786. தேவைதனை நீயறிந்து அன்புடனே எனைஇருத்தி
பூவை என்மனதறிந்து மனதாலே செயலாற்றி
அவையறிந்து வருகின்ற உனதன்பால் சீராட்டி
சேவை செய்யும் மனத்தாலே என்மனத்துள் புகுந்தாயே.

2787. பலமாக நீயிருந்து வேராக என்மனதூன்றி
இலகுவாக மனமிரங்கி என் உளத்துள் புகுந்து
காலமெல்லாம் இனித்திருக்கும் உன்சிவத்தை நான் அறிந்து
கலமாக உனை நினைத்து தொழுவேனே.

2788. கரும்பினிமை உன் நினைவே
உருவமான உன்மனதே
அருவமான உன்நிழலே
பெருமையான உன் அழகே.

2789. தந்தையென அழைத்தாலே தயவோடு வருவாயே
எந்தையென அழைத்தாலே அன்போடு நினைப்பாயே
சிந்தையிலே வைத்தாலே கருணையோடு பார்ப்பாயே
வந்தைசெய்யும் நீயன்றோ என்மனத்தை நிறைத்தாயோ.

2790. நெகிழ்கின்ற அன்பாலே உனதன்பை அறிவேனே
தகிக்கின்ற மனம்கூட குளிர்ந்திடுமே உனதருளாலே
பேசுகின்ற வார்த்தையெல்லாம் உனதன்பைச் சொல்லிடுமே
ஏசுகின்ற சொல்கூட உனதன்பால் மாறிடுமே.

2791. கருதாது செய்திடுவாய் உனதன்பைப் பொழிந்திடுவாய்
அருமையான தெரிந்திடுவாய் உனதருளைக் காட்டிடுவாய்
பெருமையுடன் வீற்றிருப்பாய் உனதெழிலை தந்திடுவாய்
கருவாக எனைநினைந்து உருவாக மாற்றினாயே.

2792. மலர்ந்திருக்கும் முகத்தாலே, ஈர்க்கின்ற மனத்தாலே
காலமெல்லாம் கனிந்திருக்கும் உவகைகொள்ளும் அன்பாலே
ஆலம்போல் நீண்டிருக்கும் பாசமென்னும் தொடராலே
உலகெல்லாம் ஆள்கின்ற உனைஎன்றும் தொழுவேனே.

2793. இயற்கையை மலரவைத்து உனதருளை வெளிக்காட்டி
அயர்ந்திருக்கும் நேரத்தில் உனதன்பைப் புரியவைத்து
உயரத்தில் நிறைந்து நின்று உனதருளைப் பெறச்செய்து
இயல்பாக உதவிசெய்யும் எனதருமை தனிக்கடலே.

2794. சிக்குண்டேன் உன்பிடியில் அகப்பட்டேன்
அக்கறையில் வெளிப்பட்டாய் அன்பினாலே
ஆக்கத்தை அளித்திட்டு உயர்த்திடுவாய்
ஊக்கமதை கொடுத்திடுவாய் பிரிவினாலே.

2795. பசித்திருக்கும் என் மனத்துள்
புசித்திருக்க வேண்டி பெற்றவனாய்
கசிந்திருகும் என் இதயமதில்
நேசித்து வருவாயே.

KOVILOOR ANDAVAR
A. No. 11938
LIBRARY, KOVILOOR

2796. வண்டு மொய்க்கும் உந்தன் மனம்
கண்டு வணங்கும் எந்தன் உளம்
ஆண்டு வரும் உன் இதயம்
வேண்டி நிற்கும் என்னிடமே.

2797. பட்டு போன்ற உன் இதயம்
விட்டிடுமோ என் மனத்தை
கட்டி வைப்பேன் எனதன்பால்
ஆட்டிவைப்பாய் உனதருளாலே.

2798. மீளா அடிமையென உனக்குள் அகப்பட்டேன்
தாளாத பிணியாலே வருத்தமுறும் அடியவளை
மாளாத உனதன்பால் மனமறிந்து வயப்படுத்தி
நோய் தன்னை நீக்கி வளமான வாழ்வுதனை நாளும் தருவாயே.

2799. நல்லவர் மனத்தினுள்ளே நாளும் வயப்பட்டு
அல்லுற்று வருந்துவோர்க்கு நாளும் வழிகாட்டி
தொல்லை தரும் துயரை மனத்தாலே நீ துடைத்து
பல்லுயிரும் வாழ்வதற்கு வழிவகுக்கும் ஆண்டவனே.

2800. சுடரே, ஒளிவிளக்கே எனதாருயிரே
இடர்களைய வழிகாட்டும் என் வழித்துணையே
படர் கொடியாய் உனைச்சுற்றிவரும்
மடந்தையின் அன்புக்கு அடிமையாவாயே.

2801. தோற்றமதை நீ காட்டி
ஆற்றல் தனை வெளிப்படுத்தி
காற்றெனவே வியாடித்து
ஏற்றமதை தரும் தேனே.

2802. சுட்டும் விழிச் சுடரோ
காட்டும் அருள் மழையோ
மீட்டும் உணர்வுக் கலையோ
காட்டும் எனதன்போ.

2803. அடக்குகின்ற மனமதனைத் தருவாயோ
இடர் நீக்க வழி ஒன்று சொல்வாயோ
கடமை உள்ளம் எனக்கருளச் செய்வாயோ
ஆடவரசே, எனதன்பை நீயும் அறிவாயோ.

2804. அடிவருடி தொழுதிடுவேன்
படி இறங்கி வருவாயோ
கடி துயரை தீர்ப்பாயோ
ஈடில்லா என் சிவப்பழமே.

2805. வாழ்வுக்கு வழி சொல்வாய்
தாழ்வுக்கு பொருள் தருவாய்
ஊழ்வினைக்கு வழி வகுப்பாய்
ஏழ்மைக்கு அருள் சொல்வாயே.

2806. வண்டார் குழலியை ஓர் பாதி கொண்டாய்
எண்ணுவோர் மனத்தினுள்ளே நாளும் நிறைத்திட்டாய்
கண்ணுக்கு இனியவனே காட்சிக்கு எளியவனே
விண்ணவனே மண்ணுலகின் அதிபதியே.

2807. உள்ளே கிரகித்து உட்பொருளாய் இருந்து என்றும்
அள்ள அள்ள குறையாதா அன்புதனை வெளிப்படுத்தி
வெள்ளமென பெருக்கெடுக்கும் கருணைமழை பொழிந்து
தள்ளாது எனை ஏற்கும் அருமருந்தே.

2808. பலமே நீயென்று உனைவணங்கி ஏற்கின்றேன்
காலமெல்லாம் வழித்துணையாய் வரவிரும்பி அழைக்கின்றேன்
ஆலம் விழுதெனவே உனைப்பற்றி துதித்திடுவேன்
உலகமெலாம் உணர்ந்தவனே, என்மனத்தை அறிவாயே.

2809. நாடி வரும் என் மனது
தேடி வரும் எனதன்பு
பாடி வரும் எனதியல்பு
ஓடிவரும் உனதருளை

2810. கவலைக்கு அருமருந்தே
ஈவதற்கு பெருவிருந்தே
உவப்பதற்கு அருளமுதே
ஆவதற்கு நீ உலகே.

2811. அனைத்திலும் நிறைந்திருந்து
எனை என்றும் ஏற்றிருந்து
உனை எண்ணி மகிழ்ந்திருந்து
வினை நீக்கும் உனை நினைந்து மகிழ்வேனே.

2812. கட்டுண்டு அன்பினாலே வளர்ந்து என்றும்
ஆட்டுவிப்பாய் அருளாலே, மலர்ந்து நாளும்
ஈட்டிடுவாய் கருணையாலே இரக்கத்தை மறவாது
ஊட்டிடுவாய் உனதன்பை எக்கணமுமே.

2813. ஆழ்ந்தகன்ற அருட்கடலே
ஏழ் பிறப்பும் உன் செயலே
ஊழ் அகற்றும் உன்மனமே
தாழ்வில்லா அருட்கனியே.

2814. பிடிக்குள்ளே ஆண்டு கொண்டு
அடிக்குள்ளே அளவு கொண்டு
பாடி உனை நினைவு கொண்டு
ஓடி வரும் என் மனமே.

2815. அசைவில்லா உன்மனத்துள் அன்புடனே நுழைந்து
ஓசையில்லா உனதன்பால் ஆர்வமுடன் புகுந்து
இசையோடு இயைந்த உன்னருளில் இணைந்து
ஆசையுடன் அழைக்கும் என் நினைவை மறவாதே.

2816. அழகான அலைகடலுள் ஆர்ப்பரிக்கும் ஒலிதானோ
உழவு செய்யும் விளைநிலத்தில் முளைத்துவரும் பயிர்தானோ
விழ நினைக்கும் கருவிற்கு உயிர்துடிப்பு நீதானோ
பழமாக நீயிருந்து சுவைகூட்டும் கனிதானோ. ன

2817. அன்பென்னும் பிடிக்குள்ளே அகப்பட்டு நனைகின்றாய்
இன்னமுதம் தருவதற்கு வெளிப்பட்டு தெரிகின்றாய்
கன்னல்மொழி கூறுவதற்கு அடைபட்டு விழிக்கின்றாய்
அன்னையென உருவதற்கு என்னிடமே புகுந்தாயே.

2818. முகில்போல கலைந்திடுவாய் எனதன்பில் உருகிடுவாய்
அகில்போல மணம்பரப்பி என்மனத்துள் இடம்பிடிப்பாய்
பகிர்ந்து தரும் அன்பாலே குழந்தையென வந்திடுவாய்
மகிழ்ந்து எனை பிள்ளையாக அன்னையென ஏற்பாயே

.

2819. வேதியரும் மனமகிழ்ந்து உனைநாடி
ஆதியில்லா உனையறிந்து உனைதேடி
பாதியில்லா உளமயறிந்து உனைபாடி
ஓதி உனை வேண்டுவனே.

2820. நாகமதை தலையில்சூடி வேதமதை மனதில் சூடி
ஆகமத்தை வெளிப்படுத்தி அடக்கமதை எடுத்துரைத்து
பாகமதை உமைக்குத்தந்து அன்பினாலே உவந்தளித்து
அகத்திலே குழந்தையென என்மனத்தை ஏற்பாயே.

2821. வாழ்க்கையிலே உறுதுணையாய்
ஏழ்மையிலே வழித்துணையாய்
தாழ்வினிலே வரும் துணையாய்
ஊழ்வினையை அகற்றுவாயே.

2822. ஈரமுள்ள நெஞ்சத்தால் பாசமுள்ள உயிர்த்துடிப்பால்
வரமருளும் உள்ளத்தால் அரவணைக்கும் கருணையால்
பாரமுள்ள மனம்கூட உருகிடுமே உனதன்பால்
ஆரமணிந்த ஆண்டவனே உன்கையை பற்றுவனே.

2823. விண்ணின் முழுமதியே அன்பின் அருளமுதே
மண்ணின் உயிர்த்துடிப்பே வானுலகின் பகலவனே
கண்ணின் ஒளிவிளக்கே கசிந்துருகும் ஆண்டவனே
எண்ணமெல்லாம் நிறைந்த உன்னை பெற்றவனாய் அழைப்பேனே.

2824. அசையாத மனம்கூட ஓர்நாளில் அசைந்துவிடும்
ஓசையில்லா மனம் கூட ஓர்நாளில் ஒலித்துவிடும்
ஆசையில்லா மனம்கூட நாளில் விரும்பிவிடும்
அசைகின்ற உன்மனது என்குரல் கேட்டு இரங்காதோ.

2825. அன்பினாலே இசைபாடி வாழ்த்துகின்றேன் உனை என்றும்
கன்னல் மொழி கூறி வணங்குகின்றேன் உனை நாளும்
ஆன்றோனாய் உனை நினைந்து தொழுகின்றேன் உனை என்றும்
இன்னல் தீர்க்க வருவாயே எனை நினைந்து எந்நாளுமே.

2826. இரும்பான உன்மனதை உருகவைப்பேன் மறவாது
கரும்பெனவே நினைந்து உனைப்பாகாய் கரைத்திடுவேன்
அரும்பெனவே எண்ணி உனைமலர வைத்திடுவேன்
வரும் காலம் நல்லதாக வேண்டுமென வேண்டிடுவேன்.

2827. தொடங்கி வைப்பாய் புதுவாழ்வை
அடக்கி வைப்பாய் என்மனதை
ஆடலுடன் எனை நினைப்பாய்
பாடலுடன் உனைக் காண்பேனே.

2838. ஏற்றமிகு வாழ்வை உனதன்பால் நல்கிடுவாய்
பெற்றவனாய் நீயிருந்து உனதன்பைக் காட்டிடுவாய்
ஏற்றவனாய் எனைமாற்றி உன்தன்பை அருளிடுவாய்
கற்றவனே உனை ஏற்றி நாளும் தொழுபவனே.

2839. தாயின் அன்பை உன்னிடமே பெற்று
உயிரின் உருப்பொருளை உன்னிடமே ஏற்று
கோயில் திருவுருவை உன்னிடமே அடைந்து
சேயின் மனத்தோடு உன்னிடமே காண்பேனே.

2840. மறவாத மனம் வேண்டி, உனை
இறங்கி வரும் உளம் நினைந்து
உறவு தரும் கிளை வேண்டி
உறங்காத உனை கேட்டு வேண்டுவனே.

2841. பிரியமான உன் உறவை நல்க வேண்டி
அரிதான உன் மனத்தில் இணங்கவேண்டி
உரிமையுள்ள உன்பிணைப்பில் சேரவேண்டி
காரிருளை நீக்கும் பகலவனே உனை வேண்டுவனே.

2842. கண்ணுக்கு இமை நியே
மண்ணுக்கு உயிர் நீயே
விண்ணுக்கு ஒளி நீயே
எண்ணமெல்லாம் நிறைந்தாயே.

2843. மயங்குகின்ற உள்ளத்தில் எண்ணமாக நீ நுழைந்தாய்
அயர்ந்திருக்கும் மண்ணுக்குள் விதையாக நீ விழுந்தாய்
இயல்பான உலகத்துள் உயிராக நீ வளர்ந்தாய்
உயர்வான உன்நிலையில் உணர்வாக நான் வருவேனே.

2844. துதித்தெழுவேன் உனை நினைந்து
பதித்திடுவேன் உனை மனத்துள்
உதித்திடுவாய் என் மனமறிந்து
பாதி உடல் ஈந்தவனே.

2845. தேனினும் இனிமையான உன்பெயரை உச்சரித்து
இனிமையான உனதன்பை மறவாது பெறநினைந்து
கனிபோல இனித்திருக்கும் உன்னருளை பெறஎண்ணி
பனிபோல உருக்கிடுவேன் எனதன்பைக் காட்டியே.

2846. அரவணைத்து உனதன்பால் பரிவுடனே
இரங்கி வந்து பாசமழை பொழிந்து
பாரமதை தாங்கி நேசமுடன் எனை ஈர்த்து
பரமசிவமென என்மனத்துள் புகுந்தவனே.

2847. அரவணைக்கும் அன்பாலே அன்னையென
இரக்கமுள்ள குணத்தாலே அப்பனென
வரம் கொடுக்கும் பண்பாலே ஈசனென
கரங்குபோல் சுழல்கின்ற இறையன்பை வணங்குவேனே.

2848. இருளகற்றி ஒளி காட்டி
மருள்நீக்கி வழிகாட்டி
அருள்காட்டி வாழ்வளிக்கும்
கருணையுள்ள எனதன்பே.

2849. குழந்தைபோல அழும்போது அரவணைத்து
விழப்போகும் தருணத்தில் உயர்வளித்து
வாழவைக்கும் எனதன்பே ஆருயிரே
ஆழமான உன்மனத்துள் இடம் தருவாயே.

2850. மழைகாணும் பயிர்போல உனைக்கண்டு மகிழ்வேனே
தழைக்கின்ற உயிர்போல உனை நினைந்து மகிழ்வேனே
அழைக்கின்ற மழலைபோல உனை எண்ணி மகிழ்வேனே
உழைக்கின்ற உடல்போல மனதில் ஆழ்த்தி மகிழ்வேனே.

2851. வாசமுள்ள மலராலே உனை வணங்கி
பாசமுள்ள மனத்தாலே உனை நினைந்து
மாசற்ற உள்ளத்தாலே உனை எண்ணி
நேசமுள்ள உணர்வாலே உனை அழைப்பேனே.

2852. வார்த்தைக்குள் அகப்படாத என்சிவமே
அர்த்தமுள்ள உணர்வுள்ள என்பலமே
பார்வையினால் ஈர்த்துவிடும் என் உணர்வே
ஆர்வமுடன் அழைப்பேனே என்தந்தையென்றே

2853. விதி அமைக்கும் பெரியவனே
அதிசயமாய் வீற்றிருக்கும் உமையவனே
பாதி உடல் தந்த இமையவனே
ஓதி உனை என்றும் ஏத்துவேனே.

2854. உருகி நின்று வணங்குவோர்க்கு
அருகில் வந்து வரமளித்து
தருகின்ற அருளமுதே
கருவில் நின்று வளர்ப்பாயே.

2855. ஒளி வடிவாய் நிறைந்திருக்கும்
அழகான சிவ உருவே
பழமாக இனித்திருக்கும்
என்னுயிரே ஆனந்தமே.

2856. அகன்று, ஆழ்ந்து, உயர்ந்து நிற்கும்
தேகமதை பாதி தந்து நிறைந்திருக்கும்
ஆகமத்தை தோற்றுவித்து சிறந்திருக்கும்
மகவாக எனை ஏற்கும் ஈன்றளவனே ஈசனே.

2857. இருளகற்றி ஒளி ஏற்றி தாழ்வில்லா உயர்வு தந்து
அருள்காட்டி துன்பமில்லா வாழ்வளித்து
பெருமையான வளம் கொடுத்து தாழ்வில்லா மனமருளி
கருணையுடன் வரும் அம்மா, நீ என்னாருயிரே.

2858. உலகமெல்லாம் உன் வலைக்குள்
காலமெல்லாம் உன் கைக்குள்
கோலமெல்லாம் உன் எழிலில்
நலமெல்லாம் உன் வடிவே.

2859. சோதி வடிவமென தோன்றினாய் என்மனத்துள்ளே
ஆதி வருவாய் மலர்ந்தாய் என் எண்ணத்துள்ளே
வேதியனாய் உருவெடுத்தாய் என் உணர்வுள்ளே
ஓதி உணரும் வித்தகனாய் வடிவெடுத்தாயே.

2860. சக்திதனை உனக்குள் வைத்து
ஆக்கமதை உணர்வில் வைத்து
ஊக்கமதை மனத்தில் வைத்து
எக்கணமும் நிறைந்திருக்கும் என்தாயே.

2861. தந்திரங்கள் அறிந்து வித்தைதனை காட்டி
விந்தைகளை புரிந்து அத்தனையும் சொல்லி
சிந்தையினில் புகுந்து மனமதனை அறிந்த
தந்தையென வரும் மலரே.

2862. தொட்டவுடன் உணர்வாய் அத்தனையும் அறிவாய்
ஊட்டிடுவாய் உணர்வுதனை. மீட்டிடுவாய் அன்புதனை
காட்டிடுவாய் உள்ளமதை அறிந்திடுவாய் பாசமதை
பாட்டினால் அழைப்பேனே, அறிவாயே எனதுயிரே.

2863. வெளிச்சத்தின் முதற் பொருளே அன்பின்
ஒளி வடிவே அரவணைப்பில்
அன்னையே, உனதன்பைப் பெறவேண்டி
உன்னையே, நினைத்து நிற்பேனே.

2864. தத்துவத்தை அறியாது உன்பிடிப்பை அறிந்துகொண்டு
வித்தைகளை செய்துகாட்டும் உன்னருளை புரிந்துகொண்டு
காத்துதவும் செயலறிந்து உன்பதத்தை நான் தொழுது
சித்திகளை காட்டும், எனதன்பே உனை அறிவேனே.

2865. எண்ணமதை உன்னில் வைத்து
கண்ணிலே உன்னைக் கண்டு
மண்ணிலே உனை நினைந்து
பண்ணாகப் பாடுவேனே.

2866. புரியாத புதிருக்கு விடையாக தெரிந்திருந்து
தெரியாத வாழ்வுக்கு முடிவுதனை அறிந்திருந்து
விரிந்திருக்கும் உந்தனாலே பிறைசூடி அமர்ந்திருந்து
உரிமையுள்ள உணர்வுதனை கொடுத்தருளும் நறுந்தேனே.

2867. கசிந்துருகும் எந்தனுக்கு தாயாக வாழ்வளித்து
நசிந்திருக்கும் எந்தனுக்கு தந்தையென வழிகாட்டி
காசியிலே வாழ்ந்து கங்கையிலே மறைந்திருக்கும்
நேசிக்கும் மனதுடைய எம்பிரானே உனை வாழ்த்திடுவேனே.

2868. ஆர்வமுடன் உனைத்தொழுது நாளும் வணங்கிடுவேன்
ஈர்க்கின்ற குணத்தாலே உனை எண்ணி தொழுதிடுவேன்
பார்க்கின்ற உளத்தாலே உனை நினைந்து ஏற்றிடுவேன்
பேர்சொல்லும் குழந்தைகளை வாழ்த்துச் சொல்லி பணிந்திடுவேன்.

2869. மலையென்ன உயர்ந்திருக்கும் உன்புகழை பாடிடுவேன்
அலையென்ன ஒலித்திருக்கும் உன்பெருமை ஏற்றிடுவேன்
கலையென்ன நிலைத்திருக்கும் உன்னமுதை பருகிடுவேன்
விலையில்லா உன்னிலையைநினைந்திருந்து மகிழ்வேனே.

2870. உயிரின் கருவே, உடலின் உணர்வே
தாயின் அன்பே, அருளினி பிணைப்பே
சேயின் நேசமே, கருணையின் தோற்றமே
பயிரின் நிலமே, கரம்பிடிப்பேன் எனதன்பாலே.

2871. இதயத்தின் துடிப்பே
உதயத்தில் பகலவனே
ஆதரவில் பெற்றவனே
பாகமதை தொழுவேனே.

2872. பிடிக்குள் அகப்படாது அருவமாய் மறைந்து
அடிக்குள்ளே மாட்டாது உருவமாய் நிறைந்து
விடிவெள்ளியென எங்கும் விரிந்து நின்று
பாடிவருபவர்க்கு மனமுவர்ந்து வரும் தேனே.

2873. ஆழ்ந்திருப்பாய் மனதுக்குள் அகன்றிருப்பாய் உடலுக்குள்
வீழ்ந்திருப்பாய் அன்புக்குள் தாழ்ந்திருப்பாய் உறவுக்குள்
சூழ்ந்திருப்பாய் உள்ளத்துள் விரிந்திருப்பாய் உலகத்துள்
ஊழ்வினையாய் மறைந்திருப்பாய் தெரிந்திடுவாய் என்மனத்துள்ளே.

2874. இடர்வந்தால் நீக்கி துயர்தன்னை போக்கி
சுடரொளியை காட்டி, கருணைமழை தந்து
படர்கொடியாய் வளைந்து அன்புதனை தந்து
கடவுளாய் நிறைந்திருக்கும் ஈசனே உனை வாழ்த்துவனே.

2875. ஆருயிரே, அன்பே, பேரருளே
ஓருயிரே, தேனே, இன்னமுதே
அருட்சுடரே கன்னலின் இனிமையே
பெருமையுடன் விளங்கும் ஒளிவிளக்கே.

2876. கடம்பவனக்குயிலே, விரித்தாடும் மயிலே
விடம்கொண்ட சிவமே, பிறைசூடும் ஆண்டவனே
இடர்நீக்கும் சுடர்விளக்கே அரவணைக்கும் தாயே
ஈடற்ற என் உணர்வே வணங்குவேனே மறவாதே.

2877. ஆடுகின்றாய் தில்லையிலே அடக்கிடுவாய் மதுரையிலே
பாடுகின்றாய் நெல்லையிலே மீட்டிடுவாய் சிற்றம்பலத்திலே
தேடுகின்றாய் மனத்தினிலே தெய்வமாய் உள்ளத்திலே
ஓடுகின்றேன் உனதன்பைப் பெறவேண்டியே.

2878. தருகின்ற கொடையாலே உயிரினிங்கள் வாழ்ந்து வரும்
ஆருயிரின் அன்பாலே பயிரினங்கள் மலர்ந்து விடும்
பெருமையுள்ள கருணையாலே உள்ளங்கள் விழித்துவிடும்
அருமையான மனத்தாலே இறங்கிவிடும் என் உளமே.

2879. நடப்பதெல்லாம் உன் செயலே
கடப்பதெல்லாம் உன் அசைவே
உயிரெல்லாம் உன் பிறப்பே
தாயின் மனம் உன் உருவே.

2880. ஒளிபரப்பும் புத்தாண்டு வளமாக இருப்பதற்கு வாழ்த்துங்கள்
பளிங்குபோன்ற ம னத்தாலே அன்புதனை தாருங்கள்
கனி உவகை தந்து மகிழும் மனமதனை நல்கிடுங்கள்
விளித்து உமை அழைக்கின்றேன் கருணைதனை காட்டுங்கள்

2881. ஓங்கும் புகழுடைய உனதடிகள் போற்றி
தாங்கும் மனதுடைய உனதுகரம் போற்றி
பொங்குகின்ற உனதன்பு நாளும் போற்றி
எங்கும் நிறைந்திருக்கும் உனதருள் போற்றி

2882. நெஞ்சமதில் நிறைந்திருக்கும் அன்பாலே
வஞ்சமில்லாத அரவணைக்கும் தாயாக
தஞ்சமதை தந்துகாக்கும் தந்தையென
நஞ்சுண்டு காத்த இறைவா போற்றி

2883. காக்கும் கரத்தாலே உலகத்தை வென்று
ஆக்கும் மனத்தாலே உள்ளத்தை கவர்ந்து
ஊக்கும் ஊக்குவிக்கும் அன்பாலே மனமதனை அறிந்து
வாக்களித்து அரவணைக்கும் ஆண்டவனே போற்றி

2884. ஓசையின் ஒலியோ, அலையின் அதிர்வோ
அசைவின் உணர்வோ, மலையின் உயர்வோ
ஆசையின் அன்னையோ, கலையின் அழகோ
இசையின் இனிமையோ, பெற்றவனின் மனத்துடிப்போ.

2885. ஆற்றலின் இயக்கமே, உடலின் உருவே
உற்றவனின் உணர்வே, உருவின் கருவே
பெற்றவனின் அன்பே, பாசத்தின் உயர்வே
கற்பதற்கு அரியவனே வணங்கித் தொழுவேனே.

2886. தொழுது அழைத்தாலே வழுவாது வருவாயே
விழுதுயெனநினைத்தாலே வேரூன்ற நினைப்பாயே
பழுது இல்லா மனத்தாலே உனை வணங்கி
எழுந்தாலே தாயன்பைத் தருவாயே.

2887. வழிகாட்டும் அன்னையாய்
அழியாத ஓவியமாய்
பரிதவிக்கும் எனதுள்ளம்
கண்டு கொள்ளும் பெற்றவனாய் இருப்பவனே போற்றி.

2888. ஊன்றிவிட்டாய் வித்தாக விருட்சமாய் வளர்ந்து விட்டாய்
கன்றுதேடும் பசுவைப்போல் உனைநாடி வந்துவிட்டேன்
ஈன்றுபுறம் தந்த அம்மையே உனைநினைந்து வாழ்கின்றேன்
அன்னையென வாராயோ, எனதெண்ணம் அறியாயோ.

2889. அறிவினைத்தந்தாய் ஆற்றலைக் கொடுத்தாய்
அன்பினைத் தந்தாய் கருணையைக் கொடுத்தாய்
அன்னையாய் வந்தாய் மனத்திலே வந்தாய்
அன்பே நீதான் சிவமோ.

2890. ஒளியை தந்தாய் உணர்வைக் கொடுத்தாய்
ஒப்பில்லா இறைவா பண்டினைக் கொடுத்தாய்
ஓர் உருவம் இல்லா நிறைந்திருக்கும் அன்பே
ஒப்பிட்டுக் கூற யாதொன்றும் இல்லையே.

2891. அறக்கடலே ஆறறிவைத் தந்தாய்
அன்பின் ஊற்றே தெளிவைத்தந்தாய்
அன்னையின் உருவே கருவாக்கி வளர்த்தாய்
அருமையென வளர்ந்தாயே என்மனத்துள்ளே

2892. கருவின் உருவே, உருவின் திருவே
மருவின் உயிரே, உணர்வின் அருளே
திருவின் சிறப்பே, அன்பின் பிறப்பே
அருளின் சுடரே, எதிலும் நிறைவே.

2893. கடல் அலையின் ஒலி நீயே
கடல் ஆழத்தின் உணர்வு நீயே
கடல் சீற்றத்தின் தெளிவு நீயே
கடல் கொந்தளிப்பின் அமைதி நீயே.

2894. அறியாத வரும் அறிந்திடுவர் தெளியாதவரும் தெளிந்திடுவர்
மாறிவரும் மனத்தையும், மாற்றிவிடும் வழி அறிவர்
தேறிவரும் உள்ளத்தை தெள்ளமுதாய் அறிந்திடுவர்
அறிந்தவனாய் இருக்கும் சிவனே அறிவாரே.

2895. எங்கும் நிறைந்திருந்து என்மனத்துள் குடி புகுந்து
தங்கும் இடமறிந்து உன் உளத்தை தேர்ந்தெடுத்து
எங்கும் புகழறிந்து அண்டமெல்லாம் விரிந்திருந்து
ஏங்கும் மனமறிந்து செவிமடுக்கும் பராபரமே.

2896. கடலினும் ஆழ்ந்திருந்து உள்ளத்தில் குடிபுகுந்து
கடலினும் அகன்றிருந்து அன்பென்னும் வழிதந்து
உடலினுள் துணைத்துவந்து கருணையெனும் ஒளி ஈந்து
உடலினுள் நுழைந்து நின்று சிவமாக வருவாயே.

2897. கடலினுள் ஆழ்ந்திருப்பாய் ஊற்றாக பெருக்கெடுப்பாய்
கடலினுள் அகன்றிருப்பாய் அருவியென ஊற்றெடுப்பாய்
கடலினுள் விரிந்திருப்பாய் நதியாக பரந்திடுவாய்
கடல்போன்ற உன் உருவை என்மனத்துள் அருள்வாயே.

2898. உறங்குகின்ற மனத்துள்ளே உறங்காது நீயிருந்து
மறந்துபோகும் மனத்துள்ளே நினைவோடு நீயிருந்து
துறந்துபோகும் உடலுக்குள் உயிராக நீயிருந்து
அறமாக உயிர்த்துநிற்கும் என் சிவமே.

2899. நிறைந்திருக்கும் மனத்துள்ளே நிறைவாக நீயிருந்து
உறைந்திருக்கும் அன்புக்குள் நெகிழ்வாக நீயிருந்து
கறையில்லா எண்ணுத்துள் உணர்வாக நீயிருந்து
பிறைசூடி உள்ளத்துள் உயர்வாக உருவாயே.

2900. கட்டுக்குள் வைத்துவிட்டாய் வாழ்வுதனை உலகத்துள்
விட்டுவிடும் வாழ்வுதனை வைத்துவிட்டாய் உயிருக்குள்
ஆட்டுவிக்கும் உயிர்களையே ஏற்றுக்கொண்டாய் நெஞ்சுக்குள்
ஊட்டுவித்தாய் தேனாக சிவமாக என்மனத்தள்ளே.

2901. அமைதி எனும் பாற்கடலில் திளைத்தெழுந்து
அன்பெனும் சர்க்கரையில் விழித்தெழுந்து
மௌமெனும் பாகினிலே பகுத்தறிந்து
உண்மையுடன் உனை நினைப்பேன் தாயன்பே.

2902. கரைகின்ற உன்மனத்துள் நான் புகுந்து
கடவுள் உனைமறவாது நான் நினைந்து
இடமெல்லாம் நிறைந்திருக்கும் உனை அழைத்து
மடமான எனை எண்ணி அருள்வாயே.

2903. அறக்கதிரே, என்னுயிரே, இறையன்பே, எளியவனே
ஆறறிவை தந்தவனே, என்னுயிராய் இருப்பவனே
மறப்பதற்கு மனமில்லை, உளமெல்லாம் நிறைந்தவனே
இறக்கிடுவாய் பாரமதை அன்புமழை தருவாயே.

2904. ஆழ்மனதை அறிந்து, அன்புமலர் சொறிந்து
ஊழ்வினையை புரிந்து வாழ்வுதனை கொடுத்து
தாழ்வுதனை மாற்றி உயர்வுதனை அளித்து
ஏழ்மையான மனதை வளமாகக்கித் தருபவனே போற்றி

2905. சிவனென்று வழிபட்டால் ஆண்டவனாய் வருவாயே
தவமென்று நினைத்திட்டால் தவறாது வருவாயே
ஈவது நீயன்றோ மறவாது உனை எண்ணிவிட்டால்
தயவாக வருவாயே.

2906. ஈர்க்கின்ற உள்ளத்தால் உவகையுடன் வரும் தேனே
பார்க்கின்ற மனத்தாலே மனமகிழ்ந்து வரும் மலரே
சேர்கின்ற இனத்தாலே அன்புடனே வரும்மானே
தேர்ந்தெடுப்பாய் எளியவனை அன்பென்னும் உரித்தாலே.

2907. திறவு கோலாய் நீயிருந்து அன்புதனை காட்டி என்றும்
உறவுக்கு வழித்துணையாய் கருணையுடன் காட்சிதந்து
மறக்காத மனத்துள்ளே மகளாக எனை ஏற்று
அறமாக வரும் வழித்துணையே.

2908. சிற்றம்பலத்துள் நீ ஆடி, வெளிஉவகை எமக்குக்காட்டி
உற்றவனாய் என்மனத்துள் உறவுதனை நீ உணர்த்தி
மாற்றமில்லா உன் உருவால் மாற்றமுள்ள என்னிடத்தில்
பெற்றவனாய் வந்தவனே உனைநான் தொழுவேனே.

2909. வாழ்த்தி வணங்கிடுவேன் உன்மனத்துள் இடம்பிடிப்பேன்
தாழ்மையுடன் கேட்டிடுவேன் தயவுடனே வந்திடுவேன்
ஊழ்வினையை தகர்ப்பவனே அன்புடனே அழைத்திடுவேன்
ஆழ்மனத்துள் இருப்பவனே பாசமுடன் வருவாயே.

2910. குறையுள்ள என்மனத்தை ஏற்றாயே இரக்கத்தால்
உறைகின்ற இருப்பிடமாய் உன் உள்ளமதை
மறைக்காது எனக்களித்து அன்பாலே குழந்தையென
பிறைசூடி ஏற்றாயே.

2911. உதயமானாய் என் மனத்துள்
இதயமானாய் என் உடலுக்குள்
ஆதவனாய் இருளகற்றி
இதமாக வந்தாய் சிவனெனவே என் மனத்துள்ளே.

2912. முக்கண்ணின் புதல்வனே, மூத்தவனே, முதல்வனே
மக்கள் குறை தீர்த்து மனமகிழச் செய்பவனே
ஆக்கமதை ஈந்து தழைத்தோங்க வருபவனே
ஊக்கமதை தந்து செழித்தோங்க செய்வாயே.

2913. அம்மையே ஆருயிரே மூத்தகுடிப்பிறப்பே
ஒப்பில்லா மணியே அன்பினில் விளைந்த முத்தே
தந்தையென உருகொடுத்த இதயத்தின் துடிப்பே
கசிந்துருகும் என்மனத்துள் புகுந்த ஐங்கரனே.

2914. பாவாலே அலங்கரித்து
பூவாலே உனைச்சூடி
நாவாலே உனைப்பாடி
அவாவால் உனைப் புகழ்வேனே.

2915. பிள்ளையார் எனப்பெயர் பெற்றாய்
உள்ளத்திலே நிறைந்து நிற்பாய்
அள்ளுகின்ற அன்பு தந்தாய்
தள்ளாத மனமும் அருள்வாயே.

2916. காயில் மலர்ந்த கனியே
உயிரென தந்த உடலே
வாயினில் மலர்ந்த பாவே
தாயுமானவனாய் வருவாயே.

2917. நிறைந்திருப்பவனே மனத்துக்குள்
உறைபவனே அன்பென்னும்
மறைக்குள்ளே அகலாது
பிறைசூடி இருப்பவனே வாழியவே.

2918. விழியிலே நிறைந்தவனே
அழியாது இருப்பவனே
வழிகாட்டி செல்பவனே
வாழியவே எந்நாளுமே.

2919. காந்தம் போல் ஈர்ப்பவனே
தந்திரங்கள் செய்பவனே
விந்தைகள் புரிபவனே
எந்தையென வருவாயே.

2920. மனத்துக்கு இனியவனே
உனதன்பை அருள்பவனே
எனதன்பை அறிபவனே
இனமனைத்தும் தருபவனே

2921. உலகனைத்தும் படைத்தவனே உண்மைமொழி அறிந்தவனே
பலமனைத்தும் பெற்றவனே அன்புமொழி தெரிந்தவனே
காலமனைத்தும் கடந்தவனே கருணைமொழி அருள்பவனே
கோலங்கள் தெரிந்தவனே கன்னல்மொழி தரும்தேனே.

2922. அழகுக்கு ஓர்உருவம் அன்புக்கு ஓர்வடிவம்
ஆழமுள்ள கருணைக்கு ஓர் அருவம்
பாசத்திற்கு ஓர்விடியல் ஆசைக்கு அருளமுதம்
நேசத்திற்கு ஓர் அன்னை தெரிவதற்கு நீ பெற்றவனே.

2923. நினைந்து உருகிடுவேன் விரைந்து அறிவாயே
அனைவரும் அறிந்திடுவர் அணைந்து செல்லும் அன்புருவாய்
வினைநீக்க வந்துநீயும் அன்புசெய்யும் வழிகாட்டி
மனையினிலே நிறைந்திருந்து மனமகிழச்செய்வாயே.

2924. துன்பமில்லா வாழ்வு தந்து
அன்பான உறவு ஈந்து
உன்னை அறியும் மனம் கொடுத்து
என்மனத்தை ஈர்ப்பாயே.

2925. காண்பதற்கு எளியவனே காட்சிக்கு உகந்தவனே
விண்ணுலகு ஆண்டவனே அன்புக்கு உரியவனே
மண்ணுலகு தந்தவனே மாண்புமிகு பேரொளியே
உண்மைக்கு உரியவனே வேண்டிடுவேன் உனதருளே.

2926. பொங்குமன்பு உன்னிடத்தில் தந்திடுவாய் என்னிடத்தில்
தாங்குமனம் உன்னசைவில் ஈந்திடுவாய் என்னிடத்தில்
தங்குமிடம் உன்உளத்தில் கொடுத்திடுவாய் என்னிடத்தில்
எங்கும் நிறைந்திருக்கும் உன்பதத்தைத் தொழுவேனே.

2927. மலைகளுக்கு அதிபதியே வற்றாத கடலே
அலைகளுக்கு ஒலியே ஒளிதரும் சுடரே
விலையில்லா அணிகலனே அன்பின் உயிர்த்துடிப்பே
கலைகளின் முதலே வணங்கிடுவேன் உனைமறவாதே.

2928. வஞ்சமில்லா உள்ளத்தால் வாழ்த்துரைகள் பாடிடுவேன்
நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் உனதெழிலை உரைத்திடுவேன்
தஞ்சம்தரும் உன்மனத்தை நெகிழவைக்க எழுதிடுவேன்
ஊஞ்சலாக ஆடுகின்ற உள்ளத்தால் அழைப்பேனே.

2929. மகிழ வைப்பேன் பாட்டாலே
நெகிழ வைப்பேன் அன்பாலே
உருகச் செய்வேன் வார்த்தையாலே
அருமையான உன்மனத்தைப் பெறுவதற்கே.

2930. வாடிய முகமறிந்து ஆறுதலைத் தருவாயே
தேடி மனதறிந்து அன்புமொழி அருள்வாயே
கொடியன்ன வளைந்து நிற்கும் உள்ளமதை அறிவாயே
ஓடிவந்து உன்னருளை உளமாரக் கொடுப்பாயே.

2931. அண்டமெல்லாம் நிறைந்து அருட்கடலாய் திகழ்ந்து
மண்ணுலகில் விரிந்து அருட்சுடரை காட்டி
விண்ணுலகில் வாழ்ந்து அருளொளியை ஈந்து
கண்ணாக மலர்ந்து காட்சிதரும் தேனே.

2932. மலர்ந்து விரிந்து மணம்பரப்பி
உலகமெல்லாம் பரந்து மனத்துயரை தீர்த்து
காலமெல்லாம் நின்று சுடரொளியை தந்து
பலவாக தொடர்ந்து நிற்கும் கரும்பே.

2933. கல்விக்கு அதிபதியே உன் உருவம்
அல்லாது வேறெதுவும் நினையாது
அல்லல் நீக்கும் உனை நினைந்து
இல்லத்துள் அழைப்பேனே.

2934. தளர்வறியா மனம் தந்து உணர்வறியும்
உளம் தந்து இனமறியும் அருள்தந்து
இளகுகின்ற பண்பறிந்து
வளமாக்க வருகின்ற என்தேனே.

2935. தெய்வமே, என்மனமறியும் தாயே
உய்யும் வழிகாட்ட வந்த பெற்றவனே
மெய்யான வாழ்வுதனை எனக்களித்த ஆண்டவனே
சேய் என்னை வளர்த்திட்ட அன்னையே.

2936. பூத்திருக்கும் உன்முகம் அடியவரின் வரவுகண்டு
காத்திருக்கும் உன்மனது அன்பர்களின் மனதுகண்டு
அறிந்திருக்கும் உன்உளமே எளியவரின் அன்புகண்டு
செறிந்திருக்கும் உனதன்பை பொழிந்திடுவாய் என்மனத்துள்ளே.

2937. அண்டமெல்லாம் படைத்திட்ட ஈசனே என் சிவமே
விண்ணுலகு ஆள்கின்ற எந்தையே என்பலமே
மண்ணுலகு கொடுத்திட்ட அன்னையே என்உயிரே
ஆண்டவனாப் வந்து என்மனதை அறிவாயே.

2938. மாதுளை மனத்தோனே என்மனதுக்கு இனியவனே
ஏதுமில்லா என்மனத்துள் ஆழப்பதிந்திடுவனே
ஓதும் பொருளே வேதத்தின் கருவே
தீது என்னும் இல்லா என்மனத்துள் வருவாயே.

2939. நிறமெல்லாம் உன் வெளிப்பாடு
பிறப்பெல்லாம் உன் வடிவம்
உறவெல்லாம் உன்தோற்றம்
பெறநினைக்கும் என் மனதே.

2940. புவியனைத்தும் உன்தஞ்சம்
தெரிவதெல்லாம் உன் நெஞ்சம்
புரிவதெல்லாம் உன் உருவம்
கவிதையாக படைப்பேனே.

2941. தளர்வில்லா மனம்கொடுத்து
உளம் நிறைய அன்புதந்து
அளவில்லா கருணை காட்டி
வளமான வாழ்வுதரும் ஈசனே உனை வாழ்த்துவனே.

2942. நல்லதோர் வாழ்வுதந்து உள்ளமெல்லாம்
அல்லல் நீக்கி ஆழமான உன்மனத்துள்
ஆல்போல கிளைபரப்பி அன்பென்னும் நீரூராற்றாய்
இல்லமெல்லாம் இன்பமதை தந்தருள்வாயே.

2943. பூங்கொடி உமையவளை பாதிவைத்து
ஏங்குகின்ற மனமதனை நீயறிந்து
தாங்குகின்ற பண்புதனை நீகாட்டி
தங்குகின்ற மனதாக என்னிடம் நீ வருவாயே.

2944. சக்தியை பாதிவைத்து அன்புதனை நிறையவைத்து
உக்திதனை நீயறிந்து செல்லும்வழி தெரிந்து
பக்திசெய்யும் அடியவர்க்கு அன்புதனை காட்டி
ஆக்கமதை தருகின்ற பராபரமே.

2945. தொழுதிடுவேன் கைகூப்பி உனைஎன்றும்
அழுது ஏங்கிடுவேன் உனைநினைந்து வணங்குதற்கு
விழுகின்ற என் உடலை தாங்கி ஏந்தும் என் இறைவா
இழுத்திடுவாய் என் மனத்தை உனதன்பாலே.

2946. கீதமாக என்மனத்துள் இசைபரப்பி
ஆதவனாய் என்னிடத்தில் ஒளி தந்து
ஆதரவை தருகின்ற பெற்றவனாய் நீயிருந்து
பேதமில்லா ஆண்டவனே உனை தொழுவேனே.

2947. சந்ததியை வாழ்த்தி மனமகிழச் செய்து
தந்தையென வளர்த்து வாழ்வுதனை தந்து
விந்தைகளைச் செய்து பெற்றவனாய் வந்து
ஈந்து அளிக்கும் இன்பமதை அறிந்தவனே உனைத்தொழுவேனே.

2948. எண்ணமெல்லாம் நிறைந்து ஆழ்கடலில் ஆழ்ந்து
தண்ணொளியை நிரப்பி தனித்தன்மை பெற்று
கண்ணாக வந்து காட்சிதனை ஈந்து
உண்மையதை தெரியவைக்கும் தேனே.

2949. உயர்ந்து நிற்கும் மலையோ
ஆழ்ந்து இருக்கும் கடலோ
விரிந்து வணங்கும் உலகோ
அறிந்திருக்கும் உறவோ.

2950. வாழ்வுதனை எனக்குத்தந்த ஆண்டவனே போற்றி
ஆழ்ந்தறியும் அறிவுதந்த ஈசனே போற்றி
ஊழ்வினையை மாற்றவந்த விண்ணவனே போற்றி
ஏழ்பிறப்பும் அறிந்திட்ட மாயவனே போற்றி போற்றி

2951. கரும்பினிமை உன் மனது
அரும்பி வரும் உன் இனிமை
விரும்பி வரும் என் உளமே
ஆருயிராய் வரும் உன் நினைவே

2952. குறையில்லா அருட்பொருளே
நிறைவான ஒளிப்பிழம்பே
இறையாகும் உயிர்ப்பிறப்பே
மறைநான்கும் உன் வடிவே.

2953. அகலாது உன் நினைவே
அகம் எங்கும் உன் உருவே
பகலவனாய் வரும் ஒளியே
தகப்பனென வரும் உறவே.

2954. கனியின் சுவை நீயே
இனிக்கும் பொருள் நீயே
தனிப்பிழம்பாய் வரும் ஒளியே
பனிமலரை தரும் குளிரே.

2955. கலையின் வெளிப்பாடே
அலையின் பிறப்பிடமே
மலையின் உயர்விடமே
விலையில்லா மரகதமே.

2956. ஒப்பில்லா மரகதமே அரவணைக்கும் ஆருயிரே
எப்பொழுதும் நிலைத்திருக்கும் ஈடில்லா மணிவிளக்கே
தப்பேது செய்திடினும் தலைகாட்டும் அருளமுதே
அப்பனென வாழ்த்தி வணங்கிடுவேன் மறவாதே.

2957. மணிவிளக்கே அருட்கடலே என்னுயிரே
அணிகலனே விடிவிளக்கே என்னமுதே
பணிவுடனே அழைத்திடுவேன் என்னருளே
பேணிடுவாய் எனதன்பே உன்பதத்தை தொழுவேனே.

2958. இளைப்பாறும் மனதாக உன்னிடத்தே இறக்குகின்றேன்
விளைநிலமாய் வளர்க்கின்ற உன்னுள்ளே இருக்கின்றேன்
களைஎடுக்கும் உன்நினைவால் உயிராக அலைகின்றேன்
வளைக்கரத்தால் உனைஎண்ணி நாளும் துதிப்பேனே.

2959. தொடர்கின்ற வாழ்வுக்கு நாளும் வளம் தருவாய்
படர்கின்ற கொடியாக தழைத்தோங்க வந்திடுவாய்
இடர்நீக்க சுடர் ஒளியாய் வெளிச்சமதை தந்திடுவாய்
சுடராக என்வாழ்வில் ஒளியாக வருவாயே.

2960. கடல் அலையாய் ஒலித்திடுவாய்
உடல் அலையில் உயிராவாய்
ஆடல் கலையில் உணர்வாவாய்
தேடல் மனத்தில் இறையாவாயே.

2961. கல்விதனை அள்ளித்தந்து வாழ்வுதனை தந்தவனே
செல்வமதை தந்து வறுமைதனை அழித்தவனே
வெல்லும் வகை காட்டி, ஊக்கமதை கொடுத்தவனே
அல்லலுற்று அழுவோர்க்கு இன்பமதை தருபவனே.

2962. தளர்வில்லா வாழ்வுதந்து உயர்வுதனை தருபவனே
வளமான உயர்வுதந்து அன்புதனை அளித்தவனே
இளகும் மனம்தந்து காந்தமென ஈர்ப்பவனே
உளமாற வேண்டுவோர்க்கு உனதன்பைத் தருபவனே.

2963. நெஞ்சமெல்லாம் ஈரமுண்டு உன்னிடத்தில் அன்புண்டு
வஞ்சமில்லா மனதுண்டு வார்த்தையிலே கருணையுண்டு
கஞ்சமில்லா வார்த்தையுண்டு மனம்நிறைய அருளுண்டு
கெஞ்சுகின்ற வார்த்தைக்கு உன்னிடத்தில் பதிலுண்டே.

2964. நல்லபதில் உரைப்பாயே நலம்பயக்கச் செய்வாயே
அல்லலுற்று நிற்போர்க்கு நல்லுரையை தருவாயே
இல்லமெல்லாம் நிறைந்துநின்று வெளிச்சமதை கொடுப்பாயே
வெல்லும் வகை நானறிய தருவாயே.

2965. அன்புகொண்ட நெஞ்சிற்கு தெள்ளமுதைத் தருவாயே
என்னிடத்தில் கருணைகொண்டு அருளமுதைத் தருவாயே
உன்னையே நினைப்போர்க்கு மனமகிழ்ந்து தருவாயே
கன்னல் என இனிப்பவனே என்மனத்தை அறிவாயே.

2966. கலையாத அன்பினாலே குறையாது வணங்கிடுவேன்
அலையாத மனத்தாலே உனதன்பைப் பெற்றிடுவேன்
மலைப்பில்லா உளத்தாலே உனதருளை வென்றிடுவேன்
விலையில்லா கருணையாலே உனதெழிலைக் காண்பேனே.

2967. குறையில்லா மனத்தாலே
நிறைவாக உனைப்பாடி
கறையில்லா அன்பாலே
இறையாக இருக்கும் உனை எண்ணி மகிழ்வேனே.

2968. வளமையான உள்ளத்தால்
இளமையான எனதன்பை
உளமாற நீ ஏற்று
வளமாக்க வருவாயே.

2969. இளமையென்னும் சொல்லிற்கு அதிபதியே
வளமையென்னும் சொல்லிற்கு பசுபதியே
இளமையென்னும் மனத்திற்கு பிறப்பிடமே
உளமாற வேண்டுவனே மறவாதே.

2970. பிணிநீக்கும் மருந்தாகி
அணியாகி என்னுடம்பின் பிறப்பாகி
மணியாகி என்மனத்துள் ஒலியாகி
பணிவாக வேண்டுவோர்க்கு அணிகலனாவாயே.

2971. குலம்விளங்க வரும் மணிவிளக்கே
உலகு உய்ய வரும் மணிச்சுடரே
காலம்தெரிய வரும் மணிக்கதவே
கோலமென என்மனத்துள் விரிந்தவனே.

2972. செல்வமென என்மனையில் புகுந்தவனே
அல்லல்நீக்கும் ஒளிச்சுடராய் வந்தவனே
வெல்லும் வகை அத்தனையும் தந்தவனே
இல்லல்நீக்கும் பெற்றவனாய் வருபவனே.

2973. தந்திடுவாய் அன்புதனை எந்தனுக்கு
ஏந்திடுவாய் என்மனத்தை உனக்குள்ளே
வந்திடுவாய் விழிச்சுடராய் மனதுக்குள்
ஈந்திடுவாய் மலர்க்கரத்தால் எந்தனுக்கே.

2974. நிலவொளியே அன்புருவே ஆனந்தப்பணித்துளியே
உலகே, உயிரே, கருவே, ஆனந்தபைரவியே
மலரே, மணமே, உருவே, ஆனந்தத் தேனே
கலமே, மனமே, என்மனத்து ஆனந்தமே.

2975. அருமையான பெற்றவனே
பெருமையான ஆண்டவனே
ஆருயிரான அன்னையே
இருக்கின்றாய் என்மனத்துள்ளே.

2976. நிலையில்லா உலகத்தில் நிம்மதி வேண்டும்
அலையில்லா மனத்தினிலே ஆண்டவன் வேண்டும்
விலையில்லா அன்பினிலே அனுமதிவேண்டும்
கிலையில்லா மனத்தினிலே சிவமும் வேண்டும்.

2977. காலையின் அன்பளிப்பாய் தந்தாயே
மாலையில் விடுதலையை கொடுத்தாயே
வேலைக்கு அனுமதி அளித்தாயே
விலையில்லா உயிரை அளிப்பாயே.

2978. கண்ணீரால் அழைத்து உனதன்பைப் பெற்று
அண்மையிலே வரவழைத்து உனதருளை ஏற்று
மண்ணிலே உனைக்கண்டு உன்னெழிலை கண்ணுற்று
எண்ணத்தில் உனைநிரப்பி வாழ்த்தி வணங்குவனே.

2979. கசிந்துருகி எனதன்பால் உனை வேண்டி
பசித்திருக்கும் என்மனத்தால் உனதன்பை நான் பருகி
பேசி உனை அழைத்தே உனதருளைப் பெறுவதற்கே
ஆசிதனை பெறவேண்டி வேண்டுவனே மறவாதே.

2980. நன்னெறியை காட்டி நல்லுரையை தந்து
கன்னல்மொழிதந்து ஆருயிரை கொடுத்து
மின்னலென பாய்ந்து உனதன்பைக் காட்டி
அன்னையென வரும் மாண்பே.

2981. எழில் ரூபம் உன் உருவம்
அழகான உன் வடிவம்
பழமான உந்தன் முகம்
ஆழமானது உனது உளமே.

2982. அருட்பெருங்கொடையே ஆனந்தத்தேனே
மருவில்லா எழில்வடிவே அன்பான பெருந்தகையே
உருவமில்லா ஒளிமதியே அன்புதரும் பெற்றவனே
அருவமான விண்ணொளியே என்மனத்துள் வாராயோ.

2983. பந்தங்கள் தருகின்ற பாசமான பெற்றவனே
சொந்தங்கள் தருகின்ற ஆசையுள்ள அன்னையே
தந்துவிட்டாய் அத்தனையும் தாங்கிடுவாய் என்மனத்தை
ஈந்துவிட்டாய் உனதன்பை பெற்றிடுவேன் என்மனத்தாலே.

2984. ஆழ்கடலின் முத்தே
ஏழ் பிறப்பின் உயிரே
வாழ்வளிக்கும் சிவமே
ஊழ்வினையை அறிபவனே.

2985. உன்னதத்தின் உயர் பொருளே
கன்னல்மொழி தரும் தேனே
அன்னையென வரும் மலரே
ஈன்று புறம் தந்த பெற்றவனே.

2986. காலடியில் தவம்கிடக்கும் ஏழை
உலகத்திலே பிறந்த ஓர் பிறவி
காலத்தினால் வந்த பக்தன்
கோலமாக உனைக் காண்பேனே.

2987. மனம் கவர்ந்த மாண்பே
இனம் அறிந்த அன்பே
கனல் தெறிக்கும் ஒளியே
மனமறிந்து அருள்வாயே.

2988. ஆழ்கடலின் முத்தே
ஆழ்ந்தகன்ற கடலே
ஏழ்பிறப்பின் கருவே
வாழ்வுதரும் தாயே.

2989. சலனமில்லா மனம் தருவாயே
இலகுவான உளம் அருள்வாயே
பலமனைத்தும் கொடுப்பாயே
குலவிளக்காய் வருவாயே.

2990. பொறுமையுடன் உனைநினைக்கும் உள்ளம்வேண்டும்
ஆறுதலை தரும் உன்மனம் வேண்டும்
உறுதுணையாய் என் துணைக்கு வரவேண்டும்
பேறுபெறும் நெஞ்சமதை தரவேண்டுவனே.

2991. குற்றமில்லா உன்மனத்தை பற்றவேண்டும்
பெற்றவனாய் உன்மனத்தை ஈர்க்கவேண்டும்
கற்றதனை உன்காலடியில் சேர்க்கவேண்டும்
வற்றாத உனதன்பில் மூழ்கவேண்டுவனே.

2992. வெட்டவெளி உனது இல்லம்
ஆட்டுவிப்பாய் எனது உள்ளம்
ஈட்டிடுவாய் மனித நேயம்
காட்டிடவாய் உனதன்பே.

2993. காந்தமென ஈர்த்திடுவாய்
சாந்தத்தால் வளர்த்திடுவாய்
ஈந்துஉவப்பதில் அன்புதந்தாய்
வந்துதவும் அறத்தாயே.

2994. இதயத்தில் குடிவைத்தேன்
உதயத்தின் ஒளிப்பிழம்பாய்
ஆதவனாய் நினைக்கின்றேன்
இதயத்தின் உயிர்த்துடிப்பே.

2995. அணுவினும் நுழைந்திடுவாய் ஆற்றலிலே நிறைந்திருப்பாய்
பேணுவதில் சிறந்திருப்பாய் பெற்றதனால் நிறைந்திடுவாய்
நுண்ணுணர்வாய் வந்திடுவாய் உயிரினிலே கலந்திருப்பாய்
காண்பதற்கு எளியவனே காட்சியாக வருவாயே.

2996. சந்ததியினர் வளமாக வாழ்வதற்கு அருளவேண்டும்
தந்தையென நீயிருந்து குறையாத வயதளிக்கவேண்டும்
விந்தைகளை செய்து செல்வமதை தரவேண்டும்
தந்திரங்கள் செய்வனே கழுபிணியிலா உடல் வேண்டுவனே.

2997. உள்ளத்தால் உனை ஈர்த்து
அன்பினாலே உனை வேண்டி
ஆர்வத்தால் உனை அழைத்து
பிள்ளையென உனை நினைப்பேனே.

2998. கள்ளமில்லா உள்ளம் தா
தள்ளாத மனத்தை தா
உள்ளமதை அன்பில் தா
தோள் கொடுக்கும் ஆதரவைத் தருவாயே.

2999. தாழ்வில்லா பெரும் மழையே
ஊழ்வில்லா பெரும் வாழ்வே
வாழ்வுள்ள பெரும் உலகே
ஆழ்மனத்தின் பெரும் உணர்வே

3000. நிலவின் குளிர் நீயே
உலகின் உயிர் நீயே
கடலின் அலை நீயே
உடலின் கரு நீயே.

சுபம்

Bharath Printers, KKDI. 9865043093